மேற்கொண்டதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் பின்னேற்பு நிர்வாக அனுமதி பெறப்படல் வேண்டும்.

இக்கொள்முதலுக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை மூலதன நிதி பிரிவு குறியீட்டு எண் 40-41-01 மற்றும் கணக்கு தலைப்பு எண் 410-50-01-00 லாரிகள் என்னும் தலைப்பில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மத்திய வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 6 முதல் 10 வரையுள்ள பகுதிகளில் உள்ள மூடிய மழை நீர் வடிகால்வாய்கள் (Closed Storm Water Drain) மற்றும் அதனை ஒட்டியுள்ள வண்டல் மண் குழிகள் (Silt Catch Pit) ஆகியவற்றை தூய்மை படுத்தும் பணிக்காக 1 எண்ணிக்கையிலான கனரக வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட ரீசைக்லர் வசதியுடன் கூடிய சக்ஷன் கம் ஜெட்டிங் (Vehicle Mounted high capacity suction cum jetting machine with recycling facility) வாகனத்திற்கு மாற்றாக திருத்திய தொழில்நுட்பத்துடன் ரீசைக்லர் வசதி இல்லாத அதிக திறன் கொண்ட சக்ஷன் கம் ஜெட்டிங் (Vehicle Mounted high capacity suction cum jetting machine without recycling facility) வாகனம் 2 எண்ணிக்கையில் ரூ.4,00,00,000/- (ரூபாய். நான்கு கோடி மட்டும்) (Incl. GST) செலவீனத்தில் கொள்முதல் செய்ய நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் பின்னேற்பு நிர்வாக அனுமதியை எதிர் நோக்கி மின்னணு ஒப்பம் மட்டும் கோரியதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. இக்கொள்முதலுக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை மூலதன நிதி பிரிவு குறியீட்டு எண் 40-41-01 மற்றும் கணக்கு தலைப்பு எண் 410-50-01-00 லாரிகள் என்னும் தலைப்பில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.002/2026 ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பின்னேற்பு அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/2786/2025**

**ஆணையர் அவர்களின் 09.12.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 32/2026** **பொருள் எண்.32**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழை நீர் வடிகால்வாய்கள் மற்றும் அதனை ஒட்டியுள்ள வண்டல் மண் குழிகள் (Silt Catch Pit) ஆகியவற்றை தூய்மைப் படுத்தும் பணி - 1 எண்ணிக்கையிலான கனரகவாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட ரீசைக்லர் வசதியுடன் கூடிய சக்ஷன் கம் ஜெட்டிங் வாகனம் (Vehicle Mounted high capacity suction cum jetting machine with recycling facility) கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டு மின்னனு ஒப்பம் கோரப்பட்டது - இவ்வொப்பத்தில் கலந்து கொண்ட மூன்று நிறுவனங்களும் இவ்வொப்பத்திற்கு தேவையான ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பிக்காததால் இவ்வொப்பம் ரத்து செய்யப்பட்டது - இவ்வகை வாகனம் 1 எண்ணிக்கையில் கொள்முதல் செய்வதற்கு பதிலாக திருத்திய தொழில்நுட்பத்துடன் ரீசைக்லர் வசதி இல்லாத அதிக திறன் கொண்ட சக்ஷன் கம் ஜெட்டிங் (Vehicle Mounted high capacity suction cum jetting machine without recycling facility) வாகனம் 2 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய பின்னேற்பு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் பராமரிக்கப்படும் மூடிய மழை நீர் வடிகால்வாய்களில் *(Closed Storm Water Drain)* உள்ள சேறு மற்றும் கழிவுகளை அகற்றும் பணியை மேற்கொள்ளும் பணியாளர்கள், இப்பணிக்கென கால்வாய்களில் இறங்குவதற்கு அமைக்கப்பட்டுள்ள துவாரம் வழியாக இறங்கி சுத்தம் செய்யும் பணியினை மேற்கொண்டு வந்த நிலையில், இதற்கு மாற்றாக உபகரணங்கள் கொண்டு இப்பணிகளை மேற்கொள்ள மூடிய மழைநீர் வடிகால்வாய்களை சுத்தம் செய்வதற்கு *7* எண்ணிக்கையில் கனரக வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட ரீசைக்லர் வசதியுடன் கூடிய சக்ஷன் கம் ஜெட்டிங் வாகனம் *(Vehicle Mounted high capacity suction cum jetting machine with recycling facility)* கொள்முதல் செய்யப்பட்டு மூடிய மழைநீர் வடிகால்வாய்களை சுத்தப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

தற்போது தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் -11 முதல் 15 வரையுள்ள மூடிய மழை நீர் வடிகால்வாய்களில் *(Closed Storm Water Drain)* உள்ள சேறு மற்றும் சகதி ஆகியவற்றை அகற்றி சுத்தம் செய்வதற்கு *2* எண்ணிக்கையிலான கனரக வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட ரீசைக்லர் வசதியுடன் கூடிய சக்ஷன் கம் ஜெட்டிங் வாகனம் ஒதுக்கப்பட்டு மூடிய மழைநீர் வடிகால்வாய்கள் சுத்தம் செய்யப்பட்டு தங்கு தடையின்றி நீரோட்டத்தினை ஏற்படுத்தி வரப்படுகிறது.

மேலும், மழைக்காலங்களில் சாலைகளிலிருந்து மழைநீரில் மிதக்கும் கழிவுகள் மற்றும் மண் துகள்கள் ஆகியவை மூடிய மழை நீர் வடிகால்வாய்குள் நீர் புகுவதற்காக

அமைக்கப்பட்டுள்ள குழாயில் அடைத்துக்கொண்டு சாலையில் நீர் தேங்கும் நிலை ஏற்படுகின்றது. இதனை தவிர்த்திட மூடிய மழை நீர் வடிகால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் அதனை ஒட்டி குறிப்பிட்ட இடைவெளியில் வடிகட்டுவதற்கு வண்டல் மண் குழிகள் *(Silt Catch Pit)* அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மூடிய மழை நீர் வடிகால்வாய்கள் இடங்களில் அமைக்கப்பட்டுள்ள வண்டல் மண் குழிகளில் *(Silt Catch Pit)* சேர்ந்துள்ள மண் துகள்கள் மற்றும் இதர கழிவு பொருட்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் அல்லது அவ்வப்போது சுத்தப்படுத்தி மழைநீரானது தங்கு தடை இன்றி மழை நீர் வடிகால்வாய்க்குள் செல்வதற்கு ஏதுவாக சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

தற்பொழுது கூடுதலான இடங்களில் மூடிய மழைநீர் வடிகால்வாய்கள் கட்டப்பட்டுள்ளதால் வண்டல் மண் குழிகளின் *(Silt Catch Pit)* எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவற்றினை பணி ஆட்களை கொண்டு சுத்தப்படுத்தும் போது காலவிரயம் ஏற்படுவதோடு மனித உழைப்பும் விரயமாகிறது.

எனவே, வண்டல் மண் குழிகளை *(Silt Catch Pit)* சுத்தப்படுத்தும் பணியில் மனித ஆற்றல் விரயம் மற்றும் காலதாமதம் ஏற்படுவதை தடுத்திட தற்போது பயன்பாட்டில் இருக்கும் ரீசைக்லர் வசதியுடன் கூடிய சக்ஷன் கம் ஜெட்டிங் வாகனம் மூலம் வண்டல் மண் குழிகளை *(Silt Catch Pit)* சுத்தப்படுத்தும் பணியினை மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 11 முதல் 15 வரையுள்ள பகுதிகளில் பயன்பாட்டிற்கென 2 உபகரணங்கள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இவற்றினை பயன்படுத்தி மூடிய மழை நீர் வடிகால்வாய்கள் மற்றும் வண்டல் மண் குழிகளை *(Silt Catch Pit)* தூய்மை படுத்தும் பணி மேற்கொள்ள இவ்வுபகரணங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தினால் கூடுதலாக 1 எண்ணிக்கையில் கனரக வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட ரீசைக்லர் வசதியுடன் கூடிய சக்ஷன் கம் ஜெட்டிங் வாகனம் *(Vehicle Mounted high capacity suction cum jetting machine with recycling facility)* கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதன் அடிப்படையில், தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழை நீர் வடிகால்வாய்கள் மற்றும் அதனை ஒட்டியுள்ள வண்டல் மண் குழிகள் *(Silt Catch Pit)* ஆகியவற்றை தூய்மைப்படுத்தும் பணிக்கென *1* எண்ணிக்கையிலான கனரக வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட ரீசைக்லர் வசதியுடன் கூடிய சக்ஷன் கம் ஜெட்டிங் வாகனம் *(Vehicle Mounted high capacity suction cum jetting machine with recycling facility)* கொள்முதல் செய்ய நிலைக்குழு (வ(ம)நி)வின் தீர்மான எண்.359/2025, நாள்.27.06.2025நிர்வாக அனுமதி பெறப்பட்டு மின்னணு ஒப்பம் கோரப்பட்டு ஒப்பம் 09.09.2025 அன்று திறக்கப்பட்டது. இவ்வொப்பத்தில் திருவாளர்கள்.*Aryan Pumps and Enviro Solutions Pvt. Ltd.*, திருவாளர்கள். *TPS Infrastructure Ltd.*, திருவாளர்கள்.*Whale Enterprise Pvt. Ltd.*, மற்றும் திருவாளர்கள். *Sadhana Enviro Engineering Services* ஆகிய நான்கு நிறுவனத்தார்

கலந்து கொண்டனர். இந்நான்கு நிறுவனத்தாரும் இவ்வொப்பத்திற்கு தேவையான ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பிக்காததால் இவ்வொப்பம் ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில், வெளிச்சந்தையில் மேற்கூறப்பட்ட வாகனத்தில் ரீசைக்லர் வசதி மட்டும் இல்லாத அதே தொழில் நுட்ப வரையறையுடன் கூடிய அதிக திறன் கொண்ட சக்ஷன் கம் ஜெட்டிங் *(Vehicle Mounted high capacity suction cum jetting machine without recycling facility)* வாகனம் அரசு “இ” மார்க்கெட் வலைத்தளத்தில் உள்ளது தெரியவருகிறது. மேலும், இவ்வகை வாகனம் ஒன்றின் அரசு “இ” மார்க்கெட் விலை *(GeM Price)* ரூ.2,00,00,000/- ஆகும். தற்போது பராமரிப்பில் உள்ள ரீசைக்லர் வசதியுடன் கூடிய சக்ஷன் கம் ஜெட்டிங் *(Vehicle Mounted high capacity suction cum jetting machine with recycling facility)* வாகனத்தின் ரீசைக்லர் வசதியானது மழை நீர் வடிகால்வாய்களிலிருந்து உறிஞ்சி *(Suction)* எடுக்கப்பட்டு *Sludge Tank*-ல் சேகரிக்கப்படும் திரவ நிலையில் உள்ள சகதிகளை மறு சுழற்சி செய்து தண்ணீரை *Fresh Water tank*-க்கும் மற்றும் சகதியினை *Sludge Tank*-ம் சேமிக்கப்படும்.

மழைநீர் வடிகால் கால்வாய்களில் தூர்வாருவதற்கு அமைக்கப்பட்ட இயந்திர குழிகளில் *(Machine hole)* இரண்டு குழிகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் நீரோட்டத்திற்கு தடையாக உள்ள சகதிகளை தண்ணீர் அடித்து *(Jetting)* கரைத்திடுவதற்கு *Fresh Tank*-ல் சேமிக்கப்படும் மறு சுழற்சி செய்யப்பட்ட தண்ணீர் பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

இந்நிலையில், ரீசைக்லர் இல்லாத சக்ஷன் கம் ஜெட்டிங் *(Vehicle Mounted high capacity suction cum jetting machine without recycling facility)* வாகனங்கள் கொள்முதல் செய்யும் போது குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் அல்லது தற்போது பூங்கா பராமரிப்பிற்காக பெறப்படும் இடத்திலிருந்து தண்ணீரை *Fresh Water Tank*-ல் நிரப்பி *Jetting* பணிக்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

தற்போது கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட கனரக வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட ரீசைக்லர் வசதியுடன் கூடிய சக்ஷன் கம் ஜெட்டிங் வாகனம் *(Vehicle Mounted high capacity suction cum jetting machine with recycling facility)* ரூ.*4,65,00,000/-* தோராய மதிப்பீட்டில் *1* எண்ணிக்கையில் கொள்முதல் செய்வதற்கு பதிலாக திருத்திய தொழில்நுட்பத்துடன் ரீசைக்லர் வசதி இல்லாத அதிக திறன் கொண்ட சக்ஷன் கம் ஜெட்டிங் *(Vehicle Mounted high capacity suction cum jetting machine without recycling facility)* வாகனம் 2 எண்ணிக்கையில் ரூ.4,00,00,000/- (ரூபாய். நான்கு கோடி மட்டும்) *(Incl. GST)* செலவீனத்தில் கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நிலைக்குழு (சுகாதாரம்)வின் பின்னேற்பு நிர்வாக அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பம் கோரும் பணி மட்டும் மேற்கொண்டதற்கு நிலைக்குழு (சுகாதாரம்)வின் பின்னேற்பு நிர்வாக அனுமதி பெறப்படல் வேண்டும்.

இக்கொள்முதலுக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை மூலதன நிதி பிரிவு குறியீட்டு எண் 40-41-01 மற்றும் கணக்கு தலைப்பு எண் 410-50-01-00 லாரிகள் என்னும் தலைப்பில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 11 முதல் 15 வரையுள்ள பகுதிகளில் உள்ள மூடிய மழை நீர் வடிகால்வாய்கள் (Closed Storm Water Drain) மற்றும் அதனை ஒட்டியுள்ள வண்டல் மண் குழிகள் (Silt Catch Pit) ஆகியவற்றை தூய்மை படுத்தும் பணிக்காக 1 எண்ணிக்கையிலான கனரக வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட ரீசைக்லர் வசதியுடன் கூடிய சக்ஷன் கம் ஜெட்டிங் (Vehicle Mounted high capacity suction cum jetting machine with recycling facility) வாகனத்திற்கு மாற்றாக திருத்திய தொழில்நுட்பத்துடன் ரீசைக்லர் வசதி இல்லாத அதிக திறன் கொண்ட சக்ஷன் கம் ஜெட்டிங் (Vehicle Mounted high capacity suction cum jetting machine without recycling facility) வாகனம் 2 எண்ணிக்கையில் ரூ.4,00,00,000/- (ரூபாய். நான்கு கோடி மட்டும்) (Incl. GST) செலவீனத்தில் கொள்முதல் செய்ய நிலைக்குழு (சுகாதாரம்)வின் பின்னேற்பு நிர்வாக அனுமதியை எதிர் நோக்கி மின்னணு ஒப்பம் மட்டும் கோரியதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. இக்கொள்முதலுக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை மூலதன நிதி பிரிவு குறியீட்டு எண் 40-41-01 மற்றும் கணக்கு தலைப்பு எண் 410-50-01-00 லாரிகள் என்னும் தலைப்பில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.003/2026ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பின்னேற்பு அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**இ.பொ.து.ஆ.வா.ந.எண். டி5/159/2025**

**ஆணையர் அவர்களின் 09.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 33/2026** **பொருள் எண்.33**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - ஆய்வு வாகனப்பணிமனை - ஏப்ரல் 2026 முதல் மார்ச் 2027 வரை உள்ள நிதியாண்டிற்கு பெட்ரோல் கொள்முதல் செய்ய - மத்திய அரசின் ஆயில் நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் மொத்த கொள்முதல் விலை (Bulk consumer price) மற்றும் சில்லறை விற்பனை (Retail price) விலைப்புள்ளி விவரம் பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

இயந்திர பொறியியல் துறையின் கீழ் இயங்கி வரும் ஆய்வு வாகனப்பணிமனையில் தலைமை நிலைய உயரதிகாரிகள், வட்டார அலுவலக மற்றும் மண்டலம் அலுவலகம் 1 முதல் 15 வரையிலான அதிகாரிகளின் ஆய்வு பயன்பாட்டிற்கு மற்றும் மருத்துவ துறை உள்ளிட்ட இதர துறை சார்ந்த பணிக்கும் *263* எண்ணிக்கையிலான வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட வாகனங்களில், 04 வாகனங்கள் பெட்ரோல் மூலம் இயங்கும் ஆய்வு வாகனங்கள்.

இந்த, *04* ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் மற்றும் இதர வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (பெட்ரோல்) வழங்க புதுப்பேட்டையில் அமைந்துள்ள ஆய்வு வாகன பணிமனையில் மத்திய அரசின் நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனத்தாரின் *(M/s.IOCL)* பெட்ரோல் சேமிக்கும் கிடங்கு *(Petrol bunk)* அமைக்கப்பட்டு பெட்ரோல் வழங்கப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் பெட்ரோல் வழங்கும் மையம் ஆய்வு வாகன பணிமனையில் மட்டுமே உள்ளது.

பெட்ரோல் கொள்முதல் செய்ய, மன்றத்தீர்மான எண்.*92/2000*, நாள்.*28.02.2000* அனுமதியின்படி, பெட்ரோல் கொள்முதல் தொடர்பான அரசின் பின்னேற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் *(*மா.ந.*1)* துறை அளித்த அரசு ஆணை நிலை எண். *102* நாள்.*07.08.2000*-ல், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோலை இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே நேரடியாக கொள்முதல் செய்து கொள்ளலாம் என அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு ஆணையினை அமல்படுத்திட மன்றத்தீர்மான எண். *486/01*, நாள்.*18.09.2001*-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் சம்மந்தப்பட்ட பணிமனை மூலம் மன்றத்தின் அனுமதி பெற்று டீசல் மற்றும் பெட்ரோலினை

சம்மந்தப்பட்ட மத்திய அரசின் ஆயில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலையில் *(Bulk consumer price)* வாங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மத்திய அரசு ஆயில் நிறுவனங்கள் எரிபொருளுக்கு அவ்வப்போது விலை நிர்ணயம் செய்யும்போது மொத்த கொள்முதல் விலை *(Bulk consumer price)* சில்லறை விற்பனை *(Retail price)* விலையை காட்டிலும் அதிகப்படுத்தும்போது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பினை தவிர்க்க மன்றத்தீர்மான எண். 118/2022, நாள்.*07.05.2022* நாளிட்ட மன்றத்தின் பின்னேற்பு அனுமதியில் மத்திய அரசின் ஆயில் நிறுவனத்தார் நிர்ணயிக்கும் எரிபொருள் மொத்த கொள்முதல் விலை, சில்லறை விற்பனையை விலையைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு கொள்முதல் செய்வதற்கு ஆணை பெறப்பட்டுள்ளது.

மன்றத்தீர்மான எண்.117/2025, நாள்.28.02.2025-ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில், ஆய்வு வாகன பணிமனையில் தலைமை நிலைய உயரதிகாரிகள் பயன்படுத்தும் 04 வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் மற்றும் இதர வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (பெட்ரோல்) ஏப்ரல் *2025* முதல் மார்ச் *2026* வரை ஒரு ஆண்டு காலத்திற்கு *195 KL* கொள்முதல் செய்ய *(195 kl x Rs.1,00,800/-) Rs. 1,96,56,000/-* மிகாமல் கொள்முதல் செய்யும்போது அமலில் உள்ள மொத்த கொள்முதல் விலை சில்லறை விற்பனையை காட்டிலும் அதிகமாக இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தாரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கும் மற்றும் மொத்த கொள்முதல் விலை சில்லறை விலையினை காட்டிலும் குறைவாகும் போது திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலைக்கும் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி பெற்று செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

மேலும் கடந்த ஏப்ரல் 2025 முதல் நவம்பர் 2025 வரையிலான எட்டு மாதங்களுக்கு *124458 ltrs. (125 KL)* தோராயமாக பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள, நிர்வாக அனுமதி மார்ச் *2026* வரை பெறப்பட்டுள்ளதால், ஏப்ரல்'*2026* முதல் மார்ச்'*2027* வரையிலான நிதியாண்டிற்கு மேற்குறிப்பிட்ட *04* ஆய்வு வாகனங்கள், விழிப்பு பணி துறை காவலர்களின் 3 இரு சக்கர வாகனத்திற்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும், இதர பெட்ரோல் வாகனங்களுக்கும் மற்றும் இயந்திரம் (ஜெனரேட்டர், நீர் இறைக்கும் மோட்டர் பம்ப்) பயன்பாட்டிற்கு தேவையான பெட்ரோல் கொள்முதல் செய்ய மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற வேண்டியுள்ளது.

மேலும், ஆய்வு வாகன பணிமனைக்கு தேவையான பெட்ரோல் கொள்முதல் செய்ய மத்திய அரசின் ஆயில் நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் மொத்த கொள்முதல் விலை *(Bulk consumer price)* விவரம் மற்றும் சில்லறை விற்பனை *(Retail price)* விலைப்புள்ளி விவரம் பின்வருமாறு:

| எரிபொருள் விவரம் | ஒரு கிலோ லிட்டருக்கான தொகை (12.12.25 நிலவரப்படி) (அனைத்து வரிகள் உட்பட) ரூபாய் | | | தோராயமாக நாளொன்றிற்கு தேவைப்படும் பெட்ரோல் ( லிட்டர்) | ஏப்ரல்'2026 முதல் மார்ச்'2027 காலத்திற்கு (365 நாட்கள்) தேவைப்படும் பெட்ரோல் (கிலோ லிட்டர்) அளவு | குறைந்த விலையை சமர்ப்பித்துள்ள திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மொத்த கொள்முதல் விலை ஏப்ரல்'2026 முதல் மார்ச்'2027 காலத்திற்கு (365 நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|
| | திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மொத்த கொள்முதல் விலை *(Bulk consumer price)* | சில்லறை விற்பனை விலை *(Retail price)* | விலை வித்தியாசம் | | | |
| | *(A)* | *(B)* | *(C=A-B)* | *(D)* | *(E=Dx365* நாட்கள்) | *F=ExA (197* கி.லி. *X* ரூ-*1,00,800/-)* |
| பெட்ரோல் | ரூ.1,00,800/- (ரூ- *100.80/-* ஒரு லிட்டருக்கு) | ரூ.1,00,850/- (ரூ- *100.85/-* ஒரு லிட்டருக்கு) | ரூ- *50.00/-* (ரூ. *0.050* ஒரு லிட்டருக்கு) | *540* | 197 கி.லி. (196996 லி) | ரூ-*1,98,57,600/-* |

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை மூலம் செலுத்த வேண்டும் எனவும் நிறுவனங்கள் நிபந்தனை தெரிவித்துள்ளார்கள். இந்நிறுவனம் மத்திய அரசின் ஆயில் நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி பெட்ரோல் வழங்கி வருவதால், கொள்முதல் செய்யும் நாளில் அமலில் உள்ள விலைப்புள்ளியை ஏற்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, ஆய்வு வாகனப்பணிமனையில் இயங்கும் பெட்ரோல் பங்கிற்கு தேவையான எரிபொருள் ஏப்ரல்'*2026* முதல் மார்ச்'*2027* வரை உள்ள ஒரு வருட காலத்திற்கு *04* ஆய்வு வாகனங்கள், விழிப்பு பணி துறை காவலர்களின் 3 இரு சக்கர வாகனத்திற்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும், இதர பெட்ரோல் வாகனங்களுக்கும் மற்றும் இயந்திரம் (ஜெனரேட்டர், நீர் இறைக்கும் மோட்டர் பம்ப்) பயன்பாட்டிற்கு தேவையான பெட்ரோல் வழங்க தோரயமாக கணக்கிடப்பட்ட 197 கிலோ லிட்டர் (நாளொன்றிற்கு 540 லிட்டர்) பெட்ரோலை கொள்முதல் செய்வதற்கு தேவையான மொத்த தொகையான ரூ. *1,98,57,600/-* (ரூ.100.80/- ஒரு லிட்டருக்கு) (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து

ஐம்பத்து ஏழாயிரத்து அறுநூறு மட்டும்)க்கு மிகாமல் கொள்முதல் செய்யும்போது அமலில் உள்ள மொத்த கொள்முதல் விலை *(Bulk consumer price)* சில்லறை விற்பனையை *(Retail price)* காட்டிலும் குறைவாகவோ அல்லது சமமாகவோ இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலைக்கு *(Bulk consumer price)* கொள்முதல் செய்யவும் மற்றும் மொத்த கொள்முதல் விலை *(Bulk consumer price)* சில்லறை விற்பனையை *(Retail price)* காட்டிலும் அதிகமாக இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தாரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை *(Retail price)* விலைக்கு கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் மற்றும் அவர்களது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்துக்கு பிணை வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவினத்தினை இயந்திரபொறியியல் துறை, ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-*41*-10 மற்றம் கணக்கு குறியீட்டு எண்*: 230-20-03-06* எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் *2026 - 2027* ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் வருகின்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026ல் நடைபெற இருப்பதால் பெட்ரோல் கொள்முதலின் அவசியம் மற்றும் அவசரம் கருதி, நிர்வாக அனுமதி வேண்டி மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதியை கோர ஆணையர் அவர்களின் ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது,

அதன்படி, வருட நிதியாண்டில் 2026 - 27 ஆம் ஆண்டிற்கு, ஆய்வு வாகன பணிமனையில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு தேவைப்படும் பெட்ரோலை கொள்முதல் செய்திட மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகன பணிமனையில் இயங்கும் 04 ஆய்வு வாகனங்கள், விழிப்பு பணி துறை காவலர்களின் 3 இரு சக்கர வாகனத்திற்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும், இதர பெட்ரோல் வாகனங்களுக்கும் மற்றும் இயந்திரம் (ஜெனரேட்டர், நீர் இறைக்கும் மோட்டர் பம்ப்) பயன்பாட்டிற்கு தேவையான பெட்ரோல் ஆய்வு வாகன பணிமனையில் இயங்கும் பெட்ரோல் பங்க் மூலம் நிரப்ப அனுமதியும்,

2. ஆய்வு வாகனப்பணிமனையில் இயங்கும் பெட்ரோல் பங்கிற்கு தேவையான எரிபொருள் ஏப்ரல் 2026 முதல் மார்ச் 2027 வரை உள்ள ஒரு வருட காலத்திற்கு தேவைப்படுகின்ற 197 கிலோ லிட்டர் (நாளொன்றிற்கு 540 லிட்டர்) பெட்ரோலை கொள்முதல் செய்வதற்கு தேவையான மொத்த தொகையான ரூ. 1,98,57,600/- (ரூ.100.80/- ஒரு லிட்டருக்கு) (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து அறுநூறு மட்டும்)க்கு மிகாமல் கொள்முதல் செய்யும்போது அமலில் உள்ள மொத்த கொள்முதல் விலை (Bulk consumer price) சில்லறை விற்பனையை (Retail price) காட்டிலும் குறைவாகவோ அல்லது சமமாகவோ இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலைக்கு (Bulk consumer price) கொள்முதல் செய்யவும் மற்றும் மொத்த கொள்முதல் விலை (Bulk consumer price) சில்லறை விற்பனையை (Retail price) காட்டிலும் அதிகமாக இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தாரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை (Retail price) விலைக்கு கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

3. ஆய்வு வாகன பணிமனையில் அமைக்கப்பட்டுள்ள பெட்ரோல் வழங்கும் நிலையத்திற்கு 2026-27 ஆம் ஆண்டிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று, திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக செலுத்தி கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4. திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால் அவர்களுக்கு பிணை வைப்புத்தொகை, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

5. மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் கோரிய படி ஏப்ரல் 2026 முதல் மார்ச் 2027 வரையிலான காலத்திற்கு அவ்வப்போது ஏற்படும் தேவையின் அடிப்படையில் பெட்ரோல் கொள்முதல் செய்ய உள்ள எரிபொருள் அளவிற்கு உரிய தொகையினை முன்பணமாக வழங்கிடவும்,

6. **இதற்கான செலவினை** 2026 – 2027 **ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகனப்பணிமனை, பிரிவு குறியீட்டு எண்** 40-41-10 **மற்றும் கணக்கு குறியீட்டு எண்**: 230-20-03-06 **எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,**

7. **ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான பெட்ரோலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல்செய்யவும்,**

**மேற்கண்ட** 1 **முதல்** 7 **வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.**

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**இ.பொ.து.ஆ.வா.ந.எண். டி 5 / 158 / 2025**

**ஆணையர் அவர்களின் 06.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 34/2026** **பொருள் எண்.34**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - ஆய்வு வாகனப்பணிமனை - ஏப்ரல்'2026 முதல் மார்ச்'2027 வரை உள்ள நிதியாண்டிற்கு டீசல் கொள்முதல் செய்ய - மத்திய அரசின் ஆயில் நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் மொத்த கொள்முதல் விலை (Bulk consumer price) மற்றும் சில்லறை விற்பனை (Retail price) விலைப்புள்ளி விவரம் பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி.**

இயந்திர பொறியியல் துறையின் கீழ் இயங்கிவரும் ஆய்வு வாகனப்பணிமனையில் தலைமை நிலைய உயரதிகாரிகள், வட்டார அலுவலக மற்றும் மண்டலம் அலுவலகம் 1 முதல் 15 வரையிலான அதிகாரிகளின் ஆய்வு பயன்பாட்டிற்கு மற்றும் மருத்துவ துறை உள்ளிட்ட இதர துறை சார்ந்த பணிக்கும் *263* எண்ணிக்கையிலான வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், தலைமை நிலைய உயரதிகாரிகள் பயன்படுத்தும் வாகனங்களுக்கும், சுகாதாரத்துறை மற்றும் இதர வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) வழங்க புதுப்பேட்டையில் அமைந்துள்ள ஆய்வு வாகன பணிமனையில் மத்திய அரசின் ஆயில் நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தாரின் *(M/s.IOCL)* டீசல் வழங்கும் மையம் *(Diesel bunk)* பராமரிக்கப்பட்டு வருகின்றது.

மேற்கண்ட, *263* வாகனங்களில், *259* வாகனங்கள் டீசல் மூலம் இயங்கும் வாகனங்கள். இந்த *259* வாகனங்களில், வட்டார / மண்டல அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட *153* வாகனங்களுக்கு பயண நேரம் மற்றும் எரிபொருளை சேமிக்கும் பொருட்டு அந்தந்த வட்டாரத்தில் / மண்டலத்தில் அமைந்துள்ள பணிமனைகளில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் டீசல் நிரப்பப்பட்டு வரப்படுகிறது. தலைமை நிலைய உயரதிகாரிகள், சுகாதாரத்துறை மற்றும் இதரத்துறை ஆய்வு பயன்பாட்டிற்காக செயல்படும் *110* வாகனங்களுக்கு (*Annexture - II),* புதுப்பேட்டையில் அமைந்துள்ள ஆய்வு வாகன பணிமனையில் டீசல் நிரப்பப்பட்டு வரப்படுகிறது.

மேலும், மத்திய வட்டாரத்தை சார்ந்த மண்டலம் *9* மற்றும் *10* லாரி நிலையத்தின் *30* வாகனங்களுக்கும் *(Annexture - III & IV*), ஆய்வு வாகன பணிமனையில் டீசல் நிரப்பப்பட்டு வரப்படுகிறது.

டீசல் கொள்முதல் செய்ய, மன்றத்தீர்மான எண்.*92/2000*, நாள்.*28.02.2000* அனுமதியின்படி, டீசல் கொள்முதல் தொடர்பான அரசின் பின்னேற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் ( மா.ந.*1* ) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.*102*, நாள்.*07.08.2000*-ல், இந்தியன் ஆயில்

கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோலை இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே நேரடியாக கொள்முதல் செய்து கொள்ளலாம் என அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு ஆணையினை அமல்படுத்திட மன்றத்தீர்மான எண்.486/01, நாள்.18.09.2001-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் சம்மந்தப்பட்ட பணிமனை மூலம் மன்றத்தின் அனுமதி பெற்று டீசல் மற்றும் பெட்ரோலினை சம்மந்தப்பட்ட மத்திய அரசின் ஆயில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலையில் (Bulk consumer price) வாங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மத்திய அரசு ஆயில் நிறுவனங்கள் எரிபொருளுக்கு அவ்வப்போது விலை நிர்ணயம் செய்யும்போது மொத்த கொள்முதல் விலை (Bulk consumer price) சில்லறை விற்பனை (Retail price) விலையை காட்டிலும் அதிகப்படுத்தும்போது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பினை தவிர்க்க மன்றத்தீர்மான எண். 121/2022, 30.05.2022 நாளிட்ட மன்றத்தின் பின்னேற்பு அனுமதியில் மத்திய அரசின் ஆயில் நிறுவனத்தார் நிர்ணயிக்கும் எரிபொருள் கொள்முதல் விலை, சில்லறை விற்பனையை விலையைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு கொள்முதல் செய்வதற்கு ஆணை பெறப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.167/2025, நாள்.27.02.2025-ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில், ஆய்வு வாகன பணிமனையில் தலைமை நிலைய உயரதிகாரிகள் பயன்படுத்தும் வாகனங்களுக்கும், சுகாதாரத்துறை வாகனங்களுக்கும், மண்டலம்-9 மற்றும் 10க்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கும் மற்றும் இதர துறை பயன்பாட்டிற்கும் ஏப்ரல் 2025 முதல் மார்ச் 2026 வரை ஒரு ஆண்டு காலத்திற்கு 395 KL கொள்முதல் செய்ய (395 KL x Rs.92,366/-) Rs.3,64,84,570/- மிகாமல் கொள்முதல் செய்யும்போது அமலில் உள்ள மொத்த கொள்முதல் விலை சில்லறை விற்பனையை காட்டிலும் அதிகமாக இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தாரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கும் மற்றும் மொத்த கொள்முதல் விலை சில்லறை விலையினை காட்டிலும் குறைவாகும் போது திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலைக்கும் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி பெற்று செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

மேலும் கடந்த ஏப்ரல் 2025 முதல் நவம்பர் 2025 வரையிலான எட்டு மாதங்களுக்கு 274235 ltrs. (275 KL) தோராயமாக டீசல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள, நிர்வாக அனுமதி மார்ச் *2026* வரை பெறப்பட்டுள்ளதால், ஏப்ரல்'*2026* முதல் மார்ச்'*2027* வரையிலான நிதியாண்டிற்கு மேற்குறிப்பிட்ட *110* ஆய்வு வாகனங்கள், மத்திய வட்டாரத்தை சார்ந்த மண்டலம் 9 மற்றும் 10க்கு ஒதுக்கப்பட்டுள்ள *30* வாகனங்களின் பயன்பாட்டிற்காக தேவையான டீசல் கொள்முதல் செய்ய நிலைகுழுவின் நிர்வாக அனுமதி பெற வேண்டியுள்ளது.

மேலும், ஆய்வு வாகன பணிமனைக்கு தேவையான டீசல் கொள்முதல் செய்ய மத்திய அரசின் ஆயில் நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் மொத்த கொள்முதல் விலை *(Bulk consumer price)* விவரம் மற்றும் சில்லறை விற்பனை *(Retail price)* விலைப்புள்ளி விவரம் பின்வருமாறு:

| எரிபொருள் விவரம் | ஒரு கிலோ லிட்டருக்கான தொகை (12.12.2025 நிலவரப்படி) (அனைத்து வரிகள் உட்பட) ரூபாய் | | | தோராயமாக நாளொன்றிற்கு தேவைப்படும் டீசல் (லிட்டர்) | ஏப்ரல்'2026 முதல் மார்ச்'2027 காலத்திற்கு (365 நாட்கள்) தேவைப்படும் டீசல் (கிலோ லிட்டர்) அளவு | குறைந்த விலையை சமர்ப்பித்துள்ள திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மொத்த கொள்முதல் விலை ஏப்ரல்'2026 முதல் மார்ச்'2027 காலத்திற்கு (365 நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|
| | திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மொத்த கொள்முதல் விலை *(Bulk consumer price)* | சில்லறை விற்பனை விலை *(Retail price)* | விலை வித்தியாசம் | | | |
| | *(A)* | *(B)* | *(C=A-B)* | *(D)* | *(E=Dx365* நாட்கள்) | *F=ExA (414* கி.லி. *X* ரூ- *92,362.77/-)* |
| டீசல் | ரூ- *92,362. 77/-* (ரூ- *92.36277/-* ஒரு லிட்டருக்கு) | ரூ- *92,430/-* (ரூ-. *92.430/-* ஒரு லிட்டருக்கு) | ரூ- *67.23/-* (ரூ. *0.06723* ஒரு லிட்டருக்கு) | *1134* | 414 கி.லி. (413772 லி) | ரூ-*3,82,38,187/-* |

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை மூலம் செலுத்த வேண்டும் எனவும் நிறுவனம் நிபந்தனை தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசின் ஆயில் நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி டீசல் வழங்கி வருவதால், கொள்முதல் செய்யும் நாளில் அமலில் உள்ள விலைப்புள்ளியை ஏற்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, ஆய்வு வாகனப்பணிமனையில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருள் ஏப்ரல்'*2026* முதல் மார்ச்'*2027* வரை உள்ள ஒரு வருட காலத்திற்கு தலைமை நிலைய உயரதிகாரிகள், வட்டார அலுவலக மற்றும் மண்டலம் அலுவலகம் 1 முதல் 15 வரையிலான அதிகாரிகளின் ஆய்வு பயன்பாட்டிற்கும், மருத்துவ துறை உள்ளிட்ட இதர

துறை சார்ந்த பணிக்கும் மற்றும் மண்டலம்-9, 10ல் பராமரிக்கப்பட்டு வருகின்ற வாகனங்களுக்கும் வழங்க தோரயமாக கணக்கிடப்பட்ட 414 கிலோ லிட்டர் (நாளொன்றிற்கு 1134 லிட்டர்) டீசலை கொள்முதல் செய்வதற்கு தேவையான மொத்த தொகையான ரூ. 3,82,38,187/- (ரூ. 92,362.77/- ஒரு கிலோ லிட்டருக்கு) (ரூபாய் மூன்று கோடியே எண்பத்து இரண்டு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து நூற்று எண்பத்து ஏழு மட்டும்)க்கு மிகாமல் கொள்முதல் செய்யும்போது அமலில் உள்ள மொத்த கொள்முதல் விலை *(Bulk consumer price)* சில்லறை விற்பனையை *(Retail price)* காட்டிலும் குறைவாகவோ அல்லது சமமாகவோ இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலைக்கு *(Bulk consumer price)* கொள்முதல் செய்யவும் மற்றும் மொத்த கொள்முதல் விலை *(Bulk consumer price)* சில்லறை விற்பனையை *(Retail price)* காட்டிலும் அதிகமாக இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தாரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை *(Retail price)* விலைக்கு கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் மற்றும் அவர்களது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்துக்கு பிணை வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவினத்தினை இயந்திரப்பொறியியல் துறை, ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண்.40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண்: 230-20-03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் 2026 - 2027 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் வருகின்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026ல் நடைபெற இருப்பதால் டீசல் கொள்முதலின் அவசியம் மற்றும் அவசரம் கருதி, 2026-27 ஆம் ஆண்டிற்கு, ஆய்வு வாகன பணிமனையில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு தேவைப்படும் டீசலை கொள்முதல் செய்திட நிலைக்குழுவின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகன பணிமனையில் தலைமை நிலைய உயரதிகாரிகள், வட்டார அலுவலக மற்றும் மண்டலம் அலுவலகம் 1 முதல் 15 வரையிலான அதிகாரிகளின் ஆய்வு பயன்பாட்டிற்கும், மருத்துவ துறை உள்ளிட்ட இதர துறை சார்ந்த பணிக்கும், மற்றும் மண்டலம் 9, 10ல் பராமரிக்கப்பட்டு வருகின்ற வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) ஆய்வு வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்ப அனுமதியும்,

2. ஆய்வு வாகனப்பணிமனையில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருள் ஏப்ரல் 2026 முதல் மார்ச் 2027 வரை உள்ள ஒரு வருட காலத்திற்கு தேவைப்படுகின்ற 414 கிலோ லிட்டர் (நாளொன்றிற்கு 1134 லிட்டர்) டீசலை கொள்முதல் செய்வதற்கு தேவையான மொத்த தொகையான ரூ. 3,82,38,187/- (ரூ. 92,362.77/- ஒரு கிலோ லிட்டருக்கு) (ரூபாய் மூன்று கோடியே எண்பத்து இரண்டு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து நூற்று எண்பத்து ஏழு மட்டும்)க்கு மிகாமல் கொள்முதல் செய்யும்போது அமலில் உள்ள மொத்த கொள்முதல் விலை (Bulk consumer price) சில்லறை விற்பனையை (Retail price) காட்டிலும் குறைவாகவோ அல்லது சமமாகவோ இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்பரேஷன் நிறுவனத்திடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலைக்கு (Bulk consumer price) கொள்முதல் செய்யவும் மற்றும் மொத்த கொள்முதல் விலை (Bulk consumer price) சில்லறை விற்பனையை (Retail price) காட்டிலும் அதிகமாக இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தாரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை (Retail price) விலைக்கு கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

3. ஆய்வு வாகன பணிமனையில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையத்திற்கு 2026-27 ஆம் ஆண்டிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று, திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக செலுத்தி கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4. திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால் அவர்களுக்கு பிணை வைப்புத்தொகை, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

5. மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் கோரியபடி ஏப்ரல் 2026 முதல் மார்ச் 2027 வரை வரையிலான காலத்திற்கு அவ்வப்போது ஏற்படும் தேவையின் அடிப்படையில் டீசல் கொள்முதல் செய்ய

உள்ள எரிபொருள் அளவிற்கு உரிய தொகையினை முன்பணமாக வழங்கிடவும்,

6. இதற்கான செலவினை 2026 – 2027 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகனப்பணிமனை, பிரிவு குறியீட்டு எண் 40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண்: 230-20-03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

7. ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல்செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.005/2026ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பின்னேற்பு அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3 / 0275 / 2026**

**ஆணையர் அவர்களின் 25.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 35 / 2026** **பொருள் எண்.35**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 4, வார்டு-47, காமராஜ நகர் 2வது தெருவில் உள்ள பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4, பகுதி–11, வார்டு–47, காமராஜ நகர் 2வது தெருவில் உள்ள பொது கழிப்பிட கட்டிடம் இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | மண்டலம்-4 | வார்டு எண். 47 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | காமராஜ நகர், 2வது தெருவில் உள்ள பொது கழிப்பிட கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1992 ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரை தளம் – 39.25 ச.மீ |
| 4. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 8297.87 |
| 5. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பழுதடைந்து பயனற்று இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடம் |
| 6. | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | இக்கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்காக. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | பொது கழிப்பிட கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது | செயற் பொறியாளர், மண்டலம்-4 |
| 9. | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். (ம) நாள்: | வார்டு குழு தீர்மான எண்.56, நாள்.15.10.2025 |

மேலே குறிப்பிட்டுள்ள பகுதி -11, வார்டு -47, காமராஜ நகர் 2வது தெருவில் உள்ள பொது கழிப்பிட கட்டிடம் மிகவும் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. அக்கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-4, பகுதி-11, வார்டு-47, காமராஜ நகர் 2வது தெருவில் உள்ள பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.006/2026ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3/0276/2026**

**ஆணையர் அவர்களின் 25.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 36/2026** **பொருள் எண்.36**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்–4, வார்டு – 47, காமராஜ நகர் 7வது தெருவில் உள்ள பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4, பகுதி–11, வார்டு–47, காமராஜ நகர் 7வது தெருவில் உள்ள பொது கழிப்பிட கட்டிடம் இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | மண்டலம்-4 | வார்டு எண். 47 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | காமராஜ நகர் 7வது தெருவில் உள்ள பொது கழிப்பிட கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1992 ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரை தளம் - 37.21 ச.மீ |
| 4. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 7866.59 |
| 5. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பழுதடைந்து பயனற்று இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடம் |
| 6. | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | இக்கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்காக. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | பொது கழிப்பிட கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது | செயற் பொறியாளர், மண்டலம்-4 |
| 9. | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். (ம) நாள்: | வார்டு குழு தீர்மான எண்.57, நாள்.15.10.2025 |

மேலே குறிப்பிட்டுள்ள பகுதி -11, வார்டு -47, காமராஜ நகர், 7வது தெருவில் உள்ள பொது கழிப்பிடம் கட்டிடம் மிகவும் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. அக்கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-4, பகுதி-11, வார்டு-47, காமராஜ நகர், 7வது தெருவில் உள்ள பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.007/2026ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**பொ.து.கா.ந.ம.எண்.அ2/4770/2025**

**ஆணையர் அவர்களின் 24.10.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 37/2026** **பொருள் எண்.37**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரம் - கால்நடை மருத்துவத்துறை - ஆணையர் அவர்களால் தலைமை கால்நடை மருத்துவ அலுவலருக்கு வழங்கப்பட்ட அதிகார ஒப்படைப்புக்கு (Delegation of Powers) மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

ஆணையர் அவர்களின், 29.07.2025 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம், கால்நடை மருத்துவத்துறையின் சார்பில் ஏற்படுத்தப்படும் கோப்புகள் மற்றும் அறிக்கைகளை நேரடியாக இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் மூலமாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு வருகிறது.

ஆணையர் அவர்களின், 20.08.2025 நாளிட்ட ஆணையின்படி, கீழ்காணும் இனங்களை தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் மூலம் மேற்கொள்வதற்கு ஆணை பெறப்பட்டுள்ளது.

1. கால்நடை மருத்துவத்துறை சம்மந்தப்பட்ட ரூ.9,99,999/- வரையிலான மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளிகளை தலைமை கால்நடை மருத்துவ அலுவலரே ஒப்பம் கோருவதற்கும் (Tender Inviting Authority),

2. ஆணையர் மற்றும் இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் ஒப்புதல் பெற்றபின் ரூ.10,00,000/-க்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் மூலம் ஒப்பம் கோருவதற்கும் (Tender Inviting Authority),

3. கால்நடை மருத்துவத்துறைக்கு ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்படும் மாட்டு தீவனம், நாய்களுக்கான உணவு, பாதுகாவலர்கள் ஊதியம், தனியார் கால்நடை மருத்துவர்களுக்கான ஊதியம் ஆகியவை தொடர்பான பட்டிகளை தீர்வு செய்வதற்கும்,

4. கால்நடை மருத்துவத்துறை சார்பில் இயங்கும் கால்நடை மருத்துவ மையங்களில் பணிபுரியும் 153 சுய உதவி குழு உறுப்பினர்களுக்கான மாத ஊதிய பட்டிகளை தீர்வு செய்வதற்கும்,

5. கால்நடை மருத்துவத்துறையின் பணியமைப்பு தொடர்பான அனைத்து பட்டிகளையும் தீர்வு செய்வதற்கும்,

6. கால்நடை மருத்துவதுறையின் சார்பில் புதிதாக ஆரம்பிக்கப்படும் கருத்தடை அறுவை சிகிச்சை மையங்கள் மற்றும் இதர மையங்களுக்கு தேவைப்படும் ஒப்பந்த பணியாளர்/சுய உதவி குழு உறுப்பினர்கள் நியமனம், மருந்துகள் மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்களை கொள்முதல் செய்து கொள்வதற்கும் ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின், 23.07.2025 நாளிட்ட ஆணை பெறப்பட்டு 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் மாபெரும் அளவிலான வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி மற்றும் அகபுற ஒட்டுண்ணி நீக்கம் மருந்து செலுத்தும் திட்டம் 09.08.2025 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை செயல்படுத்த தேவைப்பட்ட ரூ.38,68,000/- மதிப்பிலான பொருட்கள் அவசரம் மற்றும் அவசியம் கருதி தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் அளவிலேயே கைவிலைப்புள்ளி கோரி மற்றும் முன்பணம் பெற்று கொள்முதல் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே,

1. கால்நடை மருத்துவத்துறை சம்மந்தப்பட்ட ரூ.9,99,999/- வரையிலான மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளிகளை தலைமை கால்நடை மருத்துவ அலுவலரே ஒப்பம் கோருவதற்கும் (Tender Inviting Authority),
2. ஆணையர் மற்றும் இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் ஒப்புதல் பெற்ற பின் ரூ.10,00,000/- க்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் மூலம் ஒப்பம் கோருவதற்கும் (Tender Inviting Authority),
3. கால்நடை மருத்துவத்துறைக்கு ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்படும் மாட்டு தீவனம், நாய்களுக்கான உணவு, பாதுகாவலர்கள் ஊதியம், தனியார் கால்நடை மருத்துவர்களுக்கான ஊதியம், இதரப்பட்டிகள் மற்றும் செலவீனங்கள் ஆகியவை தொடர்பான பட்டிகளை தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் மூலமாக தீர்வு செய்வதற்கும்,
4. தலைமை கால்நடை மருத்துவ அலுவலரின் ஊதியம் கால்நடை மருத்துவப்பிரிவின் மூலமாகவே வழங்குவதற்கும்,
5. கால்நடை மருத்துவத்துறை சார்பில் இயங்கும் கால்நடை மருத்துவ மையங்களில் தற்போது பணிபுரியும் 153 சுய உதவி குழு உறுப்பினர்களுக்கான மாத ஊதிய பட்டிகளை தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் மூலமாக தீர்வு செய்வதற்கும்,
6. கால்நடை மருத்துவத்துறையின் பணியமைப்பு தொடர்பான அனைத்து பட்டிகளையும் தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் மூலமாக தீர்வு செய்வதற்கும்,
7. கால்நடை மருத்துவதுறையின் சார்பில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கருத்தடை அறுவை சிகிச்சை மையங்கள் மற்றும் இதர மையங்களுக்கு தேவைப்படும் ஒப்பந்த கால்நடை மருத்துவர்கள், ஒப்பந்த பணியாளர்கள் / சுய உதவி குழு உறுப்பினர்கள் நியமனம், பாதுகாவலர்கள், மருந்துகள், அறுவை சிகிச்சை கருவிகள் மற்றும் பிற உபகரணங்கள், தளவாடங்கள் உள்ளிட்ட அனைத்து

பொருட்களையும் தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் மூலமாக கொள்முதல் செய்து கொள்வதற்கும்,

8. ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் மாபெரும் அளவிலான வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி மற்றும் அகபுற ஒட்டுண்ணி நீக்கம் மருந்து செலுத்தும் திட்டம் 09.08.2025 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை செயல்படுத்த தேவைப்பட்ட ரூ. 38,68,000/- மதிப்பிலான பொருட்கள் அவசரம் மற்றும் அவசியம் கருதி தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் அவர்களால் கைவிலைப்புள்ளி கோரி மற்றும் முன்பணம் பெற்று கொள்முதல் செய்யப்பட்டதற்கும்,

9. கால்நடை மருத்துவத்துறையின் சார்பில் ஏற்படுத்தப்படும் கோப்புகள் மற்றும் அறிக்கைகளை தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் மூலமாக நேரடியாக துணை/இணை/ கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் மூலமாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 9 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.004/2026 ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/2785/2025**

**ஆணையர் அவர்களின் 21.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 38/2026** **பொருள் எண்.38**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-1 , வார்டு எண் - 12க்குட்பட்ட பாலகிருஷ்ணா காலனி 3வது தெருவினை தி.வ.விசுவநாதன் தெரு என பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தீர்மானம் நிறைவேற்ற அரசின் அனுமதி பெறப்பட்டது - மன்றத்தின் அனுமதி வேண்டுவது .**

உதவி ஆணையர், மண்டலம் – 1 அவர்களின் 18.12.2025 நாளிட்ட கடிதத்தில், திருவொற்றியூர் நகராட்சியில் 1996 முதல் 2001 வரை நகர மன்ற தலைவராக இருந்த திரு.தி.வ.விசுவநாதன் அவர்கள் அவருடைய காலத்தில் சண்முகனார் பூங்காவினை உருவாக்கியவர் எனவும், திருவொற்றியூர் நகராட்சிக்கு கலையரங்கம் மற்றும் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள திருவள்ளுவர் கலையரங்கத்தினை உருவாக்கியவர் எனவும், டோல்கேட் முதல் அஜாக்ஸ் வரை உயர்கோபுர மின்விளக்கினை முதன்முதலில் கொண்டு வந்தவர் எனவும், பூந்தோட்டம் பள்ளியை சுற்றி இருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி 30 அடி சாலையாக மாற்றி அமைத்தவர் எனவும், அன்னாரது வசிப்பிடம் தற்போதைய மண்டலம் 1, வார்டு எண்-12க்குட்பட்ட பாலகிருஷ்ணா காலனி 3வது தெருவில் அமைந்துள்ளது எனவும், திருவொற்றியூர் நகராட்சி இவர் காலத்தில் பல முன்னேற்றங்கள் மற்றும் வளர்ச்சியடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1 பகுதி 3. வார்டு எண்-12க்குட்பட்ட பாலகிருஷ்ணா காலனி 3வது தெரு, திரு. தி.வ.விசுவநாதன் தெரு என்று பெயர் மாற்றம் செய்வதற்கு வார்டுகுழு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது எனவும், (தீர்மானம் எண். 2218, நாள் 17.10.2025) பாலகிருஷ்ணா காலனி 3வது தெருவினை தி.வ.விசுவநாதன் தெரு என்று பெயர் மாற்றம் செய்வதற்கு ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று அரசாணை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1 பகுதி-3, வார்டு எண்-12க்குட்பட்ட பாலகிருஷ்ணா காலனி 3வது தெருவினை தி.வ.விசுவநாதன் தெரு என பெயர் மாற்றம் செய்வதற்கு மாமன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றிட அரசின் அனுமதி வேண்டி அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு இவ்வலுவலக 21.12.2025 நாளிட்ட கடிதம் முலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 07.01.2026 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1 பகுதி-3, வார்டு எண்-12க்குட்பட்ட பாலகிருஷ்ணா காலனி 3வது தெருவிற்கு தி.வ.விசுவநாதன் தெரு என பெயர் மாற்றம் செய்வது குறித்த தீர்மானத்தினை பெருநகர

சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் முன் ஒப்புதலுக்கு வைத்திட பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1 பகுதி-3, வார்டு எண்-12க்குட்பட்ட பாலகிருஷ்ணா காலனி 3வது தெருவிற்கு **"தி.வ.விசுவநாதன் தெரு"** என பெயர் மாற்றம் செய்வதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.03/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/2784/2025**

**ஆணையர் அவர்களின் 21.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 39/2026** **பொருள் எண்.39**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்- 1, பகுதி-3, வார்டு எண் - 12க்குட்பட்ட ஜான்ட்ரவர் தெருவினை க.வீராசாமி தெரு என பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தீர்மானம் நிறைவேற்ற அரசின் அனுமதி பெறப்பட்டது - மன்றத்தின் அனுமதி வேண்டுவது.**

உதவி ஆணையர், மண்டலம்-1 அவர்களின் 17.12.2025 நாளிட்ட கடிதத்தில், திருவொற்றியூர் நகராட்சியில் 1996 முதல் 2001 மற்றும் 2006 முதல் 2010 வரை இரண்டு முறை திரு.க.வீராசாமி அவர்கள் நகர மன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளார் எனவும், நகர மன்ற துணை தலைவராகவும் 2006 முதல் 2010 அந்திம காலம் வரை பதவி வகித்துள்ளார் எனவும், இவர் பல்வேறு தொழிற்சங்கங்களில் தொழிற்சங்க தலைவராகவும், வடசென்னையில் உள்ள தொழிலாளர்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கவராகவும் திகழ்ந்துள்ளார் எனவும், தூய்மைப்பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தபணியாளர்களின் வாழ்விட மேம்பாட்டிற்காக பாடுபட்டுள்ளார் எனவும், பணியாளர்களின் குழந்தைகள் கல்வி வளர்ச்சிக்காக பெரிதும் துணை நின்று உதவி புரிந்தவர் எனவும், அன்னாரது வசிப்பிடம் மண்டலம்-1, வார்டு எண்-12க்குட்பட்ட ஜான்ட்ரவர் தெருவில் அமைந்துள்ளது எனவும் திருவொற்றியூர் நகராட்சி இவர் காலத்தில் வளர்ச்சியடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-3. வார்டு எண்-12க்குட்பட்ட ஜான்ட்ரவர் தெருவை திரு. க.வீராசாமி தெரு என பெயர் மாற்றம் செய்வதற்கு வார்டுகுழு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது எனவும், (தீர்மானம் எண்.2219 நாள்.17.10.2025) ஜான்ட்ரவர் தெருவை க.வீராசாமி தெரு என பெயர் மாற்றம் செய்வதற்கு ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று அரசாணை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்- 1, பகுதி-3, வார்டு எண்-12க்குட்பட்ட ஜான்ட்ரவர் தெருவினை "க.வீராசாமி தெரு" என பெயர் மாற்றம் செய்வதற்கு மாமன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றிட அரசின் அனுமதி வேண்டி அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு இவ்வலுவலக 21.12.2025 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 07.01.2026 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்- 1, பகுதி-3, வார்டு எண்-12க்குட்பட்ட ஜான்ட்ரவர் தெருவினை **"க.வீராசாமி தெரு"** என பெயர் மாற்றம் செய்வது குறித்த தீர்மானத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தின்

**முன் ஒப்புதலுக்கு வைத்திட பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.**

**எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*1*, பகுதி-*3*, வார்டு எண்-*12*க்குட்பட்ட ஜான்ட்ரவர் தெருவிற்கு “க.வீராசாமி தெரு” என பெயர் மாற்றம் செய்வதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

> “27.01.2026 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்**.04/2026, **நாள்**.27.01.2026**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1121/2024**

**ஆணையர் அவர்களின் 04.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 40/2026** **பொருள் எண்.40**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - சென்னை இராமாவரத்தில் அமையவிருக்கும் பூங்காவிற்கு சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி எஸ்.எஸ்.விஸ்வநாததாஸ் அவர்களின் பெயரினை சூட்ட மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிட அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது - மன்றத்தின் அனுமதி வேண்டுவது.**

கண்காணிப்பு பொறியாளர், பூங்கா துறை அவர்களின் 20.06.2024 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி இராமாபுரம், 154-வது வார்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் நிதியின் கீழ் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பூந்தமல்லி சாலையில் (DLF எதிரில்) புதிதாக அமையவுள்ள நவீன பூங்காவிற்கு மகாத்மா காந்தியுடன் 20 முறை சிறை சென்றவரும், இந்திய திருநாட்டின் விடுதலைக்கு போராடிய வீரத்தியாகி எஸ்.எஸ்.விஸ்வநாததாஸ் அவர்களுக்கு முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில், மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் அடமானத்தில் இருந்த எஸ்.எஸ்.விஸ்வநாததாஸ் அவர்கள் வாழ்ந்த வீட்டை மீட்டெடுத்து அதை 27.12.1998 அன்று அதை நினைவு இல்லமாக மாற்றி அமைத்தும், அவருடைய பிறந்த நாளும், நினைவு நாளும் அரசு விழா எடுத்து அவருடைய புகழை நாடறியும் வண்ணம் செய்துள்ளார் என்றும், அதனால் சென்னை இராமாவரத்தில் அமையவிருக்கும் பூங்காவிற்கு தியாகி விஸ்வநாததாஸ் அவர்கள் பெயரை சூட்ட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந6) துறை, நாள்.11.07.2022-ன் வழிமுறைகளை பின்பற்றி மேற்படி இடத்தினை புலத்தணிக்கை மேற்கொண்டு விரிவான அறிக்கையினை அனுப்புமாறு இவ்வலுவலக 10.07.2024 நாளிட்ட கடிதம் மூலம் மண்டல அலுவலர், மண்டலம்-11 அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

திரு. P. மண்ணாங்கட்டி (எ) மணி, மாநில துணை பொது செயலாளர் அவர்கள் 20.02.2025 அன்று மாண்புமிகு மேயர் அலுவலகத்தில் அளித்துள்ள மனுவில் அதே கோரிக்கை மீண்டும் வரப்பெற்றுள்ளதால், மேற்படி இடத்தினை புலத்தணிக்கை மேற்கொண்டு குறிப்பான பரிந்துரையுடன் கூடிய விரிவான அறிக்கையினை உடன் இத்துறைக்கு அனுப்புமாறு உதவி ஆணையர், மண்டலம்-11 அவர்களுக்கு இவ்வலுவலக 19.03.2025 நாளிட்ட நினைவூட்டு கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

உதவி ஆணையர், மண்டலம்-11 அவர்களின் 03.11.2025 நாளிட்ட கடிதத்தில் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் தலைவர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்படும் 50 மேம்பாட்டுத் திட்டங்களை அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும நிதியை பயன்படுத்தி உள்ளாட்சி அமைப்புகளால் பயன்படுத்தப்படாத OSR பகுதிகளை மேம்படுத்தி, அவற்றை நகர்ப்புற பூங்காக்கள், ஸ்பாஞ்ச் பூங்காக்கள், உணர்வு பூங்காக்கள், திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள்

மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற பொது இடங்களாக மாற்றுவதற்கான முடிவை சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் தெரிவித்துள்ளது எனவும், இதன் அடிப்படையில், மணப்பாக்கம் கிராமத்தின் சர்வே எண்கள் 25/1, 26/1 & 27 (பகுதி) இல் 3166.10 சதுர மீட்டர் பரப்பளவிலும், ராமாபுரம் கிராமத்தின் சர்வே எண்கள் 119/1 (பகுதி) & 125/1 (பகுதி) இல் 5803.90 சதுர மீட்டர் பரப்பளவிலும் OSR நிலத்தை பூங்காவாக மேம்படுத்த சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் திட்டமிடப்பட்டுள்ளது என்றும்,

திரு.P.மண்ணாங்கட்டி அவர்கள் மணப்பாக்கம் மற்றும் ராமாபுரம் கிராமத்தில் உள்ள மவுண்ட் பூந்தமல்லி சாலையில் உள்ள OSR நிலத்தில் உருவாகும் பூங்காவிற்கு "தியாகி விஸ்வநாத தாஸ்" என பெயரிடுமாறு கோரினார் எனவும், மேலும் அவர் ஒரு இந்திய நாடக ஆசிரியர், நடிகர், மற்றும் இந்திய சுதந்திர இயக்கத்தில் பங்கேற்றவராவார். மண்டலம்-11, மண்டல வார்டு குழு தீர்மான எண்:1068/2025 (பொருள் எண். 29), நாள்.21.05.2025ல் பூங்காவிற்கு "தியாகி எஸ்.எஸ்.விஸ்வநாததாஸ்" என பெயரிடுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, பகுதி-34, 154-வது வார்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் நிதியின் கீழ் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பூந்தமல்லி சாலையில் (DLF எதிரில்) புதிதாக அமையவிருக்கும் நவீன பூங்காவிற்கு "தியாகி விஸ்வநாததாஸ் பூங்கா" என பெயர் சூட்டுவதற்கு மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிட, அரசின் அனுமதி வேண்டி அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு இவ்வலுவலக 12.11.2025 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும், அரசு துணைச் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 20.11.2025 நாளிட்ட கடித்தில் திரு.M.நடேசன் தமிழ்நாடு மருத்துவர் சமூக நலச்சங்கம். சென்னை அவர்களின் கோரிக்கை மனுவிலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் 11 வது மண்டல வார்டு குழுவின் தீர்மானத்திலும் (தீர்மான எண்.1068/2025. நாள் 21.05.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11. பகுதி-34, 154-வது வார்டு. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் நிதியின் கீழ் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பூந்தமல்லி சாலையில் (DLF எதிரில்) புதிதாக அமையவிருக்கும் நவீன பூங்காவிற்கு "தியாகி எஸ்.எஸ்.விஸ்வநாததாஸ் பூங்கா" பெயர் சூட்டுமாறு குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், தங்களது கருத்துருவில் எஸ்.எஸ். என்ற முதலெழுத்துக்கள் குறிப்பிடாமல் மேற்கண்ட பூங்காவிற்கு "தியாகி விஸ்வநாததாஸ் பூங்கா" என பெயர் சூட்டுமாறு கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே முதற்கண் இது குறித்து தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, பகுதி-34, 154-வது வார்டு, வார்டு குழுவின் தீர்மானத்தின் (தீர்மான எண்.1068/2025. நாள் 21.05.2025) அடிப்படையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் நிதியின் கீழ் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட

பூந்தமல்லி சாலையில் (*DLF* எதிரில்) புதிதாக அமையவிருக்கும் நவீன பூங்காவிற்கு "தியாகி எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் பூங்கா" என பெயர் சூட்டுவதற்கு மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிட, அரசின் அனுமதி வேண்டி அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு இவ்வலுவலக *28.11.2025* நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் *17.12.2025* நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – *11*, பகுதி – *34*, *154*-வது வார்டு, பெருநகர சென்னை வளர்ச்சி குழுமம் நிதியின் கீழ் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பூந்தமல்லி சாலையில் (*DLF* எதிரில்) புதிதாக அமையவிருக்கும் நவீன பூங்காவிற்கு"தியாகி எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் பூங்கா" என பெயர் சூட்டுதல் குறித்த தீர்மானத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் முன் ஒப்புதலுக்கு வைத்திட பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*11*, பகுதி – *34*, *154*-வது வார்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் நிதியின் கீழ் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பூந்தமல்லி சாலையில் (*DLF* எதிரில்) புதிதாக அமையவிருக்கும் நவீன பூங்காவிற்கு "தியாகி எஸ்.எஸ்.விஸ்வநாததாஸ் பூங்கா" என பெயர் சூட்டுவதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.02/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.மஉ.து.ந.க.எண்.எல்இ6/2834/2025**

**ஆணையர் அவர்களின் 09.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 41/2026** **பொருள் எண்.41**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-15, வார்டு-197, உத்தண்டி வார்டு அலுவலகத்தில் உள்ள கட்டிடத்தின் தரைத்தளத்தில் உள்ள ஒரு அறையை தபால் அலுவலகமாக பயன்படுத்த தபால் துறைக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15, வார்டு-197வது மாமன்ற உறுப்பினர் திருமதி.S.மேனகா சங்கர் அவர்கள் மண்டல அலுவலர், மண்டலம் 15 அவர்களுக்கு அளித்த 22.09.2025 நாளிட்ட கடிதத்தில், 197வது வார்டு உத்தண்டி பகுதியில் மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் கீழே பின்புறம் உள்ள அறை பயனற்ற நிலையில் உள்ளதால் அதனை மேம்படுத்தி தபால் அலுவலகமாக (Post office) மாற்றி அமைத்து தருமாறு கோரியுள்ளார்.

முதுநிலை கண்காணிப்பு அலுவலர் (தெற்கு) தபால் துறை அவர்களின் 29.11.2025 நாளிட்ட கடிதத்தில், உத்தண்டி மாநகராட்சி கட்டிட வளாகத்திற்குள் புதியதாக தபால் அலுவலகம் திறக்கப்பட்டால் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் குறிப்பாக முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் எளிதில் தபால் சேவைகளை பெற அணுகுவதற்கும், மேலும் இவ்விடத்தில் புதிய கிளையை துவங்குவதன் மூலம் அஞ்சல், சேமிப்பு கணக்கு, வங்கி, பார்சல் சேவைகள், காப்பீடு மற்றும் பில் செலுத்துதல் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்குவதன் மூலம் சமுதாயத்திற்கு பெரிதும் பயனளிக்கும் வகையில் உத்தண்டி வார்டு-197, வார்டு அலுவலக கட்டிடத்தின் உள்ளே அஞ்சல் அலுவலகம் திறப்பதற்கும் மற்றும் உள்ளூர் பொதுமக்களுக்கு சேவை செய்வதற்கு ஏதுவாக 400 சதுர அடி இடத்தினை ஒதுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

உதவி ஆணையர் முதுநிலை மண்டலம் -15 அவர்களின் 24.12.2025 நாளிட்ட குறிப்பில், மேற்கண்ட பொருள் தொடர்பாக கள ஆய்வு மேற்கொண்டதில் இ- சேவை மையத்திற்காக தரைத்தளத்தில் பயன்படுத்தப்பட்ட அறையானது தற்போது உபயோகமின்றி காலியாக உள்ளதாகவும், மேற்படி 11 அடி நீளமும், 9.50 அடி அகலமும் கொண்ட சுமார் 105 சதுர அடி உள்ள அறையை தபால் துறையினர் தபால் அலுவலகமாக வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி பெறுவதற்கு ஆணையர் அவர்களுக்கு குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது..

மண்டலம்-15, வார்டு-197ல் பஜனை கோயில் தெருவில் உள்ள வார்டு அலுவலக கட்டிடத்தில் இ-சேவை மையத்திற்காக தரைத்தளத்தில் பயன்படுத்தப்பட்ட அறையானது தற்போது உபயோகமின்றி காலியாக உள்ளதாகவும், மேற்படி 11 அடி நீளமும், 9.50 அடி அகலமும் கொண்ட சுமார் 105 சதுர அடி உள்ள அறையை தபால் துறைக்கு ஒதுக்கீடு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பரிந்துரைக்கப்படுகிறது.

1. மண்டலம்-15, வார்டு-197 பஜனை கோயில் தெருவில் உள்ள வார்டு அலுவலக கட்டிடம் 105 சதுரடி பரப்பளவுள்ள அறைக்கு மாத வாடகை ரூ. 205/- + GST 18 % ரூ, 37 = ஆக மொத்தம் ரூ.242/- ( ரூ, 205/-ன் தொகையை 12 மாதத்திற்கு முன் பணமாக ரூ. 2460 /- ) செலுத்த வேண்டும்
2. தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 பிரிவு 316ன்படி மூன்றாண்டு காலத்திற்கு மட்டுமே ஒதுக்கீடு பொருந்தும்
3. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15% உயர்த்தப்படும்
4. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும்
5. மாத வாடகையினை ஒவ்வொரு மாதமும் மாதத்தின் 5ஆம் தேதிக்குள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15ல் செலுத்த வேண்டும்
6. பின்வரும் காலங்களில் மாநகராட்சிக்கு தேவை ஏற்படின் உடனடியாக மூன்று மாதத்திற்குள் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன்

மேற்படி கட்டிடத்தை தபால் துறை சென்னை நகர தெற்கு கோட்டத்திற்கு தபால் அலுவலகம் அமைக்க மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.01/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/2750/2024**

**ஆணையர் அவர்களின் 21.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 42/2026** **பொருள் எண்.42**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மாநகர போக்குவரத்து கழகம் - வால்டாக்ஸ் சாலையில் உள்ள டான்சி நிலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் தற்காலிக பேருந்து நிலையத்தினை குத்தகை அடிப்படையில் அமைக்க மன்றத்தின் அனுமதி.**

மாநகர போக்குவரத்துக் கழகம், வள்ளலார் நகர் பேருந்து நிலையத்திலிருந்து 189 பேருந்துகளை 26 வழித்தடங்களில் சுமார் 865 முறை இயக்குகிறது என்றும், 2024-2025 ஆண்டிற்கான மானிய கோரிக்கைகளின் பொழுது, அறிவித்தபடி வள்ளலார் நகர் பேருந்து நிலையத்திற்கான மேம்பாட்டு பணிகள் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி பணிகள் நடைபெற்று வருகிறது என்றும், பேருந்துகளை மாற்று இடத்திலிருந்து இயக்குவதற்கு தற்பொழுது சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான ராமகிருஷ்ணா பள்ளி அருகில் உள்ள காலி இடத்தில் தற்காலிக பேருந்து நிலையமாகப் பயன்படுத்தப்படுகிறது.

மேற்கூறிய இடத்திலிருந்து பேருந்துகளை இயக்குவதில் மாநகர போக்குவரத்து கழகத்திற்கும் பயணிகளுக்கும் சிரமம் ஏற்படுவதால், மாநகர போக்குவரத்து கழகம் டான்சியிடம் உள்ள வ.உ.சி சாலையில் உள்ள நிலத்தை தற்காலிக பேருந்து முனையமாக பயன்படுத்த கடிதம் எண்.19574/Civil/MTC/2023, நாள். 07-11-2025-ன் மூலம் கோரியது.

முதன்மை செயலாளர்/தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், டான்சி அவர்களின் 28.11.2025 நாளிட்ட செயல்முறை ஆணையில், சென்னை மாவட்டம், புரசைவாக்கம் தாலுகா, வேப்பேரி கிராமம், பிளாக்-3, நகர புல எண். 1282/16 மற்றும் 1282/17, வால்டாக்ஸ் சாலையில் உள்ள 1.40 ஏக்கர் நிலத்தினை குறுகிய காலத்திற்கு மாதவாடகை ரூ.6,70,824/- மற்றும் வரிகள் என நிர்ணயம் செய்து வாடகை ஒப்பந்தம் மூலம் செயல்படுத்த மாநகர போக்குவரத்து கழகத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், மேலும் தற்பொழுது பழுதடைந்துள்ள கட்டிடத்தை இடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும், இடிப்பதற்கான செலவைவிட அதிகமாக பெறக்கூடிய கழிவுக்கான தொகையினை டான்சிக்கு செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர போக்குவரத்து கழகம் நஷ்டத்தில் இயங்கும் அமைப்பு என்பதால், டான்சி தெரிவித்துள்ளவாறு மாத குத்தகை தொகையினை வழங்க இயலாது என்பதால், இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி ஒத்துழைப்பை நாடுவதாகவும், மேற்கூறிய டான்சி நிறுவனத்திடமிருந்து நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சியே குறுகிய காலத்திற்கு குத்தகை அடிப்படையில் எடுத்து குத்தகை உடன்படிக்கையினை ஏற்படுத்தி டான்சி நிர்ணயிக்கும் மாத குத்தகை தொகையான ரூ.6,70,824/- மற்றும் வரிகள்

அனைத்தையும் செலுத்தி தற்காலிக பேருந்து நிலையத்தினை அமைத்து தரும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.06/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.மஉ.து.ந.க.எண்.எல்இ 6 / 2787 / 2025**

**ஆணையர் அவர்களின் 21.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 43 / 2026** **பொருள் எண்.43**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் -4, வார்டு-44, பாடசாலை தெரு, கக்கன்ஜி நகர், வியாசர்பாடி, சென்னை - 600039 ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடத்தில் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான கல்வி மற்றும் திறன் பயிற்சி திட்டங்களை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பயன்படுத்த அனுமதி கோரப்பட்டுள்ளது - அறிக்கை வரப்பெற்றுள்ளது - மன்றத்தின் அனுமதி வேண்டுவது.**

உதயம் அறக்கட்டளை ஒரு பதிவு செய்யப்பட்ட இலாப நோக்கற்ற தன்னார்வ அமைப்பாகும். உதயம் அறக்கட்டளை மூலமாக எழுத்தறிவு வகுப்புகள், தொழிற்பயிற்சி, கணினி திறன்கள், கல்வி, மற்றும் திறன் மேம்பாடு, திறன் பயிற்சி திட்டங்கள் மூலமாக பெண்கள் மற்றும் இளைஞர்களை மேம்படுத்துவதை தங்கள் அமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளதால் இப்பயிற்சி மையம் நடத்துவதற்காக மண்டலம்-4, வார்டு-44, பாடசாலை தெரு, கக்கன்ஜி நகர், வியாசர்பாடி, சென்னை - 600 039ல் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும், எழுத்தறிவு வகுப்புகள், தொழிற்பயிற்சி, கணினி திறன்கள் போன்றவை அடங்கும். இந்த திட்டங்கள் தங்கள் அமைப்பின் மேற்பார்வையின் கீழ் நிபுணர்களால் தொடர்ந்து நடத்தப்படும். மேலும் 44வது வார்டில் உள்ள பெண்கள் மற்றும் இளைஞர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும், அவர்களின் திறன்களையும் அறிவையும் மேம்படுத்துதல், இதன் மூலம் அவர்களின் சமூக-பொருளாதார வாய்ப்புகளை மேம்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக 23.12.2025 நாளிட்ட கடித்தில், மண்டலம்-4, வார்டு-44, பாடசாலை தெரு, கக்கன்ஜி நகர், வியாசர்பாடி, சென்னை- 600 039ல் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடத்தைப் பயன்படுத்த அனுமதி கோரியுள்ளதால் புலத்தணிக்கை செய்து அக்கட்டிடம் அமைந்துள்ள இடத்தினை வரைபடத்துடன் கூடிய விரிவான அறிக்கை ஆகியவற்றினை இத்துறைக்கு அளிக்குமாறும் கோரப்பட்டது

இந்நிலையில் மாவட்ட வருவாய் அலுவலர்/உதவி ஆணையர், மண்டலம்-4 அவர்களின் 09.01.2026 நாளிட்ட கடிதத்தில், களஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட பாடசாலை தெருவில் கட்டப்பட்டு வரும் திறன் மேம்பாடு இக்கட்டிடம் அமைந்துள்ள இடம் தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடம் இருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட இடமானதாகவும், இதன் பிளாட் எண். 182, பிளாக் எண். 42, நகர புலஎண் 779/23 பிரிவு என தெரியவருகிறது எனவும், இக்கட்டிடத்தின் வாயில் தெற்கு திசையில் அமைந்துள்ளதாகவும், இக்கட்டிடத்தின் தரைத்தளம் 681.75 சதுர அடி மற்றும் முதல் தளம் 681 .75 சதுர அடி கொண்டதாகவும். இக்கட்டிடத்தை உதயம் அறக்கட்டளைக்கு பயன்படுத்த அனுமதி அளிக்க எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும், மேற்படி கட்டிடத்தின்

தரைத்தளம் மற்றும் முதல் தளம் முழுவதையும் (1363.50 சதுர அடி) உதயம் அறக்கட்டளைக்கு ஒதுக்கீடு செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டிடத்தின் வரைபடத்துடன் கூடிய அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள மண்டலம்-4, வார்டு-44, பாடசாலை தெரு, கக்கன்ஜி நகர், வியாசர்பாடி, சென்னை- 600 039ல் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடத்தின் தரைத்தளம் 681.75 சதுர அடி மற்றும் முதல் தளம் 681.75 சதுர அடி கொண்டதாக உள்ள இக்கட்டிடத்தை உதயம் அறக்கட்டளைக்கு பயன்படுத்த அனுமதி அளிக்க எவ்வித ஆட்சேபனை இல்லை எனவும், மேற்படி கட்டிடத்தின் தரைத்தளம் மற்றும் முதல் தளம் முழுவதையும் (1363.50 சதுர அடி) உதயம் அறக்கட்டளைக்கு ஒதுக்கீடு செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால் THE TAMIL NADU URBAN LOCAL BODIES RULES, 2023, [G.O. Ms. No. 45, Municipal Administration and Water Supply (Election) Department, 12th April 2023-விதிகளின் படி கட்டிடத்தில் தரைத்தளம் மற்றும் முதல் தளம் முழுவதையும் (1363.50 சதுர அடி) கொண்ட கட்டிடத்தினை மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பரிந்துரைக்கப்படுகிறது.

1. தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 பிரிவு 316ன்படி மூன்றாண்டு காலத்திற்கு மட்டுமே ஒதுக்கீடு பொருந்தும். 1363,50 சதுரடி பரப்பளவுள்ள கட்டிடத்திற்கு மாத வாடகை ரூ.8181/ + GST 18% ரூ.1473/- ஆக மொத்தம் ரூ.9,654 (ரூ.8178/-ன் தொகையை 12 மாதத்திற்கு முன் பணமாக ரூ.98,172/-) செலுத்த வேண்டும் என்றும்
2. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15% உயர்த்தப்படும்,
3. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும்.
4. மாத வாடகையினை ஒவ்வொரு மாதமும் மாதத்தின் 5ஆம் தேதிக்குள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ல் செலுத்த வேண்டும்.
5. பின்வரும் காலங்களில் மாநகராட்சிக்கு தேவை ஏற்படின் உடனடியாக மூன்று மாதத்திற்குள் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன்

மேற்படி உள்ள கட்டிடத்தினை உதயம் அறக்கட்டளைக்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.07/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9 / 596 / 2022**

**ஆணையர் அவர்களின் 21.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 44 / 2026** **பொருள் எண்.44**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - மண்டலம்-14, சோழிங்கநல்லூர் வட்டம், ஜல்லடையன்பேட்டை கிராமம், பிளாக் எண்.43-ன் புல எண்.56, 57 / 1A1B & 57 / 1Bல் அருகிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி திறந்தவெளி பூங்காவின் கிழக்கு பகுதியில் உள்ள புல எண்.68 / 1A2-ல் சுமார் 10 மீ அகலம் x 32.9 நீளம் = 329.10 சதுர மீட்டர் கொண்ட ஒரு பகுதியில் பாதை அமைப்பது - விரிவான குறிப்புரை அரசுக்கு அனுப்பப்பட்டது - மன்றத்தின் அனுமதி வேண்டுவது.**

திருமதி.திலகவதி க/பெ. *D*.பார்த்தசாரதி, அவர்கள் தன்னுடைய மனுவில் தனக்கு சொந்தமான பரப்பு *1.18* ஏக்கர் நஞ்சை நிலத்தின் சர்வே எண். *56, 57/1A1B & 571B* -க்கு பாதை இல்லை என தெரிவித்து அதன் அருகே உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு-*191*, பகுதி-*43*, மண்டலம்-*14* சர்வே எண்.*63/1Pt, 63/2A Pt, 63/2B Pt, 67 Pt & 68 / 1A* ஜல்லடியன்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள பூங்காவின் கிழக்கில் *(M/s Selene Estate park)* சர்வே எண் *68/1A* ல் *10*மீ அகலம் *X 32.9*மீ நீளம் *=329.10* சதுர மீட்டர் நிலத்தை பாதை அமைக்க வழங்கும்படியும் அதற்கு ஈடாக தன்னுடைய நிலத்திலிருந்து பரிவர்த்தனையாக கொடுப்பதாக கூறியுள்ளார். பூங்காவின் சுவரை மாற்றி அமைக்கும் செலவு மற்றும் இதர செலவுகளையும் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் " The Tamil nadu Parks, Play – Fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 – பத்தி எண்.*6*-ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> **"No park, play - field or open space specified in the list published under section 4 or 5 shall, except with the previous sanction of the Government, be used for any purpose other than the purpose or purposes for which it was used on the date of the coming into force of this Act under sub - section (3) of section 1 or on the date with effect from which this Act is extended to the local area concerned under sub - section (4) of section 1, as the case may be."**

மேற்கண்ட சட்ட விதிகளின் அடிப்படையில் திறந்தவெளி நிலத்தினை எத்தகைய பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டதோ அத்தகைய பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதால் மனுதாரர் கோரிக்கையை பரிசீலிக்க வழிவகை இல்லாத நிலை உள்ளது என்ற விவரத்தை மனுதாரருக்கு துணை ஆணையர்/வ.ம.நி, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் *24.01.2023* நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். *W.P.No.8514 of 2023, 14.03.2025*- நாளிட்ட உத்தரவின் விவரம்கீழ்வருமாறு,

Prayer: Writ Petition filed under Article 226 of the Constitution of India, praying for the issuance of a direction in the nature of Writ of Certiorarified Mandamus to call for the records pertaining to the impugned order passed in Ni.Ma.U.Thu.Na.Ka.No.LE9-596-2022 dated 24.01.2023 on the file of the 4th respondent and quash the same as illegal and arbitrary and consequently direct the 4th respondent to consider the petitioner's application for exchange of land of accessing her land dated 17.03.2022 in accordance to law.

Order: 6. In the impugned order passed by the 4th respondent he has referred the above said Tamil Nadu Parks, Play-field Open Space Reservation (Preservation and Regulations Act, 1959). According to which, except with the previous sanction of the Government, be used for any purpose other than the purpose or purposes for which it was used on the date of the coming into force of this Act.

7. The 2nd respondent is directed to forward the application/representation of the petitioner dated 17.03.2022 to the 1st respondent within a period of four weeks from the date of receipt of a copy of the order.

8. On receipt of the application, the 1st respondent shall consider the same, the above said Act on merits in accordance with law within period of six weeks thereof.

மேற்கண்ட சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி இவ்வலுவலக 14.05.2025 (ம) 14.07.2025 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 14, சோழிங்கநல்லூர் வட்டம், ஜல்லடையன்பேட்டை கிராமம், பிளாக் எண்.43, புல எண்கள். 56, 57/1A1B & 57/1B-ல் அருகிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி திறந்தவெளி பூங்காவின் (M/s Selene Estate park) ஒரு பகுதியில் சுமார் 329.10 ச.மீ பரப்பளவில் தனியருக்கு பாதை அமைக்க நிலம் வழங்குதல் தொடர்பாக அனுமதி வேண்டி அரசுக்கு கடிதம் அனுப்ப புலத்தணிக்கை மேற்கொண்டு விரிவான கருத்துருவினை கோரி உதவி ஆணையர், மண்டலம் – 14 அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

துணை ஆட்சியர்/நி.ம.உ.து (தெற்கு) மற்றும் உதவி ஆணையர், மண்டலம்-14 ஆகியோரின் 08.08.2025 (ம) 14.10.2025 நாளிட்ட கடிதங்களில் மேற்கண்ட பூங்கா பகுதியை 05.08.2025 அன்று தனி வட்டாட்சியர், உதவிபொறியாளர். கோ-191 மற்றும் இவ்வலுவலக நில அளவர்களுடன் பெருநகர சென்னை மாநகராட்சி திறந்த வெளி பூங்கா (M/s. Selene Estate park) மற்றும் மனுதாரரின் நிலம் புலத்தணிக்கை செய்யப்பட்டது எனவும்,

மேற்கண்ட இப்பூங்கா அமைந்துள்ள நிலமானது M/s. Selene Estate Limited நிறுவனம் தானப்பத்திரம் மூலம் பத்திர பதிவு எண். 1351/2010, நாள் 02.03.2010ல் சென்னை பெருநகர வளர்ச்சி குழும உறுப்பினர் செயலர் அவர்களின் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டு தானமாக வழங்கப்பட்டதாகவும் இப்புலமானது சர்வே எண். 63/1Pt, 63/22A.Pt, 63/2B Pt, 67 Pt & 68/1A ஜல்லடியன்பேட்டை கிராமம் பத்திர பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும்,

தற்பொழுது, கோட்டம்-191, பகுதி–43, மண்டலம்-14ன் மூலம் பூங்காவாக பராமரிக்கப்பட்டு வருவதாகவும் இதன் மொத்த பரப்பளவு 1.36ஏக்கர் (5540ச.மீ) ஆகும். பூங்காவின் நீளம் 168மீ அகலம் 32.9மீ ஆகும். மேலும், இந்நிலமானது வருவாய் துறை ஆவணங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் (பட்டா எண் 2035) தாக்கலாகியுள்ளது எனவும்,

சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், ஜல்லடியான்பேட்டை கிராமம், புல எண்56, 57, 57/1A1B (ம) 57/1B-ல் உள்ள தனியரது நிலத்திற்கு செல்வதற்கு பாதை இல்லை என்பது புலத்தணிக்கையில் தெரிய வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 12.11.2025 நாளிட்ட கடிதத்தில் தனியருக்கு பாதை அமைக்க நிலம் வழங்குதல்

தொடர்பாக சில விவரங்கள் கோரியது தொடர்பாக இவ்வலுவலக 21.11.2025 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், ஜல்லடியான்பேட்டை கிராமம், பிளாக் எண்.43, புல எண்கள். 56, 57/1A1B & 57/1B-இல் அருகிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி திறந்தவெளி பூங்காவின் ஒரு பகுதியில் சுமார் 329.10 ச.மீ பரப்பளவில் தனியருக்கு பாதை அமைக்க நிலம் வழங்குதல் தொடர்பாக அந்நிலத்தின் புலத்தணிக்கை விவரங்கள், உரிய வரைப்படங்கள் மற்றும் நில ஆவணங்கள் இணைத்து அனுப்பப்படுகிறது. எனவும், மனுதாரருக்கு பாதை அமைக்க மன்றத்தின் மூலம் தீர்மானம் ஏதும் நிறைவேற்றப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 25.11.2025 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 14, சோழிங்நகல்லூர் வட்டம், ஜல்லடையன்பேட்டை கிராமம், பிளாக் எண்.43, புல எண்கள். 56, 57/1A1B & 57/1B-ல் அருகிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி திறந்தவெளி பூங்காவின் ஒரு பகுதியில் சுமார் 329.10 ச.மீ பரப்பளவில் தனியருக்கு பாதை அமைக்க நிலம் வழங்குதல் தொடர்பாக கோரிய புல எண் விவரங்கள் மற்றும் இப்பொருள் தொடர்பாக அரசால் எடுக்கப்பட வேண்டிய முடிவு குறித்த தங்களது குறிப்பான குறிப்புரை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மனுதாரரால் பாதைக்காக கோரப்படும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலத்தின் விவரம்

மாவட்டம் :- சென்னை　　　　வட்டம் :- சோழிங்கநல்லூர்

| கிராமம் | புல எண் | வகைபாடு | மொத்தம் விஸ்தீரணம் ஹெக்டேரில் | மாற்றப்படும் நிலத்தின் விஸ்தீரணம் ஹெக்டேரில் | உரிமையாளர் |
|---|---|---|---|---|---|
| ஜல்லடையன் பேட்டை | 68/1A2 | ரயத்துவாரி நஞ்சை | 0.19.10.00 | 0.03.29.10 | சென்னை மாநகராட்சி |

மனுதாரரால் பாதைக்கு மாற்றாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளிக்கப்படும் நிலத்தின் விவரம்

மாவட்டம் :- சென்னை　　　　வட்டம் :- சோழிங்கநல்லூர்

| கிராமம் | புல எண் | வகைபாடு | மொத்தம் விஸ்தீரணம் ஹெக்டேரில் | மாற்றப்படும் நிலத்தின் விஸ்தீரணம் ஹெக்டேரில் | உரிமையாளர் |
|---|---|---|---|---|---|
| ஜல்லடையன் பேட்டை | 56 | ரயத்துவாரி நஞ்சை | 0.28.50.00 | 0.01.61.42 | 1. D. பார்த்தசாரதி<br>2. P. திலகவதி |
| | 57/1A1B | | 0.16.50.00 | 0.01.67.84 | 1. D. பார்த்தசாரதி<br>2. P. திலகவதி |

உதவி ஆணையர், மண்டலம் - 14 மற்றும் துணை ஆட்சியர்/நி.ம.உ.து (தெற்கு) அவர்களின் கூட்டுப்புலத் தணிக்கையின் அடிப்படையில் மனுதாரர் திருமதி.திலகவதிக்கு சொந்தமான நிலமான பரப்பு 1.18 ஏக்கர் நஞ்சை நிலத்தின் சர்வே எண். 56, 57/1A1B & 571B -க்கு பாதை இல்லை என தெரியவருவதால், மேற்படி நிலத்திற்கு பாதையாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு-191, பகுதி-43, மண்டலம்-14 சர்வே எண்.63/1Pt, 63/2A Pt, 63/2B Pt, 67 Pt & 68 / 1A2 ஆகியவற்றில் ஜல்லடியன்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள (M/s Selene Estate park) பூங்காவின் கிழக்குப்பகுதியில் சர்வே எண் 68/1A2 ல் 10மீ அகலம் X 32.9மீ நீளம் =329.10 சதுர மீட்டர் நிலத்தை பாதை அமைக்க வழங்கி அதனை பெருநகர சென்னை மாநகராட்சி சாலையாகவே உபயோகப்படுத்தும் நோக்கில் சென்னை மாநகராட்சி பெயரிலே வைக்கவும், அதற்கு ஈடாக மனுதாரரின் சொந்த நிலமான புல எண். 56, 57/1A1B-ல் இருந்து 329.10 சதுர மீட்டர் நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் தானமாக பெற்று M/s Selene Estate park உடன் இணைத்து பூங்காவாக அமைக்கவும், சுற்று சுவர் எழுப்பவும் மற்றும் இதற்கான செலவினங்கள் அனைத்தையும் மனுதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனுதாரரின் நிலத்திற்கு பாதை அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலத்தினை சாலையாக வகைபாடு மாற்றம் செய்யலாம் என்பதனை இவ்வலுவலக 29.12.2025 நாளிட்ட கடிதம் மூலம் அரசு துணை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

எனவே, உதவி ஆணையர், மண்டலம்-14 மற்றும் துணை ஆட்சியர்/நி.ம.உ.து (தெற்கு) அவர்களின் கூட்டுப்புலத் தணிக்கையின் அடிப்படையில் மனுதாரர் திருமதி.திலகவதிக்கு சொந்தமான நிலமான பரப்பு 1.18 ஏக்கர் நஞ்சை நிலத்தின் சர்வே எண். 56, 57/1A1B & 571B -க்கு பாதை இல்லை என தெரியவருவதால், மேற்படி நிலத்திற்கு பாதையாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு-191, பகுதி-43, மண்டலம்-14 சர்வே எண்.63/1Pt, 63/2A Pt, 63/2B Pt, 67 Pt & 68 / 1A2 ஆகியவற்றில் ஜல்லடியன்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள (M/s Selene Estate park) பூங்காவின் கிழக்குப்பகுதியில் சர்வே எண் 68/1A2 ல் 10மீ அகலம் X 32.9மீ நீளம் =329.10 சதுர மீட்டர் நிலத்தை பாதை அமைக்க வழங்கி அதனை பெருநகர சென்னை மாநகராட்சி சாலையாகவே உபயோகப்படுத்தும் நோக்கில் பெருநகர சென்னை மாநகராட்சி பெயரிலே வைக்கவும், அதற்கு ஈடாக மனுதாரரின் சொந்த நிலமான புல எண். 56, 57/1A1B-ல் இருந்து 329.10 சதுர மீட்டர் நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் தானமாக பெற்று M/s Selene Estate park உடன் இணைத்து பூங்காவாக அமைக்கவும், சுற்று சுவர் எழுப்பவும் மற்றும் இதற்கான செலவினங்கள் அனைத்தையும் மனுதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனுதாரரின் நிலத்திற்கு பாதை அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலத்தினை சாலையாக வகைபாடு மாற்றம் செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.05/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“அரசிடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**வ.து.ந.க.எண்.ஜி1/1490/2021**

**ஆணையர் அவர்களின் 14.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 45/2026** **பொருள் எண்.45**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - சொத்துவரி - தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 - திருத்தம் - விதி 256 (4A)ல் சொத்துவரி பெயர் மாற்றக் கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டு அரசிதழ் வெளியிடப்பட்டது -- திருத்தப்பட்ட விதி 256 (4A)யை அமல்படுத்துதல் - மன்றத்தின் பதிவிற்காக.**

தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒருங்கிணைந்த சட்டம் மற்றும் விதிகள் உருவாக்கப்பட்டு கடந்த 13.04.2023 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண். 836, நாள் 16.12.2025-இல், தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, சொத்துவரி பெயர் மாற்றக் கட்டணங்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023,விதி *256(4-A)*க்கான திருத்தம்**

" **Any return filed for transfer of property under this sub-rule shall be accompanied by such fee of Rs.500/- (Rupees five hundred only) for residential building and Rs.1000/- (one thousand only) for non-residential building**".

**நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் சொத்துவரி பெயர் மாற்றக் கட்டணம் விவரம்**

| குடியிருப்பு பயன்பாடு (ரூபாயில்) | குடியிருப்பு அல்லாத பயன்பாடு (ரூபாயில்) |
|---|---|
| *500* | *1000* |

அரசிதழ் சிறப்பு அறிக்கை எண்.836, நாள், 16.12.2025ன் வாயிலாக, தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, விதி *256(4-A)*-க்கு வெளியிடப்பட்ட திருத்தம், நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.08/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ம.அ.6.வதுந.க.எண்.ஆர்1/2609/2025**

**ஆணையர் அவர்களின் 22.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 46/2026** **பொருள் எண்.46**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 6, கோட்டம் – 69, ஜம்புலிங்கம் பிரதான சாலை சென்னை – 600 082ல் புதிதாக கட்டப்பட்ட சமுதாயக் கூடத்திற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, வார்டு-69, பகுதி-15, ஜம்புலிங்கம் பிரதான சாலை, சென்னை - 600 082ல் 47038 ச.அடி கொண்ட மனையில் தரைதளம் 11650 ச.அடி (stiltfloor), முதல் தளம் 10079 ச.அடி, இரண்டாம் தளம் 8837 ச.அடி மூன்றாம் தளம் 1980 ச.அடி, மொட்டை மாடியில் 545 ச.அடி மொத்தம் 33091 ச.அடி கொண்ட பரப்பளவுடன் புதிதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டுள்ளது. தரைதளத்தில் வாகனம் நிறுத்தும் இடம், முதல் தளத்தில் உணவு அருந்தும் கூடம் (சுமார் 435 நபர்கள் அமர்ந்து உணவருந்தும் வசதியுடன்) இரண்டாம் தளத்தில் திருமண நிகழ்ச்சி செய்யும் இடமாகவும் (சுமார் 800 பேர் அமரும் வசதியுடன்) மணமக்கள் அறைகளுடன் குளிர்சாதன வசதியுடன் உள்ளது. மூன்றாம் தளத்தில் விருந்தினர்கள் தங்கும் அறைகள் மற்றும் கழிப்பிடங்கள் உள்ளது.

இந்த சமுதாய நலக்கூடம் சிங்கார சென்னை 2.0 நிதியிலிருந்து ரூ. 13.47 கோடி செலவினத்திலும் மற்றும் மூலதன நிதியிலிருந்து ரூ.12.25 கோடி செலவினத்திலும் ஆக மொத்தம் ரூ. 25.72 கோடி செலவில் இந்த சமுதாய நலக்கூடம் குளிர்சாதன வசதியுடன் கட்டப்பட்டுள்ளது. தரைதளம் வாகன நிறுத்தம், முதல் தளம் உணவு அருந்தும் கூடம், இரண்டாம் தளம் நிகழ்ச்சி நடத்தும் இடம், மூன்றாம் தளம் விருந்தினர் அறைகள், மின்சார இணைப்பு, மின் தூக்கிகள் (goods lift 1 nos , public lift 2nos, VIP lift 1 nos) மின் விளக்கு, கழிவறை, மின் விசிறி, ஜெனரேட்டர், குடிநீர் இணைப்பு மற்றும் சமையல் அறை, போன்ற அத்தியாவசிய வசதிகள் அமைய பெற்றுள்ளன.

முதல் அரையாண்டு 2022-2023 சொத்து வரி பொது சீராய்வின் படி மேற்கண்ட சமுதாய நலக்கூடம் அமைந்துள்ள இடத்திற்கு வணிக பயன்பாட்டிலான அடிப்படை தெரு கட்டணம் ரூ. 7.50 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மேற்கண்ட சமுதாய நல கூடத்திற்கு கீழ்கண்ட கணக்கீட்டின் படி வாடகை நிர்ணயம் செய்யலாம். இந்த சமுதாய நல கூடத்திற்கு முன்வைப்பு தொகை ரூ. 20000/- என நிர்ணயம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கணக்கீட்டு விவரம்**

**கட்டிடத்தின் விவரம்**

| தளம் | பரப்பளவு |
|---|---|
| தரைதளம் (stilt floor) | 11650 ச.அடி |
| முதல் தளம் | 10079 ச.அடி |

| | |
|---|---|
| இரண்டாம் தளம் | 8837 ச.அடி |
| 3வது தளம் | 1980 ச.அடி |
| மொட்டை மாடிகட்டுமானம் | 545 ச.அடி |
| மொத்த பரப்பளவு | 33091 ச.அடி |

கட்டிடத்தின் மொத்த சதுரடி 33091. ச.அடி x7.50x12 =ரூ.74454.75 (அ) ரூ. 75000/-

ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள்

ஒரு நாள் வாடகை ரூ.75000/- ( சரக்கு மற்றும் சேவை வரி தனியே)

அரைநாள் வாடகை ரூ. 37500/- (சரக்கு மற்றும் சேவை வரி தனியே)

நிகழ்ச்சி ஒன்றுக்கு முன்வைப்பு தொகையாக ரூ. 20,000/- நிர்ணயம் செய்யலாம்.

**<u>பிற நிபந்தனைகள்.</u>**

1. அரசியல் நிகழ்ச்சிகள், வணிக ரீதியான நிகழ்ச்சிகள் போன்றவைகளுக்கு அனுமதி கிடையாது.
2. சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்காக அலுவலர் கூட்டங்கள், இயற்கை இடர்பாடுகளின் போது பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் தேர்தல் பணிகள் போன்ற தவிர்க்க முடியாத அவசர நிகழ்வுகளில் சமுதாய நலக்கூடம் தேவைப்படின் மனுதாரருக்கு வழங்கப்படும் முன்பதிவானது ரத்து செய்யப்படும்.
3. ஒதுக்கீடு பெற்ற நிகழ்ச்சிக்காக மட்டுமே சமுதாய நல கூடம் பயன்படுத்திட வேண்டும்.
4. சமுதாய நல கூடத்திற்குள் உள்ள பொருட்களை சேதப்படுத்தினால் அதற்குரிய தண்டத் தொகை வசூலிக்கப்பட்டு முன்வைப்புத் தொகையிலிருந்து நேர் செய்யப்படும்.
5. சமூக நல கூட ஒதுக்கீட்டிற்கான பொதுவான அனைத்து நிபந்தனைகள்.

மேற்கண்ட சமுதாய நல கூடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18/12/2025 அன்று திறக்கப்பட இருந்த நிலையில் சமுதாய நலக் கூடத்திற்கு நிலைக்குழு (வருவாய் மற்றும் நிதி) மற்றும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டு ஒரு நாள் வாடகை ரூ.75,000/- (ரூபாய். எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) (சரக்கு மற்றும் சேவை வரி தனியே) எனவும் அரை நாள் வாடகை ரூ.37,500/- (ரூபாய். முப்பத்து ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) எனவும் (சரக்கு மற்றும் சேவை வரி தனியே) GST நிர்ணயம் செய்யவும் முன்வைப்புத் தொகையை ரூ.20,000/- ஆக நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்க ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது.

எனவே, வார்டு-69, பகுதி – 15, ஜம்புலிங்கம் பிரதான சாலை, சென்னை – 600 082ல் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நல கூடத்திற்கு ஒரு நாள் வாடகை ரூ.75,000/- (ரூபாய். எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) (சரக்கு மற்றும் சேவை வரி தனியே) எனவும், அரை நாள் வாடகை ரூ.37,500/- (ரூபாய். முப்பத்து ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) எனவும் (சரக்கு மற்றும் சேவை வரி தனியே) GST நிர்ணயம் செய்தும், முன்வைப்புத் தொகையை ரூ.20,000/- ஆக

**நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தமைக்கு, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

> "27.01.2026 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்**.10/2026, **நாள்**.27.01.2026**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.7.நக,எண்.ஆர்1/4085/2025**

**ஆணையர் அவர்களின் 22.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 47/2026** **பொருள் எண்.47**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 7 - வருவாய் பிரிவு - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலம் 4 நாட்களுக்கு வாடகை அடிப்படையில் வாகன நிறுத்தும் இடமாக உபயோகிக்க அனுமதி அளிக்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

தி மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் 01.12.2025 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-7 சீதாகாதி சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலி நிலம், தி மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவனையின் பின்புறம் உள்ளதாகவும், 11.12.2025 முதல் 14.12.2025 வரை மருத்துவமனைகள் மற்றும் சுகாதார சேவை வழங்குநர்களுக்கான தேசிய அங்கீகார வாரியம் குழு ஆய்வுக்கு வருகை புரிவதையடுத்து, அந்நாட்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்தமான நிலத்தினை வாடகை அடிப்படையில் வாகன நிறுத்தமாக நிர்வகிக்க அனுமதி வழங்குமாறும் அதற்கு குறிப்பிட்ட கட்டணத்தினை செலுத்த தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கீழ்கண்ட விவரங்கள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

- மேற்குறிப்பிட்ட நிலமானது சமுதாயகூட கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டு தற்போது காலியாக உள்ளது.
- விதி 316 (1) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன்படி மன்றமானது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டிடத்தினை 3 ஆண்டுகளுக்கு மிகாமல் உரிமம் மற்றும் குத்தகை அடிப்படையில் பொது நோக்கத்திற்காக அல்லது மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அனுமதித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- விதி 316 (2) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ல் உரிமம் கட்டணம் மற்றும் குத்தகை கட்டணத்தினை வழிகாட்டி மதிப்பில் குறிப்பிட்ட சதவீதத்தில் நிர்ணயம் செய்திட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**அதன்விவரம் பின்வருமாறு:**

| உபயோகம் | வழிகாட்டி மதிப்பில் குத்தகை கட்டண சதவீதம் |
|---|---|
| பொது நோக்கம் மற்றும் ஆன்மீகம் | 0.5 |
| தனியார் கல்வி நிறுவனங்கள் | 3 |
| அரசு உதவி பெறும் பள்ளி (50 சதவீதத்திற்கு கீழ் அரசு உதவி பெறும் பள்ளியில் மாணக்கர்கள் இருப்பின்) | 1.5 |
| அரசு உதவி பெறும் பள்ளி (50 சதவீதத்திற்கு மேல் அரசு உதவி பெறும் பள்ளியில் மாணக்கர்கள் இருப்பின்) | 0.5 |

| | |
|---|---|
| மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது பொதுத்துறை நிறுவனங்கள் | 3 |
| மெட்ரோ இரயில் | 1 |

இந்நிகழ்வில் தி மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவமனைகள் மற்றும் சுகாதார சேவை வழங்குநர்களுக்கான தேசிய அங்கீகார வாரியம் ஆய்வினை மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்துள்ளதையடுத்து அதிகபட்ச வழிகாட்டி மதிப்பில், அதிகபட்சம் என குறிப்பிட்டுள்ள *3* சதவீதம் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட மருத்துவமனைக்கு *4* நாட்களுக்கு கட்டணம் நிர்ணயித்து அனுமதிக்கலாம் எனவும், அதன்படி கீழ்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்து தொகையினை செலுத்த கேட்டுக்கொள்ளலாம் என கருதி அனுமதிக்கப்பட்டது,

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துள்ள கட்டணத்தினை தி மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் செலுத்துமாறு கேட்டு கொண்டு *4* நாட்களுக்கு *11.12.2025* முதல் *14.12.2025* வரை குத்தகை அடிப்படையில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட வேண்டும் என குறிப்பிட்டு அனுமதி வழங்கப்பட்டது.

| நிலப்பரப்பு சதுர அடி | வழிகாட்டி மதிப்பு | சதவீதம் | ஆண்டுக்கான குத்தகை கட்டணம் ரூ. | நாட்கள் | கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 12736 | 8800 | 3/100 | 33,62,304 | 4/365 | 36,847.16 (முழுமையாக்கப்பட்டது 36,850) |

இதனையடுத்து மேற்குறிப்பிட்ட தொகை ரூ.*36,850/-* (ரூபாய் முப்பத்தாராயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) தி மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் *NEFT* மூலமாக ஆணையர் அவர்களுக்கு *(NEFT TO THE COMMISSIONER CORPORA:UBIN0253588622)* பணம் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, தி மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் *4* நாட்களுக்கு *11.12.2025* முதல் *14.12.2025* வரை பெருநகர சென்னை மாநரகாட்சிக்கு சொந்தமான நிலத்தினை வாடகை அடிப்படையில் அதாவது குத்தகை அடிப்படையில் வாகன நிறுத்தமாக நிர்வகிக்க அனுமதி வழங்கப்பட்டதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.11/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**மி.து.ந.க.எண்.பி மே2 / பி1 / 5188 / 2025**

**ஆணையர் அவர்களின் 23.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 48 / 2026** **பொருள் எண்.48**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மின்துறை - 2025–26 - மண்டலம்-1 முதல்15 வரையில் உள்ள பகுதிகளில் கம்பங்கள் (POLE) நிறுவப்பட்டதை வரண்முறைபடுத்துவதற்கு ISP நிறுவனங்களிடமிருந்து கட்டணம் வசூலிக்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் *ISP (JIO, Airtel & ACT )* நிறுவனங்கள் மூலம் நடப்பட்ட கம்பங்கள் மற்றும் புதியதாக அமைப்பதற்கான அனுமதி மொத்தம் *1,90,518* எண்ணிக்கையில் கம்பம் அமைப்பதற்கு மண்டலம் *1* முதல் *15* வரை அனுமதி வழுங்கப்பட்டது. அவற்றின் விவரம் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| *ISP* நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட மற்றும் முறைப்படுத்தப்பட்ட கம்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| JIO | 159326 |
| Airtel | 31112 |
| ACT | 80 |
| மொத்தம் | 190518 |

இதன் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமாகவும், ஒழுங்கற்ற முறையிலும் கம்பங்கள் நடப்படுவதாக புகார் வந்துள்ளன. இதன் தொடர்ச்சியாக *TSP/ ISP* நிறுவனங்கள் கம்பங்கள் நடும் பணிகளை மின்துறையின் மூலம் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்முடிவில் *TSP/ ISP* நிறுவனங்கள் தங்களுக்கு வழங்கிய எண்ணிக்கையில் அனுமதியைவிட அதிக எண்ணிக்கையிலும் அனுமதிக்கப்படாத பகுதியிலும் கம்பங்களை அமைத்துள்ளதை கண்டறியப்பட்டது. இதனால் இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுவது அவசியம் கருதி மன்ற தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதாவது அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமாக நடப்பட்டிருக்கும் கம்பங்களுக்கு *(1* எண்ணிக்கை*)* ரூ.*75,000)* அபராதம், அனுமதி பெறாமல் நடப்பட்ட கம்பங்களுக்கு ஒரு எண்ணிகைக்கு ரூ.*1,00,000*, ஒழுங்கற்ற முறையில் நடப்பட்ட கம்பங்களுக்கு ஒன்றுக்கு ரூ.*50,000* அபராதத்தொகை விதிக்கவும் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

மன்றத் தீர்மான எண் *595/2024*, நாள் *30.12.2024*ன்படி சில *ISP* நிறுவனங்களுக்கு அபராத தொகை விதித்து கடிதம் அனுப்பப்பட்டது. அந்நிறுவனங்கள் அபராத தொகையினை செலுத்தாமல் மிகவும் அதிகமாக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை, தலைமை செயலகத்திற்கு திருவாளர்கள் ஏசிடி நிறுவனம் அவர்கள் *21.11.2025* நாளிட்ட கடிதத்தில் கடந்த *2013* முதல் *2022* ஒரு எண்ணிக்கையில் கம்பம் நடப்பட்டதாகவும் அவற்றில் அரசு செயல்படுத்தப்பட்ட *(Implementation of TN-Government's Free Wi-Fi Project)* இலவச *Wi-Fi*-ற்காக *2400* கம்பங்கள் அமைக்கப்பட்டதாகவும் மீதம் *17821* கம்பங்களை வரன்முறைபடுத்துவதற்கு

மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியால் விதிக்கப்பட்ட அபராதத் தொகையினை திரும்ப பெறவும் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மேலும் கடந்த 2022க்கு முன்னர் OFC நிறுவனங்கள் தெருவிளக்கு கம்பங்கள் வழியாக ஒயர் எடுத்து செல்வதற்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டு வரன்முறைபடுத்தப்பட்டது. கம்பம் (Pole) நடுவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. .

அரசு ஆணை எண் Ms 4, நாள்: 25.01.2022 ல் " Any application for regularization after six months of issue of the Policy shall entail additional penal fee of 100% of the charges. specified in clause (a)/(b) above" என குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு ஆணை எண் Ms 4, நாள்:25.01.2022ல் குறிப்பிட்டுள்ளபடி TSP/ ISP நிறுவனங்கள் புதியதாக அமைக்கப்படும் கம்பம் ஒன்றுக்கு ஒரு முறை கட்டணம் ரூ.1000 வசூலிக்கவும் மற்றும் அந்நிறுவனங்கள் கம்பம் நிறுவப்படும்போது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தெருவிளக்கு கம்பம் மற்றும் உடைமைகளை பாதிக்காமல் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.5000 வைப்பு தொகையாக வசூலிக்கலாம் எனவும்,

மேலும், ISP நிறுவனங்களின் (own pole) ஒரு கம்பத்திற்கு ரூ 1000-ற்கு 100 சதவிகிதம் அபராதம் ரூ.1000 என மொத்தம் ரூ.2000 தொகை வசூலித்து வரண் முறைபடுத்துவதற்கும் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

எனவே,

1. அரசு ஆணை எண் Ms 4, நாள்: 25.01.2022ல் குறிப்பிட்டுள்ளபடி 6 மாதத்திற்கு பிறகு வரண்முறைபடுத்தப்படும் ISP நிறுவனங்களின் ஒரு கம்பத்திற்கு (own pole) ரூ. 1000-ற்கு 100 சதவிகிதம் அபராதம் ரூ. 1000 என மொத்தம் ரூ.2000 தொகை வசூலிக்க அனுமதியும்,
2. TSP/ ISP நிறுவனங்கள் கம்பம் நிறுவுவதற்கு அரசு ஆணை எண் Ms 4, நாள்: 25.01.2022ன்படி அனுமதி பெற்று சில நிர்வாக காரணங்கள் மற்றும் இடவசதி இல்லாமல் (Site Location) நிறுவமுடியாமல் பின்னர் வேறு இடத்தில் நிறுவப்பட அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட மிகாமலும் அமைக்கப்படுவதற்கு துறை ரீதியாகஅனுமதி வழங்கவும்,
3. மன்றத் தீர்மான எண் 595/2024, நாள் 30.12.2024ன்படி TSP/ ISP நிறுவனங்களின் மீது அபராதத்தொகை செலுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பதிலாக அரசு ஆணை எண் Ms 4, நாள்: 25.01.2022ன்படி வரண்முறைபடுத்துவதற்கு கம்பம் ஒன்றுக்கு ஒருமுறை கட்டணம் ரூ.2000 வசூலிக்கவும் ,
4. அரசு ஆணை எண் Ms 4, நாள்: 25.01.2022ல் குறிப்பிட்டுள்ளபடி TSP/ ISP நிறுவனங்கள் புதியதாக கம்பங்கள் நடுவதற்கு அனுமதி கட்டணம் ரூ.1000/- மற்றும் ரூ.5000/- வைப்பு தொகையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.03/2026, நாள். 23.01.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.15/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ஒ.க.ம.க.மை.து.ந.க.எண்.70/2025**

**ஆணையர் அவர்களின் 23.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 49/2026** **பொருள் எண்.49**

**பெருநகர சென்னை மாநகராட்சி – ICCC – Citizen 360° ஒருங்கிணைந்த குடிமக்கள் ஈடுபாடு மற்றும் பகுப்பாய்வு தளத்தின் வடிவமைப்பு, மேம்பாடு, செயலாக்கம், ஒருங்கிணைப்பு மற்றும் பராமரிப்பு பணிக்காக நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையமானது(*ICCC*), நகரம் முழுவதும் நிகழ்நேர கண்காணிப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் முக்கிய முடிவெடுத்தலை ஆதரிக்கும் வகையில், ஒருங்கிணைந்த அமைப்புகளுடன், *IoT* கட்டமைப்புகள் மற்றும் செயல்பாட்டு டாஷ்போர்டுகளை(*Dashboard*) ஒருங்கிணைக்கும் மையமான டிஜிட்டல் நிர்வாக தளமாக வளர்ந்துள்ளது.*ICCC 2.0*ன் கீழ், மையப்படுத்தப்பட்ட டேட்டா-லேக் கட்டமைப்பு (*Data Lake*) உருவாக்கப்பட்டதன் மூலம், திடக்கழிவு மேலாண்மை, மின்துறை, மழைநீர் வடிகால், பேரிடர் மேலாண்மை, வருவாய் மற்றும் நிதி போன்ற பல்வேறு துறைகளிலிருந்து தரவுகள் ஒருங்கிணைக்கப்பட்டு, நிர்வாகம் மற்றும் கொள்கை ஆதரவிற்கான பகுப்பாய்வு விளக்கங்களும் செயல்திறன் குறியீடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

*ICCC 2.0* மூலம் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் செயல்பாடு குறிப்பிடத்தக்க வகையில் மேம்பட்டிருந்தாலும், குடிமக்கள் தொடர்புடைய சேவைத் தரவுகள், பல்வேறு தனித்தனி பயன்பாடுகள் மற்றும் இணையவழி தளங்களில் சிதறி உள்ளன. தற்போதைய நிலையில், சேவைகள், புகார்கள், பரிவர்த்தனைகள் மற்றும் ஈடுபாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருங்கிணைந்த, குடிமக்கள் மையமான பார்வையை வழங்கும் ஒரே தளம் இல்லை. இதனால் தனிப்பயன் சேவைகளை வழங்குதல், குடிமக்கள் அனுபவத்தை முழுமையாக பகுப்பாய்வு செய்தல் மற்றும் சேவையின்பயன்களை முன்கூட்டியே மேம்படுத்துதல் ஆகியவை கட்டமைக்கப்படுகின்றது.

*ICCC 2.0* டிஜிட்டல் மாற்றத் திட்டத்தின் தொடர்ச்சியாக, தற்போதுள்ள *ICCC* சூழலுடன் முழுமையாக ஒருங்கிணைந்த*Citizen 360°* ஒருங்கிணைந்த குடிமக்கள் ஈடுபாடு மற்றும் பகுப்பாய்வு தளம்செயல்படுத்த முன்மொழியப்படுகிறது.

*Citizen 360°* தளம், *GCC* துறைகள் முழுவதும் குடிமக்கள் மற்றும் சேவை நிலைத் தரவுகளை ஒருங்கிணைக்கும் ஒரு டிஜிட்டல் அடுக்காக செயல்பட்டு, மாநகராட்சியுடன் குடிமக்கள் மேற்கொள்ளும் அனைத்து தொடர்புகளையும் ஒரே, முழுமையான பார்வையில் காண அனுமதிக்கும். இது சேவை வழங்கல் திறன், புகார் தீர்வு செயல்திறன் மற்றும் ஆதார அடிப்படையிலான முடிவெடுத்தலை மேம்படுத்தி, தரவுசார்ந்த, குடிமக்கள் மைய நிர்வாகத்தை ஆதரிக்கும்.

**முன்மொழியப்பட்ட பணியின் முக்கிய கூறுகள்:**

- தற்போதுள்ள *GCC* குடிமக்கள் சார்ந்த மற்றும் துறைமுக அமைப்புகளுடன் (புகார் தளங்கள், மொபைல் பயன்பாடுகள், வரி மற்றும் உரிமம் அமைப்புகள் மற்றும் அறிவிக்கப்படும் பிற பயன்பாடுகள் உட்பட) ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்திசைவு.
- *ICCC* டேட்டா-லேக்குடன் ஒருங்கிணைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குடிமக்கள் தரவுக் களஞ்சியம் உருவாக்குதல்; அதற்கான தரவு நிர்வாகம், தனியுரிமை மற்றும் அணுகல் கட்டுப்பாடுகள்.
- சேவை பயன்பாடு, புகார்கள், பதிலளிப்பு காலவரையறைகள் மற்றும் துறைவாரியான செயல்திறன் குறியீடுகளை கண்காணிக்க பகுப்பாய்வு கருவிகள் மற்றும் டாஷ்போர்டுகள்பயன்படுகிறது,
- துறை அலுவலர்கள் மற்றும் மூத்த நிர்வாகத்திற்கான பங்கு அடிப்படையிலான டாஷ்போர்டுகள், *ICCC* காட்சிப்படுத்தல் மற்றும் நிர்வாக டாஷ் போர்டுகளுடன் ஒருங்கிணைப்பு.
- இந்திய அரசின் மற்றும் ஸ்மார்ட் சிட்டி வழிகாட்டுதல்களுக்கு இணங்க, கிளவுட் ஹோஸ்டிங், இணைப்புகள், சைபர் பாதுகாப்பு கட்டுப்பாடுகள் மற்றும் அமைப்புகளுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது. .
- வரையறுக்கப்பட்ட சேவை நிலை ஒப்பந்தங்களுடன் *(SLA)* ஒரு ஆண்டு செயல்பாடு மற்றும் பராமரிப்பு ஆதரவு.

**எதிர்பார்க்கப்படும் பயன்கள்:**

- சேவைகள் மற்றும் துறைகள் முழுவதும் குடிமக்கள் தொடர்புகளின் ஒருங்கிணைந்த மற்றும் முழுமையான பார்வை
- புகார் தீர்வு காலக்கெடுகள் மற்றும் சேவை பொறுப்புணர்வு மேம்பாடு
- தரவின் அடிப்படையிலான தனிப்பயனாக்கம் மூலம் குடிமக்கள் ஈடுபாடு மற்றும் அனுபவ மேம்பாடு
- ஒருங்கிணைந்த டாஷ்போர்டுகள்( *Dashboard*) மற்றும் பகுப்பாய்வுகள் மூலம் வலுவான நிர்வாக கண்காணிப்புசெயல்படுத்தப்படும்.
- எதிர்கால *AI* சார்ந்த சேவை மேம்பாடு மற்றும் முன்நோக்கிய நிர்வாகத்திற்கான அடித்தளம்கொள்முதல் நடைமுறை நீண்ட கால திட்ட அடிப்படையிலான *Citizen 360°* தளத்தின் முக்கியத்துவம், தொழில்நுட்ப சிக்கல்தன்மை மற்றும் நீண்டகால நிர்வாக தாக்கத்தை கருத்தில் கொண்டு, தகுதியான *System Integrator*ஐ தேர்வு செய்ய திறந்த ஒப்பம் நடைமுறையை பின்பற்ற முன்மொழியப்படுகிறது.

இந்தத் தீர்வு, *ICCC* கீழ் *Citizen 360°* தளத்தின் வடிவமைப்பு, மேம்பாடு, செயலாக்கம், ஒருங்கிணைப்பு மற்றும் பராமரிப்பு, ஒரு ஆண்டு ஆதரவு மற்றும் பராமரிப்பு உட்பட கொண்டதாகும். *RFP* ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தொழில்நுட்ப திறன் மற்றும்

வணிக போட்டித்தன்மை ஆகியவற்றின் கூட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் தேர்வு மேற்கொள்ளப்படும்.

**செலவு விவரங்கள்:**

மேற்கண்ட தேவைகளை பூர்த்தி செய்ய விரிவான *BoQ* தயாரிக்கப்பட்டு, சந்தையிலிருந்து போட்டித்தன்மையுள்ள மேற்கோள்கள் பெறப்பட்டுள்ளன. குறைந்தபட்சமாக கண்டறியப்பட்ட விலை ரூ. *3,49,94,380.00* (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து முந்நூற்றி எண்பது மட்டும்) ஆகும். இது *GST* உட்பட ஆகும்.

| S.No | Particulars | Qty | UOM | Cost in Rs. |
|---|---|---|---|---|
| 1 | Citizen 360 Software Platform License including Integration with Existing ICCC Systems & Department Applications, Cloud Infrastructure Hosting & Connectivity for 1 Year | 30 | Concurrent Users | 1,75,06,254 |
| 2 | Configuration & Customization of Citizen 360 Platform as per user requirement | 1 | LS | 85,50,000 |
| 3 | Operation & Maintenance Support with SLA for 1 Year | 1 | LS | 36,00,000 |
| | Total Amount without GST in Rs. | | | 2,96,56,254 |
| | GST 18% in Rs.(Rounded off) | | | 53,38,126 |
| | Total Amount with GST in Rs.(Rounded off) | | | 3,49,94,380 |

எனவே,

1. Citizen 360° ஒருங்கிணைந்த குடிமக்கள் ஈடுபாடு மற்றும் பகுப்பாய்வு தளத்தின் வடிவமைப்பு, மேம்பாடு, செயலாக்கம், ஒருங்கிணைப்பு மற்றும் பராமரிப்பு" பணிக்காக, GST உட்பட ரூ.3,49,94,380.00 (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து முந்நூற்றி எண்பது மட்டும்) என்ற தொகைக்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. 2025–26 ஆம் ஆண்டிற்கான ICCC – Other Fixed Asset Head 410800000 கீழ் மேற்கண்ட செலவினத்தை ஏற்க அனுமதி வழங்கவும்,
3. Citizen 360° ஒருங்கிணைந்த குடிமக்கள் ஈடுபாடு மற்றும் பகுப்பாய்வு தளத்தின் வடிவமைப்பு, மேம்பாடு, செயலாக்கம், ஒருங்கிணைப்பு மற்றும் பராமரிப்பு பணிக்காக System Integrator ஐ அடையாளம் காண திறந்த ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.07/2026, நாள்.23.01.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

******

**<u>ம.து.ந.க.எண்.அ1/443/2025</u>**

**<u>ஆணையர் அவர்களின் 06.01.2026 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 50/2026** **பொருள் எண்.50**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மன்றத்துறை - மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வார்டு மேம்பாட்டு திட்டப் பணிகள் பட்டியலில் கூடுதலாக கண்காணிப்பு கேமரா (CCTV) கொள்முதல் செய்யும் பணியினை சேர்க்க மன்றத்தின் அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியில், 19.12.2025 அன்று நடைபெற்ற சாதாரண மன்றக் கூட்டத்தில், நேரமில்லா நேரத்தின் போது திரு.வே.ராஜன், மன்ற உறுப்பினர், வார்டு எண்.143 அவர்கள் ஏரியா சபை கூட்டங்களில் அனைத்து சங்க பிரதிநிதிகளும் தெருக்களில் கண்காணிப்பு கேமரா பொருத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்கள் எனவும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், நமக்கு நாமே திட்டத்திலும் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதே போல், மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலும் கண்காணிப்பு கேமரா (CCTV) பொருத்த அனுமதி வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டதற்கு மாண்புமிகு மேயர் அவர்களால் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்தும் கண்காணிப்பு கேமரா பொருத்தலாம் என தெரிவித்தார்கள்.

மன்றத் தீர்மான எண்.402/2013, நாள்.26.06.2013ல், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் மேம்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது பரிந்துரைக்கும் வார்டுக்கு தேவையான வளர்ச்சிப் பணிகளை, மண்டல அலுவலர்களாலும், துறைத் தலைவர்களாலும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு மன்றத் தீர்மானம் எண்.126/2004, நாள்.24.06.2004ன்படி இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மன்றத் தீர்மான எண்.1152/2025, நாள்.30.10.2025ல் அட்டவணை “அ” வில் அங்கீகரிக்கப்பட்ட திட்டப் பணிகளில் 39வது பணியாக “சக்கர தடை உபகரணம் கொள்முதல் செய்தல்” (Skid Steer Loader) பணியையும் சேர்த்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும், மேலும் மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வார்டு மேம்பாட்டுத் திட்ட பொதுக்கொள்கை வழிகாட்டு மற்றும் நிறைவேற்றும் முறைகளின்படி அட்டவணை “அ"வில் கீழ்கண்ட 39 பணிகள் அனுமதிக்கக்கூடிய பணிகளாகவும், அட்டவணை “ஆ"வில் 13 பணிகள் அனுமதிக்கக்கூடாத பணிகளாகவும் வகைப்படுத்தப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், மாமன்ற உறுப்பினர் கோரிக்கைகேற்பவும், மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ல் மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகார பகிர்வினை பின்பற்றியும் சிறப்பு நிகழ்வாக இத்திட்டத்தின் செயல்பாட்டை,

காலத்திற்கேற்ப அனுமதிக்கக்கூடிய பணிகள் பட்டியலில் (அட்டவணை “அ” வில்) சில மாறுதல்கள் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

**அட்டவணை “அ”**

**அங்கீகரிக்கப்பட்ட திட்டப் பணிகள்**

1. கழிப்பறைகள் கொண்ட நவீன கழிப்பிடம்
2. தடுப்புகள் கொண்ட சிறுநீர் கழிப்பிடம்
3. மாநகராட்சி கட்டிடங்களுக்கு சுற்று சுவர்கள் கட்டுதல்.
4. சாலையோர கால்வாய்.
5. குளியல் அறை கட்டுதல்.
6. மாநகராட்சி பள்ளிகளுக்கு கணிப்பொறிகள்.
7. மாநகராட்சி பள்ளி வகுப்பறை மேம்படுத்துதல்.
8. மாநகராட்சி கட்டட வளாகத்தில் கைபம்புகள் அமைத்தல்.
9. பேருந்து நிழற்குடை அமைத்தல்.
10. பூங்காக்களில் சிறுவர் விளையாட்டு சாதனங்கள் அமைத்தல்.
11. பூங்கா மேம்படுத்துதல்.
12. குடிசைப் பகுதியில் அடிப்படை வசதிகளை குடிநீர் அமைத்து சாலை பொது கழிப்பிடம் மற்றும் குளியலறை.
13. சாலைகளின் குறுக்கே சிறு பாலம் கட்டுதல்.
14. இணைப்புச் சாலை மற்றும் அணுகுசாலை
15. உடற்பயிற்சிக் கூடம் கட்டுதல் மற்றும் அதற்கான சாதனங்கள் நிறுவுதல்
16. குப்பை சேகரிக்கும் பெட்டகம்
17. தாய்சேய் நல விடுதிகளுக்கான மின்னணு சாதனம் வாங்குதல்
18. மருத்துவ பரிசோதனை நிலையங்களுக்குத் தேவையான பரிசோதனை கருவிகள்.
19. மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் மழைநீர் சேமிப்பு அமைப்பு ஏற்படுத்துதல்.
20. பள்ளிகளில் கலையரங்கம் அமைத்தல் மற்றும் புதிதாக பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்.
21. விளையாட்டு மைதானங்களில் திறந்தவெளி அரங்கங்கள் அமைத்தல்.
22. விளையாட்டு மைதானம் அமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள்.
23. நீத்தார் நிறைவுக்கூடம் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்.
24. இடுகாடு மற்றும் சுடுகாடுகளில் அபிவிருத்திப் பணிகள் மற்றும் மேம்படுத்துதல்.
25. குப்பை அகற்றுவதற்கு மூன்று சக்கர மிதிவண்டி மற்றும் தேவையான பிளாஸ்டிக் (PLASTIC) தொட்டிகள் தள்ளுவண்டி வாங்குதல்.
26. பள்ளிகளுக்குத் தேவையான ஆய்வுக்கூட உபகரணங்கள் மற்றும் ஒலி, ஒளிகாட்டு கல்வி சாதனங்கள் மற்றும் கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்.
27. போக்குவரத்து தீவு மற்றும் நீரூற்றுகள்.
28. சாலை மையத் தடுப்பு அமைத்தல்.

29. சுரங்க நடைபாதைகள் மேம்படுத்துதல்.
30. மழைநீர் கால்வாய்.
31. சத்துணவுக் கூடங்கள் மேம்படுத்தும் பணி.
32. மாநகராட்சி கட்டிடங்களில் நிலத்தடி நீர் சேமிப்பு தொட்டி, மேல்நிலை தொட்டி மற்றும் மின்சார மோட்டார் அமைத்தல்.
33. சாலை மற்றும் நடைபாதைகள்.
34. தாய் சேய் நல மருத்துவமனை மற்றும் மருந்தகம் கட்டுதல்.
35. கால்வாயின் குறுக்கே சிறுபாலம் அமைத்தல்.
36. மாநகராட்சி கட்டட வளாகம் மற்றும் பூங்காவில் குழாய் கிணறு மற்றும் கை பம்பு அமைத்தல்.
37. கட்டடங்களின் கூரை மேல் சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் தகடுகளிலான உபகரணங்கள் (Solar Roof Top Plant) அமைத்தல்.
38. பல்நோக்கு கட்டடம் கட்டுதல்/
39. சக்கர தடை உபகரணம்" (Skid Steer Loader) கொள்முதல் செய்தல்.
40. கூடுதலாக சேர்க்க கூடிய பணிகள்
41. கண்காணிப்பு கேமரா (CCTV) கொள்முதல்

<u>அட்டவணை "ஆ"</u>

<u>அனுமதிக்கக் கூடாத பணிகள்</u>

1. அலுவலகக் கட்டடம்.
2. குடியிருப்பு வீடுகள்.
3. வணிக நிறுவனங்களில் பணிகள், டிரஸ்ட், பதிவு பெற்ற சொசைடி, தனியார் நிறுவனங்கள் அல்லது கூட்டுறவு நிறுவனங்கள்.
4. நீடித்து பயன் தரக்கூடிய சொத்தின் தனித் தகுதி பெற்ற பழுதுபார்ப்பு அல்லது மேம்படுத்துல் தவிர எந்தவிதமான பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளும் செய்யக்கூடாது.
5. மானியம் மற்றும் கடன்கள்.
6. நினைவாலயம், சிலைகள் மற்றும் நினைவு கூடங்கள்.
7. தளவாட சாமான்கள், உபகரணங்கள் (அட்டவணை 'அ'வில் வரிசை எண்.37 தவிர) , குழல் ஆவி விளக்குகள்.
8. நிலம் கையகப்படுத்துதல் அல்லது கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு ஈடுசெய்தல்.
9. அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பகுதிக்குட்படாத தனிப்பட்ட நபருக்கு பயன்படுத்தக் கூடிய சொத்துக்கள்.
10. வழிபாட்டு இடங்கள்.

11. தெருவிளக்கு.
12. பிறத் துறைகள் மற்றும் வாரியங்களின் பணிகள்
13. தொடர் செலவினங்கள் தேவைப்படும் பணிகள்.

எனவே, மேலே கண்டவாறு அட்டவணை 'அ' வில் அங்கீகரிக்கப்பட்ட திட்டப் பணிகளில் 39 பணிகளுடன் கூடுதலாக 40வது பணியாக சிறப்பு நிகழ்வாக "கண்காணிப்பு கேமரா" (CCTV) கொள்முதல் செய்யும் பணியை சேர்த்தும் மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வார்டு மேம்பாட்டுத் திட்ட பொதுக் கொள்கை வழிகாட்டு மற்றும் பணிகள் நிறைவேற்றும் முறைகளின் கீழ் திருத்தம் மேற்கொள்வதற்கும், மேலும் மேற்படி நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்படும் கண்காணிப்பு கேமரா பொருத்துவது மற்றும் பராமரிப்பு குறித்து மின் துறை மூலமாக நிலையான வழிகாட்டு வழிமுறைகளை வகுக்கவும் மற்றும் செயல்படுத்துவதற்கும், நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.01/2026, நாள்.23.01.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.09/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**அ.து.ந.க.எண்.அ3 / 048 / 2026**

**ஆணையர் அவர்களின் 22.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 51/2026** **பொருள் எண்.51**

**பெருநகர சென்னை மாநகராட்சி – அரங்கத்துறை - 2025-2026ஆம் ஆண்டு மூலதன நிதியின் கீழ் மண்டலம்-8, கோட்டம்-98ல் அமைந்துள்ள அஸ்பைரன் கார்டன் மைதானத்தில் புதியதாக உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி - 2025-2026ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

மண்டலம்-8, கோட்டம்-98ல் அமைந்துள்ள அஸ்பைரன் கார்டன் மைதானத்தில் புதியதாக உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிக்காக 2025-2026 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,80,00,000/-க்கு தலைமைப் பொறியாளர் (பூ(ம)வி), அவர்களின் 15.12.2025 நாளிட்ட தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது.

அதனடிப்படையில், மண்டலம்-8, கோட்டம்-98ல் அமைந்துள்ள அஸ்பைரன் கார்டன் மைதானத்தில் புதியதாக உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட கீழ்கண்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl.No | Dn.no | Estimate No | Name of the work | Estimate Amount |
|---|---|---|---|---|
| 1 | 98 | NH/2025-26/7287 | Proposed Construction of Indoor stadium building in existing playground (OSR Land) at Aspiran Garden playgroun in Zone-8, Dn-98 | 4,80,00,000/- |

எனவே,

1. மண்டலம்-8, கோட்டம்-98ல் அமைந்துள்ள அஸ்பைரன் கார்டன் மைதானத்தில் புதியதாக உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிக்கு ரூ.4,80,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும் மற்றும் மின்னணு ஒப்பம் கோருவதற்கும்,

2. மேற்காணும் பணிக்குண்டான செலவீனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி, மூலதனநிதி, Function-60-62-00, கணக்கு குறியீடு எண்.412-400-100 (Play Grounds) என்ற தலைப்பில் பட்டி தீர்வு செய்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மூலமாக நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 12.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.05/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்பிக்கப்படுகிறது.”

“27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.13/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**அ.து.ந.க.எண்.அ3 / 047 / 2026**

**ஆணையர் அவர்களின் 22.01.2026நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 52/2026** **பொருள் எண்.52**

**பெருநகர சென்னை மாநகராட்சி - அரங்கத்துறை - 2025-2026ஆம் ஆண்டு மூலதன நிதியின் கீழ், மண்டலம்-8, கோட்டம்-101ல் அமைந்துள்ள ஜெ.ஜெ. உள் விளையாட்டு அரங்கத்தை மேம்படுத்தும் பணி - 2025-2026ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி மற்றும் மின்னணு ஒப்பம் கோருவதற்கு அனுமதி.**

மண்டலம்-8, கோட்டம்-101ல் அமைந்துள்ள ஜெ.ஜெ. உள் விளையாட்டு அரங்கத்தை மேம்படுத்தும் பணிக்காக 2025-2026 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.10,00,00,000/-க்கு தலைமைப் பொறியாளர் (பூ(ம)வி), அவர்களின் 05.01.2025 நாளிட்ட தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது.

அதனடிப்படையில், மண்டலம்-8, கோட்டம்-101ல் அமைந்துள்ள ஜெ.ஜெ. உள் விளையாட்டு அரங்கத்தை மேம்படுத்தும் பணிக்காக தயாரிக்கப்பட்ட கீழ்கண்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl.No | Dn.no | Estimate No | Name of the work | Estimate Amount |
|---|---|---|---|---|
| 1 | 101 | NH/2025-26/22042 | Redevelopment of JJ Indoor Stadium at Kilpauk, in Zone-8, Dn-101. | 10,00,00,000/- |

எனவே,

1. மண்டலம்-8, கோட்டம்-101ல் அமைந்துள்ள ஜெ.ஜெ. உள் விளையாட்டு அரங்கத்தை மேம்படுத்தும் பணிக்கு ரூ.10,00,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும் மற்றும் மின்னணு ஒப்பம் கோருவதற்கும்,
2. மேற்காணும் பணிகளுக்குண்டான செலவீனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் நிதி (Revenue Fund), Function-60-62-00, கணக்கு குறியீடு எண்.230-670-300 என்ற தலைப்பில் பட்டி தீர்வு செய்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 12.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.04/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.12/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**பூ.து.ந.க.எண்.பி2/774-1/2025**

**ஆணையர் அவர்களின் 12.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 53/2026** **பொருள் எண்.53**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பூங்காத்துறை - பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பூங்காக்களின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக (O & M) தினக்கூலிப் பணியாளர்களை நியமித்தல் - மண்டலம் வாரியாகத் தேவைப்படும் பல்வேறு வகையிலான தினக்கூலிப் பணியாளர்களின் திருத்தப்பட்ட பட்டியலுக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட *781* பூங்காக்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு *(O&M)* பணிகளின் நோக்கத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, தற்போதுள்ள ஒப்பந்தம் மன்றத் தீர்மானம் எண். *1263/2025*, நாள்: *19.12.2025*ன்படி, *31.12.2025* முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர், சென்னை அவர்களின் செயல்முறைகள், கடித எண் *C2/16317/2021*, நாள்: *13.08.2025*-ன் படி, புதிய ஒப்பந்தக்காரர்கள் இறுதி செய்யப்படும் வரை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பொதுப் பூங்காக்களின் இயக்க மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, சென்னை மாவட்ட ஆட்சியரால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட தினசரி ஊதியத்தின்படி, பெயரளவிலான வருகைப் பதிவேடு *(SHG)* ஊதியத்தின் கீழ் பின்வரும் வகைப் பணியாளர்களைப் பணியமர்த்த முன்மொழியப்பட்டுள்ளது.

**Table-1**

| Sl.No. | Category of Worker | Wages per Day (Rs.) |
|---|---|---|
| 1 | Supervisor | 682/- |
| 2 | Electrician-cum-Pump Operator | 870/- |
| 3 | Sweeper | 565/- |
| 4 | Gardener | 411/- |
| 5 | Security | 535/- |

சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர்கள் மூலம் மேற்கூறிய ஐந்து பிரிவுகளிலும் தினக்கூலித் தொழிலாளர்களை நியமிப்பதற்காக ஆணையரின் *31.12.2025* நாளிட்ட ஒப்புதல் உத்தரவுகள் (கடித எண் *P.D.C.NO.P2/774/2025)* பெறப்பட்டுள்ளது. மேலும், அந்தத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் பணம் வழங்குவதற்காக, சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்களால் பொருத்தமான வரவு செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் உத்தரவுகள் பெறப்பட்டுள்ளது.

ஆணையரின் *03.01.2026* நாளிட்ட ஆய்வுக் கூட்டத்தில், மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பூங்காக்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்புக்காக, *(SHG)* பணியாளர்களின் தினசரி வேலை நடவடிக்கைகளை நிர்வகிக்குமாறு சம்பந்தப்பட்ட பூங்கா மேற்பார்வையாளர், பூங்காக்களின் கண்காணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்களுக்கு ஆணையர் அறிவுறுத்தினார். ஆணையரின் அறிவுறுத்தல்களின்

அடிப்படையில், 1 முதல் 15 வரையிலான மண்டலங்களுக்கு 05.01.2026 & 07.01.2026 நாளிட்ட சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன.

கண்காணிப்புப் பொறியாளர் (பூங்காக்கள்) அவர்களால் 10.01.2026 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயக்க மற்றும் பராமரிப்பின் கீழ் உள்ள பூங்காக்களை திறம்பட நிர்வகிப்பதற்காக, பல்வேறு வகை தினக்கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கையை திருத்தி அமைக்குமாறு மண்டல அலுவலர்கள் கோரினர். இது தொடர்பாக. வட்டாரம் வாரியாக பல்வேறு வகை தினக்கூலித் தொழிலாளர்கள் எண்ணிக்கைகள், கீழ்க்காணும் அட்டவணையின் படி திருத்தி அமைக்கப்பட்டள்ளது.

**Zone wise (SHG) Worker requirement details**

| S.No | Zone | Total No. of Parks | No. of Parks maintained by ( SHG) | No of Sweeper Required | No of Gardener Required | No of Security Required | No of Electrician Required | No of Supervisor Required | Total Required for All Categories |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 14 | 14 | 28 | 0 | 0 | 1 | 1 | 30 |
| 2 | 2 | 37 | 34 | 82 | 4 | 3 | 0 | 2 | 91 |
| 3 | 3 | 64 | 58 | 143 | 5 | 8 | 3 | 3 | 162 |
| 4 | 4 | 56 | 56 | 128 | 4 | 8 | 2 | 2 | 144 |
| 5 | 5 | 28 | 27 | 96 | 15 | 22 | 1 | 2 | 136 |
| 6 | 6 | 55 | 50 | 125 | 11 | 19 | 2 | 4 | 161 |
| 7 | 7 | 124 | 93 | 246 | 0 | 24 | 1 | 7 | 278 |
| 8 | 8 | 41 | 33 | 81 | 9 | 14 | 0 | 3 | 107 |
| 9 | 9 | 48 | 29 | 87 | 5 | 10 | 1 | 2 | 105 |
| 10 | 10 | 60 | 56 | 149 | 9 | 18 | 7 | 4 | 187 |
| 11 | 11 | 95 | 62 | 130 | 1 | 2 | 5 | 5 | 143 |
| 12 | 12 | 75 | 70 | 146 | 0 | 0 | 3 | 7 | 156 |
| 13 | 13 | 87 | 65 | 147 | 2 | 4 | 2 | 7 | 162 |
| 14 | 14 | 76 | 59 | 146 | 7 | 15 | 5 | 6 | 179 |
| 15 | 15 | 95 | 58 | 142 | 5 | 8 | 7 | 7 | 169 |
| **Total** | | **955** | **764** | **1876** | **77** | **155** | **40** | **62** | **2210** |

மேற்கண்ட வட்டார வாரியாக ஆறு மாதத்திற்கு பணியாளர்களான தூய்மை பணியாளர்கள், தோட்ட தொழிலாளர்கள், பாதுகாவலர்கள், மின் பணியாளர்கள், மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு சம்பள செலவின தொகை இனம் 1, 2, 3 பட்டியலிடப்பட்டது.

**இனம் 1 (வடக்கு வட்டாரம்)**

| S. No | Zone | No. of Parks | Sweeper (Nos) | | | | Gardener (Nos) | | | | Security (Nos) | | | | Electrician (Nos) | | | | Supervisor (Nos) | | | | For 1 Month | For 6 Months |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | No | Rate (per day) | Per day Amount | Total Amount | No | Rate (per day) | Per day Amount | Total Amount | No | Rate (per day) | Per day Amount | Total Amount | No | Rate (per day) | Per day Amount | Total Amount | No | Rate (per day) | Per day Amount | Total Amount | | |
| 1 | 1 | 14 | 28 | 565 | 15820 | 490420 | 0 | 411 | 0 | 0 | 0 | 535 | 0 | 0 | 1 | 870 | 870 | 26970 | 1 | 682 | 682 | 21142 | 538532 | 3231192 |
| 2 | 2 | 34 | 82 | 565 | 46330 | 1436230 | 4 | 411 | 1644 | 50964 | 3 | 535 | 1605 | 49755 | 0 | 870 | 0 | 0 | 2 | 682 | 1364 | 42284 | 1579233 | 9475398 |
| 3 | 3 | 58 | 143 | 565 | 80795 | 2504645 | 5 | 411 | 2055 | 63705 | 8 | 535 | 4280 | 132680 | 3 | 870 | 2610 | 80910 | 3 | 682 | 2046 | 63426 | 2845366 | 17072196 |
| 4 | 4 | 56 | 128 | 565 | 72320 | 2241920 | 4 | 411 | 1644 | 50964 | 8 | 535 | 4280 | 132680 | 2 | 870 | 1740 | 53940 | 2 | 682 | 1364 | 42284 | 2521788 | 15130728 |
| 5 | 5 | 27 | 96 | 565 | 54240 | 1681440 | 15 | 411 | 6165 | 191115 | 22 | 535 | 11770 | 364870 | 1 | 870 | 870 | 26970 | 2 | 682 | 1364 | 42284 | 2306679 | 13840074 |
| **Total** | | **189** | **477** | | | **8354655** | **28** | | | **356748** | **41** | | | **679985** | **7** | | | **188790** | 10 | | | **211420** | **9791598** | **58749588** |

**இனம் 2 (மத்திய வட்டாரம்)**

| S. No | Zone | No. of Parks | Sweeper (Nos) | | | | Gardener (Nos) | | | | Security (Nos) | | | | Electrician (Nos) | | | | Supervisor (Nos) | | | | For 1 Month | For 6 Months |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | No | Rate (per day) | Per day Amount | Total Amount | No | Rate (per day) | Per day Amount | Total Amount | No | Rate (per day) | Per day Amount | Total Amount | No | Rate (per day) | Per day Amount | Total Amount | No | Rate (per day) | Per day Amount | Total Amount | | |
| 1 | 6 | 50 | 125 | 565 | 70625 | 2189375 | 11 | 411 | 4521 | 140151 | 19 | 535 | 10165 | 315115 | 2 | 870 | 1740 | 53940 | 4 | 682 | 2728 | 84568 | 2783149 | 16698894 |
| 2 | 7 | 93 | 246 | 565 | 138990 | 4308690 | 0 | 411 | 0 | 0 | 24 | 535 | 12840 | 398040 | 1 | 870 | 870 | 26970 | 7 | 682 | 4774 | 147994 | 4881694 | 29290164 |
| 3 | 8 | 33 | 81 | 565 | 45765 | 1418715 | 9 | 411 | 3699 | 114669 | 14 | 535 | 7490 | 232190 | 0 | 870 | 0 | 0 | 3 | 682 | 2046 | 63426 | 1829000 | 10974000 |
| 4 | 9 | 29 | 87 | 565 | 49155 | 1523805 | 5 | 411 | 2055 | 63705 | 10 | 535 | 5350 | 165850 | 1 | 870 | 870 | 26970 | 2 | 682 | 1364 | 42284 | 1822614 | 10935684 |
| 5 | 10 | 56 | 149 | 565 | 84185 | 2609735 | 9 | 411 | 3699 | 114669 | 18 | 535 | 9630 | 298530 | 7 | 870 | 6090 | 188790 | 4 | 682 | 2728 | 84568 | 3296292 | 19777752 |
| Total | | **261** | **688** | | | **12050320** | **34** | | | **433194** | **85** | | | **1409725** | **11** | | | **296670** | **20** | | | **422840** | **14612749** | **87676494** |

**இனம் 3 (தெற்கு வட்டாரம்)**

| S. No | Zone | No. of Parks | Sweeper (Nos) | | | | Gardener (Nos) | | | | Security (Nos) | | | | Electrician (Nos) | | | | Supervisor (Nos) | | | | For 1 Month | For 6 Months |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | No | Rate (per day) | Per day Amount | Total Amount | No | Rate (per day) | Per day Amount | Total Amount | No | Rate (per day) | Per day Amount | Total Amount | No | Rate (per day) | Per day Amount | Total Amount | No | Rate (per day) | Per day Amount | Total Amount | | |
| 1 | 11 | 62 | 130 | 565 | 73450 | 2276950 | 1 | 411 | 411 | 12741 | 2 | 535 | 1070 | 33170 | 5 | 870 | 4350 | 134850 | 5 | 682 | 3410 | 105710 | 2563421 | 15380526 |
| 2 | 12 | 70 | 146 | 565 | 82490 | 2557190 | 0 | 411 | 0 | 0 | 0 | 535 | 0 | 0 | 3 | 870 | 2610 | 80910 | 7 | 682 | 4774 | 147994 | 2786094 | 16716564 |
| 3 | 13 | 65 | 147 | 565 | 83055 | 2574705 | 2 | 411 | 822 | 25482 | 4 | 535 | 2140 | 66340 | 2 | 870 | 1740 | 53940 | 7 | 682 | 4774 | 147994 | 2868461 | 17210766 |
| 4 | 14 | 59 | 146 | 565 | 82490 | 2557190 | 7 | 411 | 2877 | 89187 | 15 | 535 | 8025 | 248775 | 5 | 870 | 4350 | 134850 | 6 | 682 | 4092 | 126852 | 3156854 | 18941124 |
| 5 | 15 | 58 | 142 | 565 | 80230 | 2487130 | 5 | 411 | 2055 | 63705 | 8 | 535 | 4280 | 132680 | 7 | 870 | 6090 | 188790 | 7 | 682 | 4774 | 147994 | 3020299 | 18121794 |
| Total | | **314** | **711** | | | **12453165** | **15** | | | **191115** | **29** | | | **480965** | **22** | | | **593340** | **32** | | | **676544** | **14395129** | **86370774** |

எனவே,

1. மண்டலம் 1 முதல் 15 வரை குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைப்படி தேவையான தினக்கூலிப் பணியாளர்களை (SHG) அங்கீகரிக்கவும் மற்றும் இனம் 1 (வடக்கு வட்டாரம்), இனம் 2 (மத்தியம் வட்டாரம்), இனம் 3 (தெற்கு வட்டாரம்)க்கு 01.01.2026 முதல் பணியில் அமர்த்தப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
   - இனம் 1 வடக்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 1 முதல் 5 வரை ரூ.5,87,49,588/- (ரூபாய் ஐந்து கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரத்து ஐநூற்று எண்பத்தெட்டு மட்டும்),
   - இனம் 2 மத்திய வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 6 முதல் 10 வரை ரூ.8,76,76,494/- (ரூபாய் எட்டு கோடியே எழுபத்தாறு இலட்சத்து எழுபத்தாராயிரத்து நானூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்),
   - இனம் 3 தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 11 முதல் 15 வரை ரூ.8,63,70,774/- (ரூபாய் எட்டு கோடியே அறுபத்தி மூன்று இலட்சத்து எழுபதாயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு மட்டும்), தனித்தனியே நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. சம்பந்தப்பட்ட வட்டார அலுவலகத்திற்கு உட்பட்ட மண்டல அலுவலர்கள் மூலம் தேவையான தினக்கூலிப் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
3. பூங்காக்களைத் தனியார்மயமாக்குவதற்கான கணக்குத் தலைப்பு வருவாய் நிதியை கணக்கு குறியீடு எண். 230-150-400-இன் கீழ், தலைமை அலுவலகம் தினக்கூலிப் பணியாளர்களின் வருகை பதிவேடுகளை PMC உடன் இணைந்து சரிபார்த்த பிறகு, நிதி மேலாண்மைப் பிரிவு (FM Unit) மூலம் அந்தந்த மண்டலங்களுக்கு பூங்கா தலைமையிடம் மூலமாக பட்டிதீர்வு செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 12.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.06/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

“27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.14/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

********

**ம.அ12.பொ.சு.து.ந.க.எண்.எச்2 / 1818 / 2025**

**ஆணையர் அவர்களின் 06.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 54/2026** **பொருள் எண்.54**

**பெருநகர சென்னை மாநகராட்சி - சுகாதாரத்துறை - மண்டலம்-12 - சுய உதவி குழுக்கள் (SHG) மூலம் பணியமர்த்தப்பட்ட கொசு ஒழிப்பு மற்றும் அனைத்து சுகாதார பணிகளுக்கு பணியமர்த்தப்பட்ட சுகாதார பணியாளர்களின் பணிக்காலம் 02.02.2026ல் முடிவடைகிறது - 05.02.2026 முதல் 04.02.2027 வரை ஒரு வருட காலத்திற்கு சுய உதவி குழுக்களின் (SHG)ன்கீழ் 201 சுகாதார பணியாளர்களை பணியமர்த்த மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–12ல், பொது சுகாதாரத்துறையில் மன்றத் தீர்மானம் எண்.59/2025, நாள்:30.01.2025-ன்படி, மண்டலம்-12, பகுதிகளில் வீட்டிலுள்ள நீர்த்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசு மருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து தெளிக்கும் பணிகள் மற்றும் அனைத்து சுகாதார பணிகள் மேற்கொள்ளவும், 201 சுகாதார பணியாளர்கள் சுய உதவி குழுக்கள் மூலம் பணியமர்த்த மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே பணிபுரிந்து வந்த சுய உதவி குழுக்களில் உள்ள சுகாதார பணியாளர்களின் பணிக்காலம் 02.02.2026 உடன் முடிவடைகிறது. மேலும் பணிகளின் அவசரம் அவசியம் கருதி ஓராண்டுக் காலத்திற்கு தொடர்வது அவசியமாகிறது.

தற்போது மண்டலம்-12 பொது சுகாதாரதுறையில் பணிபுரிய 31 நிரந்தர பணியாளர்களில் 10 பணியாளர்கள் பிற மண்டலங்களில் பணிபுரிகின்றனர். மீதமுள்ள 21 நிரந்தர பணியாளர்கள் மற்றும் சுய உதவி குழுக்கள் மூலம் கொசு ஒழிப்பு மற்றும் அனைத்து சுகாதார பணிகளுக்கு பணியமர்த்தப்பட்ட 201 சுகாதார பணியாளர்கள் மூலம் சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, மண்டலம்-12ல், கோட்டம் 156 முதல் 167 வரையிலான கோட்டங்களுக்கு தேவைப்படும் பணியாளர்களின் விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையின்படி

**அட்டவணை - 1**

| DIV | NO OF HOUSES | ALO | FOGGING | SWD/SD - SPRAY & DESILTING | CANAL | VMF | AU | HEALTH DEO | OTHER WORKS | Grand Total | PERMANENT | REQUIRED SHG WORKERS |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 156 | 12357 | 18 | 1 | 3 | 2 | 0 | 1 | 2 | 2 | 29 | 0 | 29 |
| 157 | 7816 | 14 | 2 | 3 | 2 | 2 | 0 | 1 | 1 | 26 | 3 | 23 |
| 158 | 3703 | 6 | 1 | 3 | 3 | 0 | 0 | 2 | 1 | 17 | 2 | 15 |
| 159 | 1100 | 2 | 2 | 1 | 1 | 0 | 0 | 0 | 1 | 7 | 1 | 6 |
| 160 | 4805 | 9 | 2 | 2 | 1 | 2 | 0 | 0 | 1 | 17 | 3 | 14 |
| 161 | 4750 | 10 | 2 | 2 | 1 | 0 | 1 | 1 | 0 | 17 | 1 | 16 |
| 162 | 5350 | 11 | 2 | 2 | 2 | 0 | 0 | 0 | 2 | 19 | 2 | 17 |
| 163 | 5400 | 11 | 1 | 2 | 2 | 0 | 0 | 1 | 0 | 17 | 1 | 16 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 164 | 5810 | 11 | 2 | 2 | 0 | 2 | 0 | 1 | 2 | 18 | 1 | 17 |
| 165 | 6825 | 12 | 1 | 2 | 3 | 0 | 0 | 0 | 1 | 19 | 4 | 15 |
| 166 | 6320 | 13 | 1 | 2 | 0 | 0 | 0 | 0 | 1 | 17 | 1 | 16 |
| 167 | 6053 | 12 | 2 | 2 | 0 | 0 | 1 | 1 | 1 | 19 | 2 | 17 |
| Grand Total | 70289 | 129 | 19 | 26 | 17 | 6 | 3 | 9 | 13 | 222 | 21 | 201 |

**அட்டவணை - *2* சுய உதவிக்குழுக்களின் விவரங்கள்**

| கோட்டம் | குழு எண் | அனுமதிக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களின் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 156 | SHG–12–156-001 | 29 |
| 157 | SHG–12–157-002 | 23 |
| 158 | SHG –12–158-003 | 15 |
| 159 | SHG–12–159-004 | 6 |
| 160 | SHG–12–160-005 | 14 |
| 161 | SHG–12–161-006 | 16 |
| 162 | SHG–12–162-007 | 17 |
| 163 | SHG12–163-008 | 16 |
| 164 | SHG–12–164-009 | 17 |
| 165 | SHG–12–165-010 | 15 |
| 166 | SHG–12–166-011 | 16 |
| 167 | SHG –12–167 -012 | 17 |
| மொத்தம் | | 201 |

திடக்கழிவு மேலாண்மை துறை சுற்றறிக்கை தி.க.மே.ந,க,எண்,ஆ3/3974/2023 நாள்:10.07.2024ன்படி ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு தினக் கூலியாக ரூ.753 என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட பணிக்குரிய தோராயமான செலவின **விபரப்பட்டியல்**

| | | |
|---|---|---|
| 1. | மொத்த கோட்டங்கள் | 12 |
| 2. | தேவையான பணியாளர்களின் எண்ணிக்கை | 201 |
| 3. | ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு தேவைப்படும் தினக்கூலி | Rs.753.00 (Rupees Seven hundred Fifty Three only) |
| 4. | 05.02.2026 முதல் 04.02.2027 வரை 201 நபர்களுக்கு 365 நாட்களுக்கு தேவைப்படும் தினக்கூலி | Rs.753 X 201 X 365 = Rs. 5,52,43,845/- (Rupees five crores Fifty two lakh Forty three thousand Eight hundred and forty five only) |
| 5. | பயன்படுத்தப்படும் கணக்கு குறியீடு | 30-32-02 (ANTI MOSQUITO OPERATION) /210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF – HEALTH WORKS) |

எனவே,

1. மண்டலம்-12ல் 05.02.2026 முதல் 04.02.2027 வரை கொசு ஒழிப்பு பணி கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுக்கும் பணி மேற்கொள்ள 201 பணியாளர்களை சுய உதவி குழுக்களின் மூலம் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும்,

2. இந்த பணியாளர்களுக்கு 05.02.2026 முதல் 04.02.2027 வரை தேவையான செலவீனத் தொகை ரூ Rs.753 X 201 X 365 = Rs. 5,52,43,845/- (Rupees Five crore fifty two lakh forty three thousand eight hundred and forty five only) யை கணக்கு தலைப்பு எண்.30-32-02 (ANTI MOSQUITO OPERATION) /210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF-HEALTH WORKS)-ன் கீழ் செலவினம் செய்யவும்,
3. சுய உதவி குழுக்கள் கீழ் குழு உறுப்பினர்கள் இருப்பதால் வருமான வரி பிடித்தம் செய்வதிலிருந்து மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,
4. கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் ஆணை, தி.க.மே.ந.க.எண்.அ3/3974/2023, நாள்.10.07.2024ன்படி ரூ.753/- வழங்குவதற்கும் 2025-2026ஆம் நிதியாண்டில் இத்தொகையை உயர்த்தப்படும் பட்சத்தில் உயர்த்தப்பட்ட தினக்கூலியை அப்பணியாளர்களுக்கு வழங்குவதற்கு அனுமதியும், இதற்குரிய கூடுதல் தொகையினை மேற்கண்ட இனம் 2ல் குறிப்பபிட்டுள்ள கணக்கு குறியீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யவும்,மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் இவ்வினத்தில் Vehicle Mounted Fogging பணிக்கு SHG தற்காலிக சுகாதார பணியாளர்களை பணியமர்த்த கூடாது என்ற நிபந்தனையுடன் 27.01.2026 அன்று தீர்மான எண்.008/2026ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையினை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.16/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.1.நக.எண்.பி1/5040/2025**

**ஆணையர் அவர்களின் 23.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 55/2026** **பொருள் எண்.55**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மதிப்பீடு - நமக்கு நாமே திட்டம் - மண்டலம் 1, கோட்டம் 3 - அன்னை சிவகாமி நகர் 11வது தெரு - சென்னை ஆரம்ப பள்ளி கட்டிடம் (G+1தளம்) கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | அன்னை சிவகாமி நகர் 11வது தெருவில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி கட்டிடம் (G+1 தளம்) கட்டும் பணி (நமக்கு நாமே திட்டம்) |
| 2 | மதிப்பீட்டு எண் | NA/2025-2026/22871 |
| 3 | பரிந்துரை செய்தவரின் பெயர் | உதவி ஆணையர்/ம-1 |
| 4 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம் 1 |
| 5 | தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட விவரம்/ நாள் | தலைமை பொறியாளர் (கட்டடம்) அவர்களின் தொழில்நுட்ப அனுமதி எண்:48, நாள்: 10.01.2026 |
| 6 | விலைப்பட்டியல் ஆண்டு | 2025-26ஆம் ஆண்டு |
| 7 | மதிப்பீட்டின் தொகை: | ரூ.2,65,85,000.00 |
| அ) | கட்டுமான பணி செலவு | ரூ. 2,17,01,986.39 |
| | ஜி.எஸ்.டி 18% | ரூ. 39,06,357.55 |
| | மொத்தம் | ரூ.2,56,08,343.94 |
| ஆ) | தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 2,17,019.86 |
| இ) | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 2,17,019.86 |
| ஈ) | மற்றைய எதிர்பாரா செலவு 2.5% | ரூ. 5,42,616.34 |
| உ) | மின்சார கட்டணம் | ரூ.----------------- |
| | மொத்தம் | ரூ.2,65,85,000.00 |
| 8) | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 9) | நிதியின் மூலதன்மை | நமக்கு நாமே திட்ட நிதி |
| 10) | இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 2,65,85,000.00 |

நமக்கு நாமே திட்டத்தின்படி பங்குத்தொகை விவரம்:

| | | |
|---|---|---|
| முன்கொணர்பவர் (Sponsor) பங்குத்தொகை (ஜி.எஸ்.டி வரிகள் உட்பட) (33.34%) | 33.34% | ரூ 88,65,000/- |
| தமிழக அரசின் பங்குத் தொகை (ஜி.எஸ்.டி வரிகள் உட்பட) | 66.66% | ரூ.1,77,20,000/- |

எனவே,

| | |
|---|---|
| 1 | மேற்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுத் தொகையான ரூ.2,65,85,000/- நிர்வாக அனுமதியும், |
| 2 | இப்பணியினை அரசாணை எண்.71, நாள்:13.09.2021ன் படி, நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், |
| 3 | திருவாளர்.Kamarjar Port Ltd, No.17, Jawahar Building, Rajaji Salai, Chennai நிறுவனம் அவர்களிடமிருந்து மதிப்பீட்டில் 33.34% ரூ.88,65,000-/ ஐ ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் பெயரில் நமக்கு நாமே திட்டம் வங்கி கணக்கு RTGS முறையில் UTR NO. UTIBR 72025092600062839 பெற்றதற்கும், |
| 4 | இப்பணியினை நமக்கு நாமே திட்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளின்படி முன்கொணர்பவர் (Sponsor) பங்கு தொகை 33.34% ரூ.88,65,000/- மற்றும் தமிழக அரசு பங்கு தொகை 66.66% ரூ.1,77,20,000/- மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.2,65,85,000/-ற்கு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், |
| 5 | இப்பணியினை நமக்கு நாமே திட்டத்திற்கான வழி முறைகளின் படி ஒப்பம் கோரி குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனம் மூலம் மேற்கொண்டு பணியினை மேற்கொள்ளவும், |
| 6 | நமக்கு நாமே திட்ட தலைப்பின் கீழ் பட்டித்தொகையினை குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு விடுவிக்கவும், |

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.04/2026, நாள்.23.01.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது. "

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**க.து.ந.க.எண்.இ3/0180/2026**

**ஆணையர் அவர்களின் 23.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 56/2026** **பொருள் எண்.56**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - நகர்புற வீடற்றோர் காப்பகம் செயல் பாட்டிற்கான கட்டமைப்பு (Operational framework) தயாரிக்கப்பட்டது - மேற்படி வடிவமைக்கப்பட்ட கட்டமைப்பிற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மெத்தம் *49* வீடற்றோருக்கான காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் *37* காப்பகங்கள் மற்றும் சிறப்பு காப்பகங்கள் *12* (மருத்துவமனை) மாநகர நல அலுவலர் (சுகாதாரம்) அவர்களின் கண்காணிப்பில் செயல்பட்டு வந்தது. அதனை தொடர்ந்து ஆணையர் அவர்களின் *01.12.2025* அன்று பெறப்பட்ட ஆணையின்படி காப்பகத்தின் அனைத்து செயல்பாடுகளையும் கட்டடத்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

காப்பகத்தின் செயல்பாடுகள் கட்டமைப்பு பணிகள் மற்றும் காப்பகத்திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களின் பணிகளை கண்காணிக்கவும், வழிநடத்தவும் ஆணையர் (பணிகள்), தலைமை பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர், செயற்பொறியாளர் (கட்டடத்துறை), தலைமை அலுவலகத்தின் அலுவலர்களால் நெறிபடுத்தப்பட்டு செயல்படுத்த ஆணையர் அவர்களின் *04.01.2026* நாளிட்ட குறிப்பாணை பெறப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் *07.01.2026* அன்று நடந்த ஆய்வு கூட்டத்தில், துணை ஆணையர் (பணிகள்), தலைமை பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர், செயற்பொறியாளர் அவர்களுடன் கலந்தாய்வு செய்யபட்டதை தொடர்ந்து நகர்புற வீடற்றோருக்கான அடிப்படை தேவைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் கையேடு *(SOP)* தயாரித்து செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் சில வரையறைகள் கொண்டு (Operational frame work for institutionalizing Basic Services for the Urban Homeless Through Shelter Scheme - 2026) தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தயாரிக்கப்பட்ட நகர்புற வீடற்றோர்களுக்கான காப்பகம் செயல்பாட்டிற்கான கட்டமைப்பிற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "23.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.09/2026, நாள். 23.01.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

> "27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.19/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண். பி1/0217/2026**

**ஆணையர் அவர்களின் 23.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 57/2026** **பொருள் எண்.57**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - Proposed Construction of Office Complex Building at Ripon Building Campus (West Side) in Div - 58, Zone - 05 கட்டும் பணிக்கு 2025-2026 ஆம் ஆண்டின் விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

Proposed Construction of Office Complex Building at Ripon Building Campus (West Side) in Div - 58, Zone - 05 கட்டும் பணியினை மேற்கொள்ள வேண்டி 2025-2026 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின் படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | Proposed Construction of Office Complex Building at Ripon Building Campus (West Side) in Div - 58, Zone - 05 கட்டும் பணி |
| 2 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 05. |
| 3 | மதிப்பீட்டின் தொகை விவரம் | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 7,90,00,000.00 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 1,42,20,000.00 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 7,90,000.00 |
| | (ஈ) கலந்தாளுனர் கட்டணம் 2% | ரூ. 15,80,000.00 |
| | (உ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 2,10,000.00 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 9,58,00,000.00 |
| 4 | நிதியின் தன்மை | Miscellaneous (20 - 28 - 00 / 412 - 403 - 000) |
| 5 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 9,58,00,000.00 |

மேற்குறிப்பிட்டுள்ள Proposed Construction of Office Complex Building at Ripon Building Campus (West Side) in Div - 58, Zone - 05 கட்டும் பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் செலவீனத்தை Miscellaneous (20 - 28 - 00 / 412 - 403 - 000) நிதியில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. Proposed Construction of Office Complex Building at Ripon Building Campus (West Side) in Div-58, Zone-05 கட்டும் பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.9,58,00,000/- (ரூபாய் ஒன்பது கோடியே ஐம்பத்து எட்டு இலட்சம் மட்டும்)க்கு திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண்:Miscellaneous (20 - 28 - 00 / 412 - 403 - 000)-ன் நிதியில் ஒதுக்கீடு அளிக்கவும்,
3. மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.08/2026, நாள். 23.01.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

“27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.18/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**க.து.ந.க.எண். பி1/0117/2026**

**ஆணையர் அவர்களின் 21.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 58/2026** **பொருள் எண்.58**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் – 06, கோட்டம் – 72, புளியந்தோப்பு டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலையில் அமைந்துள்ள ஆட்டு இறைச்சி கூடத்திற்கு கூடுதல் பணிகளான Construction of Livestock Shed, Piece Shops and Infrastructure works பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்- *06*, கோட்டம்- *72*, புளியந்தோப்பு டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலையில் அமைந்துள்ள ஆட்டு இறைச்சி கூடத்திற்கு கூடுதல் பணிகளான Construction of Livestock Shed, Piece Shops and Infrastructure works பணியினை மேற்கொள்ள வேண்டி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | மண்டலம் – 06, கோட்டம் – 72 - புளியந்தோப்பு டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலையில் அமைந்துள்ள ஆட்டு இறைச்சி கூடத்திற்கு Construction of Livestock Shed, Piece Shops and Infrastructure works கட்டும் பணி. |
| 2. | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் – 06 |
| 3. | மதிப்பீட்டின் தொகை விவரம் | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 7,64,72,493.00 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ 1,37,65,049.00 |
| | (இ) த.நா.க.தொ.ந.வா.1% | ரூ, 7,64,725.00 |
| | (ஈ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ, 18,97,733.00 |
| | மொத்தம் | ரூ.9,29,00,000.00 |
| 4. | நிதியின் தன்மை | பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி |
| 5. | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 9,29,00,000.00 |

மேற்குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–06, கோட்டம்–72, புளியந்தோப்பு டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலையில் அமைந்துள்ள ஆட்டு இறைச்சி கூடத்திற்கு Construction of Livestock Shed, Piece Shops and Infrastructure works பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஏற்கனவே பணிகள் நடைபெற்று வருவதற்கு இப்பணியானது கூடுதலாகும். இந்த பணிகள் நவீன இறைச்சி கூடம் செயல்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு இன்றியமையானதாகும். இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. மண்டலம்–06, கோட்டம்-72, புளியந்தோப்பு டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலையில் அமைந்துள்ள ஆட்டு இறைச்சி கூடத்திற்கு Construction of Livestock Shed, Piece Shops and Infrastructure works பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு தொகை ரூ. 9,29,00,000.00க்கு நிர்வாக அனுமதியும்,
2. இப்பணிக்கு ஏற்படும் செலவீனத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்வதற்கு அனுமதியும்,
3. மேற்கண்டுள்ள பணிக்கு மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “23.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.05/2026, நாள். 23.01.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."
>
> “27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.17/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**க.து.ந.க.எண்.பி1 / 3597 / 2025**

**ஆணையர் அவர்களின் 14.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 59/2026** **பொருள் எண்.59**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 6, வார்டு - 76, செல்லப்பா தெருவில் புதியதாக சென்னை துவக்கப்பள்ளி கட்டடம் கட்டும் பணிக்காக திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம் - 6, வார்டு - 76, செல்லப்பா தெருவில் புதியதாக சென்னை துவக்கப்பள்ளி கட்டடம் கட்டும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | 1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 10.12.2025.<br>2. மன்ற தீர்மானம் எண் : 1255 / 2025, நாள் : 19.12.2025. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 06. |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2025-2026 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 3,67,99,671.00 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 66,23,941.00 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 3,67,997.00 |
| | (ஈ) ஆலோசனை கட்டணம் 2.50% | ரூ. 9,19,992.00 |
| | (உ) மின் இணைப்பு கட்டணம் | ரூ. 2,00,000.00 |
| | (ஊ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 8,88,400.00 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 4,58,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் *25.12.2025.*<br>2. தினமலர் *20.12.2025.*<br>3. டெக்கன் க்ரானிக்கல் *20.12.2025.* |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 31.12.2025 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | Primary School ( 20 - 28 - 00 / 412 - 400 - 401 ) |

| | | |
|---|---|---|
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | மூன்று (e-Tender) ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டன. |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 31.12.2025 அன்று மூன்று ஒப்பங்கள் பெறப்பட்டது. திருவாளர். Annamalai Construction., அவர்கள் தொழில் நுட்ப தகுதியில்லாமையால் நிராகரிக்கப்பட்டார். மற்ற ஒப்பந்ததாரர்கள் ஒப்ப நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர்கள் என்று அறியப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு :

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு 2025-2026 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2025-2026ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | Reyan Tech and Traders | 3,67,99,671.00 | 3,91,87,969.65 | (+) 6.49 % அதிகம் |
| 2 | Jayam Engineering and Construction | 3,67,99,671.00 | 3,96,51,645.50 | (+) 7.75 % அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர். Reyan Tech and Trades., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் L1 ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு :

| வ. எண் | மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம் | L1 ஒப்பந்ததாரர் **2025-2026**ஆம் ஆண்டு **SOR**-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | முதற் கட்ட விலை குறைப்பு நாள் 06.01.2026 | ரூ. 3,88,23,652.91 (+) 5.50 % அதிகம் |
| 2 | இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள் 06.01.2026 | ரூ. 3,86,35,974.58 (+) 4.99 % அதிகம் |

இதன்படி, மண்டலம் - 6, வார்டு - 76, செல்லப்பா தெருவில் புதியதாக சென்னை துவக்கப்பள்ளி கட்டடம் கட்டும் பணிக்காக 2025-2026ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.99% அதிகம், ஒப்பத் தொகை ரூ. 3,86,35,974.58 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.69,54,475.42ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.4,55,90,450.00-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2025-2026ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவினத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய்) (A) | தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 4.99 % சேர்த்து (ரூபாய்) (B) |
|---|---|---|---|
| 1 | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 3,67,99,671.00 | ரூ. 3,86,35,974.58 |
| 2 | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 66,23,941.00 | ரூ. 69,54,475.42 |
| 3 | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 3,67,997.00 | ரூ. 3,67,997.00 |
| 4 | (ஈ) ஆலோசனை கட்டணம் 2.50% | ரூ. 9,19,992.00 | ரூ. 9,19,992.00 |
| 5 | (உ) மின் இணைப்பு கட்டணம் | ரூ. 2,00,000.00 | ரூ. 2,00,000.00 |
| 6 | (ஊ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 8,88,400.00 | ரூ. 8,88,400.00 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 4,58,00,000.00 | ரூ. 4,79,66,839.00 |
| | கூடுதல் தொகை (B- A) | | ரூ. 21,66,839.00 |

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+) 4.99%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.4,79,66,839.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.4,79,66,839.00-க்கு நிர்வாக அனுமதிக்கும்,
2. மேற்கண்ட பணிக்காக 2025-2026ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.99% அதிகம், ஒப்பத் தொகை ரூ. 3,86,35,974.58 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.69,54,475.42ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.4,55,90,450.00-க்கு (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூறாயிரத்து நானூற்று ஐம்பது மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Reyan Tech and Trades அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. மேலும் மேற்கண்ட பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி ஒப்பந்ததாரரான திருவாளர். Reyan Tech and Trades., அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதியும்,
4. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் : Primary School ( 20 - 28 - 00 / 412 - 400 - 401 ) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் அனுமதி வேண்டியும் மற்றும் இனம் 1ற்கு மட்டும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.11/2026, நாள். 23.01.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் இனம் 1ற்கு மட்டும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது ".

“27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.21/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பின்னேற்பு அனுமதி அளித்து இனம் 1ற்கு மட்டும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**க.து.ந.க.எண்.பி1/3574/2025**

**ஆணையர் அவர்களின் 14.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 60/2026** **பொருள் எண்.60**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - Additional Improvement Work in CMS Kabilar Street and Construction of Compound Wall, Entrance Arch Work with Play Ground Improvement Work at Maduma Nagar, Kabilar Street in Div - 70, Zone - 06 கட்டும் பணிக்காக திருத்திய நிர்வாக அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | Additional Improvement Work in CMS Kabilar Street and Construction of Compound Wall, Entrance Arch Work with Play Ground Improvement Work at Maduma Nagar, Kabilar Street in Div - 70, Zone - 06 கட்டும் பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | 1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 11.11.2025.<br>2. மன்ற தீர்மானம் எண் : 1238/2025, நாள் : 19.12.2025. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 06. |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2025-2026 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 3,94,37,463.89 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 70,98,743.50 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 3,94,374.64 |
| | (ஈ) தரக்கட்டப்பாடு 1% | ரூ. 3,94,374.64 |
| | (உ) மேற்பார்வை செலவீனம்10.00% | ரூ. 39,43,746.39 |
| | (ஊ)சிறு மேற்பார்வை செலவீனம் 2.50% | ரூ. 9,85,936.60 |
| | (எ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 9,85,360.35 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 5,32,40,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 25.12.2025.<br>2. தினமலர் 20.12.2025.<br>3. டெக்கன் க்ரானிக்கல் 20.12.2025. |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 30.12.2025 |

| | | |
|---|---|---|
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | Middle School (20-28-00/412-400-402) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டது |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 31.12.2025 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. அதன் விவரம் பின் வருமாறு

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு 2025-2026 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2025-2026ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | Pearl Construction | 3,94,37,464.00 | 4,29,90,779.51 | (+) 9.01 % அதிகம் |
| 2 | Yogalakshmi Construction | 3,94,37,464.00 | 4,14,92,155.87 | (+) 5.21 % அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர். Yogalakshmi Construction., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் L1 ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு

| வ. எண் | மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம் | L1 ஒப்பந்ததாரர் 2025-2026ஆம் ஆண்டு SOR-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | முதற் கட்ட விலை குறைப்பு நாள் 06.01.2026 | ரூ. 4,13,89,618.47 (+) 4.95 % அதிகம் |
| 2 | இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள் 06.01.2026 | ரூ. 4,13,85,674.72 (+) 4.94 % அதிகம் |

இதன்படி, Additional Improvement Work in CMS Kabilar Street and Construction of Compound Wall, Entrance Arch Work with Play Ground Improvement Work at Maduma Nagar, Kabilar Street in Div - 70, Zone - 06 கட்டும் பணிக்காக 2025-2026ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+) 4.94 % அதிகம், ஒப்பத் தொகை ரூ.4,13,85,674.72 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.74,49,421.44ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.4,88,35,096.00-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2025-2026ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய்) (A) | தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 4.94 % சேர்த்து (ரூபாய்) (B) |
|---|---|---|---|
| 1 | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 3,94,37,463.89 | ரூ. 4,13,85,674.72 |
| 2 | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 70,98,743.50 | ரூ. 74,49,421.44 |
| 3 | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 3,94,374.64 | ரூ. 3,94,374.64 |
| 4 | (ஈ) தரக்கட்டடப்பாடு 1% | ரூ. 3,94,374.64 | ரூ. 3,94,374.64 |
| 5 | (உ) மேற்பார்வை செலவீனம்10.00% | ரூ. 39,43,746.39 | ரூ. 39,43,746.39 |
| 6 | (ஊ) சிறு மேற்பார்வை செலவீனம்2.50% | ரூ. 9,85,936.60 | ரூ. 9,85,936.60 |
| 7 | (எ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 9,85,360.35 | ரூ. 9,85,360.35 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 5,32,40,000.00 | ரூ. 5,55,38,889.00 |
| | | கூடுதல் தொகை (B- A) | ரூ. 22,98,889.00 |

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+) 4.94%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத் தொகை ரூ.5,55,38,889.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.5,55,38,889.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2025-2026ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.94% அதிகம், ஒப்பத் தொகை ரூ.4,13,85,674.72 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.74,49,421.44ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.4,88,35,096.00-க்கு (ரூபாய் நான்கு கோடியே எண்பத்து எட்டு இலட்சத்து முப்பத்து ஐந்தாயிரத்து தொண்ணூற்று ஆறு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Yogalakshmi Construction., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. மேலும் மேற்கண்ட பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்ததாரரான திருவாளர். Yogalakshmi Construction., அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதியும்,
4. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் : Middle School ( 20 - 28 - 00 / 412 - 400 - 402 ) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் இனம் 1ற்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"23.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.10/2026, நாள். 23.01.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் இனம் 1ற்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.20/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பின்னேற்பு அனுமதி அளித்து இனம்-1ற்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.பி1/0202/2026**

**ஆணையர் அவர்களின் 21.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 61/2026** **பொருள் எண்.61**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை- மதிப்பீடு - 2025-26 -மண்டலம்-9, வார்டு – 114, அருணாச்சலம் தெருவில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் பணிக்கு 2025-26-ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

மண்டலம்-9 பகுதி-27 வார்டு-114 அருணாச்சலம் தெருவில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | மண்டலம்-9 பகுதி-27 வார்டு-114 அருணாச்சலம் தெருவில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் பணி. |
| 2. | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்-9 |
| 3. | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 2,00,15,635.87 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவினம் | ரூ. 20,01,563.59 |
| | (இ) ஆலோசனை கட்டணம் | ரூ. 5,00,390.90 |
| | (ஈ) மற்றைய எதிர்பாரா செலவினம் | ரூ. 4,79,047.92 |
| | (உ) சிறு மேற்பார்வை செலவினம் | ரூ. 5,00,390.90 |
| | (ஊ)தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் நிதி | ரூ. 2,00,156.36 |
| | (எ) சரக்கு மற்றும் சேவைவரி 18% | ரூ. 36,02,814.46 |
| | மொத்தம் | ரூ.2,73,00,000.00 |
| 4. | நிதியின் தன்மை | பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி |
| 5. | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ.2,73,00,000/- |

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவீனம் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக பெற்று ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. மண்டலம்-9, பகுதி-27, வார்டு-114 அருணாச்சலம் தெருவில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு தொகை ரூ.2,73,00,000/-க்கு நிர்வாக அனுமதியும்,

2. இப்பணிக்கு ஏற்படும் செலவீனத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்வதற்கு அனுமதியும்,

3. இப்பணிக்கு கட்டடத்துறையின் மூலம் ஒப்பம் கோருவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.06/2026, நாள்.23.01.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.பி1/2761/2024**

**ஆணையர் அவர்களின் 14.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 62/2026** **பொருள் எண்.62**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் – 12, பகுதி – 36, வார்டு – 160, எண். 1, புதுத் தெரு, ஆலந்தூர், தெற்கு வட்டார அலுவலகம், மண்டல அலுவலகம் – 12 மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு மீட்பு மற்றும் நிவாரண மையம் கட்டடம் கட்டும் பணிக்காக திருவாளர். Andal Associates Private Limited., அவர்களுக்கு ஒப்பம் வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம் – 12, பகுதி – 36, வார்டு – 160, எண். 1, புதுத் தெரு, ஆலந்தூர், தெற்கு வட்டார அலுவலகம், மண்டல அலுவலகம் – 12 மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு மீட்பு மற்றும் நிவாரண மையம் கட்டடம் கட்டும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | 1. மன்ற தீர்மானம் எண் : 582/2024, நாள் : 30.12.2024.<br>2. அரசாணை (நிலை) எண் : 3, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள் : 06.01.2026. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் -12 |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 26,71,89,150.13 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 4,80,94,047.02 |
| | (இ) த.நா.க.தொ.ந.வா 1% | ரூ. 26,71,891.50 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 26,71,891.50 |
| | (உ) மின் இணைப்பு கட்டணம் | ரூ. 1,00,000.00 |
| | (ஊ) எதிர்பாரா செலவு | ரூ. 66,79,729.85 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 32,74,06,710.00 |

| | | |
|---|---|---|
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 10.07.2025.<br>2. இந்து - தமிழ் 09.07.2025.<br>3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 09.07.2025. |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 13.08.2025 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் (CMRL) இழப்பீட்டு தொகை ரூ.6,64,10,242/-<br>பேரிடர் மேலாண்மை பங்களிப்பு ரூ.12,00,00,000/-<br>பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி ரூ.14,09,96,465/- |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 14.08.2025 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. அதன் விவரம் பின் வருமாறு

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு 2024-2025 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | Andal Associates Private Limited | 26,71,89,150.13 | 28,67,74,114.83 | (+) 7.33 % அதிகம் |
| 2 | N S Periyasamy and Co | 26,71,89,150.13 | 29,35,60,719.25 | (+) 9.87 % அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர். Andal Associates Private Limited., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் L1 ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு :

| வ. எண் | மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம் | L1 ஒப்பந்ததாரர் 2024-2025ஆம் ஆண்டு SOR-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | முதற் கட்ட விலை குறைப்பு நாள் 12.01.2026 | ரூ. 28,52,24,417.76 (+) 6.75 % அதிகம் |

| | | |
|---|---|---|
| 2 | இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள்.12.01.2026 | ரூ. 28,30,86,904.56 (+) 5.95% அதிகம் |

இதன்படி, மண்டலம் – 12, பகுதி – 36, வார்டு – 160, எண். 1, புதுத் தெரு, ஆலந்தூர், தெற்கு வட்டார அலுவலகம், மண்டல அலுவலகம் – 12 மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு மீட்பு மற்றும் நிவாரண மையம் கட்டடம் கட்டும் பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையினை விட (+)5.95% அதிகம், ஒப்பத் தொகை ரூ.28,30,86,904.56 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.12,25,35,486.81ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.33,40,42,547.00-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

அரசாணை (நிலை) எண் : 3, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள் : 06.01.2026 குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளான :

08; மேற்கண்ட பணியின் கட்டடத்தில் அவ்வப்போது மட்டுமே பயன்படுத்தக் கூடிய கிடங்கு, தங்குமிடம் மற்றும் சமையலறை மற்றும் பல துறைகளுக்கான கூட்ட அரங்கு ஆகியவற்றை ஆண்டு முழுவதும் பொதுவான பயன்பாட்டிற்கும், பேரிடர் காலத்தில் குறிப்பிட்ட பயன்பாட்டிற்கும் பயன்படுத்தும் வகையில் மறுவடிவமைப்பு செய்யப்பட வேண்டும்,

08; தீயணைப்பு, மின்சாரம் போன்ற அத்தியவசியமானால் விடுப்பட்ட கூறுகள் மேலே குறிப்பிட்ட தொகைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்டுப்பட்டு திருவாளர். Andal Associates Private Limited., அவர்களுக்கு பணியாணை வழங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய்) (A) | தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 5.95% சேர்த்து (ரூபாய்) (B) |
|---|---|---|---|
| 1 | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 26,71,89,150.13 | ரூ. 28,30,86,904.56 |
| 2 | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 4,80,94,047.02 | ரூ. 5,09,55,642.82 |
| 3 | (இ) த.நா.க.தொ.ந..வா 1% | ரூ. 26,71,891.50 | ரூ. 26,71,891.50 |
| 4 | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 26,71,891.50 | ரூ. 26,71,891.50 |
| 5 | (உ) மின் இணைப்பு கட்டணம் | ரூ. 1,00,000.00 | ரூ. 1,00,000.00 |
| 6 | (ஊ) எதிர்பாரா செலவு | ரூ. 66,79,729.85 | ரூ. 66,79,729.85 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ.32,74,06,710.00 | ரூ. 34,61,66,060.00 |
| | | கூடுதல் தொகை (B- A) | 1,87,59,350.00 |

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+) 5.95%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.34,61,66,060.00 மற்றும் கூடுதல் செலவீனத்தொகையான ரூ.1,87,59,350.00-னை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மேற்கண்ட பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)5.95% அதிகம், ஒப்பத் தொகை ரூ.28,30,86,904.56 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.12,25,35,486.81ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.33,40,42,547.00-க்கு (ரூபாய் முப்பத்து மூன்று கோடியே நாற்பது இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து ஐந்நூற்று நாற்பத்து ஏழு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Andal Associates Private Limited., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,

2. மேலும் மேற்கண்ட பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நிதி)-ன் மூலம் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்ததாரரான திருவாளர். Andal Associates Private Limited., அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதியும்,

3. இப்பணிக்கான செலவீனத்தொகையினை சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் (CMRL) இழப்பீட்டு தொகை, ரூ.6,64,10,242/-, பேரிடர் மேலாண்மை பங்களிப்பு ரூ.12,00,00,000/- மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி ரூ.14,09,96,465/- மற்றும் கூடுதல் செலவீனத்தொகையான ரூ.1,87,59,350.00-னை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

4. அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு தீயணைப்பு, மின்சாரம் போன்ற அத்தியவசியமானால் விடுப்பட்ட கூறுகள் மேலே குறிப்பிட்ட தொகைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்கின்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டும்,

5. மற்றும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கண்ட பணியின் கட்டடத்தில் அவ்வப்போது மட்டுமே பயன்படுத்தக் கூடிய கிடங்கு, தங்குமிடம் மற்றும் சமையலறை மற்றும் பல துறைகளுக்கான கூட்ட அரங்கு ஆகியவற்றை ஆண்டு முழுவதும் பொதுவான பயன்பாட்டிற்கும், பேரிடர் காலத்தில் குறிப்பிட்ட பயன்பாட்டிற்கும் பயன்படுத்தும் வகையில் மறுவடிவமைப்பு செய்யப்பட வேண்டும் என்கின்ற நிபந்தனைக்கு உட்பட்டும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.12/2026, நாள். 23.01.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.22/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.3.ந.க.எண் / div-32 / 94 / 2025**
**ஆணையர் அவர்களின் 20.12.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 63 / 2026** **பொருள் எண்.63**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 3,வார்டு 32, புத்தகரம் திருவள்ளுவர் சாலையில் அமைந்துள்ள பழைய பழுதடைந்த சத்துணவு கூட கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3, பகுதி-6, வார்டு-32-ல் புத்தகரம் திருவள்ளுவர் சாலையில் பழுதடைந்த மற்றும் இடியும் தருவாயில் உள்ள சத்துணவு கூடம் அமைந்துள்ளது. இக்கட்டிடமானது 149.15 ச.மீ பரப்பளவு நிலத்தில் 105.19 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ளது. மேற்படி, இக்கட்டிடம் புத்தகரம் ஊராட்சியால் 1984-1985 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டது என கள ஆய்வில் தெரியவருகிறது. இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து இடியும் தருவாயில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடிக்க வேண்டியுள்ளது.

தற்போது பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பீடு ரூ. 2978.81/- ஆகும்.

| வ. எண் | கட்டிடத்தின் விவரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-3, பகுதி-6, வார்டு-32 புத்தகரம் திருவள்ளுவர் சாலையில் அமைந்துள்ள பழைய பழுதடைந்த மற்றும் இடியும் தருவாயில் உள்ள சத்துணவு கூட கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1984-1985 ஆம் ஆண்டுகளில் புத்தகரம் ஊராட்சியில் கட்டப்பட்டது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 105.19 ச.மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 149.15 ச.மீ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ. 2978.81/- |
| 6 | அந்த கட்டிம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | தற்போது பயன்பாட்டில் இல்லை |
| 7 | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய பல்நோக்கு மையம் கட்டப்படவுள்ளது. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர்/ம-3 மற்றும் செயற்பொறியாளர்/ம-3 |
| 10 | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | - |

எனவே, மண்டலம்-*3*, பகுதி-*6*, வார்டு-*32*, புத்தகரம் திருவள்ளுவர் சாலையில் அமைந்துள்ள பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற இடிந்து விழும் நிலையில் உள்ள சத்துணவு கூட கட்டிடத்தினை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 23.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.15/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**TVKNGR. E1/399/2025**

**ஆணையர் அவர்களின் 06.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 64/2026** **பொருள் எண்.64**

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-73, பழைய வாழைமா நகரில் அமைந்துள்ள உடற்பயிற்சி கூடம் கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-73, பழைய வாழைமா நகரில் அமைந்துள்ள உடற்பயிற்சி கூடம் கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், பொதுமக்கள் நலன் கருதி எவ்வித பாதிப்புகள் ஏற்படா வண்ணம் இருக்க இக்கட்டிடத்தை இடித்து கட்டுவது அவசியமாகிறது.

தற்போதுள்ள கட்டிடத்தை இடிக்க ஒப்பம் கோரும் பொழுது கூடுதல் தலைமைச்செயலர் ஆணையர் அவர்களின் 01.09.2023 நாளிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள மதிப்பினை நிர்ணயிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டதின் அடிப்படையில் கட்டிடத்தை இடிப்பதற்கான சுற்றறிக்கையில் உள்ளவாறு மதிப்பீட்டு தொகை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம்

| வ. எண் | பணியின்விவரம் | கட்டிடத்தின் சதுர அடி விவரம் | சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட தொகை | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|---|
| 1. | மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-73, பழைய வாழைமா நகரில் அமைந்துள்ள உடற்பயிற்சி கூடம் கட்டிடத்தை இடித்து அகற்றும் பணி | 813.45 சதுரஅடி | 1,000 சதுர அடி வரை ரூ.25,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது | ரூ.25,000/- |

மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-73, பழைய வாழைமா நகரில் அமைந்துள்ள உடற்பயிற்சி கூடம் கட்டிடங்களின் விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | இடம்/பணியின் விவரம் | பழைய வாழைமா நகர் |
| 2 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | உடற்பயிற்சி கூடம் கட்டிடம் |
| 3 | அந்தகட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1998 |
| 4 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 6237.60 ச.அடி |
| 5 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 813.45 ச.அடி |
| 6 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | 2,00,565.79 |
| 7 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | இல்லை |

| | | |
|---|---|---|
| 8 | அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | --------------- |
| 10 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | செயற்பொறியாளர்/ம-6 |

எனவே,

1. மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-73, பழைய வாழைமா நகரில் அமைந்துள்ள உடற்பயிற்சி கூடம் கட்டிடத்தை இடிப்பதற்கும்,
2. மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-73, பழைய வாழைமா நகரில் அமைந்துள்ள உடற்பயிற்சிகூடம் கட்டிடத்தை இடிப்பதற்காக சுற்றறிக்கையின் படி நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.25,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 23.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.14/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.7,ந.க.எண்.1556/2025**

**ஆணையர் அவர்களின் 14.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 65/2026** **பொருள் எண்.65**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 7 (அம்பத்தூர்), கோட்டம் – 79க்கு உட்பட்ட ராம்நகர் கோபால்சாமி தெருவில் உள்ள வணிக வளாகம் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்கள் 19.11.2025 அன்று களஆய்வின் பொழுது கூறிய அறிவுறுத்தலுக்கு இணங்க கோட்டம்-79 உட்பட்ட ராம் நகர், கோபால் சாமி தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கட்டிடத்தை ஆய்வு செய்து கட்டிடத்தின் ஸ்திரத்தன்மை சான்றிதழ் *(Building Stability Certificate)* வழங்குமாறு செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டிடங்கள் *(C&M)* பிரிவு திருவள்ளுர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டிடங்கள் *(C&M)* பிரிவு திருவள்ளுர் அவர்கள் 24.11.2025 நாளிட்ட கள ஆய்வில் இந்த வணிக வளாக கட்டிடம் முற்றிலும் பாழடைந்த நிலையில் இருப்பதும் கட்டமைப்பு ரீதியாக பாதுகாப்பற்றதாகவும், நிலையற்றதாகவும் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. கூரைகள் மற்றும் சுவர்களில் பல விரிசல்கள் மற்றும் மழைக்காலங்களில் கசிவுகள் உள்ளன. கட்டிடத்தின் வயது தோராயமாக 40 ஆண்டுகள் பழமையானது மற்றும் இந்த குறைபாடுகள் பழுது மற்றும் மறுசீரமைப்பு நிலைமைகளுக்கு அப்பாற்பட்டவை. எனவே, வணிக வளாகம் நிலையற்றதாகவும் பயன்படுத்தத் தகுதியற்றதாகவும் இருப்பதால், அது பாழடைந்த நிலையில் உள்ளது இடிக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7 (அம்பத்தூர்), பகுதி-18, கோட்டம்–79-க்கு உட்பட்ட ராம்நகர் கோபால்சாமி தெருவில் உள்ள வணிக வளாக கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளதால் கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | மண்டலம்–7 | கோட்டம் எண்–79 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | ராம்நகர் கோபால்சாமி தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 21 கடைகள் கெண்ட 2 வணிக வளாகம் கட்டிடம் |
| 2 | வணிக வளாகம் கட்டப்பட்ட ஆண்டு | இக்கட்டிடம் 1985-86ஆம் ஆண்டு கட்டப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 3 | வணிக வளாகம் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு எத்தனை வருடங்கள் ஆகின்றது? | இக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு சுமார் 40 வருடங்கள் ஆகின்றது. |
| 4 | வணிக வளாகத்தின் பரப்பளவு எவ்வளவு? | கட்டிடத்தின் பரப்பளவு 348.16 சதுர மீ |
| 5 | வணிக வளாக கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | புத்தக மதிப்பு ரூ. 17707.58/- |
| 6 | வணிக வளாக கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து சிதலமடைந்துள்ளது. |
| 7 | வணிக வளாக கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | இந்த கட்டிடத்திற்கு பின்புறம் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆண்கள் இரவு காப்பக கட்டிடம் உள்ளது மற்றும் மாற்று திறனாளிகளுக்கான One Stop Center வரவுள்ளது. தற்போது அதற்கான வாகனங்கள் நிறுத்து இடமாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8 | வணிக வளாக கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டிடங்கள் (C&M) பிரிவு திருவள்ளூர் அவர்கள் அறிக்கையின் அடிப்படையில். |
| 9 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். (ம), நாள் | பின்னேற்பு பெறப்படும் |

கோட்டம்-79-க்கு உட்பட்ட ராம்நகர் கோபால்சாமி தெருவில் உள்ள வணிக வளாகம் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளதால் இடித்துவிட்டு பின்புறமுள்ள இரவு காப்பக கட்டிடத்திற்கும் மற்றும் புதிதாக மாற்றுத்திறனாளிகளுக்கான One Stop Center வரவுள்ளது அதற்கான வாகனங்கள் நிறுத்தும் இடமாக தற்போது மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் 7 (அம்பத்தூர்) பகுதி-18, கோட்டம்-79-க்கு உட்பட்ட ராம்நகர் கோபால்சாமி தெருவில் உள்ள வணிக வளாகம் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 23.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.16/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.10.ந.க.எண். 75/2026**

**ஆணையர் அவர்களின் 27.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 66/2026** **பொருள் எண்.66**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10, கோட்டம்-132ல் ரங்கராஜபுரம் பிரதான சாலையில் சேதமடைந்த நிலையில் உள்ள கழிவறை கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்கு அனுமதி.**

மண்டலம்-10, பகுதி-31, கோட்டம்-132-ல் உள்ள ரங்கராஜபுரம் பிரதான சாலையில் பகுதியிலுள்ள சுமார் 30ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட சேதமடைந்த கழிவறை கட்டிடம் பயன்படுத்த முடியாத நிலையில் பழுதடைந்து உள்ளது. மேலும் இக்கழிவறை கட்டிடத்தினை பொதுமக்கள் அதிக அளவில் உபயோகிக்கப்படுவதால், இக்கழிவறை கட்டிடத்தினை இடித்து விட்டு புதிய கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 100% நிதி பங்களிப்பில் இக்கழிவறை கட்டிடத்தினை புதிதாக கட்டித்தர 02.01.2026 தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த சேதமடைந்த கழிப்பறையை இடித்து அகற்றி புதிய கழிவறை கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இடிக்கப்படவுள்ள கழிவறை கட்டிடத்தின் விபரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விபரம் | மண்டலம், பகுதி-31, கோட்டம்-132ல் ரங்கராஜபுரம் பிரதான சாலையில் உள்ள கழிவறை கட்டிடம். |
|---|---|---|
| 1. | கட்டிடம் கட்டிய துறை (ம) வருடம் | மூல தன நிதியின் மூலம் கட்டப்பட்டது. 30 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கட்டிடம் |
| 2. | பரப்பளவு | கழிவறை கட்டிடம் = 41.25 ச.மீ (15.00 x 2.75 மீ) |
| 3. | தற்போதைய புத்தக மதிப்பு | கழிவறை கட்டிடம் = 27,212.52 ( 2025-26-ம் ஆண்டு வரை ) |
| 4. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | கட்டிடம் பழுதடைந்துள்ளது. |

எனவே, மண்டலம்-10, பகுதி-31, கோட்டம்-132-ல் ரங்கராஜபுரம் பிரதான சாலையில் சேதமடைந்த நிலையில் உள்ள கழிவறை கட்டிடத்தினை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 23.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.17/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>ம.அ.11. நக.எண். இ1/1203/2025</u>**

**<u>ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 67/2026** **பொருள் எண்.67**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 11 , வார்டு - 145-ல் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள அம்மா உணவகத்தினை இடித்த அகற்ற அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, வார்டு 145 நெற்குன்றம் பகுதியில் மாதா கோயில் தெரு மற்றும் பெருமாள் கோயில் தெரு சந்திப்பில் உள்ள அரசுக்கு சொந்தமான காலி நிலத்தில் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அம்மா உணவகக்கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அக்கட்டிடத்தினை இடித்து அகற்றி அவ்விடத்தில் பொதுமக்கள் பயன்படும் விதமாக புதிய சமுதாய நலக்கூடம் கட்டி தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம் 11, வார்டு 145ல் பெருமாள் கோயில் தெரு மற்றும் மாதா கோயில் தெருவில் உள்ள காலிமனையில் உள்ள அம்மா உணவக கட்டிடம் |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1997 |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 926.50 சதுர மீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 157.60 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ.8000/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பழுதடைந்த நிலையில் பயன்பாட்டில் இல்லை. |
| 7. | அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | இடித்து அகற்றி அவ்விடத்தில் **நமக்கு நாமே திட்டம்** மூலம் 100% பங்களிப்பில் புதிய சமுதாய நலக்கூட கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | மாண்புமிகு மேயர் அவர்கள் |

எனவே,

1. மண்டலம்-*11*, பகுதி-*32*, வார்டு-145ல் உள்ள மேற்கண்ட பழுதடைந்த நிலையில் உள்ள அம்மா உணவகக்கட்டிடத்தினை இடித்து அகற்றுவதற்கும்,
2. இடித்து அகற்றப்பட்ட பின்பும் அவ்விடத்தில் மேற்கண்டபடி புதிய நமக்கு நாமே திட்டம் மூலம் 100% பங்களிப்பில் சமுதாய நலக்கூடம் கட்டும் பணிக்கும்,
3. மண்டலம்-11, பகுதி-32, வார்டு-*145*ல் உள்ள மேற்கண்ட பழுதடைந்த கட்டிடங்களை இடிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூ.50000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும் ,
4. மின்னணு வரையறுக்கப்பட்ட ஒப்பம் ( *Online Limited e-Tender)* கோரவும்,

**மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

**"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 23.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.13/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."**

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.11.நக.எண்.இ3/15232/2025**

**ஆணையர் அவர்களின் 17.12.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 68/2026** **பொருள் எண்.68**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-11, பகுதி-34, கோட்டம்-153ல் பாளையக்கார தெருவில் உள்ள பழைய அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, பகுதி-34, கோட்டம்-153ல் பாளையக்கார தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் போரூர் பேரூராட்சி காலத்தில் கட்டப்பட்டு 2011ஆம் ஆண்டில் மாநகராட்சியாக விரிவாக்கம் செய்யும் பொழுது பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. தற்பொழுது இக்கட்டிடம் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் வருடாந்திர பராமரிப்பு பணிக்கான செலவு அதிகமாக உள்ளது. மேலும், கட்டிடத்தின் தரைப்பரப்பு சாலையை விட இரண்டடி தாழ்வாக உள்ளதாலும், மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி அங்கன்வாடி கட்டிடத்தை பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. அது மட்டுமின்றி சுவர்களில் நீர் பிடிப்பு ஏற்படுவதால் அங்குள்ள குழந்தைகளுக்கு நோய் தொற்று அபாயம் ஏற்படும் வகையிலும் உள்ளது. எனவே, பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ள இக்கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி பெற வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு

| வ. எண். | மண்டலம்-11 | வார்டு-153 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-11, பகுதி-34, கோட்டம்-153ல் பாளையக்கார தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | பழைய பஞ்சாயத்து காலத்தில் கட்டப்பட்டது. |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 82.66 ச.மீ |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 185.4 ச.மீ |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ.17,100.52 |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பயன்பாட்டில் உள்ளது |
| 7. | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய அங்கன்வாடி மையம் |

எனவே, மண்டலம்-11, பகுதி-34, கோட்டம்-153ல் பாளையக்கார தெருவில் உள்ள பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ள இக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 12.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.03/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**காநமதுநகஎண்அ2/0065/2026**

**ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 69/2026** **பொருள் எண்.69**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கால்நடை மருத்துவத்துறை - மாடுகள் வளர்ப்பினை முறைபடுத்துதல் - மாட்டின் உரிமையாளர்கள் உரிமம் பெறுவதை கட்டாயமாக்க - மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மாடுகளை வளர்த்து அதனை தங்களது வாழ்வாதாரமாக கொண்ட குடும்பங்கள் அனைத்து மண்டலங்களிலும் உள்ளனர். பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கடந்த *2024*ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கீட்டின்படி சுமார் *22,875* மாடுகள் அவற்றின் உரிமையாளர்களால் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பெரும்பான்மையான மாடுகள் உரிய இடவசதி இன்றி, தொழுவங்களுக்குள் வைத்து பராமரிக்கப்படாமல் சாலைகள் மற்றும் பொது இடங்களில் சுற்றித்திரிந்து வருகின்றன. இதனால் போக்குவரத்துக்கு இடையூறு, பொது சுகாதார சீர்கேடு ஏற்படுவதுடன் சில நேரங்களில் பொது மக்கள் மாடுகளால் தாக்கப்படும் சம்பவங்களும் ஏற்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் மாடுகளால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை கட்டுப்படுத்த *15* மண்டலங்களுக்கும் பிரத்யேக மாடு பிடிக்கும் வாகனங்கள் ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு வாகனத்திலும் தலா *5* மாடுகள் பிடிக்கும் ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு பிடிக்கப்படும் மாடுகள் புதுப்பேட்டையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாட்டிற்கும் தலா ரூ.*10,000/-* அபராதம் விதிக்கப்பட்டு, அவை மீண்டும் சாலைகளில் திரிய விடக்கூடாது என்ற நிபந்தனையுடன் உரிமையாளர்களிடம் மாடுகள் மீண்டும் ஒப்படைக்கப்படுகின்றன.

கடந்த *2024* மற்றும் *2025*ஆம் ஆண்டுகளில் *4237* மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ.*2,22,08,000/-* அபராத தொகையாக வசூலிக்கப்பட்டு மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

| ஆண்டு | பிடிக்கப்பட்ட மாடுகளின் எண்ணிக்கை | வசூலிக்கப்பட்ட அபராதத்தொகை(ரூ) |
|---|---|---|
| 2021 | 1248 | 25,69,100/- |
| 2022 | 7199 | 1,10,69,800/- |
| 2023 | 4237 | 92,04,700/- |
| 2024 | 2527 | 1,27,57000/- |
| 2025 | 1710 | 94,51,000/- |

பிராணிகள் வதை தடுப்பு சட்டம், *1960* பிரிவு *11(1) (a),(b))*ன்படி நகர்புறங்களில் கால்நடைகளை அதிகமாக வைத்திருப்பது *(Ovecrowding)*, சாலைகளில் சுதந்திரமாக சுற்றவிடுவது போன்றவை கொடுமை எனக் கருதப்படுகிறது. பிரிவு *11(3)(e)* ன்படி பாதுகாப்பற்ற நிலைகளில் விலங்குகளை வைத்திருப்பதை கட்டுப்படுத்த அல்லது தடை விதிக்க

அனுமதிக்கிறது, விலங்குகளில் தொற்று நோய்கள் மற்றும் பரவும் நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுபாட்டு சட்டம்-2009-ன்படி விலங்குகள் அடையாளம் காணுதல், தடமறிதல்(Tracebility) மற்றும் நோய் கட்டுபாட்டு ஆகியவற்றை செயல்படுத்துவதற்கு அதிகாரம் வழங்குகிறது.

சென்னை போன்ற பெருநகரங்களில் விலங்குகள் மற்றும் பறவைகள் வளர்ப்பதனை முறைப்படுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல் குறித்து *TamilNadu keeping of Animals and Birds in urban Areas (Control & Regulation )Act 1997* யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில் சுற்றித்திரியும் மாடுகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு நீண்ட கால தீர்வு காண மாட்டின் உரிமையாளர்களுக்கு அவர்களின் மாடுகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் இடங்கள் ஒதுக்கப்பட்டு நவீன மாட்டுத் தொழுவங்கள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. இந்த நவீன மாட்டுத் தொழுவங்கள் மண்டலங்கள் 1, 2, 3, 5, 8 மற்றும் 9 ஆகிய மண்டலங்களில் செயல்பாட்டில் உள்ளன. மேலும் மற்ற மண்டலங்களில் நவீன மாட்டுத் தொழுவங்களின் கட்டுமான பணிகள் முடியும் நிலையில் உள்ளது. இத்தொழுவங்களில் கால்நடை ஒன்றிற்கு தினசரி ரூ.10/- (ரூபாய் பத்து மட்டும்) வீதம் மாடுகளின் உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு வருகின்றது.

| வ. எண் | மண்டலம் | பராமரிக்கப்பட்டு வரும் / பராமரிக்கப்படவுள்ள மாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | டி.பி.பி சாலை, திருவொற்றியூர், கோட்டம்- 7, மண்டலம்-1 | 50 |
| 2 | அரியலூர், தீயம்பாக்கம், மணலி, கோட்டம் - 17, மண்டலம்-2 | 60 |
| 3 | காமராஜர் சாலை, கோட்டம் - 20, மண்டலம்-2 | 100 |
| 4 | சி. எம். டி. ஏ டிரக் டெர்மினல், மாதவரம், கோட்டம் - 25, மண்டலம்-3 | 60 |
| 5 | பேசின் பிரிட்ஜ் சாலை, இராயபுரம், கோட்டம் - 53, மண்டலம்-5 | 550 |
| 6 | மூர் மார்க்கெட், இராயபுரம், கோட்டம் - 58, மண்டலம்-5 | 60 |
| 7 | என் ஆர் எஸ் சாலை, அம்பத்தூர், கோட்டம் - 83, மண்டலம்-7 | 100 |
| 8 | சிவசக்தி காலனி, வில்லிவாக்கம் , கோட்டம் - 95, மண்டலம்-8 | 180 |
| 9 | பீட்டர்ஸ் சாலை,இராயப்பேட்டை, கோட்டம் - 115, மண்டலம்-9 | 50 |
| 10 | காந்தி நகர், (வடபழனி முருகன் கோயில் அருகில்) வார்டு - 129, மண்டலம்-10 | 50 |

| | | |
|---|---|---|
| 11 | யூனியன் சாலை, நொளம்பூர், கோட்டம் - 158, மண்டலம்-12 | 100 |
| 12 | நந்தம்பாக்கம் , கோட்டம் - 158, மண்டலம்-12 | 50 |
| 13 | தாம்பரம்-வேளச்சேரி மெயின் ரோடு, கோட்டம் - 188, மண்டலம்-14 | 110 |
| 14 | வீரபாண்டிய கட்டபொம்மன் குறுக்கு தெரு, பெருங்குடி, கோட்டம் - 184, மண்டலம்-14 | 120 |
| 15 | வீரபாண்டிய கட்டபொம்மன் குறுக்கு தெரு, பெருங்குடி, கோட்டம் - 184, மண்டலம்-14 | 120 |
| 16 | இஸ்கான் கோயில் அருகில், கோட்டம் - 194, மண்டலம்-15 | 110 |
| 17 | இஸ்கான் கோயில் அருகில், கோட்டம் - 194, மண்டலம்-15 | 110 |

எனவே, தற்போது சென்னை மாநகராட்சியில் வளர்க்கப்படும் மாடுகளின் எண்ணிக்கையினை அறியவும், மாடுகள் வளர்ப்பினை முறைப்படுத்தவும் அதற்கான திட்டங்களை உருவாக்கவும் மாட்டு உரிமையாளர்களுக்கு உரிமம் வழங்க வேண்டியுள்ளது. அதன்படி மாட்டின் உரிமையாளர்களின் விண்ணபத்தின் அடிப்படையில் உரிமம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பத்தை பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்திலிருந்து (GCC Website) பதிவிறக்கம் செய்து மாட்டின் உரிமையாளர்கள் விண்ணப்பிக்க உரிய வசதிகள் ஏற்படுத்த வேண்டியுள்ளது.

இதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாடுகள் / எருமைகள் வளர்க்கும் உரிமையாளர்கள் கட்டாயமாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டல அலுவலகங்களில் உள்ள மண்டல கால்நடை மருத்துவ அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். பெறப்பட்ட விண்ணப்பங்களை மண்டல கால்நடை மருத்துவ அலுவலர்கள், கோட்ட சுகாதார ஆய்வாளர்கள் மூலம் கள ஆய்வு செய்தபின் ரூ.100/- உரிமக்கட்டணம் பெறப்பட்டு , மாட்டின் உரிமையாளர்களுக்கு உரிமம் வழங்க வேண்டியுள்ளது.

உரிமம் வழங்கப்படும் போது ஒவ்வொரு மாட்டிற்கும் மைக்ரோசிப் செலுத்தி இதன்மூலம் மாட்டின் உரிமையாளர்களின் பெயர், முகவரி மாடுகளின் விவரங்கள் ஆகியவற்றை ஆவணப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட உரிமம் பெறுவதற்காக 45 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்பட்டு 18.03.2026 க்குள் உரிமம் பெற காலக்கெடு அளிக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில் மாடுகள் வளர்க்கும் உரிமையாளர்களுக்கு உரிமம் வழங்கவும்,
2. இதற்கென பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள அனுமதியும்,
3. உரிமம் வழங்கப்படும் போது மாடுகளுக்கு மைக்ரோசிப் செலுத்துவதற்கும்,
4. 25,000 எண்ணிக்கையில் மைக்ரோசிப் மற்றும் 25 எண்ணிக்கையில் மைக்ரோசிப் ரீடர்களை ஒப்பம் கோரி கொள்முதல் செய்வதற்கும்,
5. உரிமம் பெறுவதற்காக 45 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்பட்டு 18.03.2026 க்குள் மாடுகளின் உரிமையாளர்களுக்கு உரிமம் பெற காலக்கெடு அளிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.024/2026 ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.க.கு.ந.க.எண். அ7/025/2026**

**ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 70/2026** **பொருள் எண்.70**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - 2024-2025 ஆம் ஆண்டு - தற்காலிக மிகை ஊதியம் மற்றும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் - பெருநகர சென்னை மாநகராட்சி "C" மற்றும் "D" பிரிவு பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.*01*, நிதி(படிகள்)த்துறை, நாள்: 01.01.2026, முறையான காலமுறைச் சம்பளம் பெறும் அனைத்து *"C" &" D"* பிரிவு அரசுப் பணியாளர்கள் உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசின் மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் காலமுறை சம்பளம் பெறும் ஆசிரியர்கள் / பணியாளர்கள் ஆகியோருக்கு திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், ரூ.3000/- என்ற உச்ச வரம்பிற்குட்பட்டு 2024-*2025*ஆம் நிதி ஆண்டிற்கு தற்காலிக மிகை ஊதியம் மற்றும் சில்லறை செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிலையான ஊதியம் பெற்று வந்த முழு நேர மற்றும் பகுதி நேர பணியாளர்களுக்கும் மற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியாளர்களுக்கும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் ரூ.1000/- பொங்கல் திருவிழா கொண்டாடிட ஏதுவாக வழங்க அரசு முடிவெடுத்துள்ளது என அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*2)* மேலும், *2024-2025* ஆம் நிதி ஆண்டிற்கு *"C"* மற்றும் *"D"* பிரிவு சார்ந்த முறையான காலமுறைச் சம்பளம் பெறும் அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக அரசு பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள்/பணியாளர்கள் ஆகியோருக்கு திங்களொன்றுக்கு, *30* நாட்கள் என்ற அடிப்படையில், ரூ.*3000/-* என்ற உச்ச வரம்பிற்குட்பட்டு, தற்காலிக மிகை ஊதியமாக வழங்கிட அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

*3)* *2024-2025*ஆம் கணக்காண்டில் குறைந்தபட்சம் *240* நாட்கள் அல்லது அதற்கு மேலாக பணிபுரிந்த சில்லறைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிலையான ஊதியம் பெற்று வந்த முழு நேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள், தொகுப்பூதியம் பெற்று வந்த பணியாளர்கள், தொகுப்பூதியம் / சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று வந்த சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் (அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்கள்), கிராம உதவியாளர்கள், தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் ஒரு பகுதி தினக்கூலிகளாக பணியாற்றி பின்னர் தொடர்ந்து நிரந்தர பணியாளர்களாகப் பணியாற்றியவர்களுக்கும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் ரூ.*1000/-* வழங்க அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) இவ்வாறு அனுமதிக்கப்படும் தற்காலிக மிகை ஊதியமானது 31.03.2025 ஆம் நாளன்று உள்ள "C" மற்றும் "D" பிரிவு ஊதியத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும் எனவும், மாதாந்திர ஊதியம் ரூ.3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) என்பதை உச்சவரம்பாகக் கொண்டு, தற்காலிக மிகை ஊதியத் தொகை கணக்கிடப்பட வேண்டும். திருத்திய சம்பள வீதத்திற்கு முந்தைய சம்பள வீதங்களில் / திருத்திய சம்பள வீதங்களில் சம்பளம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில், திங்களொன்றுக்கு ரூ.3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டு அவர்கள் பெற்ற ஊதியத்தின் அடிப்படையில். தற்காலிக மிகை ஊதியம் கணக்கிடப்படவேண்டும் எனவும்,

5) மேலே குறிப்பிடப்பட்டுள்ள தற்காலிக மிகை ஊதியம் / சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் இந்த அரசாணையின் இணைப்பில் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கத்தக்கதாகும் என அவ்வரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

6) தற்காலிக மிகை ஊதியம் / சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் குறித்த செலவினம் சம்பந்தப்பட்ட துறையின் தொடர்புடைய பணிக்கணக்குத் தலைப்பின் கீழ் "பற்று வைக்கப்படவேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

7) மேற்கண்டுள்ள அரசாணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் மூன்றாம் மற்றும் நான்காம் நிலை" பணியாளர்களுக்கும் நீட்டித்து, அரசு அறிவித்த மிகை ஊதியம்/சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

8) அவ்வாறு வழங்கப்படும் மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியத்தினால் பெருநகர சென்னை மாநகராட்சியில் 2025-2026 ஆம் நிதியாண்டில் ஏற்படும் கூடுதல் செலவினம் தோராயமாக 4.50 கோடி (ரூபாய் நான்கு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) ஆகும் என தெரிவிக்கப்படுகிறது.

9) எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி "C" மற்றும் "D" பிரிவு பணியாளர்களுக்கு தற்காலிக மிகை ஊதியம் மற்றும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் வழங்கிட, 2026 ஜனவரி மாத மன்றக்கூட்டம், இம்மாத கடைசியில் நடைபெறவுள்ளதால், மன்றத்தின் அனுமதி அப்போது பெற இயலாது என்பதாலும், இத்தொகை பொங்கல் பண்டிகைக்கு முன்பாக வழங்கவேண்டியுள்ளதாலும், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியம் கருதி, மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, 07.01.2026 அன்று ஆணையர் அவர்களின் ஆணை பெற்று, இப்பொருள் தொடர்பாக மேல்நடவடிக்கைகளை தொடர அறிவுறுத்தி அனைத்து வட்டார அலுவலகங்கள் (வ/ம/தெ), அனைத்து துறைகள் மற்றும் மண்டலம் 1 - 15 வரை சுற்றறிக்கை 08.01.2026 அன்று அனுப்பப்பட்டு, இவ்வரசாணை நடைமுறைப்படுத்தப்பட்டது .

10) தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக அரசாணை (நிலை) எண்.01, நிதி (படிகள்)த்துறை, நாள்: 01.01.2026ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண். 29/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

******

**மக.குநக.எண். அ7 / 213 / 2026**

**ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 71/2026** **பொருள் எண்.71**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - 2025-2026 - பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ் நாடு) 01.01.2026 முதல் 31.03.2026 வரை (Q4) உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் 7.1 % (ஏழு புள்ளி ஒன்று சதவீதம்) என நிர்ணயித்து அரசாணை வழங்கப்பட்டது - இவ்வரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.13, நிதி(படிகள்)த்துறை நாள்:19.01.2026ல், 2025-2026 ஆம் நிதி ஆண்டிற்கான, பொது வருங்கால வைப்பு நிதிக்கு வட்டி விகிதம் 7.1% (ஏழு புள்ளி ஒன்று சதவீதம்) என 01.01.2026 முதல் 31.03.2026 வரை உள்ள காலத்திற்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணையின் விபரம் கீழ்கண்டுள்ளவாறு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

FINANCE [Allowances] DEPARTMENT
G.O.(Ms).No.13, Dated 19th, January 2026.

*( தை -05. திருவள்ளுவர் ஆண்டு 2057)*

ABSTRACT

Provident Fund - General Provident Fund (Tamil Nadu) - Rate of interest for the financial year 2025-2026 with effect from 01.01.2026 to 31.03.2026 - Orders – Issued

---

Read the following:-

1. G.O Ms. No.83, Finance (Allowances) Department, dated .07.04.2025.
2. G.O Ms. No. 163, Finance (Allowances) Department, dated.15.07.2025.
3. G.O Ms. No. 229, Finance (Allowances) Department, dated.15.10.2025.
4. Resolution from the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs (Budget Division), New Delhi, F.No.5(3) -B(PD) / 2023, dated:09.01.2026.

-OOO-

**ORDER:**

In the Government Order first. Second and third read above, orders were issued fixing the rate of interest on the accumulations at the credit of the subscribers of General Provident Fund (Tamil Nadu) as detailed below:

| Sl.No. | Quarter | Period | Financial year | Rate of Interest |
|---|---|---|---|---|
| 1. | I | 01-04-2025 to 30-06-2025 | 2025-2026 | 7. l% |
| 2. | II | 01-07-2025 to 30-09-2025 | 2025-2026 | 7. l% |
| 3. | III | 01-10-2025 to 31-12-2025 | 2025-2026 | 7. l% |

2. The Government of India, in its resolution fourth read above, announced that during the Financial year 2025-2026, accumulations at the credit of subscribers to the General Provident Fund and other similar funds

shall carry interest at the rate of 7.1% (Seven point one percent) with effect from 1st January 2026 to 31st March 2026 (Q4).

3. Accordingly, Government direct that the rate of interest on the accumulation at the subscribers to General Provident Fund (Tamil Nadu) shall carry interest at the rate of 7.1% (Seven point one percent) with effect from 1st January 2026 to 31st March 2026 (Q4) .

4. The rate of interest on belated final payment of Provident Fund accumulation remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as ordered in para-3 above.

(BY ORDER OF THE GOVERNOR)

**T.Udhayachandran**
**Additional Chief Secretary To Government**

*2)* **எனவே, அரசாணை (நிலை) எண்.13, நிதி(படிகள்)த்துறை, நாள்:19.01.2026.ஐ பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

> ”ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண். 30/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.5.வ.து.ந.க.எண்.ஆர்1/0133-2/2026**

**ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 72/2026** **பொருள் எண்.72**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 5 , கோட்டம் – 52, கல்லறை சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வாடகை நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-12, கோட்டம்-52, எல்லைக்குட்பட்ட பகுதியில் கல்லறை சாலையை முகப்பாக கொண்டு கட்டப்பட்டிருந்த மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் பொதுமக்களின் நலன் கருதி அக்கட்டிடங்களை புதிதாக அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய அமைப்புகளுடன் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு இராயபுர சட்டமன்ற உறுப்பினரின் தெகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மக்கள் பயன்பாட்டிற்கு சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டது.

அதன் அடிப்படையில் கல்லறை சாலையில் அமைந்துள்ள காலி இடத்தில் சமுதாய நலக்கூடம் கட்டிடம் கட்ட மன்ற தீர்மான எண்: 379/2023, நாள்:30-06-2023 அன்று நடைப்பெற்ற மன்றக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் அவ்விடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டிடத்துறை மூலமாக அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய சமுதாய நலக்கூட கட்டிடம் கட்டும் பணி துவங்கப்பெற்று தற்போது முடிவுற்ற நிலையில் 27-01-2026 நாளிட்ட செயற் பொறியாளர் மண்டலம் - 5 அவர்களின் குறிப்பில், கோட்டம் - 52 கல்லறை சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வாடகை நிர்ணயம் செய்திட நடவடிக்கை எடுக்கக்கோரி குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 உட்பிரிவு - 316(4)ன்படி மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வாடகை நிர்ணயம் செய்திட பின்வரும் வழிமுறைகளை பின்பற்ற தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4) The licence fee or lease rent for buildings let out for public purpose shall be based on the annual rental value derived for the purpose of calculation of property tax.

அதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட கோட்டம் - 52 கல்லறை சாலையில் கட்டப்பட்டுள்ள அப்புதிய கட்டிடம் அடித்தளம், தரை தளம், முதல் தளம் மற்றும் இரண்டாவது தளம் என கட்டப்பட்டு மின்தூக்கி வசதிகளுடன் (LIFT) அமையப்பெற்ற கட்டிடத்தின் தளவாரியாக அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் விவரம் பின்வருமாறு.

**கட்டிடத்தின் விவரம்:**

| | |
|---|---|
| தரை தளம் | 6042 சதுர அடி |
| முதல் தளம் | 5550 சதுர அடி |

| | |
|---|---|
| இரண்டாவது தளம் | 5550 சதுர அடி |
| மூன்றாவது தளம் | 2386 சதுர அடி |
| **மொத்தம்** | ***19528* சதுர அடி** |

மேற்கண்ட அளவீட்டின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகளில் தெரிவித்தவாறு பின்வரும் சூத்திரத்தின் அடிப்படையில் *(Formula)* வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்

***Formula:***

கட்டிடத்தின் பரப்பளவு *x* தெருக்களுக்கான அடிப்படை கட்டணம் *x 12.40%*

*(BSR) / Commercial= 19528 x 7.50 x 12.40% = 18,161.04*

முழு மதிப்பு ரூபாய் *= 19,000/-*

மேற்கண்ட கணக்கீட்டின் படி ஒருநாள் வாடகையாக ரூபாய்*: 19,000+ 18% GST*

அரை நாள் வாடகையாக ரூபாய் *: 9,500 + 18% GST*

மேற்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ள ஒருநாள் வாடகையாக ரூபாய்*: 19,000* உடன் சரக்கு மற்றும் சேவை வரி *18* விழுக்காடு (சரக்கு மற்றும் சேவை வரி மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது*)* அரைநாள் வாடகை ரூபாய்*: 9,500* மற்றும் *18* விழுக்காடு *(*சரக்கு மற்றும் சேவை வரி மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது*)* இது தவிர்த்து நிகழ்ச்சியின் போது பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான பயன்பாட்டின் அடிப்படையில் வர்த்தக ரீதிக்கான கணக்கீட்டில் கணக்கிட்டு நிகழ்ச்சியாளரிடமிருந்து மின் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். அதே போல் சமுதாய நலக்கூடம் வாடகைக்கு விடுவதற்கு முன்வைப்புத் தொகையாக நிகழ்ச்சியாளரிடமிருந்து ரூபாய் *: 5000* வசூலித்திட நிர்ணயம் செய்திடலாம் என கருதப்படுகிறது.

மேற்கண்ட நிகழ்வுகளின் அடிப்படையில் மண்டலம் *- 5*, பகுதி *- 12*, கோட்டம் *- 52*ல் கல்லறை சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடுவதற்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் வாடகையினை மண்டலம் *- 5* வார்டு குழுவில் சமர்ப்பித்து தீர்மானம் நிறைவேற்றி நிலைக்குழு வரி விதிப்பு மூலமாக மாமன்றத்தின் தீர்மானம் பெறப்பட வேண்டும். ஆனால் ஜனவரி மாதத்திற்கான மண்டலம் *- 5* வார்டு குழு முன்னதாகவே நடைபெற்று முடிந்த காரணத்தினால் *30-01-2026* அன்று இம்மாதத்திற்கான மாமன்ற கூட்டம் நடைபெற உள்ளதால் இப்பொருளின் அவசர அவசியம் கருதி மண்டலம் *- 5* வார்டு குழுவின் பின்னேற்பு தீர்மானத்திற்குட்பட்டு மாமன்றத்தின் தீர்மானம் பெறப்பட வேண்டும்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி , மண்டலம் *- 5*, பகுதி *- 12*, கோட்டம் *- 52*, கல்லறை சாலையில் கட்டிடத்துறை மூலமாக புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து விதமான வசதிகளும் கொண்ட புதிய சமுதாய நலக்கூடத்தினை

பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடுவதற்காக தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 பிரிவு 316(4)ன்படி கட்டிடத்தின் மொத்த பரப்பளவின் அடிப்படையில் வணிக பயன்பாட்டிற்கான தெருக்களுக்கான அடிப்படை கட்டணத்தை கொண்டு கணக்கிடும் போது ஒருநாள் வாடகையாக ரூபாய்: 19,000 மற்றும் 18 விழுக்காடு (ரூபாய்:3,420) சரக்கு மற்றும் சேவை வரி (மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க மாற்றத்திற்குட்பட்டது) அரை நாள் வாடகையாக ரூபாய்: 9,500/- மற்றும் 18 விழுக்காடு (ரூபாய்:1,710) சரக்கு மற்றும் சேவை வரி (மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க மாற்றத்திற்குட்பட்டது) எனவும், மின்கட்டணத்தினை நிகழ்ச்சி ஏற்பாட்டாளரிடம் பயன்பாட்டின்படி கணக்கிட்டு வசூலித்திடவும், சமுதாய நலக்கூட முன்பதிவிற்கு முன்வைப்புத் தொகையாக ஒருநாள் மற்றும் அரைநாளுக்கு ரூபாய்:5000/- என வசூலித்திட, நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண். 33/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.5.வது.ந.க.எண்.ஆர்1/0133-1/2026**

**ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 73/2026** **பொருள் எண்.73**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 5, கோட்டம் – 53, பேசின் பால சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வாடகை நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-12, கோட்டம்-53, எல்லைக்குட்பட்ட பகுதியில் பேசின் பால சாலையை முகப்பாக கொண்டு கட்டப்பட்டிருந்த மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் பொதுமக்களின் நலன் கருதி அக்கட்டிடங்களை புதிதாக அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய அமைப்புகளுடன் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMDA) மக்கள் நல பயன்பாட்டிற்காக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டது.

அதன் அடிப்படையில் பேசின் பால சாலையில் அமைந்துள்ள காலி இடத்தில் சமுதாய நலக்கூடம் கட்டிடம் கட்ட மன்ற தீர்மான எண்: 379/2023, நாள்: 20/06/2023 அன்று நடைப்பெற்ற மாமன்றக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் அவ்விடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டிடத்துறை மூலமாக அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய சமுதாய நலக்கூட கட்டிடம் கட்டும் பணி துவங்கப்பெற்று தற்போது முடிவுற்ற நிலையில் 27-01-2026 நாளிட்ட செயற் பொறியாளர் மண்டலம் - 5 அவர்களின் குறிப்பில், கோட்டம் - 53 பேசின் பால சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வாடகை நிர்ணயம் செய்திட நடவடிக்கை எடுக்கக்கோரி குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 உட்பிரிவு - 316(4)ன்படி மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வாடகை நிர்ணயம் செய்திட பின்வரும் வழிமுறைகளை பின்பற்ற தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4) The licence fee or lease rent for buildings let out for public purpose shall be based on the annual rental value derived for the purpose of calculation of property tax.

அதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட கோட்டம் - 53 பேசின் பால சாலையில் கட்டப்பட்டுள்ள அப்புதிய கட்டிடம் அடி தளம், தரை தளம், முதல் தளம் மற்றும் இரண்டாவது தளம் என கட்டப்பட்டு மின்தூக்கி வசதிகளுடன் (LIFT) அமையப்பெற்ற கட்டிடத்தின் தளவாரியாக அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் விவரம் பின்வருமாறு.

**கட்டிடத்தின் விவரம்:**

| | |
|---|---|
| அடி தளம் | 10399 சதுர அடி |
| தரை தளம் | 10398 சதுர அடி |
| முதல் தளம் | 10398 சதுர அடி |
| இரண்டாவது தளம் | 10398 சதுர அடி |
| **மொத்தம்** | **41593 சதுர அடி** |

மேற்கண்ட அளவீட்டின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகளில் தெரிவித்தவாறு பின்வரும் சூத்திரத்தின் அடிப்படையில் *(Formula)* வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

**_Formula:_**

கட்டிடத்தின் பரப்பளவு *X* தெருக்களுக்கான அடிப்படை கட்டணம் *X 12.40%*

*(BSR) / Commercial= 41593 x 7.50 x 12.40% = 38,681.49*

முழு மதிப்பு ரூபாய் = *39,000/-*

மேற்கண்ட கணக்கீட்டின் படி ஒருநாள் வாடகையாக ரூபாய்: *39,000 + 18% GST*

அரை நாள் வாடகையாக ரூபாய் : *19,500 + 18% GST*

மேற்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ள ஒருநாள் வாடகையாக ரூபாய்: *39,000* உடன் சரக்கு மற்றும் சேவை வரி *18* விழுக்காடு (சரக்கு மற்றும் சேவை வரி மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது) அரைநாள் வாடகை ரூபாய்: *19,500* மற்றும் *18* விழுக்காடு (சரக்கு மற்றும் சேவை வரி மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது) இது தவிர்த்து நிகழ்ச்சியின் போது பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான பயன்பாட்டின் அடிப்படையில் வர்த்தக ரீதிக்கான கணக்கீட்டில் கணக்கிட்டு நிகழ்ச்சியாளரிடமிருந்து மின் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். அதே போல் சமுதாய நலக்கூடம் வாடகைக்கு விடுவதற்கு முன்வைப்புத் தொகையாக நிகழ்ச்சியாளரிடமிருந்து ரூபாய் : *10000* வசூலித்திட நிர்ணயம் செய்திடலாம் என கருதப்படுகிறது.

மேற்கண்ட நிகழ்வுகளின் அடிப்படையில் மண்டலம் – *5*, பகுதி – *12*, கோட்டம் – *53*ல் பேசின் பால சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடுவதற்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் வாடகையினை மண்டலம் – *5* வார்டு குழுவில் சமர்ப்பித்து தீர்மானம் நிறைவேற்றி நிலைக்குழு வரி விதிப்பு மூலமாக மாமன்றத்தின் தீர்மானம் பெறப்பட வேண்டும். ஆனால் ஜனவரி மாதத்திற்கான மண்டலம் – *5* வார்டு குழு முன்னதாகவே நடைபெற்று முடிந்த காரணத்தினால் *30-01-2026* அன்று இம்மாதத்திற்கான மாமன்ற கூட்டம் நடைபெற உள்ளதால் இப்பொருளின் அவசர அவசியம் கருதி மண்டலம் – *5* வார்டு குழுவின் பின்னேற்பு தீர்மானத்திற்குட்பட்டு மாமன்றத்தின் தீர்மானம் பெறப்பட வேண்டும்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – *5*, பகுதி – *12*, கோட்டம் – *53*, பேசின் பால சாலையில் கட்டிடத்துறை மூலமாக புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து விதமான வசதிகளும் கொண்ட புதிய சமுதாய நலக்கூடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடுவதற்காக தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் *2023* பிரிவு *316(4)*ன்படி கட்டிடத்தின் மொத்த பரப்பளவின் அடிப்படையில் வணிக பயன்பாட்டிற்கான தெருக்களுக்கான அடிப்படை கட்டணத்தை கொண்டு கணக்கிடும்

போது ஒருநாள் வாடகையாக ரூபாய்: 39,000 மற்றும் 18 விழுக்காடு (ரூபாய்:7,020) சரக்கு மற்றும் சேவை வரி (மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க மாற்றத்திற்குட்பட்டது) அரை நாள் வாடகையாக ரூபாய்: 19,500/- மற்றும் 18 விழுக்காடு (ரூபாய்:3,510) சரக்கு மற்றும் சேவை வரி (மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க மாற்றத்திற்குட்பட்டது) எனவும், மின்கட்டணத்தினை நிகழ்ச்சி ஏற்பாட்டாளரிடம் பயன்பாட்டின் படி கணக்கிட்டு வசூலித்திடவும், சமுதாய நலக்கூட முன்பதிவிற்கு முன்வைப்புத்தொகையாக ஒருநாள் மற்றும் அரைநாளுக்கு ரூபாய்:10000/- என வசூலித்திட, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.32/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ம.அ.5.வதுந.க.எண்.ஆர்1/0133/2026**

**ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 74/2026** **பொருள் எண்.74**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 5, கோட்டம் – 57, எண்.244, வ.ஊ.சி. சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்க வாடகை நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-13, கோட்டம்-57, எல்லைக்குட்பட்ட பகுதியில் எண்.244, வ.ஊ.சி. சாலையை முகப்பாக கொண்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் பொதுமக்களின் நலன் கருதி புதிதாக அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய அமைப்புகளுடன் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க மாண்மிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதன் அடிப்படையில் எண்.244, வ.ஊ.சி. சாலையில் அமைந்திருந்த காலி இடத்தில் சமுதாய நலக்கூடம் கட்டிடம் கட்ட மன்ற தீர்மான எண்: 188/2024, நாள்: 22/06/2024 அன்று மாமன்றக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் அவ்விடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டிடத்துறை மூலமாக அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய சமுதாய நலக்கூட கட்டிடம் கட்டும் பணி துவங்கப்பெற்று தற்போது முடிவுற்ற நிலையில் 27-01-2026 நாளிட்ட செயற் பொறியாளர் மண்டலம் - 5 அவர்களின் குறிப்பில், கோட்டம் - 57 எண்.244, வ.ஊ.சி. சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வாடகை நிர்ணயம் செய்திட நடவடிக்கை எடுக்கக்கோரி குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 உட்பிரிவு - 316(4)ன்படி மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வாடகை நிர்ணயம் செய்திட பின்வரும் வழிமுறைகளை பின்பற்ற தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4) The licence fee or lease rent for buildings let out for public purpose shall be based on the annual rental value derived for the purpose of calculation of property tax.

அதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட கோட்டம் - 57 எண்.244, வ.ஊ.சி. சாலையில் கட்டப்பட்டுள்ள அப்புதிய கட்டிடம் தரை தளம், முதல் தளம் மற்றும் 2வது தளம் என கட்டப்பட்டு மின்தூக்கி வசதிகளுடன் (LIFT) அமையப்பெற்ற கட்டிடத்தின் தளவாரியாக அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் விவரம் பின்வருமாறு.

**கட்டிடத்தின் விவரம்:**

| | |
|---|---|
| தரை தளம் | 11320 சதுர அடி |
| முதல் தளம் | 9873 சதுர அடி |

| | |
|---|---|
| இரண்டாவது தளம் | 9873 சதுர அடி |
| படி கூண்டு | 344 சதுர அடி |
| **மொத்தம்** | **31410 சதுர அடி** |

மேற்கண்ட அளவீட்டின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகளில் தெரிவித்தவாறு பின்வரும் சூத்திரத்தின் அடிப்படையில் (Formula) வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்

**Formula:**

கட்டிடத்தின் பரப்பளவு X தெருக்களுக்கான அடிப்படை கட்டணம் X 12.40%

(BSR) / Commercial = 41410 x 11.25 x 12.40% = 43816.95

முழு மதிப்பு ரூபாய் = 44,000/-

மேற்கண்ட கணக்கீட்டின் படி ஒருநாள் வாடகையாக ரூபாய்: 44,000 + 18% GST

அரை நாள் வாடகையாக ரூபாய் : 22,000 + 18% GST

மேற்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ள ஒருநாள் வாடகையாக ரூபாய்: 44,000 உடன் சரக்கு மற்றும் சேவை வரி 18 விழுக்காடு (சரக்கு மற்றும் சேவை வரி மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது) அரைநாள் வாடகை ரூபாய்: 22,000 மற்றும் 18 விழுக்காடு (சரக்கு மற்றும் சேவை வரி மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது) இது தவிர்த்து நிகழ்ச்சியின் போது பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான பயன்பாட்டின் அடிப்படையில் வர்த்தக ரீதிக்கான கணக்கீட்டில் கணக்கிட்டு நிகழ்ச்சியாளரிடமிருந்து மின் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். அதே போல் சமுதாய நலக்கூடம் வாடகைக்கு விடுவதற்கு முன்வைப்புத்தொகையாக நிகழ்ச்சியாளரிடமிருந்து ரூபாய் : 7500 வசூலித்திட நிர்ணயம் செய்திடலாம் என கருதப்படுகிறது.

மேற்கண்ட நிகழ்வுகளின் அடிப்படையில் மண்டலம் – 5, பகுதி – 13, கோட்டம் – 57ல் எண்.244, வ.ஊ.சி. சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடுவதற்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் வாடகையினை மண்டலம் – 5 வார்டு குழுவில் சமர்ப்பித்து தீர்மானம் நிறைவேற்றி நிலைக்குழு வரி விதிப்பு மூலமாக மாமன்றத்தின் தீர்மானம் பெறப்பட வேண்டும். ஆனால் ஜனவரி மாதத்திற்கான மண்டலம் – 5 வார்டு குழு முன்னதாகவே நடைபெற்று முடிந்த காரணத்தினால் 30-01-2026 அன்று இம்மாதத்திற்கான மாமன்ற கூட்டம் நடைபெற உள்ளதால் இப்பொருளின் அவசர அவசியம் கருதி மண்டலம் – 5 வார்டு குழுவின் பின்னேற்பு தீர்மானத்திற்குட்பட்டு மாமன்றத்தின் தீர்மானம் வேண்டப்படுகிறது.

அ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி – 13, கோட்டம் – 57, எண்.244, வ.ஊ.சி. சாலையில் கட்டிடத்துறை மூலமாக புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து விதமான வசதிகளும் கொண்ட புதிய சமுதாய

நலக்கூடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடுவதற்காக தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 பிரிவு 316(4)ன்படி கட்டிடத்தின் மொத்த பரப்பளவின் அடிப்படையில் வணிக பயன்பாட்டிற்கான தெருக்களுக்கான அடிப்படை கட்டணத்தை கொண்டு கணக்கிடும் போது ஒருநாள் வாடகையாக ரூபாய்: 44,000 மற்றும் 18 விழுக்காடு (ரூபாய்:7,920) சரக்கு மற்றும் சேவை வரி (மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க மாற்றத்திற்குட்பட்டது) அரை நாள் வாடகையாக ரூபாய்: 22,000/- மற்றும் 18 விழுக்காடு (ரூபாய்:3,960) சரக்கு மற்றும் சேவை வரி (மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க மாற்றத்திற்குட்பட்டது) எனவும், மின்கட்டணத்தினை நிகழ்ச்சி ஏற்பாட்டாளரிடம் பயன்பாட்டின் படி கணக்கிட்டு வசூலித்திடவும், சமுதாய நலக்கூட முன்பதிவிற்கு முன்வைப்புத்தொகையாக ஒருநாள் மற்றும் அரைநாளுக்கு ரூபாய்:7500/- என வசூலித்திட நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண். 31/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.5.வ.து.ந.க.எண்.ஆர்1/0133-3/2026**

**ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 75/2026** **பொருள் எண்.75**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 5, கோட்டம் – 57, எண்:60, வ.ஊ.சி (வால்டாக்ஸ் ரோடு) சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வாடகை நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-13, கோட்டம்-57, எல்லைக்குட்பட்ட பகுதியில் முகப்பாக கொண்டு கட்டப்பட்டிருந்த மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் பொதுமக்களின் நலன் கருதி அக்கட்டிடங்களை புதிதாக அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய அமைப்புகளுடன் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் துறைமுக சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதன் அடிப்படையில் வ.ஊ.சி (வால்டாக்ஸ் ரோடு) அமைந்திருந்த காலி இடத்தில் சமுதாய நலக்கூடம் கட்டிடம் கட்ட மன்ற தீர்மான எண்: 188/2024, நாள்: 22/06/2024 அன்று மாமன்றக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் அவ்விடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டிடத்துறை மூலமாக அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய சமுதாய நலக்கூடம் கட்டிடம் கட்டும் பணி துவங்கப்பெற்று தற்போது முடிவுற்ற நிலையில் 27-01-2026 நாளிட்ட செயற் பொறியாளர் மண்டலம் - 5 அவர்களின் குறிப்பில், கோட்டம் - 57 வ.ஊ.சி (வால்டாக்ஸ் ரோடு) சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வாடகை நிர்ணயம் செய்திட நடவடிக்கை எடுக்கக்கோரி குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 உட்பிரிவு - 316(4)ன்படி மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வாடகை நிர்ணயம் செய்திட பின்வரும் வழிமுறைகளை பின்பற்ற தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4) The licence fee or lease rent for buildings let out for public purpose shall be based on the annual rental value derived for the purpose of calculation of property tax.

அதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட கோட்டம் - 57 வ.ஊ.சி (வால்டாக்ஸ் ரோடு) சாலையில் கட்டப்பட்டுள்ள அப்புதிய கட்டிடம் தரை தளம், முதல் தளம் , இரண்டாவது தளம் மற்றும் படிகூண்டு என கட்டப்பட்டு அமையப்பெற்ற கட்டிடத்தின் தளவாரியாக அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் விவரம் பின்வருமாறு.

**கட்டிடத்தின் விவரம்:**

| | |
|---|---|
| தரை தளம் | 9008 சதுர அடி |
| முதல் தளம் | 9008 சதுர அடி |

| | |
|---|---|
| இரண்டாவது தளம் | 3030 சதுர அடி |
| படிகூண்டு | 802 சதுர அடி |
| **மொத்தம்** | ***21848* சதுர அடி** |

மேற்கண்ட அளவீட்டின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகளில் தெரிவித்தவாறு பின்வரும் சூத்திரத்தின் அடிப்படையில் *(Formula)* வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்

***Formula:***

கட்டிடத்தின் பரப்பளவு *X* தெருக்களுக்கான அடிப்படை கட்டணம் *X 12.40%*

*(BSR) / Commercial= 21848 x 11.25 x 12.40% = 30477.96*

முழு மதிப்பு ரூபாய் *= 30,500/-*

மேற்கண்ட கணக்கீட்டின் படி ஒருநாள் வாடகையாக ரூபாய்: *30,500 + 18% GST*

அரை நாள் வாடகையாக ரூபாய் : *15,500 + 18% GST*

மேற்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ள ஒருநாள் வாடகையாக ரூபாய்: *30,500* உடன் சரக்கு மற்றும் சேவை வரி *18* விழுக்காடு (சரக்கு மற்றும் சேவை வரி மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது) அரைநாள் வாடகை ரூபாய்: *15,500* மற்றும் *18* விழுக்காடு (சரக்கு மற்றும் சேவை வரி மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது) இது தவிர்த்து நிகழ்ச்சியின் போது பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான பயன்பாட்டின் அடிப்படையில் வர்த்தக ரீதிக்கான கணக்கீட்டில் கணக்கிட்டு நிகழ்ச்சியாளரிடமிருந்து மின் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். அதே போல் சமுதாய நலக்கூடம் வாடகைக்கு விடுவதற்கு முன்வைப்புத் தொகையாக நிகழ்ச்சியாளரிடமிருந்து ரூபாய் : *7,500* வசூலித்திட நிர்ணயம் செய்திடலாம் என கருதப்படுகிறது.

மேற்கண்ட நிகழ்வுகளின் அடிப்படையில் மண்டலம் – *5*, பகுதி – *13*, கோட்டம் – *57*ல் வ.ஊ.சி (வால்டாக்ஸ் ரோடு) சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடுவதற்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் வாடகையினை மண்டலம் – *5* வார்டு குழுவில் சமர்ப்பித்து தீர்மானம் நிறைவேற்றி நிலைக்குழு வரி விதிப்பு மூலமாக மாமன்றத்தின் தீர்மானம் பெறப்பட வேண்டும். ஆனால் ஜனவரி மாதத்திற்கான மண்டலம் – *5* வார்டு குழு முன்னதாகவே நடைபெற்று முடிந்த காரணத்தினால் *30-01-2026* அன்று இம்மாதத்திற்கான மாமன்ற கூட்டம் நடைபெற உள்ளதால் இப்பொருளின் அவசர அவசியம் கருதி மண்டலம் – *5* வார்டு குழுவின் பின்னேற்பு தீர்மானத்திற்குட்பட்டு மாமன்றத்தின் தீர்மானம் பெறப்பட வேண்டும்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – *5*, பகுதி – *12*, கோட்டம் – *57*, வ.ஊ.சி (வால்டாக்ஸ் ரோடு) சாலையில் கட்டிடத்துறை மூலமாக புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து விதமான வசதிகளும் கொண்ட புதிய சமுதாய

நலக்கூடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடுவதற்காக தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 பிரிவு 316(4)ன்படி கட்டிடத்தின் மொத்த பரப்பளவின் அடிப்படையில் வணிக பயன்பாட்டிற்கான தெருக்களுக்கான அடிப்படை கட்டணத்தை கொண்டு கணக்கிடும் போது ஒருநாள் வாடகையாக ரூபாய்: 30,500 மற்றும் 18 விழுக்காடு (ரூபாய்:5490) சரக்கு மற்றும் சேவை வரி (மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க மாற்றத்திற்குட்பட்டது) அரை நாள் வாடகையாக ரூபாய்: 15,500/- மற்றும் 18 விழுக்காடு (ரூபாய்:2790) சரக்கு மற்றும் சேவை வரி (மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க மாற்றத்திற்குட்பட்டது) எனவும், மின்கட்டணத்தினை நிகழ்ச்சி ஏற்பாட்டாளரிடம் பயன்பாட்டின்படி கணக்கிட்டு வசூலித்திடவும், சமுதாய நலக்கூட முன்பதிவிற்கு முன்வைப்புத்தொகையாக ஒருநாள் மற்றும் அரைநாளுக்கு ரூபாய்:7,500/- என வசூலித்திட நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.34/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ம.அ.5.வதுநக.எண்.ஆர்1/0111/2026**

**ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 76/2026** **பொருள் எண்.76**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 5, கோட்டம் – 62, சிங்கண்ண தெரு, குருவப்பா தெரு சந்திப்பில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்க வாடகை நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - *5*, பகுதி - *14*, கோட்டம் - *62*, எல்லைக்குட்பட்ட பகுதியில் குருவப்பா தெருவை முகப்பாக கொண்டு கட்டப்பட்டிருந்த மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கட்டிடம் மற்றும் சிங்கண்ண தெருவை முகப்பாக கொண்டு கட்டப்பட்டிருந்த மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடம் ஆகிய இரண்டு கட்டிடங்களும் மிகவும் பழுதடைந்து சிதிலமடைந்த நிலையில் இருந்த காரணத்தினால் பொதுமக்களின் நலன் கருதி அக்கட்டிடங்களை இடித்து புதிதாக அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய அமைப்புகளுடன் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதன் அடிப்படையில் குருவப்பா தெரு, சிங்கண்ண தெருவில் அமைந்திருந்த பழுதடைந்த வணிக வளாகம் மற்றும் சமுதாய நலக்கூடங்கள் இடிப்பதற்காக மன்ற தீர்மான எண்: *379/2023*, நாள்: *30-06-2023* அன்று நடைபெற்ற மன்றக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கட்டிடம் இடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர் அவ்விடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டிடத்துறை மூலமாக அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய சமுதாய நலக்கூட கட்டிடம் கட்டும் பணி துவங்கப்பெற்று தற்போது முடிவுற்ற நிலையில் *27-01-2026* நாளிட்ட செயற் பொறியாளர் மண்டலம் - *5* அவர்களின் குறிப்பில், கோட்டம் - *62* குருவப்பா தெரு, மற்றும் சிங்கண்ண தெரு சந்திப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வாடகை நிர்ணயம் செய்திட நடவடிக்கை எடுக்கக்கோரி குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் *2023* உட்பிரிவு - *316(4)*ன்படி மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வாடகை நிர்ணயம் செய்திட பின்வரும் வழிமுறைகளை பின்பற்ற தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4) The licence fee or lease rent for buildings let out for public purpose shall be based on the annual rental value derived for the purpose of calculation of property tax.

அதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட கோட்டம் - *62* குருவப்பா தெரு, மற்றும் சிங்கண்ண தெரு சந்திப்பில் கட்டப்பட்டுள்ள அப்புதிய கட்டிடம் தரை தளம், முதல் தளம் மற்றும் இரண்டாவது தளம் என கட்டப்பட்டு மின்தூக்கி வசதிகளுடன் *(LIFT)*

அமையப்பெற்ற கட்டிடத்தின் தளவாரியாக அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் விவரம் பின்வருமாறு.

**கட்டிடத்தின் விவரம்:**

| | |
|---|---|
| தரை தளம் | 6811 சதுர அடி |
| முதல் தளம் | 5488 சதுர அடி |
| இரண்டாவது தளம் | 5488 சதுர அடி |
| படிகூண்டு மற்றும் மின்தூக்கி தளம் | 949 சதுர அடி |
| **மொத்தம்** | **18736 சதுர அடி** |

மேற்கண்ட அளவீட்டின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகளில் தெரிவித்தவாறு பின்வரும் சூத்திரத்தின் அடிப்படையில் *(Formula)* வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

***Formula:***

கட்டிடத்தின் பரப்பளவு x தெருக்களுக்கான அடிப்படை கட்டணம் x 12.40%

*(BSR) / Commercial*=18736 x 7.50 x 12.40% = 17,424.48

முழு மதிப்பு ரூபாய் = 17,500/-

மேற்கண்ட கணக்கீட்டின் படி ஒருநாள் வாடகையாக ரூபாய்: 17,500 + 18% GST

அரை நாள் வாடகையாக ரூபாய் : 9000 + 18% GST

மேற்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ள ஒருநாள் வாடகையாக ரூபாய்: 17,500 உடன் சரக்கு மற்றும் சேவை வரி 18 விழுக்காடு (சரக்கு மற்றும் சேவை வரி மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது) அரைநாள் வாடகை ரூபாய்: 9000 மற்றும் 18 விழுக்காடு (சரக்கு மற்றும் சேவை வரி மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது) இது தவிர்த்து நிகழ்ச்சியின் போது பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான பயன்பாட்டின் அடிப்படையில் வர்த்தக ரீதிக்கான கணக்கீட்டில் கணக்கிட்டு நிகழ்ச்சியாளரிடமிருந்து மின் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் அதே போல் சமுதாய நலக்கூடம் வாடகைக்கு விடுவதற்கு முன்வைப்புத்தொகையாக நிகழ்ச்சியாளரிடமிருந்து ரூபாய்:5000 வசூலித்திட நிர்ணயம் செய்திடலாம் என கருதப்படுகிறது.

மேற்கண்ட நிகழ்வுகளின் அடிப்படையில் மண்டலம் – 5, பகுதி – 14, கோட்டம் – 62ல் குருவப்பா தெரு மற்றும் சிங்கண்ண தெரு சந்திப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடுவதற்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் வாடகையினை மண்டலம் – 5 வார்டு குழுவில் சமர்ப்பித்து தீர்மானம் நிறைவேற்றி நிலைக்குழு வரி விதிப்பு மூலமாக மாமன்றத்தின் தீர்மானம் பெறப்பட வேண்டும். ஆனால், ஜனவரி மாதத்திற்கான மண்டலம் – 5 வார்டு குழு முன்னதாகவே

நடைபெற்று முடிந்த காரணத்தினால் 30-01-2026 அன்று இம்மாதத்திற்கான மாமன்ற கூட்டம் நடைபெற உள்ளதால் இப்பொருளின் அவசர அவசியம் கருதி மண்டலம் – 5 வார்டு குழுவின் பின்னேற்பு தீர்மானத்திற்குட்பட்டு மாமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி , மண்டலம் – 5, பகுதி – 14, கோட்டம் – 62, குருவப்பா தெரு மற்றும் சிங்கண்ண தெரு, சந்திப்பில் கட்டிடத்துறை மூலமாக புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து விதமான வசதிகளும் கொண்ட புதிய சமுதாய நலக்கூடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடுவதற்காக தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 பிரிவு 316(4)ன்படி கட்டிடத்தின் மொத்த பரப்பளவின் அடிப்படையில் வணிக பயன்பாட்டிற்கான தெருக்களுக்கான அடிப்படை கட்டணத்தை கொண்டு கணக்கிடும் போது ஒருநாள் வாடகையாக ரூபாய்: 17,500 மற்றும் 18 விழுக்காடு (ரூபாய்:3,150) சரக்கு மற்றும் சேவை வரி (மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க மாற்றத்திற்குட்பட்டது) அரை நாள் வாடகையாக ரூபாய்: 9000/- மற்றும் 18 விழுக்காடு (ரூபாய்:1,620) சரக்கு மற்றும் சேவை வரி (மத்திய அரசின் அறிவிப்பிற்கிணங்க மாற்றத்திற்குட்பட்டது) எனவும், மின்கட்டணத்தினை நிகழ்ச்சி ஏற்பாட்டாளரிடம் பயன்பாட்டின்படி கணக்கிட்டு வசூலித்திடவும், சமுதாய நலக்கூட முன்பதிவிற்கு முன்வைப்புத்தொகையாக ஒருநாள் மற்றும் அரைநாளுக்கு ரூபாய்:5000/- என வசூலித்திட நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண். 35/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.8.வ.து.ந.க.எண்: 5100/2025**

**ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 77/2026** **பொருள் எண்.77**

**பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம் 8,வருவாய் துறை - கோட்டம்-104, வசந்தம் காலனி 3வது தெரு, அண்ணா நகர் மேற்கு, சென்னை -40 என்ற முகவரியில் புதிதாக சமுதாய நலக்கூட கட்டிடம் கட்டப்பட்டுள்ளது- சமுதாய நலக்கூடத்தை பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதித்து வாடகை மற்றும் முன்வைப்பு தொகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு-104, பகுதி -21 வசந்தம் காலனி 3வது தெரு, அண்ணா நகர் மேற்கு, சென்னை-40ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் புதிதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டுள்ளது.

உதவி ஆணையர் (முதுநிலை)/இணை இயக்குநர் அவர்களின் 23.12.2025 குறிப்பின்படி, மேற்படி சமுதாய நலக்கூடம் பொது மக்களின் பயன்பாட்டிற்கு அனுமதிக்கவும், வாடகை மற்றும் முன் வைப்புதொகை நிர்ணயிக்கவும் வார்டு குழுவிற்கு பொருள் கீழ்கண்டவாறு வைக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட கட்டிடமானது தரைதளம் 1500 சதுர அடியும், முதல் தளம் 1500 சதுரடியும், 2வது தளம் 1500 சதுரடியும் ஆக மொத்தம் 4500 சதுரடி கொண்ட கட்டிடமாகும்.

இக்கட்டடத்திற்கு குடியிருப்பு அல்லாத பகுதி என்ற வகையில் சதுரஅடிக்கு 11.25 (BSR RATE) அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி சொத்துவரி மதிப்பில் கீழ்க்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யலாம்.

**கணக்கீட்டுத்தாள்**

| வ.எண் | தளம் | சதுரடி | உபயோகத்தன்மை |
|---|---|---|---|
| 1. | தரைதளம் | 1500 சதுரடி | வாகன நிறுத்துமிடம் |
| 2. | முதல் தளம், | 1500 சதுரடி | நிகழ்ச்சி நடத்துமிடம் |
| 3. | 2வது தளம்(S.P) | 1500 சதுரடி | உணவு அருந்துமிடம் |
| மொத்தம் | | 4500 சதுரடி | |

கட்டடத்தின் மொத்த பரப்பளவு – 4500 சதுர அடி X 11.25( NonResidential BSR Rate) x 12 = ரூ.15187.50

ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள்(Rounded off) ரூ.15.500/-

ஒருநாள் வாடகை = ரூ.15.500/- (Rounded off) (சேவைவரி தனியே)

அரைநாள் வாடகை = ரூ.7750/- (Rounded off) (சேவைவரி தனியே)

முன்வைப்புத் தொகை ரூ.10,000/- என நிர்ணயம் செய்யலாம்

<u>பிற நிபந்தனைகள்:</u>

1. அரசியல் நிகழ்ச்சிகள் வணிக ரீதியான நிகழ்ச்சிகள் போன்றவைகளுக்கு அனுமதி கிடையாது.
2. சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்காக அலுவலர் கூட்டங்கள் இயற்கை இடர்பாடுகளின் போது பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் தேர்தல் பணிகள் போன்ற தவிர்க்க முடியாத அவசர நிகழ்வுகளில் சமுதாய நலக்கூடம் தேவைப்படின் மனுதாரருக்கு வழங்கப்படும் முன்பதிவானது ரத்து செய்யப்படும்.
3. ஒதுக்கீடு பெற்ற நிகழ்ச்சிக்காக மட்டுமே சமுதாய நலக்கூடம் பயன்படுத்திட வேண்டும்.
4. சமுதாய நலக்கூடத்திற்குள் உள்ள பொருட்களை சேதப்படுத்தினால் அதற்குரிய தண்டத்தொகை வசூலிக்கப்பட்டு முன்வைப்புத் தொகையிலிருந்து நேர் செய்யப்படும்.

வார்டு குழு தீர்மானத்தில் மண்டலம்-8, கோட்டம்-104, பகுதி -21, வசந்தம் காலனி 3வது தெரு, அண்ணா நகர் மேற்கு சென்னை -40 என்ற முகவரியில் அமைந்துள்ள சமுதாய நல கூடத்திற்கு ஒருநாள் வாடகை ரூ.15500/- (GST தனியே) அரைநாள் வாடகை ரூ.7750/- ( GST தனியே) மற்றும் முன்வைப்பு தொகை ரூ.10,000/- நிர்ணயம் செய்து வார்டு குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்கண்ட முகவரியில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடத்தை பொது மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்திடவும்,

இதற்கு ஒரு நாள் வாடகை ரூ.15500/- ம் (GST தனியே) அரை நாள் வாடகை ரூ.7750/- ம் (GST தனியே) முன்வைப்புத் தொகை ரூ.10,000/- நிர்ணயம் செய்திடலாம்

எனவே, மண்டலம்-8, கோட்டம்-104, பகுதி -21 , வசந்தம் காலனி 3வது தெரு, அண்ணா நகர் மேற்கு, சென்னை-40 என்ற முகவரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு ஒருநாள் வாடகை ரூ.15,500/- (GST தனியே), அரைநாள் வாடகை ரூ.7,750/- (GST தனியே) மற்றும் முன்வைப்பு தொகை ரூ.10,000/- நிர்ணயம் செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.28/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ம.அ.5.நக.எண். 8835/2024**

**ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 78/2026** **பொருள் எண்.78**

**பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம் – 5, பகுதி– 13 & 14, துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சாலையோரம் குடிசைவாசிகள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் குடியமர்வு செய்வது - கணக்கீடு மேற்கொள்ளப்பட்டது -692 குடும்பங்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் குடியமர்வு செய்வது - பயனாளிகளின் பங்கு தொகை செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 5, பகுதி- 13 & 14 - துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சாலையோரம் குடிசைவாசிகள் சுமார் பல வருடங்களுக்கு மேலாக வாழ்வாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையில் சாலையோரம் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். துறைமுகம் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் சாலையோரம் வாழும் குடிசைவாசிகளுக்கு வாழ்வாதாரம் மேம்படும் வகையில் தரைத்தளம் கூடிய ஒன்பது தளங்கள் கொண்ட புதிய அடுக்குமாடி கட்டிடங்கள் கட்டப்பட்டு தயார் நிலையில் உள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு தமிழக துணைமுதல்வர், மாண்புமிகு இந்துசமய (ம) அறநிலைத்துறை அமைச்சர் மற்றும் தலைவர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்கள் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சாலையோரம் குடிசைப் பகுதிகளை பல்வேறு நாட்களில் நேரடி களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் சம்மந்தப்பட்ட சாலையோரம் குடிசைவாசிகள் தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக தமிழக அரசின் குடியிருப்புகளில் தங்களுக்கு வீடு ஒதுக்கி தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இவர்கள் தங்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்புகளில் மாற்று இடம் ஒதுக்கீடு செய்து தரும்படி மாநகராட்சியை அணுகி கேட்டுக்கொண்டதின் தொடர்ச்சியாக மண்டலம் - 5, பகுதி- 13 & 14 - துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சாலையோரம் வசிக்கும் மக்களை கடந்த வருடத்திலிருந்து தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்த 692 குடும்பங்களை மறு வாழ்வு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் குடியிருப்பு ஒதுக்கீடு வழங்க, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களின் 20.01.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பயனாளிகளின் பங்கு தொகை பற்றிய விவரம் தெரிவிக்கப்பட்டது. அதன் விவரம் கீழ் கண்டவாறு;

| வ.எண் | திட்டப்பகுதியின் பெயர் | பயனாளி பங்குத் தொகை (ஒரு குடியிருப்புக்கு) ரூ. |
|---|---|---|
| 1 | மண்டலம் - 5, பகுதி- 13 & 14 - துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு | |

இதனை இப்பகுதிவாழ் மக்களுக்கு தெரிவிக்கும் வண்ணமாக 05.01.2026 அன்று செயற்பொறியாளர்/மண்டலம்-5, கடன் உதவி வழங்கும் வங்கி அதிகாரிகள் மற்றும் மண்டலம் - 5, பகுதி- 13 & 14 - துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சாலையோரம் வசித்து வரும் சம்பந்தப்பட்ட 692 குடும்பங்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளின் பங்கு தொகை செலுத்துவதற்கு கடன் உதவி ஏற்பாடு செய்ய அறிவுரை வழங்கப்பட்டது. பயனாளிகளின் பங்கு தொகையை வங்கி கடன் பெற்று செலுத்துவதற்கு இப்பகுதிவாழ் மக்களும் இசைவு தெரிவித்தனர்.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களின் 20.01.2026 நாளிட்ட கடிதத்தின்படி, தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் குடியிருப்பு ஒதுக்கீடு கோரும் ஸ்டான்லி மருத்துவமனை (ஏழுகிணறு) திட்டப்பகுதியில் திருத்திய அரசாணையின்படி பயனாளி பங்குத் தொகை விவரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

| வ.எண் | திட்டப்பகுதியின் பெயர் | பயனாளி பங்குத் தொகை (ஒரு குடியிருப்புக்கு) ரூ. |
|---|---|---|
| 1 | பயனாளிகள் 3.33 - 1000 x 333 மாதம் | 3,33,000/- |
| 2 | பெருநகர சென்னை மாநகராட்சி | 1,67,000, /- |

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அரசு இணை செயலாளர் அவர்களின் 09.08.2024 நாளிட்ட கடிதத்தில், ஏழைகளுக்கு வீடு கொடுக்கும் திட்டத்தில் பயனாளி பங்குத்தொகை குறைப்பினை தொடர்புடைய உள்ளாட்சி நிர்வாகம் தான் ஏற்க வேண்டும். மேலும், அரசு நிதியில் இருந்து எந்த செலவையும் ஈடுகட்ட இயலாத நிலை உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் - 5, பகுதி- 13 & 14 - துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தெருவோரம் வசித்து வரும் 692 குடும்பதாரர்களுக்கு வீடுகள் வழங்கப்பட வேண்டுமென்றால் நிர்ணயிக்கப்பட்ட பயனாளிகளின் பங்குத்தொகை கட்டப்பட வேண்டும்.

எனவே, மண்டலம்-5 தெருவோரங்களில் பல ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மக்களின் சமூக பொருளாதாரத்தின் நிலையினை கருத்தில் கொண்டு இந்த முழுத்தொகையை கட்டுவதனை தளர்த்தி அத்தொகையில் குறைந்தபட்சம் ரூ. 3.33 இலட்சம் மூன்றில் இரண்டு பங்கு அங்குள்ள பயனாளிகளும் (333 மாதங்கள் என மாதம் 1000 வீதம்), மீதத்தொகை அதாவது ரூ.1.67 இலட்சத்தினை சென்னை மாநகராட்சி பயனாளிகளின் பங்கீட்டு தொகையாக தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஒரு குடும்பத்திற்கு **ரூ.1,67,000 /- x 692** குடும்பங்கள் =மொத்தம் ரூ.**11,55,64,000/-** என வழங்குவதற்கு ஆணை வேண்டப்படுகிறது.

மேலும், இது நீண்ட நாள் பிரச்சனையாக தொடர்வதனையும், வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கி, இருப்பதனையும் கருத்தில் கொண்டு இக்கருத்துரு குறித்து ஆணை வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண். 36/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/0112/2026**

**ஆணையர் அவர்களின் 29.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 79/2026** **பொருள் எண்.79**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமை துறை - மண்டலம்-5, வார்டு-61, சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வேப்பேரி கிராமம், பிளாக் எண்-8, புல எண்.50/1-ல் அமைந்துள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அலுவலக வளாகத்தினுள் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மொழிப்போர் தியாகிகளான திருவாளர்கள் தாளமுத்து, நடராசன் ஆகிய இருவருக்கும் சிலை நிறுவிட மாவட்ட அளவிலான குழுவில் உள்ள உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கையாக அரசின் ஒப்புதல் பெற வேண்டி வருவாய் நிர்வாக ஆணையருக்கு உரிய முன்மொழிவு அனுப்பப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் *13.01.2026* நாளிட்ட கடிதத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மொழிப்போர் தியாகிகளான திருவாளர்கள் தாளமுத்து, நடராசன் ஆகியோரின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடம் *25.01.2025* அன்று திறந்து வைத்து, மொழிப்போரின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர் நீத்த திருவாளர்கள் தாளமுத்து, நடராசன் ஆகிய இருவருக்கும் சென்னை, எழும்பூரில் உள்ள தாளமுத்து, நடராசன் மாளிகை வளாகத்தில் திருவுருவச்சிலை நிறுவப்படும் என்று அறிவித்ததை தொடர்ந்து, அவர்களின் சிலைகளை அடிபீடத்துடன் நிறுவும் பணியினையும், அதற்கான செலவினத்தையும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் மேற்கொள்ளும் வகையில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும், எனவே சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகம், அமைந்துள்ள தாளமுத்து - நடராசன் மாளிகையில் மொழிப்போர் தியாகிகள் திருவாளர்கள் தாளமுத்து, நடராசன் ஆகியோரின் சிலைகளை நிறுவிட ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

மேற்படி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகம், அமைந்துள்ள தாளமுத்து - நடராசன் மாளிகையில் மொழிப்போர் தியாகிகள் திருவாளர்கள் தாளமுத்து - நடராசன் ஆகியோரின் சிலைகளை நிறுவுவதற்கு அரசாணை (நிலை) எண்.*629*-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சிலை அமைப்பது தொடர்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நில அகற்றல் பிரிவு, நாள்.*16.09.2025* அரசாணை (நிலை) எண்.*629*-ன் படி புதியதாக சிலைகள் மற்றும் கொடி கம்பங்கள் நிறுவுதல், ஏற்கனவே உள்ள சிலைகள் மற்றும் கொடி கம்பங்களை மாற்றுதல் / இடம் மாற்றம் செய்தல் தொடர்பாக நிலையான செயல்பாட்டு நடைமுறையை *(SOP)* வெளியிட்டுள்ளது அதன் படி ஒவ்வொரு மாவட்ட அளவிலான குழுவானது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைவராகவும், சென்னை மாவட்டத்திற்கு மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் தலைவராகவும் கீழ்கண்ட அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

**உறுப்பினர்கள்:**

1. காவல் துறை கூடுதல் ஆணையர் (சென்னை நகரம்)
2. காவல்துறை துணை ஆணையர், சம்மந்தப்பட்ட காவல் துறை மாவட்டம்
3. வட்டார துணை ஆணையர், சம்மந்தப்பட்ட மண்டலம் பெருநகர சென்னை மாநகராட்சி
4. உதவி ஆணையர், சம்மந்தப்பட்ட மண்டலம் பெருநகர சென்னை மாநகராட்சி
5. கோட்டப்பொறியாளர், மாநில நெடுஞ்சாலை துறை
6. செயற்பொறியாளர், பொதுப்பணி துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மொழிப்போர் தியாகிகளான திருவாளர்கள் தாளமுத்து, நடராசன் ஆகிய இருவருக்கும் சிலை அமைப்பது தொடர்பான இடம் குறித்து கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டதில் சிலைகள் அமையவுள்ள இடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-5, வார்டு-61இல் அமைந்துள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அலுவலகத்தில் உள்ளது என்றும், இது சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வேப்பேரி கிராமம், பிளாக் எண்-8, புல எண்.50/1-இல் அமைந்துள்ளது என்றும், தெரியவருகிறது. சிலை அமையவுள்ள இடமானது அலுவலக வளாகத்தினுள் உள்ளதால் போக்குவரத்திற்கோ, பொது மக்களுக்கோ பாதிப்பு ஏற்படுத்தாது என்றும், சட்டம்-ஒழுங்கு பிரச்சனை எழ வாய்ப்பு இல்லை என்றும் தெரியவருகிறது. எனவே, மேற்படி சிலையினை அமைக்க குழுவில் ஒப்புதல் வழங்கலாம் என மாவட்ட அளவிலான குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, வார்டு-61, சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வேப்பேரி கிராமம், பிளாக் எண்-8, புல எண்.50/1-ல் அமைந்துள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அலுவலக வளாகத்தினுள் (தாளமுத்து - நடராசன் மாளிகை) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மொழிப்போர் தியாகிகளான திருவாளர்கள் தாளமுத்து, நடராசன் ஆகிய இருவருக்கும் சிலை நிறுவுவதற்கு மாவட்ட அளவிலான குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு உரிய முன்மொழிவுகள் வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் மேரிடர் மேலாண்மை ஆணையரகம் அவர்களுக்கு 23.01.2026 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, வார்டு-61, சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வேப்பேரி கிராமம், பிளாக் எண்-8, புல எண்.50/1-ல் அமைந்துள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அலுவலக வளாகத்தினுள் (தாளமுத்து - நடராசன் மாளிகை) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மொழிப்போர் தியாகிகளான திருவாளர்கள் தாளமுத்து, நடராசன் ஆகிய இருவருக்கும் சிலைகள் நிறுவுவதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டமைக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

”ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண். 38/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/0141-1/2026**

**ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 80/2026** **பொருள் எண்.80**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 6, வார்டு - 74 சந்திரயோகி சமாதி சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக திருமண மாளிகை கட்டிடம் கட்டப்பட்டு, தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட உள்ள திருமண மாளிகையில் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் திருவுருவச்சிலையினை நிறுவிட மாவட்ட அளவிலான குழுவில் உள்ள உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கையாக அரசின் ஒப்புதல் பெற வேண்டி வருவாய் நிர்வாக ஆணையருக்கு உரிய முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 6,பகுதி – 17, வார்டு - 74, சந்திரயோகி சமாதி சாலையில் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக திருமண மாளிகையினை பெருநகர சென்னை வளர்ச்சி குழுமம் மூலம் கட்டப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பராமரிக்கப்படவுள்ளது. தற்போது இத்திருமண மாளிகையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ளது.

மண்டலம் – 6, பகுதி – 17, வார்டு - 74 சந்திரயோகி சமாதி சாலையில் திறந்து வைக்கப்பட உள்ள திருமண மாளிகையில் இந்திய அரசியல் சட்டத்தினை படைத்தவருமான சட்ட வல்லுநர் பொருளாதார நிபுணர் மற்றும் சமூக சீர்திருத்தவாதியான டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சேவையை போற்றும் வகையிலும் அவரின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையிலும் இத்திருமண மாளிகையில் "டாக்டர் அண்ணல் அம்பேத்கர் திருவுருவச் சிலையினை நிறுவினால் அவரது புகழினை பறைசாற்றும் வகையில் அவர் ஆற்றிய தொண்டினை பெருமைப்படுத்தும் வகையில் அமையும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் சிலை அமைப்பது தொடர்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நில அகற்றல் பிரிவு, நாள்.16.09.2025 அரசாணை (நிலை) எண்.629-ன் படி புதியதாக சிலைகள் மற்றும் கொடி கம்பங்கள் நிறுவுதல், ஏற்கனவே உள்ள சிலைகள் மற்றும் கொடி கம்பங்களை மாற்றுதல் / இடம் மாற்றம் செய்தல் தொடர்பாக நிலையான செயல்பாட்டு நடைமுறையை (SOP) வெளியிட்டுள்ளது அதன் படி ஒவ்வொரு மாவட்ட அளவிலான குழுவானது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைவராகவும், சென்னை மாவட்டத்திற்கு மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் தலைவராகவும் கீழ்கண்ட அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

**உறுப்பினர்கள்:**

1. காவல் துறை கூடுதல் ஆணையர் (சென்னை நகரம்)
2. காவல்துறை துணை ஆணையர், சம்மந்தப்பட்ட காவல் துறை மாவட்டம்

3. வட்டார துணை ஆணையர், சம்மந்தப்பட்ட மண்டலம் பெருநகர சென்னை மாநகராட்சி
4. உதவி ஆணையர், சம்மந்தப்பட்ட மண்டலம் பெருநகர சென்னை மாநகராட்சி
5. கோட்டப்பொறியாளர், மாநில நெடுஞ்சாலை துறை
6. செயற்பொறியாளர், பொதுப்பணி துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிலை அமைப்பது தொடர்பான இடம் குறித்து கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டதில் சிலைகள் அமையவுள்ள இடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் – 6, பகுதி – 17, வார்டு - 74ல் சந்திரயோகி சமாதி சாலையில் அமைந்துள்ள திருமண மாளிகை பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள இடமானது என தெரியவருகிறது. சிலை அமையவுள்ள இடமானது திருமண மாளிகை வளாகத்தினுள் உள்ளதால் போக்குவரத்திற்கோ, பொது மக்களுக்கோ பாதிப்பு ஏற்படுத்தாது என்றும், சட்டம்-ஒழுங்கு பிரச்சனை எழ வாய்ப்பு இல்லை என்றும் தெரியவருகிறது. எனவே, மேற்படி சிலையினை அமைக்க குழுவில் ஒப்புதல் வழங்கலாம் என மாவட்ட அளவிலான குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 6, பகுதி – 17, வார்டு - 74ல் சந்திரயோகி சமாதி சாலையில் திறந்து வைக்கப்பட உள்ள திருமண மாளிகை வளாகத்தினுள் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச்சிலையினை நிறுவுவதற்கு மாவட்ட அளவிலான குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு உரிய முன்மொழிவுகள் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 6, பகுதி – 17, வார்டு- 74ல் சந்திரயோகி சமாதி சாலையில் திறந்து வைக்கப்பட உள்ள திருமண மாளிகை வளாகத்தினுள் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச்சிலையினை நிறுவுவதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு உரிய முன்மொழிவுகள் அனுப்பப்பட்டமைக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண். 37/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/0141/2026**

**ஆணையர் அவர்களின் 29.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 81/2026** **பொருள் எண்.81**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் – 6, வார்டு - 74 சந்திரயோகி சமாதி சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக திருமண மாளிகை கட்டிடம் கட்டப்பட்டு, தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட உள்ள மாளிகைக்கு மறைந்த டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பெயரினை சூட்ட அரசின் ஒப்புதல் பெற வேண்டி அனுப்பப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 6, பகுதி – 17, வார்டு-74 சந்திரயோகி சமாதி சாலையில் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக தரை தளத்தில் 100 எண்ணிக்கையிலான இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடமும் மற்றும் 20 எண்ணிக்கையிலான நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடமும் மற்றும் 2- எண்ணிக்கையிலான பொது கழிப்பறைகள், முதல் தளத்தில் 175 எண்ணிக்கையிலான இருக்கைகள் கொண்டு உணவு அருந்தும் இடம், இரண்டு மற்றும் மூன்றாம் தளத்தில் 300 எண்ணிக்கையிலான இருக்கைகள் கொண்டு திருமண மண்டபம் மற்றும் மணமகன், மணமகள் அறைகள் அமைத்து மற்றும் நான்காம் தளத்தில் உறவினர்கள் தங்கும் வசதிகள் கொண்ட 4 எண்ணிக்கையிலான அறைகள் மற்றும் கழிப்பறைகள் கொண்ட அறைகள் முறையில் திருமண மாளிகையினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக கட்டிடம் கட்டப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, தற்போது இத்திருமண மாளிகையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.01.2026 அன்று திறந்து வைக்கப்பட உள்ளது.

திரு.வி.க நகர் தொகுதிக்கு உட்பட்ட மாமன்ற உறுப்பினர்களின் 21.01.2026 நாளிட்ட கடிதத்தில், வார்டு – 64 முதல் 78 வரை உள்ள அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் பரிந்துரையினை ஏற்று நாட்டு மக்களுக்கும் அனைத்து தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்கும் இந்திய அரசியல் சட்டத்தினை படைத்தவருமான சட்ட வல்லுநர் பொருளாதார நிபுணர் மற்றும் சமூக சீர்திருத்தவாதியான டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சேவையை போற்றும் வகையிலும் அவரின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையிலும் இத்திருமண மண்டபத்திற்கு “டாக்டர் அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகை” என பெயர் சூட்டினால் அவரது புகழினை பறைசாற்றும் வகையில் அவர் ஆற்றிய தொண்டினை பெருமைப்படுத்தும் வகையில் அமையும் என தெரிவித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அரசு முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 6, பகுதி – 17, வார்டு - 74ல் சந்திரயோகி சமாதி சாலையில் திறந்து வைக்கப்பட உள்ள திருமண மாளிகைக்கு டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பெயரினை

சூட்டுவதற்கு இவ்வலுவலக *23.01.2026* நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

எனவே, மேற்படி இத்திருமண மண்டபத்திற்கு "டாக்டர் அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகை" என பெயர் சூட்ட மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு அரசின் ஒப்புதல் வேண்டி கடிதம் அனுப்பப்பட்டமைக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.39/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/0112-1/2026**

**ஆணையர் அவர்களின் 29.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 82/2026** **பொருள் எண்.82**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுநிதி பணி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் (ராஜ்யசபா) திரு.ஆர்.என்.ராஜேஷ்குமார், திரு.என்.ஆர். இளங்கோ அவர்களின் கூடுதல் நிதி - மண்டலம்-8, பகுதி-21, வார்டு 94, சிட்கோ நகர் 4வது பிரதான சாலையில் சமுதாயநலக் கூடம் மற்றும் கூடுதல் கட்டுமான பணிகள் இச்சமுதாயநலக்கூடத்திற்கு "இனமான பேராசிரியர் க.அன்பழகன்" அவர்களின் பெயர் சூட்டுவதற்கு தமிழ்நாடு அரசிற்கு குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி.**

வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டுத் நிதியின் (2022 - 23) கீழ், மண்டலம்-8, பகுதி-21. வார்டு - 94 - சிட்கோ நகர் 4வது பிரதான சாலையில் சமுதாயநலக் கூடம் (தரைதளம் மற்றும் முதல் தளம்) கட்டும் பணிக்கு ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் கோரி பணி முடியும் தருவாயில் உள்ளது. மேலும், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டுத் நிதியின் (2023 - 24) கீழ் இரண்டாம் தளம் கட்டும் பணிக்கு ரூ.172.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையில், நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் கோரி பணி முடியும் தருவாயில் உள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் (ராஜ்யசபா) திரு.ஆர்.என்.ராஜேஷ்குமார். அவர்களின் 03.07.2024 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட சமுதாயநலக் கூடத்தில் 2 கூடுதல் தளம் கட்டும் பணிக்காக ரூ.50.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்து அளித்ததன் அடிப்படையில், நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் கோரி மணமகன், மணமகள் மற்றும் உறவினர்கள் தங்கும் அறை கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் (ராஜ்யசபா) திரு.என்.ஆர்.இளங்கோ அவர்களின் 03.07.2025 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட சமுதாய நலக்கூடத்தின் Elevation Gladding work. Service Lift Table, Furnitures,Utensils and Chimney போன்ற பணிகளுக்கு ரூ.75.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்து கடிதம் அளித்ததன் பேரில், நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் கோரப்படவுள்ளது.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், மண்டலம்- 8, பகுதி-21,வார்டு 94, சிட்கோ நகர் 4வது பிரதான சாலையில் சமுதாயநலக் கூடம் (தரைதளம் மற்றும் முதல் தளம்) கட்டும் பணி முடிவுற்ற நிலையில். இரண்டாம் தளம் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில், சிட்கோ நகர் நல்வாழ்வு சங்கம், E-4/201, 38வது தெரு, சிட்கோ நகர், வில்லிவாக்கம், சென்னை-600 049 அவர்கள் திரு. அ.வெற்றிஅழகன், பி.இ. எம்.பி.ஏ. வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர். தமிழ்நாடு அவர்களுக்கு அளித்த 28.12.2025 நாளிட்ட கடிதத்தில்,

சிட்கோ நகரில் தங்களின் தொகுதியில் நவீன சமூக கூடம் அமைத்ததற்கு முதல் கண் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். நடுத்தர மக்கள் அதிகமாக வசிக்கும் எங்கள் பகுதியில் அமைந்துள்ள இந்த சமூக கூடம் மக்களின் வரவேற்பு பெற்றுள்ளது. மேலும் இதுகுறித்து பல்வேறு சமயங்களில் நாங்கள் கோரிக்கையாக வைத்து இது தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் நிறைவேறி இருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. எங்களது ஒரு கோரிக்கை இந்த சமூக கூடத்திற்கு தங்களின் தாத்தாவும், முன்னாள் அமைச்சரும், முன்னாள் உற்ற நண்பராகிய "திரு.இனமான பேராசிரியர் க.அன்பழகன்" அவர்களின் பெயரினை சூட்ட வேண்டுமென்று எங்களின் அன்பு கோரிக்கையாக வைக்கிறோம்" என தெரிவித்துள்ளார்கள்.

மேலும், சிட்கோ நகர் மூத்த குடிமக்கள் நலசங்கம், *Off:E7/568*, 3வது பிரதான சாலை, சிட்கோ நகர், வில்லிவாக்கம், சென்னை-*600 049* அவர்கள் திரு. அ.வெற்றிஅழகன், பி.இ. எம்.பி.ஏ. வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர். தமிழ்நாடு அவர்களுக்கு அளித்த *28.12.2025* நாளிட்ட கடிதத்தில்,

சிட்கோ நகரில் தங்களின் தொகுதியில் நவீன சமூக கூடம் அமைத்ததற்கு முதல் கண் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். நடுத்தர மக்கள் அதிகமாக வசிக்கும் எங்கள் பகுதியில்அமைந்துள்ள இந்த சமூக கூடம் மக்களின் வரவேற்பு பெற்றுள்ளது. மேலும் இதுகுறித்து பல்வேறு சமயங்களில் நாங்கள் கோரிக்கையாக வைத்து இது தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் நிறைவேறி இருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. எங்களது ஒரு கோரிக்கை இந்த சமூக கூடத்திற்கு தங்களின் தாத்தாவும், முன்னாள் அமைச்சரும், முன்னாள் உற்ற நண்பராகிய "திரு.இனமான பேராசிரியர் க.அன்பழகன்" அவர்களின் பெயரினை சூட்ட வேண்டுமென்று எங்களின் அன்பு கோரிக்கையாக வைக்கிறோம்" என தெரிவித்துள்ளார்கள்.

வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு. அ.வெற்றிஅழகன், பி.இ.எம்.பி.ஏ. வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர். தமிழ்நாடு அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அளித்துள்ள *01.01.2026* நாளிட்ட கடிதத்தில்,

"எனது சட்டமன்ற தொகுதி மண்டலம்-*8*, வார்டு *94*, சிட்கோ நகர் 4வது பிரதான சாலையில் எனது சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூட பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மேற்கூறிய சமுதாய நலக்கூடத்திற்கு இனமான பேராசிரியர் க.அன்பழகன் சமுதாயநலக்கூடம் என்று பெயரிடப்பட வேண்டும் என்று சிட்கோ நகர் நல்வாழ்வு சங்கம் மற்றும் சிட்கோ நகர் மூத்த குடிமக்கள் சங்கம் சார்பாக மனு அளித்துள்ளனர். அவர்களின் நியாயமான கோரிக்கையை பரிசீலித்து உரிய அனுமதியை தரக் கோருகிறேன்" என தெரிவித்துள்ளார்.

வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தில், சிட்கோநகர் நல்வாழ்வு சங்கம் மற்றும் மூத்த குடிமக்கள் நல சங்கம் ஆகிய சங்கங்கள் மற்றும் இப்பகுதி பொதுமக்களின் கோரிக்கைக்கு இணங்கி வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி

மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட நவீன சமுதாய நலக்கூடத்திற்கு "இனமான பேராசிரியர் திரு.க.அன்பழகன் சமுதாய நலக்கூடம்" என பெயரை சூட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெற்று தமிழ்நாடு அரசின் ஒப்புதல் வேண்டி அரசுக்கு குறிப்பு அனுப்ப நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண். 40/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**த.தொ.நு.மை.ந.க.எண்.சி1 / 3780 / 2025**

**ஆணையர் அவர்களின் 06.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 83/2026** **பொருள் எண்.83**

**பெருநகர சென்னை மாநகராட்சி - தகவல் தொழில்நுட்ப மையம் - பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் Canon Toners ஒரு வருட காலத்திற்கு கொள்முதல் செய்து வழங்கும் பணிக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு இடங்களுக்கு அதாவது, ரிப்பன் கட்டிடம், 3 வட்டார அலுவலகங்கள், 15 மண்டல அலுவலகங்கள், 45 பகுதி அலுவலகங்கள், 200 கோட்ட அலுவலகங்கள், துணை மின் நிலையங்கள், மருத்துவமனைகள், சுகாதாரநிலையங்கள், பள்ளிகள் மற்றும் பிற இடங்களில், கணினிகள் பிரிண்டர்கள், UPS போன்ற அனைத்து தொழில் நுட்பபொருட்களையும் மற்றும் நுகர்பொருட்களையும் (டோனர்உட்பட) தகவல் தொழில் நுட்பம் மையம் மூலம் கொள்முதல் செய்து வருகின்றது.

தற்பொழுது உள்ள Canon டோனரின் ஒப்பம் 21.01.2026 அன்று முடிவுப் பெறவுள்ளதால், அச்சுப்பொறிகளுக்குத் தேவையான டோனர் அளவை கணக்கிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் புதிய மாடல் அச்சுப்பொறிகளுக்குத் தேவையான டோனர் தேவையும் சேர்த்துக் கணிக்கப்பட்டு, மொத்த தேவையான டோனர் அளவு இறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, Canon டோனர்களை வழங்குவதற்கான டெண்டரை வெளியிட்டு மற்றும் அதை இறுதி செய்வதும் குறைந்தது ஒரு மாத காலம் எடுப்பதால், GCC பயனர்களுக்கு டோனர் வழங்கலில் எந்தத் தடையும் ஏற்படாமல் இருப்பதற்காக, அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களின் மூலம் திறந்த மின்ஒப்பம் (e-tender) முறையில் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கீழே, குறிப்பிடப்பட்ட Canon டோனர் மாடல்களை (1 ஆண்டு காலத்திற்கு அல்லது அளவு (Quantity) அல்லது மதிப்பு (cost) அதிகரிக்கும் வரை) வழங்குவதற்கான 2024 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட விலைகள் (For S.No:1 to 34) மற்றும் இணைய விலைகள் (Online Rates) (For S.No:35) அடிப்படை விகிதமாக கொண்டு தயாரிக்கப்பட்ட செலவு விவரம் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளன:

**Table - I**

| Sl. No | Toner Model | Part No. | Qty | Unit Rate (inclusive of GST) | Total Amount (inclusive of GST) |
|---|---|---|---|---|---|
| 1 | Canon 051H | CRG-051H | 550 | 10,500 | 57,75,000 |
| 2 | Canon GI 790 – Black | Canon GI 790 – Black | 8 | 595 | 4,760 |
| 3 | Canon GI 790 – Cyan | Canon GI 790 – Cyan | 8 | 595 | 4,760 |
| 4 | Canon GI 790 – Magenta | Canon GI 790 – Magenta | 8 | 595 | 4,760 |
| 5 | Canon GI 790 – Yellow | Canon GI 790 – Yellow | 8 | 595 | 4,760 |
| 6 | Canon 051 drum | BO7BFF7XJK | 183 | 9,405 | 17,24,250 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | Canon 337 | CRG 337 | 105 | 6,895 | 7,23,975 |
| 8 | Canon 326 | CRG 326 | 411 | 7,040 | 28,93,440 |
| 9 | Canon 328 | CRG 328 | 4 | 7,280 | 29,120 |
| 10 | Canon 331 Black | CRG 331 | 4 | 6,409 | 25,636 |
| 11 | Canon 331 Cyan | CRG 331 | 4 | 6,889 | 27,556 |
| 12 | Canon 331 Yellow | CRG 331 | 4 | 6,889 | 27,556 |
| 13 | Canon 331 Magenta | CRG 331 | 4 | 6,889 | 27,556 |
| 14 | Canon 308 | CRG 308 | 28 | 8,005 | 2,24,140 |
| 15 | Canon 303 TS | 303 TS | 28 | 6,399 | 1,79,172 |
| 16 | Canon 925 | CRG 925 | 20 | 6,200 | 1,24,000 |
| 17 | Canon 054 - Black | 054 - Black | 4 | 13,770 | 55,080 |
| 18 | Canon 054 - Yellow | 054 - Yellow | 4 | 13,045 | 52,180 |
| 19 | Canon 054 - Cyan | 054 - Cyan | 4 | 13,045 | 52,180 |
| 20 | Canon 054 - Magenta | 054 - Magenta | 4 | 13,045 | 52,180 |
| 21 | Canon 045 - Black | 045 - Black | 4 | 11,609 | 46,436 |
| 22 | Canon 045 - Yellow | 045 - Yellow | 4 | 10,999 | 43,996 |
| 23 | Canon 045 - Cyan | 045 - Cyan | 4 | 10,999 | 43,996 |
| 24 | Canon 045 - Magenta | 045 - Magenta | 4 | 10,999 | 43,996 |
| 25 | Canon GI 76 – Black | GI 76 – Black | 26 | 795 | 20,670 |
| 26 | Canon GI 76 – Cyan | GI 76 – Cyan | 26 | 2,095 | 54,470 |
| 27 | Canon GI 76 –Magenta | GI 76 – Magenta | 26 | 2,095 | 54,470 |
| 28 | Canon GI 76 – Yellow | GI 76 – Yellow | 26 | 2,095 | 54,470 |
| 29 | Canon 071 – Black | 071 – Black | 4 | 5,210 | 20,840 |
| 30 | Canon MC-G03 Maintenance cartridge | MC-G03 Maintenance cartridge | 12 | 995 | 11,940 |
| 31 | Canon BH-7 Black Head | BH-7 Black | 8 | 1,190 | 9,520 |
| 32 | Canon CH-7 Color Head | CH-7 Color | 8 | 1,240 | 9,920 |
| 33 | Canon GI 70 – Black | GI 70 – Pigment Black | 8 | 875 | 7,000 |
| 34 | Canon BH-70 Head | BH-70 Head | 4 | 1,460 | 5,840 |
| 35 | Canon LBP 172dw | 072H | 424 | 11,469 | 48,57,122 |
| **Total Amount (inclusive of GST) in Rs.** | | | | | **1,72,96,746.50** |

மேலும், டோனர் விநியோகத்திற்கான கட்டணம் அலுவலக பயனர்களின் உரிய சான்றிதழுடன், பயன்படுத்தப்பட்ட அளவின்படி பட்டி தீர்வு செய்யப்படும் எனவும், ஒரு வருட ஒப்பந்த காலத்திற்குள் அளவு பயன்படுத்தப்படாவிட்டாலும், ஒரு வருட முடிவில் ஒப்பந்தம் நிறுத்தப்படும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

| | |
|---|---|
| 1. | பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு இடங்களில் *Canon* பிரிண்டர்களுக்கான டோனர்களை ஒரு வருட காலத்திற்கு கொள்முதல் செய்வதற்கான தோராய மதிப்பு ரூ.1,72,96,747/- (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தியிரண்டு இலட்சத்தி தொண்ணூற்று ஆறாயிரத்தி எழுநூற்றி நாற்பத்தி ஏழு மட்டும்) (ஜி.எஸ்.டி உட்பட்ட) - க்கு நிர்வாக அனுமதி வழங்கவும், |
| 2. | மேற்கண்ட பணிகளுக்கு திறந்த மின்னணு ஒப்பங்கள் கோரவும், |
| 3. | இதற்கான செலவினங்களை தகவல் தொழில் நுட்ப மையத்தின் பிரிவு எண். 000205 கணக்கு தலைப்பு எண்.220-21-04-02 (Printing and Stationery – Computer Consumables – Department Purchase)யில்மேற்கொள்ளவும், |

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**த.தொ.நு.மை.ந.க.எண்.சி1/3845/2025**

**ஆணையர் அவர்களின் 29.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 84/2026** **பொருள் எண்.84**

**பெருநகரசென்னைமாநகராட்சி - தகவல் தொழில் நுட்ப மையம் - பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் HP/Samsung Toners ஒருவருட காலத்திற்கு கொள்முதல் செய்து வழங்கும் பணி - மின்னணு ஒப்பங்கள்கோர மன்றத்தின் அனுமதி.**

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு இடங்களுக்கு அதாவது, ரிப்பன் கட்டிடம், 3 வட்டார அலுவலகங்கள், 15 மண்டல அலுவலகங்கள், 45 பகுதி அலுவலகங்கள், 200 கோட்ட அலுவலகங்கள், துணை மின் நிலையங்கள், மருத்துவமனைகள், சுகாதாரநிலையங்கள், பள்ளிகள் மற்றும் பிற இடங்களில், கணினிகள் பிரிண்டர்கள், UPS போன்ற அனைத்து தொழில் நுட்பபொருட்களையும் மற்றும் நுகர்பொருட்களையும் (டோனர்உட்பட) தகவல் தொழில் நுட்பம் மையம் மூலம் கொள்முதல் செய்து வருகின்றது.

தற்பொழுது உள்ள HP/Samsung டோனரின் ஒப்பம் 27.02.2026 அன்று முடிவுப்பெறவுள்ளதால், அச்சுப்பொறிகளுக்குத் தேவையான டோனர் அளவை கணக்கிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் புதிய மாடல் அச்சுப்பொறிகளுக்குத் தேவையான டோனர் தேவையும் சேர்த்துக் கணிக்கப்பட்டு, மொத்த தேவையான டோனர் அளவு இறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, HP/Samsung டோனர்களை வழங்குவதற்கான டெண்டரை வெளியிட்டு மற்றும் அதை இறுதி செய்வதும் குறைந்தது ஒரு மாத காலம் எடுப்பதால், GCC பயனர்களுக்கு டோனர் வழங்கலில் எந்தத் தடையும் ஏற்படாமல் இருப்பதற்காக, அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களின் மூலம் திறந்த மின்ஒப்பம் (e-tender) முறையில் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள HP/Samsung டோனர் மாடல்களை (ஒரு ஆண்டு காலம் அல்லது நிர்ணயிக்கப்பட்ட அளவு (Quantity) அல்லது மதிப்பு (Cost) **எது முதலில் நிறைவு பெறுகிறதோ *(whichever is earliest)* அதுவரை)** வழங்குவதற்காக, 2024 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட விலைகள் (S.No: 1 முதல் 90 மற்றும் 105 முதல் 110 வரை) மற்றும் இணையவிலைகள் (Online Rates) (S.No: 91 முதல் 104 வரை) ஆகியவற்றை அடிப்படை விகிதமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட செலவு விவரங்கள் பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன:

| S. No | Toner Model | Part Code | Current Printer Qty | Toner Qty | Unit Rate (Inclusive of GST) | Total Amount (Inclusive of GST) |
|---|---|---|---|---|---|---|
| 1 | HP 137 X | W1370X | 1007 | 3021 | 6722 | 20307162 |
| 2 | 78A | CE278A | 113 | 565 | 8306 | 4692890 |
| 3 | 88A | CC388A | 110 | 550 | 5452 | 2998600 |
| 4 | 110Asss | W1112A | 13 | 78 | 4731 | 369018 |
| 5 | 152X | W1520X | 39 | 156 | 22080 | 3444480 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | GT53 BLACK | 1VV21AA | 10 | 30 | 649 | 19470 |
| 7 | GT52 CYAN | M0H54AA | 10 | 30 | 588 | 17640 |
| 8 | GT52 MAGENTA | M0H55AA | 10 | 30 | 588 | 17640 |
| 9 | GT52 YELLOW | M0H56AA | 10 | 30 | 588 | 17640 |
| 10 | GT51 GT52 HEAD | 3JB06AA | 10 | 4 | 2324 | 9296 |
| 11 | 12A | Q2612A | 7 | 35 | 7413 | 259455 |
| 12 | 126a BLACK | CE310AD | 2 | 6 | 5560 | 33360 |
| 13 | 126 CYAN | CE311A | 2 | 6 | 6132 | 36792 |
| 14 | 126 MAGENTA | CE313A | 2 | 6 | 6132 | 36792 |
| 15 | 126 YELLOW | CE312A | 2 | 6 | 6132 | 36792 |
| 16 | HP SMART 720 HEAD (BK) | X4E75AA | 2 | 2 | 1241 | 2482 |
| 17 | HP SMART 720 HEAD (TRI COLOR) | 3YP17AA | 2 | 2 | 2944 | 5888 |
| 18 | 507X BLACK | CE400X | 1 | 5 | 21479 | 107395 |
| 19 | 507X MAGENTA | CE403A | 1 | 5 | 23786 | 118930 |
| 20 | 507X CYAN | CE401A | 1 | 5 | 23786 | 118930 |
| 21 | 507X YELLOW | CE402A | 1 | 5 | 23786 | 118930 |
| 22 | 119A BLACK | W2090A | 1 | 5 | 4324 | 21620 |
| 23 | 119A MAGENTA | W2093A | 1 | 5 | 4773 | 23865 |
| 24 | 119A CYAN | W2091A | 1 | 5 | 4773 | 23865 |
| 25 | 119A YELLOW | W2092A | 1 | 5 | 4773 | 23865 |
| 26 | 416A BLACK | W2040A | 7 | 14 | 8212 | 114968 |
| 27 | 416A CYAN | W2041A | 7 | 14 | 10628 | 148792 |
| 28 | 416A MAGENTA | W2043A | 7 | 14 | 10628 | 148792 |
| 29 | 416A YELLOW | W2042A | 7 | 14 | 10628 | 148792 |
| 30 | 56A | CF256A | 1 | 5 | 2403 | 12015 |
| 31 | 206A BLACK | W2110A | 4 | 12 | 6375 | 76500 |
| 32 | 206A CYAN | W2111A | 4 | 12 | 7496 | 89952 |
| 33 | 206A MAGENTA | W2113A | 4 | 12 | 7496 | 89952 |
| 34 | 206A YELLOW | W2112A | 4 | 12 | 7496 | 89952 |
| 35 | 970XL BLACK | CN625AA | 1 | 4 | 10119 | 40476 |
| 36 | 971XL CYAN | CN626AA | 1 | 4 | 10688 | 42752 |
| 37 | 971XL MAGENTA | CN627AA | 1 | 4 | 10688 | 42752 |
| 38 | 971 XL YELLOW | CN628AA | 1 | 4 | 10688 | 42752 |
| 39 | 230A BLACK | W2300A | 4 | 12 | 8235 | 98820 |
| 40 | 230A CYAN | W2301A | 4 | 12 | 10033 | 120396 |
| 41 | 230A MAGENTA | W2303A | 4 | 12 | 10033 | 120396 |
| 42 | 230A YELLOW | W2302A | 4 | 12 | 10033 | 120396 |
| 43 | 965 BLACK | 3JA80AA | 1 | 4 | 2400 | 9600 |
| 44 | 965 CYAN | 3JA77AA | 1 | 4 | 1972 | 7888 |
| 45 | 965 MAGENTA | 3JA78AA | 1 | 4 | 1972 | 7888 |
| 46 | 965 YELLOW | 3JA79AA | 1 | 4 | 1972 | 7888 |
| 47 | HP 9010 ALL IN ONE(HEAD)962/963 | 3JB16A | 1 | 1 | 9358 | 9358 |
| 48 | HP smart tank 525 HEAD (TRI COLOUR) | MOH50AA | 1 | 1 | 1242 | 1242 |
| 49 | 204A BLACK | CF510A | 6 | 18 | 5350 | 96300 |
| 50 | 204A CYAN | CF511A | 6 | 18 | 5861 | 105498 |
| 51 | 204A MAGENTA | CF513A | 6 | 18 | 5861 | 105498 |
| 52 | 204A YELLOW | CF512A | 6 | 18 | 5861 | 105498 |
| 53 | HP MFP M72625 (TONER) | W1002YC | 1 | 5 | 4821 | 24105 |
| 54 | HP MFP M72625 (drum) | W9006MC | 1 | 1 | 6541 | 6541 |
| 55 | HP DESIGNJET T795 INK GRAY | 3WX08A | 10 | 20 | 7253 | 145060 |
| 56 | HP DESIGNJET T795 INK PHOTO BLACK | 3WX07A | 10 | 20 | 7253 | 145060 |
| 57 | HP DESIGNJET T795 INK MATTEE BLACK | 3WX06A | 10 | 30 | 7253 | 217590 |
| 58 | HP DESIGNJET T795 INK YELLOW | C9373A | 10 | 20 | 7253 | 145060 |
| 59 | HP DESIGNJET T795 INK CYAN | C9371A | 10 | 20 | 7253 | 145060 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 60 | HP DESIGNJET T795 INK MAGENTA | C9372A | 10 | 20 | 7253 | 145060 |
| 61 | HP DESIGNJET T795 HEAD (GRAY,PHOTO BLACK) | C9380A | 10 | 10 | 8039 | 80390 |
| 62 | HP DESIGNJET T795 HEAD (CYAN, MAGENTA) | C9383A | 10 | 10 | 8039 | 80390 |
| 63 | HP DESIGNJET T795 HEAD (MATTE BLACK, YELLOW) | C9384A | 10 | 10 | 8039 | 80390 |
| 64 | HP 713 head color | 3ED58A | 2 | 3 | 16549 | 49647 |
| 65 | HP 712-black | 3ED29A | 2 | 6 | 3438 | 20628 |
| 66 | HP 712-cyan | 3ED67A | 2 | 6 | 1872 | 11232 |
| 67 | HP 712-magenta | 3ED68A | 2 | 6 | 1872 | 11232 |
| 68 | HP 712-yellow | 3ED69A | 2 | 6 | 1872 | 11232 |
| 69 | HP 727 (CYAN) | B3P19A | 1 | 4 | 7730 | 30920 |
| 70 | HP 727 (MAGENTA) | B3P20A | 1 | 4 | 7730 | 30920 |
| 71 | HP 727 (YELLOW) | B3P21A | 1 | 4 | 7730 | 30920 |
| 72 | HP 727 (MATTE BLACK) | 3WX13A | 1 | 4 | 7730 | 30920 |
| 73 | HP 727 (Photo black) | 3WX14A | 1 | 4 | 7730 | 30920 |
| 74 | HP 727 (Gray) | 3WX15A | 1 | 4 | 7730 | 30920 |
| 75 | HP 727/733 HEAD | B3P06A | 2 | 4 | 31799 | 127196 |
| 76 | HP W9190MC (BLACK) | W9190MC | 1 | 3 | 7616 | 22848 |
| 77 | HP W9191MC(CYAN) | W9191MC | 1 | 3 | 22854 | 68562 |
| 78 | HP W9043MS(MAGENTA) | W9043MC | 1 | 3 | 22854 | 68562 |
| 79 | HP W9192MC(YELLOW) | W9192MC | 1 | 3 | 22854 | 68562 |
| 80 | HP 730 Cyan | P2V62A | 1 | 5 | 6620 | 33100 |
| 81 | HP 730 Yellow | P2V64A | 1 | 5 | 6620 | 33100 |
| 82 | HP 730 Magenta | P2V63A | 1 | 5 | 6620 | 33100 |
| 83 | HP 730 Photo Black | 3ED43A | 1 | 5 | 6620 | 33100 |
| 84 | HP 730 Matte Black | 3ED45A | 1 | 5 | 6620 | 33100 |
| 85 | HP 730 Gray | 3ED44A | 1 | 5 | 6620 | 33100 |
| 86 | HP 739 PRINT HEAD | 498NOA | 1 | 1 | 38385 | 38385 |
| 87 | HP 738 CYAN | 498N5A | 1 | 5 | 6755 | 33775 |
| 88 | HP 738 MAGENTA | 498N6A | 1 | 5 | 6755 | 33775 |
| 89 | HP 738 YELLOW | 498N7A | 1 | 5 | 6755 | 33775 |
| 90 | HP 738B BLACK | 498P2A | 1 | 5 | 6755 | 33775 |
| 91 | 77X | CF277X | 55 | 220 | 15220 | 3348400 |
| 92 | HP 201X BLACK | CF400X | 1 | 5 | 11822 | 59110 |
| 93 | HP 201X MAGENTA | CF403X | 1 | 5 | 13113 | 65565 |
| 94 | HP 201X YELLOW | CF402X | 1 | 5 | 13113 | 65565 |
| 95 | HP 201X CYAN | CF401X | 1 | 5 | 13113 | 65565 |
| 96 | HP 146X | W1460A | 75 | 225 | 13106 | 2948850 |
| 97 | HP 202A Black | CF500A | 1 | 5 | 8211 | 41055 |
| 98 | HP 202A Cyan | CF501A | 1 | 5 | 9682 | 48410 |
| 99 | HP 202A magneta | CF503A | 1 | 5 | 9682 | 48410 |
| 100 | HP 202A Yellow | CF502A | 1 | 5 | 9682 | 48410 |
| 101 | HP 17A | CF217A | 2 | 10 | 8009 | 80090 |
| 102 | HP 19A DRUM | CF219A | 2 | 3 | 8967 | 26901 |
| 103 | HP 30X | CF230X | 2 | 10 | 6700 | 67000 |
| 104 | HP 32A DRUM | CF232A | 2 | 3 | 10865 | 32595 |
| 105 | Samsung MLT-D116L | MLT-D116L | 49 | 196 | 6013 | 1178548 |
| 106 | Samsung MLT-R116 DRUM | MLT-R116 | 49 | 20 | 5292 | 105840 |
| 107 | Samsung MLT-D101S | MLT-D101S | 36 | 180 | 5596 | 1007280 |
| 108 | Samsung MLT-D203S | MLT-D203S | 3 | 12 | 7714 | 92568 |
| 109 | Samsung MLT-D707L | MLT-D707L | 1 | 5 | 2898 | 14490 |
| 110 | Samsung MLT D111S | MLT D111S | 1 | 7 | 4232 | 29624 |
| **Total Amount in Rs. (Inclusive of GST)** | | | | | | **4,64,74,198** |

மேலும், டோனர் விநியோகத்திற்கான கட்டணம் அலுவலக பயனர்களின் உரிய சான்றிதழுடன், பயன்படுத்தப்பட்ட அளவின்படி பட்டிதீர்வு செய்யப்படும் எனவும், ஒரு வருட ஒப்பந்தகாலத்திற்குள் அளவு பயன்படுத்தப்படாவிட்டாலும், ஒரு வருட முடிவில் ஒப்பந்தம் நிறுத்தப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு இடங்களில் *HP* மற்றும் *Samsung* பிரிண்டர்களுக்கான டோனர்களை ஒரு வருடகாலத்திற்கு கொள்முதல் செய்வதற்கான தோராய மதிப்பு **ரூ.*4,64,74,198/-*** (ரூபாய் நான்கு கோடியே அறுபத்தி நான்கு இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்தி நூற்றி தொண்ணூற்றி எட்டு மட்டும்) (ஜிஎஸ்டிஉட்பட)- க்கு நிர்வாக அனுமதி வழங்கவும்,
2. மேற்கண்ட பணிகளுக்கு திறந்த மின்னணு ஒப்பங்கள் கோரவும்,
3. இதற்கான செலவினங்களை தகவல் தொழில்நுட்ப மையத்தின் பிரிவுஎண் *000205* கணக்குதலைப்புஎண் *220-21-04-02 (Printing and Stationery – Computer Consumables – Department Purchase).*

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.41/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**த.தொ.நு.மை.ந.க.எண்.சி1 / 3778 / 2025**

**ஆணையர் அவர்களின் 29.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 85/2026** **பொருள் எண்.85**

**பெருநகர சென்னை மாநகராட்சி - தகவல் தொழில்நுட்ப மையம் - ஒரு வருடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து வன்பொருள், மென்பொருள் மற்றும் நுகர்பொருட்களுடன் வசதி மேலாண்மை சேவை மற்றும் ஆண்டு பரமாரிப்பு பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள ரிப்பன் கட்டிடம், மூன்று வட்டார அலுவலகங்கள், *15* மண்டல அலுவலகங்கள், *45* பகுதி அலுவலகங்கள், *200* கோட்ட அலுவலகங்கள், துணை நிலையங்கள், மருத்துவமனைகள், சுகாதார நிலையங்கள், பள்ளிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இடங்களில் வன்பொருள் மற்றும் மென்பொருள் பராமரிப்பு சேவைகள் மற்றும் ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் *(FMS/AMC)* ரிப்பன் கட்டிடம் வளாகத்தில் உள்ள தகவல் தொழில் நுட்ப பிரிவு மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், வசதி மேலாண்மை சேவை மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தம் *2026* –ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் *26* அன்று முடிவடைவதை முன்னிட்டு, இந்த சேவை மாநகராட்சியில் மிகவும் முக்கியமானது என்பதை கருத்தில் கொண்டு, வசதி மேலாண்மை சேவை மற்றும் ஆண்டு பராமரிப்பு பணி வழங்குவதற்காக திறந்த *e-tender* அழைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்குறிப்பிடப்பட்ட வன்பொருள், மென்பொருள் மற்றும் நுகர் பொருட்களின் வசதி மேலாண்மை சேவை மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கான தோராய செலவீனங்கள் *2024* ஆம் ஆண்டின் நிலைக்குழு (பணிகள்) *(S.No: 1 to 30 & 34 to 55)* மற்றும் ஆணையர் அவர்களின் ஆணை *(S.No: 31 to 33)* ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட விலைகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளன.

| Sl.No | Description | Qty in No's (A) | Unit rate in Rs. (Inclusive of GST) | Total Amount inRs. (Inclusive of GST) |
|---|---|---|---|---|
| 1 | Server | 21 | 6,156 | 1,29,276 |
| 2 | Work Station | 14 | 3,124 | 43,736 |
| 3 | Laptop - Windows | 192 | 1,836 | 3,52,512 |
| 4 | Desktopi3/i5/i7/Pentium gold | 695 | 2,324 | 16,15,180 |
| 5 | Printers -Laser Jet | 874 | 1,728 | 15,10,272 |
| 6 | Printers -Color Laser Jet | 26 | 4,240 | 1,10,240 |
| 7 | Printers - Multi Function Laser Jet | 45 | 1,029 | 46,305 |
| 8 | Printers - Dot-matrix | 1 | 535 | 535 |
| 9 | Line Printers | 1 | 4,860 | 4,860 |
| 10 | Plotters | 14 | 12,960 | 1,81,440 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | Inkjet Printers | 19 | 4,860 | 92,340 |
| 12 | Scanners -Basic Model | 6 | 540 | 3,240 |
| 13 | Router | 20 | 4,212 | 84,240 |
| 14 | Unmanageable switch 24/16/8 | 74 | 864 | 63,936 |
| 15 | 500VA / 600 VA UPS | 233 | 324 | 75,492 |
| 16 | Dot matrix printer head - Repair / Recondition | 2 | 1,512 | 3,024 |
| 17 | Dot matrix printer head Replacement | 2 | 5,076 | 10,152 |
| 18 | All in One PC - Windows | 23 | 5,790 | 1,33,170 |
| 19 | Media Converter | 10 | 269 | 2,690 |
| 20 | Projector | 7 | 3,406 | 23,842 |
| 21 | Wireless Access point | 24 | 2,320 | 55,680 |
| 22 | Laptop - Mac | 1 | 1,500 | 1,500 |
| 23 | L3 switch | 0 | 11,769 | 0 |
| 24 | L2 switches | 20 | 9,699 | 1,93,980 |
| 25 | 1 KVA UPS | 40 | 1,800 | 72,000 |
| 26 | 2 KVA / 3 KVA UPS | 4 | 2,500 | 10,000 |
| 27 | Project Leader | 1 | 7,14,278 | 7,14,278 |
| 28 | Database administrator | 1 | 9,06,814 | 9,06,814 |
| 29 | Server Management | 1 | 9,06,814 | 9,06,814 |
| 30 | Web Administrator | 2 | 9,06,814 | 18,13,628 |
| 31 | Network Engineer | 6 | 5,31,880 | 31,91,280 |
| 32 | FMS Engineer | 49 | 5,31,880 | 2,60,62,120 |
| 33 | 24 X 7 Support for One Year | 3 | 5,31,880 | 15,95,640 |
| 34 | Help Desk Management | 2 | 3,54,644 | 7,09,288 |
| 35 | Application Developer | 2 | 9,06,814 | 18,13,628 |
| 36 | App Developer | 2 | 9,06,814 | 18,13,628 |
| 37 | Delivery vehicle | 1 | 4,40,738 | 4,40,738 |
| 38 | Laying and fixing network cables including cable and PVC Pipe, duct, clamps etc, (Rate is Quoted for 1M) CAT 6 Cable | 5000 | 44 | 2,20,000 |
| 39 | Laying and fixing network cables including cable and PVC Pipe, duct, clamps etc, (Rate is Quoted for 1M) OFC Cable | 3000 | 75 | 2,25,000 |
| 40 | 1 TB External Hard Disk | 20 | 4,800 | 96,000 |
| 41 | 2 TB External Hard Disk | 20 | 7,200 | 1,44,000 |
| 42 | 4 TB External Hard Disk | 25 | 11,040 | 2,76,000 |
| 43 | Wireless Router | 50 | 1,380 | 69,000 |
| 44 | Wireless keyboard mouse kit | 50 | 1,380 | 69,000 |
| 45 | 16GB Metal Pendrive | 200 | 437 | 87,400 |
| 46 | 32GB Metal Pendrive | 200 | 750 | 1,50,000 |
| 47 | 26AH Batteries | 80 | 2,880 | 2,30,400 |
| 48 | 7AH Batteries | 120 | 896 | 1,07,520 |
| 49 | 1 TB SSD External Hard Disk | 5 | 7,998 | 39,990 |
| 50 | 64GB Metal Pendrive | 50 | 569 | 28,450 |
| 51 | 12AH | 25 | 2,300 | 57,500 |
| 52 | laptop batteries | 25 | 3,299 | 82,475 |
| 53 | I/O with face plate & back box | 200 | 97 | 19,400 |

| | | | | |
|---|---|---|---|---|
| 54 | 512 GB SSD Internal Hard Disk | 100 | 5,487 | 5,48,700 |
| 55 | 18AH | 25 | 2,627 | 65,675 |
| **Total Amount (Inclusive of GST )in Rs.** | | | | **4,73,04,008** |

எனவே,

1. ஒரு வருடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து கணினிகள், வன்பொருள், மென்பொருள் மற்றும் நுகர்பொருட்களுடன் வசதி மேலாண்மை சேவை மற்றும் ஆண்டு பரமாரிப்பு பணிக்கான தோராய மதிப்பு ரூ.4,73,04,008/- (ரூபாய் நான்கு கோடியே எழுபத்தி மூன்று இலட்சத்து நான்காயிரத்தி எட்டு மட்டும்) க்கு நிர்வாக அனுமதி வழங்கவும்,
2. மேற்கண்ட பணிகளுக்கு திறந்த மின்னணு ஒப்பங்கள் கோரவும்,
3. இதற்கான செலவினங்களை தகவல் தொழில்நுட்ப மையத்தின் பிரிவு எண் 000205 கணக்கு தலைப்பு எண் 220-53-01-02 (e - Gov Design and Consultancy Charges – Vendors),

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண். 42/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**மஅ.3.வதுநகஎண்.ஆர்1/8266/2025**

**ஆணையர் அவர்களின் 29.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 86/2026** **பொருள் எண்.86**

**வாகனம் நிறுத்துமிடம் - பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - மண்டல அலுவலகம் – 3, வார்டு-25, பெருநகர வளர்ச்சி குழுமத்தால் சரக்கு வாகன நிறுத்துமிடம் உருவாக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட நிலம் - சரக்கு மற்றும் கனரகவாகனங்கள் நிறுத்துவதற்கு கட்டணம் நிர்ணயித்து ஒப்பந்தம் முறையில் குத்தகைக்கு விடுவதற்கு மன்றத்தின் அனுமதி.**

*1999* ஆம் ஆண்டு பெருநகர வளர்ச்சி குழுமம், மாதவரம் கிராமம், புல எண்.*767* உட்பிரிவு மற்றும் அதை ஒட்டியுள்ள புல எண்களை கொண்டு சுமார் *83* ஏக்கர் நிலப்பரப்பில் மாதவரம் பேருந்து நிலையம் மற்றும் சரக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கான திட்டத்தினை உருவாக்கி மேம்படுத்தியது.

இதன் தொடர்ச்சியாக, சாலை, திறந்தவெளி நிலம் மற்றும் இதர கட்டுமானங்களுக்கு *30,946* சதுர மீட்டர் நிலத்தினை முந்தைய உள்ளாட்சி அமைப்பான மாதவரம் நகராட்சிக்கு தானப்பத்திர எண்.*1265/1999*, நாள்.*01.03.1999*-ன் மூலம் வழங்கியது. *2011* ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்டதில், மாதவரம் நகராட்சி பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது.

பின்பு, *2015* ஆம் ஆண்டு சுமார் *4.52* ஏக்கர் நிலத்தினை சரக்கு, கனரக வாகனம் மற்றும் *2.26* ஏக்கர் நிலத்தினை இலகு ரக வாகனம் நிறுத்துவதற்கென ஒதுக்கப்பட்ட நிலத்தினை பெருநகர வளர்ச்சி குழுமம் சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்தது. வாகனம் நிறுத்துவதற்கென ஒதுக்கப்பட்ட நிலத்தில், சுமார் நாள் ஒன்றுக்கு *100* வாகனங்கள் வந்து சென்றதை கருத்தில் கொண்டு வாகன நிறுத்து கட்டணம் வசூலிக்க முடிவெடுக்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற தீர்மான எண்.*182/2016*, நாள்.*26.02.2016*-ல் வாகனத்தின் வகைப்பாட்டினை கொண்டு நாள் ஒன்றுக்கு ரூ.*50/-* அல்லது ரூ.*100/-* என்ற வீதத்தில் வாகன நிறுத்து கட்டணமாக வசூலிக்க தீர்மானம் நிறைவேற்றி வசூல் பணி மேற்கொள்ளப்பட்டது.

*Madhavaram Truck Terminal Complex, Welfare Association* என்ற அமைப்பு வாகன நிறுத்து கட்டணம் வசூலிக்க நீதிமன்றத்தில் நீதி பேராணைகள் எண்.*27085* மற்றும் *27086/2016* (பல்வகை மனு எண்.*23260/2016*)-ல் வழக்கு தொடர்ந்து *04.08.2016* தேதியிட்டு இடைக்கால தடை ஆணை பெற்றதால், வாகன நிறுத்து கட்டணம் வசூலிக்கும் பணி நிறுத்தப்பட்டு, வழக்கு நிலுவை நிலை ஏற்பட்டது.

மேற்படி நீதிபேராணைகளில் *26.10.2021*ல், மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், வாகன நிறுத்து கட்டணம் வசூலிக்க *12.07.2016* தேதியிட்டு வெளியிடப்பட்ட ஒப்பந்த அறிவிக்கை காலாவதியாகிவிட்ட காரணத்தினால், இதற்கு தனியே காரணம் தேவையில்லை என்றும் *(As far as the Tender notice issued on 12.07.2016 is concerned, the cause did not exist as of now on account of efflux of time)*, அடிப்படை

வசதிகளான மேம்படுத்திய சாலைகள், மழைநீர் வடிகால் கால்வாய்கள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளுடன் அடிப்படை கட்டுமானங்களை ஏற்படுத்தி தர வேண்டும் என்று தீர்ப்பு வழங்கி வழக்குகளை முடிவுக்கு கொண்டுவந்தது.

மாண்பமை நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள அடிப்படை கட்டுமானங்கள் முடிவு பெறும் தருவாயிலுள்ளது.

மாதவரம் பேருந்து நிலையம் மற்றும் சரக்கு வாகனம் முனைப்பிலிருந்து அருகாமையில் பெருநகர வளர்ச்சி குழுமத்தால் மஞ்சம்பாக்கம் கிராமத்தில் சரக்கு வாகனம் நிறுத்துவதற்கான முனையம் கடந்த சில ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்முனைப்பில் சரக்கு வாகனங்களுக்கு நாள் ஒன்றுக்கு வாகன நிறுத்து கட்டணமாக ரூ.150/- என்றும், கனரக வாகன நிறுத்து கட்டணமாக ரூ.100/- என்றும் வசூலிக்கப்பட்டு வருவதை களப்பணியின்போது ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சி வசமுள்ள மாதவரம் சரக்கு வாகன முனைப்பில் சுமார் 93 சரக்கு / கனரக வாகனங்களும், 47 இலகு ரக வாகனங்களும் நிறுத்துவதற்கான கட்டுமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மஞ்சம்பாக்கத்தில் பெருநகர வளர்ச்சி குழுமத்தால் வசூலிக்கப்படும் கட்டண விகிதத்தை அடிப்படை கட்டணமாக கொண்டு *(floor price)* வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை தொகுத்து ஒப்பந்த முறையில் அல்லது ஏலத்தில் இப்பணியினை அதிகபடியான ஒப்பந்ததாரர் அல்லது ஏலம் எடுப்பவருக்கு மூன்றாண்டு காலத்திற்கு வழங்கலாம் என கருதப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (சட்டம் 35/2022 மூலம் திருத்தப்பட்ட சட்டம்), பிரிவு 75-A, 77, 78 தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள்,2023, விதி 245, 294, 316-ன் கீழ் பெருநகர வளர்ச்சி குழுமத்தால் ஒப்படைப்பு செய்யப்பட்ட மாதவரம் கிராமம், புல எண்.767 உட்பிரிவு மற்றும் அதை ஒட்டியுள்ள புல எண்களிலுள்ள 4.52 ஏக்கர் நிலப்பரப்பில் சரக்கு மற்றும் கனரக வாகனங்களுக்கு 24 மணிநேரத்திற்கு நிறுத்து கட்டணமாக ரூ.150/- என்றும், 2.26 ஏக்கர் நிலப்பரப்பில் இலகு ரக வாகனங்களுக்கு நிறுத்து கட்டணமாக ரூ.100/- என்றும் அடிப்படை கட்டணமாக நிர்ணயித்து நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளை கொண்டு ஒப்பந்த / ஏலத்தின் முறையில் அதிகபட்ச விலை கோருபவருக்கு ஒதுக்கீடு செய்து கட்டணம் வசூலிக்க, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி, வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண். 44/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ம.அ.7.வ.து.ந.க.எண்.ஆர்.1/1817/2025**

**ஆணையர் அவர்களின் 29.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 87/2026** **பொருள் எண்.87**

**வட்டி விலக்களித்தல் - சொத்துவரி - பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய்துறை - மண்டலம்-7 - தமிழ்நாடு தொழில் முன்னேற்ற கழக சொத்துவரி மதிப்பீடு - உரிய காலத்தில் செலுத்தாமை தனி வட்டி விதிக்கப்பட்டது - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி மட்டுமே தனி வட்டி தவிர்த்து செலுத்தப்பட்டுள்ளது - விதி 268 (4)(a) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ன் படி விலக்களிக்க கோரப்பட்டது - மன்றத்தின் அனுமதி.**

கிளை மேலாளர், தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் அவர்களின் *29.04.2025 & 30.10.2025* நாளிட்ட கடிதத்தில், அம்பத்தூர் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழக கட்டிடமானது *86/C,D 2*வது பிரதான சாலை அம்பத்தூர் தொழிற்பேட்டை, மன்னூர்பேட்டை, சென்னை – *58* என்ற முகவரியில் இயங்கி வருவதாகவும், அக்கட்டிடம் சொத்துவரி மதிப்பீட்டு எண்.*07-086-01817-000* ன் படி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இம்மதிப்பீடானது *2024-25* இரண்டாம் அரையாண்டு வரை சொத்துவரி செலுத்தப்பட்ட நிலையில், முதலாம் அரையாண்டு *2023-24* முதல் மறுமதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக குறிப்பிட்டு, இம்மதிப்பீட்டிற்கு உருவாகியுள்ள தனி வட்டியை நீக்கம் செய்யக் கேட்டுக் கொண்டு உள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் முக்கிய வருவாய் இனமாக சொத்துவரி உள்ளது. எனவே, சென்னை மாநகராட்சிக்குப்பட்ட கட்டிடங்களில் சொத்துவரி குறைத்து மதிப்பிடப்பட்ட மதிப்பீடுகளின் தரவுகள், பல்வேறு வழிகளில் அதாவது சென்னை குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்பகிர்மான வாரியம், புவிசார் தகவல் தொகுப்பு ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டு, மறுமதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு சொத்துவரி விதிக்கப்பட்டு வருகிறது.

அதன்படி புவிசார் தகவல் தொகுப்பு தரவுகளின்படி, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் இயங்கி வரும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழக கட்டிடத்தின் சொத்துவரி குறைவாக உள்ளது என கண்டறியப்பட்டதின் அடிப்படையில், மறு அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு, சொத்துவரியானது ரூ.*1,56,205/-* லிருந்து ரூ.*2,11,960/-* என முதலாம் அரையாண்டு *2023-24* முதல் அரையாண்டு *24-25* மற்றும் ரூ.*1,65,580/-* லிருந்து ரூ.*2,24,680/-* என *II/2024-25* முதல் மாற்றியமைக்கப்பட்டது.

தமிழ்நாடு தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், இரண்டாம் அரையாண்டு *2025-26* க்கான சொத்துவரியினை *31.10.2025* அன்று செலுத்தியுள்ளது. ஆனால் *2023-24* முதலாம் அரையாண்டு முதல் *2024-25* இரண்டாம் அரையாண்டு வரை மறுமதிப்பீட்டின்படி ஏற்பட்ட வித்தியாச தொகை நிலுவைக்காக ரூ.*2,195/-* தனி வட்டியாக *01.04.2025* அன்று விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் அரையாண்டு 2024-25 வரை, சொத்துவரியாக ரூ.1,56,205/- செலுத்தி வந்த நிலையில் 24.03.2025 அன்று திருத்திய மதிப்பீடு ஆணை உருவாக்கப்பட்டு, சொத்துவரி மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உயர்த்தப்பட்ட சொத்துவரி வித்தியாச தொகையானது முதலாம் அரையாண்டு 2025-26 க்கான சொத்துவரியுடன் சேர்த்து ரூ.4,41,045/- என தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழக காசோலை எண்.427443 வாயிலாக 29.04.2025 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023, விதி 268(4( (a) ல் *" in the case of assessments of Central Government and State Government buildings or their public sector undertakings, the municipality shall not reduce or waive the interest, levied except with the previous approval of the Council,"* *குறிப்பிடப்பட்டுள்ளது.*

அதன்படி, மத்திய மாநில அரசு மற்றும் அவை சார்ந்த பொதுதுறை நிறுவனங்களின் வட்டி தொகையினை மாமன்றத்தின் அனுமதியில்லாமல் தளர்வு செய்ய கூடாது.

எனவே, தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், தமிழ்நாடு அரசின் பொதுதுறை நிறுவனம் என்பதாலும், சொத்துவரியினை நாளது தேதி வரை முழுமையாக செலுத்தி உள்ளதாலும், விதி 268 (4) (a) ன் படி சொத்துவரியினை காலம் தாழ்த்தி நிலுவை வைத்திருந்ததற்காக விதிக்கப்பட்ட தனி வட்டி ரூ.2,195/-னை தளர்வு செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண். 43/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**தி.க.மே.ந.க.எண்.அ7 / 9249 / 2025**

**ஆணையர் அவர்களின் 04.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 88 / 2026** **பொருள் எண்.88**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத் துறை – பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான கேட்டரிங் ஏஜென்சியின் பணியினை கண்காணிக்க திட்ட மேலாண்மை ஆலோசகரை (Project Management Consultant) (PMC) ஒரு ஆண்டு காலத்திற்கு நியமிக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் 14.08.2025 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பிறகு மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட ஆறு முக்கிய நலத்திட்ட அறிவிப்புகளில் ஒன்றான தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் ஆகும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான கேட்டரிங் ஏஜென்சியின் பணியினை கண்காணிக்க திட்ட மேலாண்மை ஆலோசகரை *(Project Management Consultant) (PMC)* நியமிக்க பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள அரசாணை (4ப) எண்.51, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.14.10.2025ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டத்திற்கு முன்னணி உணவளிப்பு நிறுவனத்தை *(Catering Agency)* தேர்வு செய்வதற்கு ஒப்பங்கள் கோரப்பட்டு திருவாளர்கள் *Food Swing Enterprises & Sindoor Impex Private Limited* அவர்களுக்கு 31.10.2025 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

இதன்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான கேட்டரிங் ஏஜென்சியின் பணியினை கண்காணிக்க திட்ட மேலாண்மை ஆலோசகரை *(Project Management Consultant) (PMC)* ஒரு வருட காலத்திற்கு நியமிக்கும் பணிக்கு ரூ.1,24,00,000/- (ஒரு கோடியே இருபத்தி நான்கு இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் திருவாளர்கள் *Braj Vidhya Services* நிறுவனத்தின் ஒப்பங்கள் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதிபெறவில்லை.

மேலும், திருவாளர்கள் *Quest Certification Private Limited*, திருவாளர்கள் *BSCIC Certification Private Limited* மற்றும் திருவாளர்கள் *Ravi Energie Private Limited* ஆகிய மூன்று நிறுவனங்களின் ஒப்பங்கள் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதிபெற்று நிதி ஆவணத்திறப்பிற்கு *(Financial Bid)* அனுமதிக்கப்பட்டது.

மேலும், ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ள திருவாளர்கள் *Quest Certification Private Limited*, திருவாளர்கள் *BSCIC Certification Private Limited* மற்றும்

திருவாளர்கள் *Ravi Energie Private Limited* இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் *(Financial Bid) 16.10.2025* அன்று திறக்கப்பட்டதில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திருவாளர்கள் *Quest Certification Private Limited* அவர்களின் ஒப்பத்தினை ஏற்க கோப்பு பரிசீலினையில் இருந்தது.

தற்போது, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு திட்டத்திற்காக கூடுதலாக 3 இடங்களிலிருந்து 15 இடங்களாக சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டதால் இதற்கான *Field Surveyors* கூடுதலாக தேவைப்படுவதினாலும் திருத்திய மதிப்பீடு தயார் செய்து புதிய ஒப்பம் கோரப்பட வேண்டியிருப்பதால் ஏற்கனவே கோரப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான கேட்டரிங் ஏஜென்சியின் பணியினை கண்காணிக்க திட்ட மேலாண்மை ஆலோசகரை *(Project Management Consultant) (PMC)* நியமிக்க ஒரு வருட காலத்திற்கு நியமிக்க திருவாளர்கள் *ITCOT* நிறுவனத்திடமிருந்து *29.12.2025* நாளிட்ட திருத்திய மதிப்பீடு பெறப்பட்டது. இதன் விவரங்கள் கீழ்வருமாறு;

மதிப்பீட்டு செலவு:

| வரிசை எண் | பணியாளர் வகை | எண்ணிக்கை | மாத சம்பள தொகை | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 1. | Project Manager | 1 | 62,500 | 62,500 |
| 2. | Food Microbiologist (Team Lead) | 1 | 75,000 | 75,000 |
| 3. | Field Surveyors | 15 | 50,000 | 7,50,000 |
| | மொத்த சம்பளம் | | | 8,87,500 |
| சம்பள தொகையிலிருந்து 20% நிர்வாக செலவினம் | | | | 1,77,500 |
| ஒரு மாத சம்பளம் | | | | 10,65,000 |
| *GST 18%* | | | | 1,91,700 |
| ஒரு மாத சம்பளம் (வரிகள் உட்பட) | | | | 12,56,700 |
| ஒரு வருடத்திற்கான சம்பளம் (வரிகள் உட்பட) | | | | 1,50,80,400 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான கேட்டரிங் ஏஜென்சியின் பணியினை கண்காணிக்க திட்ட மேலாண்மை ஆலோசகரை (Project Management Consultant) (PMC) ஒரு வருட காலத்திற்கு நியமிக்க ரூ.1,50,80,400/- (ஒரு கோடியே ஐம்பது இலட்சத்து எண்பதாயிரத்து நானூறு மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட பணிக்கு குறுகிய கால திறந்தவெளி ஒப்பம் கோருவதற்கு அனுமதியும்,

3. இப்பணிக்கான செலவின தொகையினை திடக்கழிவு மேலாண்மை துறை நிதி கணக்கு எண்.220-52-05-00 (Professional and other fees consultancy charges)ல் வழங்குவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**திக.மே. துந.க.எண்.அ7 / 0437 / 2025**

**ஆணையர் அவர்களின் 25.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 89 / 2026** **பொருள் எண்.89**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத்துறை - மண்டலம் -1, 2, 3 மற்றும் 7 (Package -1) ல் - உள்ள மயான பூமி உள்கட்டமைப்பை - Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD நிறுவனம் மூலமாக பராமரிப்பதற்காக கூடுதலாக பணியாளர்கள், குப்பை தொட்டி மற்றும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.**

ஆணையரின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மயான பூமி உள்ளகட்டமைப்பைப் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் -1, 2, 3 மற்றும் 7 *(Package -1)* ஆகிய பகுதிகளில் உள்ள 87 மயான பூமிகளை தினசரி தூய்மைப்படுத்த வேண்டியுள்ளது.

இப்பணிகளை மண்டலம் மண்டலம் -1, 2, 3 மற்றும் 7 *(Package -1)*ல் *Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD* நிறுவனம் மூலம் பராமரிக்க கூடுதலாக தூய்மை பணியாளர்களை பணியமர்த்தவும், குப்பை தொட்டிகள் வைப்பதற்கும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

| Details of the Burial Ground in Zone – 1 , 2, 3 and 7 | | |
|---|---|---|
| Zone | Burial Ground count | Area in Sq ft |
| 1 | 6 | 87851 |
| 2 | 37 | 172786 |
| 3 | 18 | 882750 |
| 7 | 26 | 1014917 |
| Total | 87 | 21,58,304 |

மேற்கூறிய மயான பூமிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வட்டார வாரியாக 12 மாத காலத்திற்கு மூன்று ஒப்பங்கள் கோரப்பட்டு மண்டலம் -1, 2 (ம) 3ற்கு கடந்த 01.07.2025 அன்றும், மண்டலம்-7ற்கு 31.07.2025 அன்றும் முறையே பணி ஆணை வழங்கப்பட்டது. இவ்ஒப்ப பணிகள் ஜூலை 2026ல் முடிவு பெறும். இப்பணி தொடங்கப்பட்ட மண்டலங்களான 1, 2, 3 மற்றும் 7 தொடர்ந்து ஒப்பந்ததாரர்கள் மூலம் மயான பூமிகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணிகள் சரிவர நடைபெறவில்லை என வார்டு குழுவிலும், மாமன்றத்திலும் தொடர்ந்து மாமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக, மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மதிப்பிற்குரிய ஆணையர், மதிப்பிற்குரிய இணை ஆணையர் (சுகாதாரம்), மதிப்பிற்குரிய தலைவர் நிலைக்குழு (பொது சுகாதாரம்) அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில், மேற்கூறிய மயான பூமிகளில் அந்தந்த மண்டலங்களில் தற்போது திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்தினர் மூலம் பணிகள் மேற்கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டதின் அடிப்படையில் மண்டலம்-1, 2, 3 மற்றும் 7 *(Package–I)*ல் திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் திருவாளர். சென்னை என்விரோ நிறுவனத்திற்கு இப்பணியை

மேற்கொள்ள ஒப்புதலும் மற்றும் ஆகும் செலவினை தெரிவிக்குமாறு அந்நிறுவனத்திற்கு 14.10.2025 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

அதற்கு திருவாளர். *Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD.,* நிறுவனம் இப்பணியை மேற்கொள்ள நிறுவனத்திற்கு தேவையான கூடுதல் பணியாளர்கள், வாகனங்கள், குப்பைத்தொட்டிகள் மற்றும் ரோடமக் பின்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்.

| PACKAGE I - BURIAL GROUND REGULAR CLEANING MANPOWER AND EQUIPMENT REQUIREMENT SUMMARY | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Zone | 1 | 2 | 3 | 7 | Total |
| BG details | BG count | 6 | 37 | 18 | 26 | 87 |
| | Area in Sq ft | 87851 | 172786 | 882750 | 1014917 | 21,58,304 |
| Equipment Details | 120 Ltrs bins | 14 | 57 | 46 | 111 | 228 |
| | 2T LMV | 1 | 1 | 1 | 2 | 5 |
| | Compactors 14 Cum | 0 | 0 | 0 | 1 | 1 |
| | Grass Cutter | 2 | 2 | 2 | 12 | 18 |
| | 1100 Ltrs bins | 14 | 74 | 36 | 76 | 200 |
| Man Power Details | Superviors | 1 | 1 | 1 | 2 | 5 |
| | Manual Sweepers | 14 | 57 | 46 | 111 | 228 |
| | HMV Drivers | 0 | 0 | 0 | 1 | 1 |
| | LMV Drivers | 1 | 2 | 1 | 2 | 6 |
| | Helpers | 1 | 2 | 1 | 5 | 9 |

மண்டலம்-1, 2, 3 மற்றும் 7 *(Package-I)*ல் ஆகிய மண்டலங்களில் தனியார் நிறுவனமான திருவாளர். *Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD.,* நிறுவனம் பணி மேற்கொண்டு வருவதாலும் புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற பகுதியில் மயான பூமி அமைவதால் இப்பணியை இந்நிறுவனத்திற்கு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், மண்டலம்-1 முதல் 3 வரையுள்ள மயான பூமிகளில் தூய்மை பணிகள் 30.06.2026 வரையிலும், மண்டலம்-7ல் மயான பூமி தூய்மை பணிகள் 31.07.2026 வரை ஒப்பந்ததாரர்கள் மூலம் பணியை மேற்கொள்ளவும், அதன் பிறகு தொடர்ந்து திருவாளர். *Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD.,* நிறுவனம் மேற்கொள்ள கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள மயான பூமி பகுதியில், கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் தன்மைகள்:

i. மயான பூமியில் தினசரி உருவாகும் திடக்கழிவுகள் மற்றும் அனைத்து வகையான குப்பை கழிவுகள் தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.
ii. மயான பூமியில் உள்ள உள்கட்டமைப்பு சாலைகளில் துப்புரவு பணி மற்றும் பெருக்கும் பணி தினந்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
iii. இறுதிச்சடங்குகளில் உருவாகும் பாடை, மாலை, பானை மற்றும் அனைத்து வகையான கழிவுகளை தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.

iv. மயான பூமியில் உள்ள இறுதிச்சடங்கு நடக்கும் இடத்தை தினந்தோறும் சுத்தம் செய்ய வேண்டும்.

v. மயான பூமிகளில் படரும் தேவையில்லா செடி, கொடிகளை அகற்றி சுத்தம் செய்ய வேண்டும்.

vi. சேகரிக்கும் அனைத்து குப்பைகளையும் ரோடமக் பின்கள், வாகனங்கள் மற்றும் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த தொட்டிகள் *(RC Bins)* அமைத்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இத்தூய்மை பணிகளை கண்காணிக்கும் தனிப்பொறியாளர்கள் *(IE)* நிறுவனமான திருவாளர். *Infra En* ற்கு இப்பணியினை சேர்த்து தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய *KPI*ல் இணைத்து இப்பணிகளை மதிப்பீடு செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய, நான்கு மண்டலங்களில் இருக்கும் மயான பூமிகளை பராமரிக்க ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ. 1,22,17,000 /- என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்-1, 2, 3 மற்றும் 7 *(Pkg -I)* திருவாளர்கள்.*Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD.,* நிறுவனம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வருவதாலும், புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற மண்டலம் 1 முதல் 3 வரை உள்ள மயான பூமிகளில் ஜூலை 01, 2026 முதலும் மற்றும் மண்டலம்-7ல் உள்ள மயான பூமிகளில் அகஸ்ட் 01, 2026 முதல் இந்நிறுவனமே தூய்மை பணிகளை மேற்கொள்ளவும்.

2. மண்டலம் 1, 2, 3 மற்றும் 7 *(Pkg -I)* மாயன பூமிகளில் மேற்கொள்ளப்படும் தூய்மை பணிகளுக்கு ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ. 1,22,17,000 /- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தியிரண்டு இலட்சத்து பதினேழாயிரம் மட்டும்)

3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை *Budget Head Code. 230-150-100 Privatization Conservancy* தலைப்பின் கீழ் நிதியில் பணியை மேற்கொள்ளவும்,

4. இப்பணிகளை தற்பொழுது மேற்பார்வையிடும் தனிப்பொறியாளர்களான *(IE) Infra En* மூலம் தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய *KPI*ல் மதிப்பீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.019/2026 ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

”ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.45/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**தி.க.மே.து.ந.க.எண்.அ7/0557/2026**

**ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 90/2026** **பொருள் எண்.90**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத்துறை - மண்டலம் - 11, 12, 14 மற்றும் 15 (Package - 2) ல் உள்ள மயான பூமி உள்கட்டமைப்பை - Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) II PVT.LTD நிறுவனம் மூலமாக பராமரிப்பதற்காக கூடுதலாக பணியாளர்கள், குப்பை தொட்டி மற்றும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.**

ஆணையரின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மயான பூமி உள்ளகட்டமைப்பைப் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 11, 12, 14 மற்றும் 15 *(Package - 2)* ஆகிய பகுதிகளில் உள்ள 68 மயான பூமிகளை தினசரி தூய்மைப்படுத்த வேண்டியுள்ளது.

இப்பணிகளை மண்டலம் மண்டலம் - 11, 12, 14 மற்றும் 15 *(Package - 2)*ல் *Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) II PVT.LTD* நிறுவனம் மூலம் பராமரிக்க கூடுதலாக தூய்மை பணியாளர்களை பணியமர்த்தவும், குப்பை தொட்டிகள் வைப்பதற்கும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

| Details of the Burial Ground in Zone – 11, 12, 14 and 15 | | |
|---|---|---|
| Zone | Burial Ground count | Area in Sq ft |
| 11 | 12 | 78722 |
| 12 | 13 | 306365 |
| 14 | 16 | 266823 |
| 15 | 27 | 236040 |
| Total | 68 | 8,87,950 |

மேற்கூறிய மயான பூமிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வட்டார வாரியாக 12 மாத காலத்திற்கு மூன்று ஒப்பங்கள் கோரப்பட்டு மண்டலம் - *11, 12, 14* மற்றும் 15ற்கு கடந்த 01.07.2025 அன்றும் முறையே பணி ஆணை வழங்கப்பட்டது. இவ்ஒப்ப பணிகள் ஜூன் 2026 ல் முடிவு பெறும். இப்பணி தொடங்கப்பட்ட மண்டலங்களான 11, 12, 14 மற்றும் 15 தொடர்ந்து ஒப்பந்ததாரர்கள் மூலம் மயான பூமிகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணிகள் சரிவர நடைபெறவில்லை என வார்டு குழுவிலும், மாமன்றத்திலும் தொடர்ந்து மாமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக, மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மதிப்பிற்குரிய ஆணையர், மதிப்பிற்குரிய இணை ஆணையர் (சுகாதாரம்), மதிப்பிற்குரிய சுகாதாரக்குழு தலைவர் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில், மேற்கூறிய மயான பூமிகளில் அந்தந்த மண்டலங்களில் தற்போது திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்தினர் மூலம் பணிகள் மேற்கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டதின் அடிப்படையில் மண்டலம் - 11, 12, 14 மற்றும் 15 *(Package* - 2) ல் திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் திருவாளர். சுமித் அர்பன் சர்வீஸ் சென்னை *(II)* நிறுவனத்திற்கு

இப்பணியை மேற்கொள்ள ஒப்புதலும் மற்றும் ஆகும் செலவினை தெரிவிக்குமாறு அந்நிறுவனத்திற்கு 14.10.2025 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

அதற்கு திருவாளர் *Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) II PVT.LTD.,* நிறுவனம் இப்பணியை மேற்கொள்ள நிறுவனத்திற்கு தேவையான கூடுதல் பணியாளர்கள், வாகனங்கள், குப்பைத்தொட்டிகள் மற்றும் ரோடமக் பின்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்.

| PACKAGE II - BURIAL GROUND REGULAR CLEANING MANPOWER AND EQUIPMENT REQUIREMENT SUMMARY | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Zone | 11 | 12 | 14 | 15 | Total |
| BG details | BG count | 12 | 13 | 16 | 27 | 68 |
| | Area in Sq ft | 78722 | 306365 | 266823 | 236040 | 887950 |
| Equipment Details | BOV | 4 | 4 | 3 | 9 | 20 |
| | 120 Ltrs bins | 32 | 36 | 52 | 54 | 174 |
| | 2T LMV | 2 | 1 | 1 | 2 | 6 |
| | Grass Cutter | 13 | 19 | 16 | 27 | 75 |
| | Spade Tool | 14 | 46 | 36 | 27 | 123 |
| | Scissor | 14 | 46 | 45 | 54 | 159 |
| | Rack | 36 | 46 | 45 | 54 | 181 |
| | Shovel | 36 | 46 | 45 | 54 | 181 |
| | Brush | 36 | 46 | 45 | 54 | 181 |
| | Wood Cutter | 3 | 3 | 0 | 8 | 14 |
| | Broom | 36 | 46 | 45 | 54 | 181 |
| | 1100 Ltrs bins | 0 | 26 | 34 | 68 | 128 |
| Man Power Details | Supervisors | 1 | 1 | 1 | 1 | 4 |
| | BOV Driver | 5 | 5 | 4 | 11 | 25 |
| | Manual Sweepers | 39 | 46 | 51 | 41 | 177 |
| | LMV Drivers | 3 | 1 | 1 | 3 | 8 |
| | Helpers | 5 | 2 | 2 | 6 | 15 |

மண்டலம் - 11, 12, 14 மற்றும் 15 (*Package* - 2) ல் ஆகிய மண்டலங்களில் தனியார் நிறுவனமான திருவாளர் *Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) II PVT.LTD.,* நிறுவனம் பணி மேற்கொண்டு வருவதாலும் புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற பகுதியில் மயான பூமி அமைவதால் இப்பணியை இந்நிறுவனத்திற்கு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் மண்டலம் – 11, 12, 14 மற்றும் 15 வரையுள்ள மயான பூமிகளில் தூய்மை பணிகள் 30.06.2026 வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரர்கள் மூலம் பணியை மேற்கொள்ளவும், அதன் பிறகு தொடர்ந்து திருவாளர். *Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) II PVT.LTD.,* நிறுவனம் மேற்கொள்ள கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள மயான பூமி பகுதியில், கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் தன்மைகள்:

i. மயான பூமியில் தினசரி உருவாகும் திடக்கழிவுகள் மற்றும் அனைத்து வகையான குப்பை கழிவுகள் தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.

ii. மயான பூமியில் உள்ள உள்கட்டமைப்பு சாலைகளில் துப்புரவு பணி மற்றும் பெருக்கும் பணி தினந்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

iii. இறுதிச்சடங்குகளில் உருவாகும் பாடை, மாலை, பானை மற்றும் அனைத்து வகையான கழிவுகளை தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.

iv. மயான பூமியில் உள்ள இறுதிச்சடங்கு நடக்கும் இடத்தை தினந்தோறும் சுத்தம் செய்ய வேண்டும்.

v. மயான பூமிகளில் படரும் தேவையில்லா செடி, கொடிகளை அகற்றி சுத்தம் செய்ய வேண்டும்.

vi. சேகரிக்கும் அனைத்து குப்பைகளையும் ரோடமக் பின்கள், வாகனங்கள் மற்றும் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த தொட்டிகள் *(RC Bins)* அமைத்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இத்தூய்மை பணிகளை கண்காணிக்கும் தனிப்பொறியாளர்கள் *(IE)* நிறுவனமான திருவாளர் *Infra En* ற்கு இப்பணியினை சேர்த்து தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய *KPI*ல் இணைத்து இப்பணிகளை மதிப்பீடு செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய, நான்கு மண்டலங்களில் இருக்கும் மயான பூமிகளை பராமரிக்க ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ. 1,14,00,000 /- என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம் 11, 12, 14 மற்றும் 15 *(Package - 2)* திருவாளர்கள் *.SUMEET URBAN SERVICES (CHENNAI) II PVT.LTD.,* நிறுவனம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வருவதாலும், புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற மண்டலம் 11, 12, 14 மற்றும் 15 வரை உள்ள மயான பூமிகளில் ஜூலை 01, 2026 முதல் இந்நிறுவனமே தூய்மை பணிகளை மேற்கொள்ளவும்.

2. மண்டலம்- *11, 12, 14* மற்றும் *15 (Package-2)* மயான பூமிகளில் மேற்கொள்ளப்படும் தூய்மை பணிகளுக்கு ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ.*1,14,00,000/-* (ரூபாய் ஒரு கோடியே பதிநான்கு இலட்சம் மட்டும்) அனுமதியும்,

3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை *Budget Head Code 230-15-01-00 Privatization Conservancy* தலைப்பின் கீழ் நிதியில் பணியை மேற்கொள்ளவும்,

4. இப்பணிகளை தற்பொழுது மேற்பார்வையிடும் தனிப்பொறியாளர்களான *(IE) Infra En* மூலம் தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய *KPI*ல் மதிப்பீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.022/2026 ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

”ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.46/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**திக.மே.து.ந.க.எண்.அ7/0558/2026**

**ஆணையர் அவர்களின் 28.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 91/2026** **பொருள் எண்.91**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத்துறை - மண்டலம் - 9, 10 மற்றும் 13 (Package - 5) ல் - உள்ள மயான பூமி உள்கட்டமைப்பை - Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) V PVT.LTD நிறுவனம் மூலமாக பராமரிப்பதற்காக கூடுதலாக பணியாளர்கள், குப்பை தொட்டி மற்றும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.**

ஆணையரின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மயான பூமி உள்ளகட்டமைப்பைப் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 9, 10 மற்றும் 13 *(Package - 5)* ஆகிய பகுதிகளில் உள்ள 21 மயான பூமிகளை தினசரி தூய்மைப்படுத்த வேண்டியுள்ளது.

இப்பணிகளை மண்டலம் மண்டலம் - 9, 10 மற்றும் 13 *(Package* - 5)ல் *Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) V PVT.LTD* நிறுவனம் மூலம் பராமரிக்க கூடுதலாக தூய்மை பணியாளர்களை பணியமர்த்தவும், குப்பை தொட்டிகள் வைப்பதற்கும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

| Details of the Burial Ground in Zone – 9, 10 and 13 | | |
|---|---|---|
| Zone | Burial Ground count | Area in Sq ft |
| 9 | 4 | 1241181.25 |
| 10 | 7 | 116643 |
| 13 | 10 | 484169 |
| Total | 21 | 18,41,993.25 |

மேற்கூறிய மயான பூமிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வட்டார வாரியாக 12 மாத காலத்திற்கு மூன்று ஒப்பங்கள் கோரப்பட்டு மண்டலம் – 9 மற்றும் 10ற்கு கடந்த 31.07.2025 அன்றும் மற்றும் மண்டலம்-13ற்கு கடந்த 01.07.2025 அன்றும் முறையே பணி ஆணை வழுங்கப்பட்டது. இவ்ஒப்ப பணிகள் மண்டலம்-9 , 10 ற்கு ஜூலை 2026 மற்றும் மண்டலம்-13ற்கு ஜூன் 2026ல் முடிவு பெறும். இப்பணி தொடங்கப்பட்ட மண்டலங்களான 9, 10 மற்றும் 13 தொடர்ந்து ஒப்பந்ததாரர்கள் மூலம் மயான பூமிகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணிகள் சரிவர நடைபெறவில்லை என வார்டு குழுவிலும், மாமன்றத்திலும் தொடர்ந்து மாமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக, மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மதிப்பிற்குரிய ஆணையர், மதிப்பிற்குரிய இணை ஆணையர் (சுகாதாரம்), மதிப்பிற்குரிய தலைவர், நிலைக்குழு (பொது சுகாதாரம்) அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில், மேற்கூறிய மயான பூமிகளில் அந்தந்த மண்டலங்களில் தற்போது திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்தினர் மூலம் பணிகள் மேற்கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டதின் அடிப்படையில் மண்டலம்-9, 10 மற்றும் 13 *(Package*-5)ல் திடக்கழிவு

பணிகளை மேற்கொள்ளும் திருவாளர். சுமித் அர்பன் சர்வீஸ் சென்னை *(V)* நிறுவனத்திற்கு இப்பணியை மேற்கொள்ள ஒப்புதலும் மற்றும் ஆகும் செலவினை தெரிவிக்குமாறு அந்நிறுவனத்திற்கு 14.10.2025 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

அதற்கு திருவாளர். *Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) V PVT.LTD.,* நிறுவனம் இப்பணியை மேற்கொள்ள நிறுவனத்திற்கு தேவையான கூடுதல் பணியாளர்கள், வாகனங்கள், குப்பைத்தொட்டிகள் மற்றும் ரோடமக் பின்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்.

| PACKAGE V - BURIAL GROUND REGULAR CLEANING MANPOWER AND EQUIPMENT REQUIREMENT SUMMARY | | | | | |
|---|---|---|---|---|---|
| | Zone | 9 | 10 | 13 | Total |
| BG details | BG count | 4 | 7 | 10 | 21 |
| | Area in Sq ft | 1241181.25 | 116643 | 484169 | 1841993.25 |
| Equipment Details | BOV | 4 | 4 | 0 | 8 |
| | 120 Ltrs bins | 31 | 48 | 41 | 120 |
| | 2T LMV | 2 | 2 | 2 | 6 |
| | Grass Cutter | 4 | 8 | 4 | 19 |
| | Spade Tool | 13 | 18 | 22 | 53 |
| | Scissor | 18 | 8 | 23 | 49 |
| | Rack | 31 | 52 | 52 | 135 |
| | Shovel | 31 | 52 | 52 | 135 |
| | Brush | 31 | 52 | 52 | 135 |
| | Wood Cutter | 4 | 8 | 4 | 17 |
| | Broom | 31 | 52 | 52 | 135 |
| | 1100 Ltrs bins | 35 | 12 | 28 | 75 |
| Man Power Details | Supervisors | 1 | 1 | 1 | 3 |
| | BOV Driver | 5 | 5 | 0 | 10 |
| | Manual Sweepers | 48 | 38 | 58 | 145 |
| | LMV Drivers | 2 | 2 | 3 | 7 |
| | Helpers | 4 | 4 | 7 | 15 |

மண்டலம்-9, 10 மற்றும் 13 *(Package-5)*ல் ஆகிய மண்டலங்களில் தனியார் நிறுவனமான திருவாளர் *Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) V PVT.LTD.,* நிறுவனம் பணி மேற்கொண்டு வருவதாலும் புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற பகுதியில் மயான பூமி அமைவதால் இப்பணியை இந்நிறுவனத்திற்கு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் மண்டலம்–9 மற்றும் 10ல் உள்ள மயான பூமிகள் 31.07.2026 வரையிலும் மற்றும் மண்டலம்-13ல் உள்ள மயான பூமிகள் 30.06.206 வரையிலும் தூய்மை பணிகளை ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரர்கள் மூலம் பணியை மேற்கொள்ளவும், அதன் பிறகு தொடர்ந்து திருவாளர். *Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) V PVT.LTD.,* நிறுவனம் மேற்கொள்ள கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள மயான பூமி பகுதியில், கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் தன்மைகள்:

i. மயான பூமியில் தினசரி உருவாகும் திடக்கழிவுகள் மற்றும் அனைத்து வகையான குப்பை கழிவுகள் தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.

ii. மயான பூமியில் உள்ள உள்கட்டமைப்பு சாலைகளில் துப்புரவு பணி மற்றும் பெருக்கும் பணி தினந்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

iii. இறுதிச்சடங்குகளில் உருவாகும் பாடை, மாலை, பானை மற்றும் அனைத்து வகையான கழிவுகளை தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.

iv. மயான பூமியில் உள்ள இறுதிச்சடங்கு நடக்கும் இடத்தை தினந்தோறும் சுத்தம் செய்ய வேண்டும்.

v. மயான பூமிகளில் படரும் தேவையில்லா செடி, கொடிகளை அகற்றி சுத்தம் செய்ய வேண்டும்.

vi. சேகரிக்கும் அனைத்து குப்பைகளையும் ரோடமக் பின்கள், வாகனங்கள் மற்றும் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த தொட்டிகள் *(RC Bins)* அமைத்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இத்தூய்மை பணிகளை கண்காணிக்கும் தனிப்பொறியாளர்கள் *(IE)* நிறுவனமான திருவாளர் *Infra En* ற்கு இப்பணியினை சேர்த்து தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய *KPI*ல் இணைத்து இப்பணிகளை மதிப்பீடு செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய, நான்கு மண்டலங்களில் இருக்கும் மயான பூமிகளை பராமரிக்க ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ.95,83,333/- என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம் 9, 10 மற்றும் 13 திருவாளர்கள். *Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) V PVT.LTD.,* நிறுவனம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வருவதாலும், புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற மண்டலம் – 9 மற்றும் 10ல் உள்ள மயான பூமிகள் 01.08.2026 முதலும் மற்றும் மண்டலம் 13 ல் உள்ள மயான பூமிகள் 01.07.2026 முதல் இந்நிறுவனமே தூய்மை பணிகளை மேற்கொள்ளவும்,
2. மண்டலம் *9, 10* மற்றும் *13 (Package - 5)* மயான பூமிகளில் மேற்கொள்ளப்படும் தூய்மை பணிகளுக்கு ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ.*95,83,333/-* (ரூபாய் தொண்ணூற்று ஐந்து இலட்சத்து எண்பத்து மூன்று ஆயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று மட்டும்*)* அனுமதியும்,
3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை *Budget Head Code. 230-150-100 Privatization Conservancy* தலைப்பின் கீழ் நிதியில் பணியை மேற்கொள்ளவும்
4. இப்பணிகளை தற்பொழுது மேற்பார்வையிடும் தனிப்பொறியாளர்களான *(IE) Infra En* மூலம் தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய *KPI*ல் மதிப்பீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.023/2026 ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

”ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.47/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**தி.க.மே.ந.க.எண்.A7 / 9253 / 2025**

**ஆணையர் அவர்களின் 14.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 92 / 2026** **பொருள் எண்.92**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மண்டலம்15 - பெரும்பாக்கம் கட்டம் - I, III, & IV மற்றும் கலங்கரை விளக்க திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு திட்டத்தில் - பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் தூய்மை பணி மேற்கொள்வது - ஒப்பந்ததாரர் மூலம் பணியாளர்களை பணி அமர்த்தி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி.**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 18.02.2025 அன்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, இனி வரும் காலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் *(TNUHDB)* பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ள குடியுருப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளின்

1. உட்புற சாலைகள்
2. தெரு விளக்குகள்
3. திடக்கழிவு மேலாண்மை பணிகள்
4. பூங்கா மற்றும் விளையாட்டு திடல் பணிகள்
5. திறந்தவெளி முன்பதிவு நிலம்
6. ரேஷன் கடை பராமரிப்பு பணிகள்
7. மரம் நடுதல்

ஆகிய பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி இனி வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்ற தீர்மான எண்.22/2025, நாள்.26.02.2025-ன்படி, மேற்கூறிய பெரும்பாக்கம் கட்டம்-*I, III & IV* தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை *17396* ஆகும். அதனுடைய மொத்த பரப்பளவு *228189* சதுர மீட்டர் ஆகும்.

| TAMIL NADU URBAN HABITAT DEVELOPMENT BOARD TENEMENT SCHEMES OF CHENNAI, Outer GCC of Zone 15. | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| S.No | Corpn Dn No. | Location of TN Urban Habitate Board Tenaments | No. of tenements | Area in Sqm | No of Man Power Required | No of Bins | | Remarks |
| | | | | | | Rotomac Bin | 1100Lt Bin | |
| 1 | Outer GCC | Perumbakkam Phase - I | 10452 | 102663.00 | 86 | 86 | 42 | |
| 2 | Outer GCC | Ezhil Nagar Perumbakkam | 3936 | 56031.00 | 47 | 47 | 16 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | Outer GCC | Light House Scheme | 1152 | 34283.00 | 29 | 29 | 5 | |
| 4 | Outer GCC | Perumbakkam Phase - IV | 256 | 4602.00 | 4 | 4 | 1 | |
| 5 | Outer GCC | Perumbakkam Phase - III | 1600 | 30610.00 | 26 | 26 | 6 | |
| Total | | | 17396 | 228189 | 192 | 192 | 70 | |
| | To add 20% additional Back up for Sweepers | | | 231 | | | | |

மேற்கூறிய குடியிருப்புகளில் உள்ள உட்புற சாலைகள், பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்கள், திறந்தவெளி நிலங்கள் மற்றும் இரண்டு குடியிருப்பு இடையில் உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறிய இடத்தில் ஒன்பது மாத காலத்திற்கு போதிய அளவு ஆட்களை ஒப்பந்ததாரர் மூலம் நியமித்து, போதிய குப்பைத் தொட்டிகளை வைத்து அப்பகுதியை தூய்மையாக வைத்துக் கொள்ள, பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதனுடைய ஒப்பந்தம் வரும் பிப்ரவரி 2026 இல் முடிவடைய உள்ளதால் புதிய ஒப்பம் கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மண்டல அலுவலர்களிடம் இருந்து இதற்கான அட்டவணை பெறப்பட்டு. அந்த அட்டவணையின்படி ஒப்பம் கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஆகும் தோராய செலவினங்கள்:

| TAMIL NADU URBAN HABITAT DEVELOPMENT BOARD AND BURIAL GROUND DETAILS | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| South REGION (Outsourcing for 12 months) | | | | | | | | | | |
| Sweepers (Including Backup 20%) | | | Rotamac Bin | | 1100 Lt Compactor Bin | | | | | |
| Zone | Qty in Nos | Amount (Rs.688.37 incl GST 18% & 3.25% ESI) Rs. | Qty in Nos | Amount (Rs.2400 Bin Rs. | Qty in Nos (50%) | Amount (Rs.21760 per bin including All taxes) | Welfare items Expenditure for Sweepers Rs. | Total Amount Expenditure Rs. | Consumables , Supervision & Admin charges (20% of the Total Amount)Rs. | GRAND TOTAL Rs. |
| Perumbakkam Phase – I,III,IVand Light House Schema | 231 | 58039916.55 | 192 | 460800.00 | 35 | 7,61,600 | 1575224.00 | 6,08,37,540.20 | 1,21,67,508.04 | 7,30,05,048.24 |

பெரும்பாக்கம் கட்டம் - *I, III, IV* மற்றும் கலங்கரை விளக்க திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் திடக்கழிவு மேலாண்மை சம்மந்தப்பட்ட பணிகளை ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ள தோரயமாக ரூ. *7,30,05,048/-* செலவு ஆகும் (ரூபாய். ஏழு கோடியே முப்பது இலட்சத்து ஐந்தாயிரத்து நாற்பத்து எட்டு மட்டும்). இப்பணியின் அவசரம் அவசியம் கருதி, ஒப்பம் கோருவதற்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி மற்றும் மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி இப்பணிக்கு ஒப்பந்தம் கோருவதற்கும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது. இதன்படி, இப்பணிக்கு மின்னணு ஒப்பங்கள் கோரப்பட்டது.

எனவே,

1. பெரும்பாக்கம் கட்டம் - I, II, IV மற்றும் கலங்கரை விளக்க திட்டம் பகுதியில் இருக்கும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள 17396 எண்ணிக்கையிலான குடியிருப்புகளில் உட்புற சாலைகள், பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், திறந்தவெளி நிலம் மற்றும் இரண்டு குடியிருப்பு இடையில் உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஓராண்டு காலத்திற்கான மதிப்பிற்கு ரூ. 7,30,05,048/- (ரூபாய். ஏழு கோடியே முப்பது இலட்சத்து ஐந்தாயிரத்து நாற்பத்து எட்டு மட்டும்) மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கூறிய திடக்கழிவு பணிகளின் அவசர அவசியம் கருதி குறுகியகால திறந்தவெளி மின்னணு ஒப்பம் கோரியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினத்தை குறியீடு எண் BUDGET HEAD CODE. 230-150-100 Privatization Conservancy தலைப்பின் கீழ் வட்டார அலுவலகம் தெற்கிற்கு நிதி ஒதுக்கி அந்நிதியிலிருந்து பணியை மேற்கொள்ளவும்,
4. பணி ஆணை வழங்கப்பட்ட பின் இப்பணிகளை மேற்பார்வைபொறியாளர் வட்டார அலுவலகம் (தெற்கு), மூலம் கண்காணிக்கவும் மற்றும் மண்டலம்15 இல் இருந்து செயல்திறன் சான்றிதழ்கள் பெற்று வட்டார மேற்பார்வை பொறியாளர் (தெற்கு) மூலம் பட்டியை தீர்க்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.014/2026ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.26/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**தி.க.மே.ந.க.எண்.A7/9252/2025**

**ஆணையர் அவர்களின் 14.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 93/2026** **பொருள் எண்.93**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மண்டலம் 15 - பெரும்பாக்கம் கட்டம் - II தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு திட்டத்தில் - பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் தூய்மை பணி மேற்கொள்ள - ஒப்பந்ததாரர் மூலம் பணியாளர்களை பணி அமர்த்தி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி.**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 18.02.2025 அன்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுத்த முடிவின் படி, இனி வரும் காலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் (TNUHDB) பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ள குடியுருப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளின்

1. உட்புற சாலைகள்
2. தெரு விளக்குகள்
3. திடக்கழிவு மேலாண்மை பணிகள்
4. பூங்கா மற்றும் விளையாட்டு திடல் பணிகள்
5. திறந்தவெளி முன்பதிவு நிலம்
6. ரேஷன் கடை பராமரிப்பு பணிகள்
7. மரம் நடுதல்

ஆகிய பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி இனி வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.22/2025, நாள்.26.02.2025-ன்படி, மேற்கூறிய பெரும்பாக்கம் கட்டம் - II தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 5028 ஆகும். அதனுடைய மொத்த பரப்பளவு 273650 சதுர மீட்டர் ஆகும்.

| TAMIL NADU URBAN HABITAT DEVELOPMENT BOARD TENEMENT SCHEMES OF CHENNAI, Outer GCC of Zone 15. | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| S. No | Dn No. | Location of TN Urban Habitate Board Tenaments | No. of tenements | Area in Sqm | No of Man Power Required | No of Bins | |
| | | | | | | Rotomac Bin | 1100Lt Bin |
| 1 | Outer GCC | Perumbakkam Phase - II | 5028 | 273649.99 | 228 | 228 | 20 |
| Total | | | 5028 | 273650 | 228 | 228 | 20 |
| | To add 20% additional for Back up | | 274 | | | | |

மேற்கூறிய குடியிருப்புகளில் உள்ள உட்புற சாலைகள், பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்கள், திறந்த வெளி நிலங்கள் மற்றும் இரண்டு குடியிருப்பு இடையில் உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறிய இடத்தில் ஒன்பது மாத காலத்திற்கு போதிய அளவு ஆட்களை ஒப்பந்ததாரர் மூலம் நியமித்து, போதிய குப்பைத் தொட்டிகளை வைத்து அப்பகுதியை தூய்மையாக வைத்துக் கொள்ள, பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதனுடைய ஒப்பந்தம் வரும் பிப்ரவரி *2026* இல் முடிவடைய உள்ளதால் புதிய ஒப்பம் கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மண்டல அலுவலர்களிடம் இருந்து இதற்கான அட்டவணை பெறப்பட்டு அந்த அட்டவணையின்படி ஒப்பம் கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஆகும் தோராய செலவினங்கள்:

| TAMIL NADU URBAN HABITAT DEVELOPMENT BOARD PERUMBAKKAM, Phase -II | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| South Region (Outsourcing for 12 months) | | | | | | | | | | |
| | Sweepers (Including Backup 20%) | | Rotamac Bin | | 1100 Lt Compactor Bin | | | | | |
| Zone | Qty in Nos | Amount Rs.688.37 incl GST 18% & 3.25% ESI)Rs. | Qty in Nos | Amount (Rs.2400Bin Rs. | Qty in Nos (50%) | Amount (Rs.21760 per bin including All taxes) | Welfare items Expenditure for Sweepers Rs. | Total Amount Expenditure Rs. | Consumables, Supervision & Admin charges (20% of the Total Amount) Rs. | GRAND TOTAL Rs. |
| Perumbakkam Phase-II | 274 | 68843883.7 | 228 | 547200.00 | 20 | 4,35,200 | 1868447.00 | 7,16,94,730.80 | 1,43,38,946.16 | 8,60,33,676.96 |

பெரும்பாக்கம் கட்டம்-*II* தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் திடக்கழிவு மேலாண்மை சம்மந்தப்பட்ட பணிகளை ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ள தோரயமாக ரூ. *8,60,33,677/-* செலவு ஆகும் (ரூபாய். எட்டு கோடியே அறுபது இலட்சத்து முப்பத்தி மூன்றாயிரத்து அறுநூற்று எழுபத்து ஏழு மட்டும்). இப்பணியின் அவசரம் அவசியம் கருதி, ஒப்பம் கோருவதற்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி மற்றும் மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி இப்பணிக்கு ஒப்பந்தம் கோருவதற்கு ஆணையர் அவர்களின், *04.01.2026* நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டது இதன்படி, இப்பணிக்கு மின்னணு ஒப்பங்கள் கோரப்பட்டது.

எனவே,

1. பெரும்பாக்கம் கட்டம் - II பகுதியில் இருக்கும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள 5028 எண்ணிக்கையிலான குடியிருப்புகளில் உட்புற சாலைகள், பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், திறந்தவெளி நிலம் மற்றும் இரண்டு குடியிருப்பு இடையில் உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஓராண்டு காலத்திற்கான மதிப்பிற்கு ரூ.8,60,33,677/- (ரூபாய். எட்டு கோடியே அறுபது இலட்சத்து முப்பத்தி மூன்றாயிரத்து அறுநூற்று எழுபத்து ஏழு மட்டும்) மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2. மேற்கூறிய திடக்கழிவு பணிகளின் அவசர அவசியம் கருதி குறுகியகால திறந்தவெளி மின்னனு ஒப்பம் கோரியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் ,
3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினத்தை குறியீடு எண் BUDGET HEAD CODE. 230-150-100 Privatization Conservancy தலைப்பின் கீழ் வட்டார அலுவலகம் தெற்கிற்கு நிதி ஒதுக்கி அந்நிதியிலிருந்து பணியை மேற்கொள்ளவும்,
4. பணி ஆணை வழங்கப்பட்ட பின் இப்பணிகளை மேற்பார்வைபொறியாளர் வட்டார அலுவலகம் (தெற்கு), மூலம் கண்காணிக்கவும் மற்றும் மண்டலம்-15ல் இருந்து செயல்திறன் சான்றிதழ்கள் பெற்று வட்டார மேற்பார்வை பொறியாளர் (தெற்கு), மூலம் பட்டியை தீர்க்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.015/2026ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.27/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**வ.வ.வ.செ. வா.ப.ந.க. எண். பிசி / 522 / 2025**

**ஆணையர் அவர்களின் 21.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 94/2026** **பொருள் எண்.94**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வடக்கு வட்டாரம் - மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு 2026-27 ஆம் ஆண்டிற்கு டீசல் கொள்முதல் செய்ய - திருவாளர்கள். இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி.**

சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண். 180/78 நாள். 26.02.78 ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரிபொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து 1978-79ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில், தென்சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் (1 முதல் 10 வரை) அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன, சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் தென் சென்னை, வடசென்னை மற்றும் மத்திய சென்னை என பிரிக்கப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியாக உருவெடுத்தப்பிறகு, வடக்கு வட்டாரமாக மண்டலம்-1 முதல் 5 வரை பிரித்து அளிக்கப்பட்டது.

வடக்கு வட்டாரம், வட சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம்-1 முதல் 5 வரை உள்ள லாரி நிலையத்தில் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், பொக்லைன்கள், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டரகள் போன்ற வாகனங்கள் 253 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜெனரேட்டர் ஆகியவற்றிக்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது. மேலும் மண்டலம் 1, 2, 5 மற்றும் வட சென்னை வாகன பணிமனைக்கு தேவைப்படும் எரிபொருள் வட சென்னை வாகன பணிமனையில் இயங்கிவரும் எரிபொருள் பங்க் மூலம் வழங்கப்படுகிறது. மண்டலம் 3 மற்றும் 4 ஆகிய மண்டலங்களுக்கு, மண்டலம் 4 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் பங்க் மூலம் எரிபொருள் வழங்கப்படுகிறது.

மன்றத் தீர்மான எண்.121/2022, நாள்.30.05.2022 மற்றும் மன்றத் தீர்மான எண்.169/2025, நாள்.27.02.2025-ன்படி 2025-26 ஆம் ஆண்டிற்கு மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயக்கப்படும் எரிபொருள் பங்கிற்கான எரிபொருள் கொள்முதலுக்கென பெறப்பட்ட நிர்வாக அனுமதி ஆணையின் விவரங்கள் பின்வருமாறு,

| 2025-26 | தொகை (%) | நிர்வாக அனுமதி பெறப்பட்ட கிலோ லிட்டர் | இதுநாள் வரை செலவிடப்பட்ட கிலோ லிட்டர் |
|---|---|---|---|
| நிர்வாக அனுமதி ஆணை | 9,86,56,280.00 | 1070 | 768 (டிசம்பர் 2025 வரை) |

வடக்கு வட்டாரம், வட சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கி வரும், மண்டலம்-3 மற்றும் 4 லாரி நிலையத்தை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கு உட்பட்ட புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றது.

சென்னை மாநகராட்சி, மண்டலம் 4 லாரி நிலையம் கட்டுப்பாட்டில் எரி பொருள் சேமிப்பு தொட்டி கீழ்க்கண்ட நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது.

| எரி பொருள் நிறுவனம் பெயர் | சேமிப்பு தொட்டியுள்ள இடம் | டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம் |
|---|---|---|
| இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் | மண்டலம் 4 லாரி நிலையம் | மண்டலம்-3 மற்றும் 4 லாரி நிலையத்தை சார்ந்த சார்ந்த அனைத்து வாகனங்களுக்கும் மற்றும் அந்த மண்டலங்களுக்குட்பட்ட புகை பரப்பும் இயந்திரங்களுக்கும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கும் |

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 4 லாரி நிலையத்திற்க்கு தேவையான எரிபொருட்கள் சேமிப்பு தொட்டி நிறுவிய மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து டீசல் கொள்முதல் செய்ய மன்றத் தீர்மான எண்.169/2025-ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்கமாறு இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து, 29.12.2025 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி இந்நிறுவம் 31.12.2025 அளித்த விலைப்புள்ளி கீழே சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | *1 KL* க்கான தொகை ரூபாய் (அனைத்து வரிகள் உட்பட) | மொத்த தேவை கிலோ லிட்டர் (2026-2027 ஆம் ஆண்டிற்கு) |
|---|---|---|---|
| இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் | டீசல் | ரூ.92,284.45/- (நாள்:31.12.2025) ந.கோ.ப.எண்: பிசி/ 522/ 2025 | *2950 Ltrs / day x 30 days x 12 months = 1062 KL = 1070 KL (rounded off)* |
| மொத்தம் தொகை (அனைத்து வரிகள் உட்பட) | 1070 கி.லி. *X* ரூ92,284.45/ = ரூ. 9,87,44,362/- (ரூபாய் ஒன்பது கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து முந்நூற்று அறுபத்து இரண்டு மட்டும் ) | | |

மேற்கண்ட விலைப்புள்ளி, எரிபொருளை சென்னை மாநகராட்சி மண்டலம் 4 லாரி நிலையத்தில் மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வாகனங்கள் மூலமாக கொண்டு வந்து கீழ்நிலை கொள்கலனில் இறக்கி கொடுப்பதற்கு உட்பட்டதாகும். மேலும் இந்த விலைப்புள்ளி மத்திய அரசு அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், இதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனைகள் தெரிவித்துள்ளன.

இந்த ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்ட திருவாளர்கள். *Sri Venkateswara Enterprises* அவர்களின் ஒப்பத்தொகை ரூ.50982890.20/- (-) 0.01 % ஆகும். எனவே, குறைந்த ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்ட திருவாளர்கள். *Sri Venkateswara Enterprises* அவர்களின் ஒப்பத்தொகையினை மேலும் விலைக்குறைப்பு செய்ய 20.01.2026 அன்று கோரப்பட்டது. திருவாளர்கள். *Sri Venkateswara Enterprises* அவர்கள் ஒப்ப விலையை விட (-) 1.00% குறைத்து அளித்துள்ளார்கள்.

இதன்படி குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.*Sri Venkateswara Enterprises* அவர்களின் இறுதி ஒப்பத்தொகை ரூ. 50478109.11/- மற்றும் ஒப்ப சதவீதம் (-) 1.00 % ஆகும்.

இப்பணிக்காக ஒப்பந்ததாரரின் ஒப்பத்தினை ஏற்க ஒப்பக்கூர்ந்தாய்வு குழுவின் அனுமதி 20.01.2026 அன்று பெறப்பட்டுள்ளது.

எனவே,

1. இப்பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ. 50987989/-க்கு மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,
2. இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி ஒப்பம் கோரியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,
3. மண்டலம் 1 முதல் 8 வரை சேகரிக்கப்படும் குப்பைகளை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டி நகர்த்தி வைத்து கையாளுவதற்கு மதிய நேர பகுதி வேளையில் *(Afternoon Shift)* 4 எண்ணிக்கையிலான *Hydraulic Excavator (Poclain 200 or Equivalent)*, 4 எண்ணிக்கையிலான *Bulldozer (D80 A12 or Equivalent)*, மற்றும் 1 எண்ணிக்கையிலான *Front End loader with Backhoe Attachment (JCB or Equivalent)* வாகனங்கள் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தும் பணிக்காக குறைந்த ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்ட திருவாளர்கள். *Sri Venkateswara Enterprises* அவர்களின் ஒப்பத்தொகை

ரூ.*50478109.11/-* கான *(Including GST 18%)* மற்றும் ஒப்ப சதவீதம் *(-) 1.00%* (ரூபாய் ஐந்து கோடியே நான்கு இலட்சத்து எழுபத்து எட்டாயிரத்து நூற்று ஒன்பது மற்றும் பதினோறு பைசா மட்டும்)ற்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியினை திருவாளர்கள்.*Sri Venkateswara Enterprises* அவர்களுக்கு வழங்கவும்,

*4.* இதற்கான செலவினத்தினை மண்டலம்-*4* பிரிவு குறியீட்டு எண்.*20 – 21– 07* மற்றும் கணக்கு குறியீட்டு எண்: *230 – 80 – 04 – 00 (Hire Charges)* என்ற தலைப்பின் கீழ் *2025-26* நிதி ஆண்டில் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.018/2026ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

”ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.52/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3/9819/2025**

**ஆணையர் அவர்களின் 25.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 100/2026** **பொருள் எண்.100**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 1 முதல் 8 வரை சேகரிக்கப்படும் குப்பைகளை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டி நகர்த்தி வைத்து கையாளுவதற்கு இரவு நேர பகுதி வேலையில் (Night Shift) 3 எண்ணிக்கையிலான Hydraulic Excavator (Poclain 200 or Equivalent), 3 எண்ணிக்கையிலான Bulldozer (D80 A12 or Equivalent) வாகனங்கள் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தும் பணிக்காக பின்னேற்பு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலங்கள் 1 முதல் *8* வரை சேகரிக்கப்படும் குப்பைகள் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படுகிறது. இவ்வாறு நாள் ஒன்றுக்கு சேகரிக்கப்படும் மொத்த குப்பைகளின் எடை சுமார் *4000* மெட்ரிக் டன்னாகும்.

இதன்படி, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் அன்றாடம் கொட்டப்படும் குப்பையை உடனுக்குடன் நகர்த்தி வைத்து கையாளுவதால் குப்பை கொட்டும் வளாகத்திற்கு செல்லும் வாகனங்கள் தங்கு தடையின்றி விரைவாக உள்ளே சென்று குப்பைகள் கொட்டுவதற்கு ஏதுவாகிறது.

தற்போது உள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு, கொடுங்கையூர் குப்பைகொட்டும் வளாகத்தில் இரவு நேர பகுதி வேளையில் *(Night Shift) 3* எண்ணிக்கையிலான *Hydraulic Excavator(Poclain 200 or Equivalent), 3* எண்ணிக்கையிலான *Bulldozer (D80 A12 or Equivalent)* வாகனங்கள் ஒரு வருட காலத்திற்கு மின்னணு ஒப்பம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த சுற்றறிக்கை எண். *M.E.D.C.No.M1/1272/2025*, நாள்.15.06.2025ல் குறிப்பிட்டுள்ளவாறு வாடகை அடிப்படையில் இயந்திர பொறியியல் துறை மூலமாக நிர்ணயிக்கப்பட்ட தொகையை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது.

இரவு நேர பகுதி வேளையில் *(Night Shift) 3* எண்ணிக்கையிலான *Hydraulic Excavator (Poclain 200 or Equivalent), 3* எண்ணிக்கையிலான *Bulldozer(D80 A12 or Equivalent)* வாகனங்கள் ஒரு வருட காலத்திற்கு ஒப்பம் கோரப்பட்டு *13.01.2026* அன்று ஒப்பம் திறக்கப்பட்டது..

ஒப்பம் கோரிய பணியின் விவரம்

| | | |
|---|---|---|
| *1* | பணியின் பெயர் | பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 8 வரை சேகரிக்கப்படும் குப்பைகளை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டி நகர்த்தி வைத்து கையாளுவதற்கு இரவு நேர பகுதி வேளையில் *(Night Shift) 3* |

| | | |
|---|---|---|
| | | எண்ணிக்கையிலான *Hydraulic Excavator / Poclain*, 3 எண்ணிக்கையிலான *Bulldozer* வாகனங்கள் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | ஆணையர் அவர்களின்<br>ஆணை நாள்.29.12.2025 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்-4 |
| 4 | மதிப்பீடு எதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது | இயந்திர பொறியியல் துறை மூலமாக நிர்ணயிக்கப்பட்ட தொகையை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 3,61,78,800/- |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 08.01.2026<br>2. தின மலர் தமிழ் நாளிதழ் 03.01.2026<br>3. டெக்கான் கிரானிக்கல் ஆங்கில நாளிதழ் 03.01.2026 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 12.01.2026 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா | குறுகிய கால ஒப்பம் |

இப்பணிக்காக 31.12.2025 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு 13.01.2026 அன்று ஒப்ப திறப்பு நாளாக கொண்டு ஒப்பம் கோரப்பட்டது. 13.01.2026 அன்று இந்த ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் ஒப்பத்தகுதி நிபந்தனைகள் (*Technical Bid*) திறக்கப்பட்டது. இதில் 1. *Dayavu Engineering Enterprises* 2.*Sri Venkateswara Enterprises* மற்றும் 3. *Aadvik & Associates* ஆகிய மூன்று ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் *Sri Venkateswara Enterprises* மற்றும் *Dayavu Engineering Enterprises* மட்டுமே ஒப்ப தகுதி நிபந்தனைகளை பூர்த்தி செய்திருந்ததால் அவர்களின் விலைப்புள்ளி 20.01.2026 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் கீழ்கண்டவாறு

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர்கள் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு (ரூபாய்) *(Including GST 18%)* | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூபாய்) *(Including GST 18%)* | விலை விகிதம் / விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1. | Dayavu Engineering Enterprises | 36178800 | 36019613.28 | (-) 0.44% குறைவு |
| 2. | Sri Venkateswara Enterprises | 36178800 | 36175182.12 | (-) 0.01% குறைவு |

இந்த ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்ட திருவாளர்கள். *Dayavu Engineering Enterprises* அவர்களின் ஒப்பத்தொகை ரூ.*36019613.28/-* *(-) 0.44%* ஆகும். எனவே, குறைந்த ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்ட திருவாளர்கள். *Dayavu Engineering Enterprises* அவர்களின் ஒப்பத்தொகையினை மேலும் விலைக்குறைப்பு செய்ய *20.01.2026* அன்று கோரப்பட்டது. திருவாளர்கள்.*Dayavu Engineering Enterprises* அவர்கள் ஒப்ப விலையை விட *(-) 1.00%* குறைத்து அளித்துள்ளார்கள்.

இதன்படி குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *Dayavu Engineering Enterprises* அவர்களின் இறுதி ஒப்பத்தொகை ரூ.35817012/- மற்றும் ஒப்ப சதவீதம் *(-) 1.00 %* ஆகும்.

இப்பணிக்காக ஒப்பந்ததாரரின் ஒப்பத்தினை ஏற்க ஒப்பக்கூர்ந்தாய்வு குழுவின் அனுமதி 20.01.2026 அன்று பெறப்பட்டுள்ளது.

எனவே,

1. இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.*3,61,78,800/-*க்கு மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,

2. இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி ஒப்பம் கோரியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,

3. மண்டலம் *1* முதல் *8* வரை சேகரிக்கப்படும் குப்பைகளை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டி நகர்த்தி வைத்து கையாளுவதற்கு இரவு நேர பகுதி வேளையில் *(Night Shift) 3* எண்ணிக்கையிலான *Hydraulic Excavator (Poclain 200 or Equivalent), 3* எண்ணிக்கையிலான *Bulldozer(D80 A12 or Equivalent)* வாகனங்கள் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தும் பணிக்காக குறைந்த ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்ட திருவாளர்கள். *Dayavu Engineering Enterprises* அவர்களின் ஒப்பத்தொகை ரூ. *35817012/-* கான *(Including GST 18%)* மற்றும் ஒப்ப சதவீதம் (-) 1.00% (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து எட்டு இலட்சத்து பதினேழாயிரத்து பன்னிரெண்டு மட்டும்)கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியினை திருவாளர்கள். *Dayavu Engineering Enterprises* அவர்களுக்கு வழங்கவும்,

4. இதற்கான செலவினத்தினை மண்டலம்-4 பிரிவு குறியீட்டு எண்.20-21-07 மற்றும் கணக்கு குறியீட்டு எண்: 230-80-04-00 (Hire Charges) என்ற தலைப்பின் கீழ் 2025-26 நிதி ஆண்டில் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.016/2026 ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) அனுமதி அளித்து, மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**இ.பொ.து.ந.எண்.எம்1/0885B/Ext /2022**

**ஆணையர் அவர்களின் 09.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 101/2026** **பொருள் எண்.101**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணத்தை (Amphibian Equipment – Water Master Classic IV C4097) 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி பணி மேற்கொள்ள ஒப்பம் கோரி திருவாளர்.N.Mohamed Jamaluddin அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது - இப்பணிக்கான ஒப்பந்த காலம் 04.03.2026 அன்றுடன் முடிவடைய உள்ளது - இவ்வுபகரணத்திற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை 05.03.2026 முதல் 04.08.2026 வரை 5 மாத காலத்திற்கு (150 நாட்களுக்கு) ஒப்பம் கோரி தற்போது வழங்கப்படும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு தொகை விவரங்கள் அடிப்படையில் ரூ.63,98,250/- மதிப்பீட்டில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகள் (Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000)ன்படி 3 ஆண்டு கால இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மொத்த ஒப்ப தொகை ரூ.3,49,98,600/- (Excl. 18% GST)ல் 25% மிகாமல் (18.28%) அல்லது தெற்கு வட்டார இயந்திர பொறியியல் துறைகள் அளவிலேயே பணி மேற்கொள்ளும் வரை திருவாளர். N.Mohamed Jamaluddin அவர்களுக்கு காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நீர் வழித்தடங்களில் மிதக்கும் கழிவுகளை அகற்றி கொசு உற்பத்தியை குறைக்கவும், மழைக்காலங்களில் நீரோட்டம் தடைபடாமல் இருக்கவும் இயந்திர பொறியியல் துறை மூலம் சிறப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நீர்வழித்தடங்களில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி, 3.5 மீக்கு மேல் அகலமாக உள்ள நீர் வழித்தடங்களை சுத்தப்படுத்தும் பணிக்காக மூன்று வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக திருவாளர்.*N.Mohamed Jamaluddin* அவர்களுக்கு கடந்த 06.03.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் வருகின்ற 04.03.2026 அன்றுடன் ஒப்பந்தம் முடிவடையவுள்ளது.

மேலும், இந்த ஆம்பிபியன் உபகரணமானது உயர் தொழில் நுட்ப அம்சங்கள் கொண்டதால் இவற்றை கையாள பெருநகர சென்னை மாநகராட்சியில் உயர் தொழில் நுட்பம் கொண்ட உபகரணத்தினை இயக்கி பராமரிப்பதற்கு திறன்மிகு பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஏற்கனவே, இவ்வுபகரணத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திருவாளர்.*N.Mohamed Jamaluddin* அவர்களுக்கு 05.03.2026 முதல் 04.08.2026 வரை 5 மாத காலத்திற்கு பணியினை நீட்டித்து வழங்கலாம்.

எனவே, ஆம்பிபியன் *(Amphibian Equipment - Water Master Classic IV C4097)* உபகரணத்தை 5 மாத காலத்திற்கு 05.03.2026 முதல் 04.08.2026 வரை (150 நாட்களுக்கு) அல்லது தெற்கு வட்டார இயந்திர பொறியியல் துறை அளவிலேயே ஒப்பம் கோரி பணி

மேற்கொள்ளும் வரை எது முன்னரோ அதுவரை இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள இப்பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர். *N.Mohamed Jamaluddin* அவர்களுக்கு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகள் *(Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act*-2000) ன்படி ஒப்ப விதிகளுக்கு உட்பட்டு மொத்த ஒப்ப தொகையில் 25% மிகாமல் காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. திருவாளர்.*N.Mohamed Jamaluddin* அவர்கள், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணியினை தற்போதுள்ள கீழ்கண்ட விலை விவரத்தின் அடிப்படையில் ஒப்ப விதிகளுக்குட்பட்டு மேலும் 5 மாதங்களுக்கு பணி ஒப்புதல் தெரிவித்துள்ளார்கள் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**அட்டவணை: I**

| பணியின் விவரம் | தற்போது வழங்கப்படும் 3ஆம் ஆண்டு இயக்குதல் (ம) ஒருங்கிணைந்த பராமரிப்பு ஒப்ப தொகை நாளொன்றிற்கு ரூ. *Excluding.GST* | | 3 ஆம் ஆண்டு தற்போது வழங்கப்படும் அதே தொகையின் அடிப்படையில் கால நீட்டிப்பு செய்யப்படும் 5 மாதத்திற்கு *(150* நாட்கள்) ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணம் இயக்குதல் (ம) ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான மொத்த தொகை ரூ. *Excluding.GST 18%* |
|---|---|---|---|
| Operaion Cost per vehicle per shift (8 Hours) | Rs.1715/- (Per Hour) | Rs.13,720/- per shift (8 Hours) | Rs.20,58,000/- (13720 x 150) |
| Comprehensive Maintenance Cost per day | Rs.28,935 (per day) | | Rs.43,40,250/- |
| **மொத்தம் ரூ.** | Rs.42,655/- | | Rs.63,98,250/- |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், காலநீட்டிப்பு செய்யப்படும் காலத்திற்கு இயக்குதல் பணிக்கான செலவுத் தொகை ரூ.20,58,000/- மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவுத் தொகை ரூ.43,40,250/- ஆக மொத்தம் ரூ.63,98,250/- *(GST 18%* நீங்கலாக) (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) மதிப்பீடு ஆனது 3 ஆண்டு கால இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மொத்த ஒப்ப தொகை ரூ.3,49,98,600/- *(Excl. 18% GST)*ல் 25% மிகாமல் 21.94% மட்டுமே உள்ளதால் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகள் *Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000*-ன்படி கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

1 எண்ணிக்கையிலான ஆம்பிபியன் *(Amphibian Equipment – Water Master Classic IV C4097)* உபகரணத்தை கூடுதல் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை தெற்கு வட்டார இயந்திர பொறியியல் துறையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் (Amphibian Equipment – Water Master Classic IV C 4097) உபகரணத்தை 3 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலம் 04.03.2026 அன்றுடன் முடிவடைய உள்ளதால், பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும் மற்றும் நீர் வழித்தடங்களில் மிதக்கும் கழிவுகளை அகற்றி கொசு உற்பத்தியை குறைக்கவும், மழைக்காலங்களில் நீரோட்டம் தடைபடாமல் இருக்கவும் நீர்வழித்தடங்களில் தூய்மை பணிகளில் ஏற்படும் சுணக்கத்தினை தவிர்க்கும் பொருட்டும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள தோராய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்வதற்கு ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டும் மேலும் 5 மாத காலத்திற்கு 05.03.2026 முதல் 04.08.2026 வரை (150 நாட்களுக்கு) அல்லது தெற்கு வட்டார இயந்திர பொறியியல் துறை அளவிலேயே ஒப்பம் கோரி பணி மேற்கொள்ளும் வரை தற்போது இப்பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர். N.Mohamed Jamaluddin அவர்களின் மூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்ப நிபந்தனைகளின்படி ஏற்கனவே வழங்கப்பட்ட பணி ஆணைத் தொகை விவரங்களின்படி ரூ.63,98,250/- (GST 18% நீங்கலாக) (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) ஆனது 3 ஆண்டு கால இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மொத்த ஒப்ப தொகை ரூ.3,49,98,600/- (Excl. 18% GST)ல் 25% மிகாமல் 18.28% மட்டுமே உள்ளதால் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதி Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000ன்படி காலநீட்டிப்பு செய்து இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆணை வேண்டியும்,

2. இனம் –1 ஏற்பின், காலநீட்டிப்பு செய்யப்படும் ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் (Amphibian Equipment – Water Master Classic IV C4097) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். N.Mohamed Jamaluddin அவர்களுக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பின்வரும் ஒப்ப தொகை விவரங்களை காலநீட்டிப்பு செய்யப்படும் காலங்களுக்கு நடைமுறைப்படுத்தவும்,

**அட்டவணை: II**

| பணியின் விவரம் | தற்போது வழங்கப்படும் 3ஆம் ஆண்டு இயக்குதல் (ம) ஒருங்கிணைந்த பராமரிப்பு ஒப்ப தொகை நாளொன்றிற்கு ரூ. *Excluding GST* | 3 ஆம் ஆண்டு தற்போது வழங்கப்படும் அதே தொகையின் அடிப்படையில் கால நீட்டிப்பு செய்யப்படும் 5 மாதத்திற்கு (150 நாட்கள்) ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணம் இயக்குதல் (ம) ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான மொத்த தொகை ரூ. *Excluding GST 18%* |
|---|---|---|
| Operaion Cost per vehicle per shift (8 Hours) | Rs.1715/- (Per Hour) | Rs.13,720/- per shift (8 Hours) |
| Comprehensive Maintenance Cost per day | Rs.28,935 (per day) | Rs.43,40,250/- |
| மொத்தம் ரூ. | Rs.42,655/- | Rs.63,98,250/- |

3. ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் (Amphibian Equipment – Water Master Classic IV C4097) உபகரணத்தை இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக ஒப்பந்ததாரர் திருவாளர். N.Mohamed Jamaluddin அவர்களுக்கு வழங்கப்பட்ட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக அனுமதிக்கப்பட்டுள்ள விலை விவரங்களின் அடிப்படையில் பணி நீட்டிப்பு காலமான 05.03.2026 முதல் 04.08.2026 வரை (150 நாட்களுக்கு) 5 மாத காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கணக்கிடப்பட்டுள்ள செலவீனத் தொகை ரூ.63,98,250/- (GST 18% நீங்கலாக) (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) செலவினத்தில் மேற்கொள்ளவும்,

4. இனம் 1 முதல் 3 வரை ஏற்பின் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான காலநீட்டிப்பு பணிக்கு திருவாளர். N.Mohamed Jamaluddin அவர்களுக்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளவும்,

5. இந்த கால நீட்டிப்பு பணிக்கான தொகை ரூ.63,98,250/-ல் 2% தொகை ரூ.1,28,000/- யினை கூடுதல் பாதுகாப்புத் தொகையாக பெற்றுக் கொண்டு உடன்படிக்கை மேற்கொள்ளவும்,

6. கால நீட்டிப்பு 5 மாத காலத்திற்கான (150 நாட்கள்) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவினத்தை தெற்கு வட்டார இயந்திர பொறியியல் துறையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.011/2026ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**இ.பொ.து.ந.எண்.எம்1/0887B/Ext /2022**

**ஆணையர் அவர்களின் 14.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 102/2026** **பொருள் எண்.102**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் (Amphibian Equipment – Water Master Classic V C4158) உபகரணம் கொள்முதல் செய்யப்பட்டது - இவ்வுபகரணத்திற்கான 3 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பம் கோரப்பட்டது - இதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். Dharsan Dredging & Construction Pvt ltd நிறுவனத்தாருக்கு ரூ.3,40,25,100/- (Excl. 18% GST)ல் செலவீனத்தில் பணி மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது - இப்பணிக்கான ஒப்பந்த காலம் 04.03.2026 அன்றுடன் முடிவடைய உள்ளது - தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகள் (Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000)ன்படி இவ்வுபகரணத்திற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை 05.03.2026 முதல் 04.08.2026 வரை 5 மாத காலத்திற்கு (150 நாட்களுக்கு) நீட்டித்து தற்போது வழங்கப்படும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு தொகையின் அடிப்படையில் ரூ.62,20,200/- மதிப்பீட்டில் 25% மிகாமல் (18.28%) வடக்கு வட்டார இயந்திர பொறியியல் துறையினால் ஒப்பம் கோரி பணி மேற்கொள்ளும் வரை திருவாளர்கள். Dharsan Dredging & Construction Pvt ltd நிறுவனத்தாருக்கு காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நீர் வழித்தடங்களில் மிதக்கும் கழிவுகளை அகற்றி கொசு உற்பத்தியை குறைக்கவும், மழைக்காலங்களில் நீரோட்டம் தடைபடாமல் இருக்கவும் இயந்திர பொறியியல் துறை மூலம் சிறப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நீர்வழித்தடங்களில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி, 3.5 மீக்கு மேல் அகலமாக உள்ள நீர் வழித்தடங்களை சுத்தப்படுத்தும் பணிக்காக மூன்று வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக திருவாளர். *Dharsan Dredging & Construction Pvt ltd* அவர்களுக்கு கடந்த 06.03.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் வருகின்ற 04.03.2026 அன்றுடன் ஒப்பந்தம் முடிவடையவுள்ளது.

மேலும், இந்த ஆம்பிபியன் உபகரணமானது உயர் தொழில் நுட்ப அம்சங்கள் கொண்டதால் இவற்றை கையாள பெருநகர சென்னை மாநகராட்சியில் உயர் தொழில் நுட்பம் கொண்ட உபகரணத்தினை இயக்கி பராமரிப்பதற்கு திறன்மிகு பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஏற்கனவே, இவ்வுபகரணத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திருவாளர்.*Dharsan Dredging & Construction Pvt ltd* அவர்களுக்கு 05.03.2026 முதல் 04.08.2026 வரை 5 மாத காலத்திற்கு பணியினை நீட்டித்து வழங்கலாம்.

எனவே, ஆம்பிபியன் *(Amphibian Equipment – Water Master Classic V C4158)* உபகரணத்தை 5 மாத காலத்திற்கு 05.03.2026 முதல் 04.08.2026 வரை (150 நாட்களுக்கு) அல்லது வடக்கு வட்டார இயந்திர பொறியியல் துறை அளவிலேயே ஒப்பம் கோரி பணி மேற்கொள்ளும் வரை எது முன்னரோ அதுவரை இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள இப்பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர். *Dharsan Dredging & Construction Pvt ltd* அவர்களுக்கு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகள் *(Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act*-2000) ன்படி ஒப்ப விதிகளுக்கு உட்பட்டு மொத்த ஒப்ப தொகையில் 25% மிகாமல் காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. திருவாளர்.*Dharsan Dredging & Construction Pvt ltd* அவர்கள், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணியினை தற்போதுள்ள கீழ்கண்ட விலை விவரத்தின் அடிப்படையில் ஒப்ப விதிகளுக்குட்பட்டு மேலும் 5 மாதங்களுக்கு பணி மேற்கொள்ள ஒப்புதல் தெரிவித்துள்ளார்கள் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**அட்டவணை: *I***

| பணியின் விவரம் | தற்போது வழங்கப்படும் 3ஆம் ஆண்டு இயக்குதல் (ம) ஒருங்கிணைந்த பராமரிப்பு ஒப்ப தொகை நாளொன்றிற்கு ரூ. *Excluding GST* | | 3 ஆம் ஆண்டு தற்போது வழங்கப்படும் அதே தொகையின் அடிப்படையில் கால நீட்டிப்பு செய்யப்படும் 5 மாதத்திற்கு (150 நாட்கள்) ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணம் இயக்குதல் (ம) ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான மொத்த தொகை ரூ. *Excluding GST 18%* |
|---|---|---|---|
| Operaion Cost per vehicle per shift (8 Hours) | Rs.1715/- (Per Hour) | Rs.13,720/- per shift (8 Hours) | Rs.20,58,000/- (13720 x 150) |
| Comprehensive Maintenance Cost per day | Rs.27,748 (per day) | | Rs.41,62,200/- |
| **மொத்தம் ரூ.** | Rs.41,468/- | | Rs.62,20,200/- |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், காலநீட்டிப்பு செய்யப்படும் காலத்திற்கு இயக்குதல் பணிக்கான செலவுத் தொகை ரூ.*20,58,000/-* மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவுத் தொகை ரூ.*41,62,200/-* ஆக மொத்தம் ரூ.*62,20,200/- (GST 18%* நீங்கலாக*)* (ரூபாய் அறுபத்தியிரண்டு இலட்சத்து இருபதாயிரத்து இருநூறு மட்டும்*)* மதிப்பீடு ஆனது *3* ஆண்டு கால இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மொத்த ஒப்ப தொகை ரூ.*3,40,25,100/- (Excl. 18% GST)*ல் *25%* மிகாமல் *18.28%* மட்டுமே உள்ளதால் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகள் *Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000*ன்படி கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

1 எண்ணிக்கையிலான ஆம்பிபியன் *(Amphibian Equipment – Water Master Classic V C4158)* உபகரணத்தை கூடுதல் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை வடக்கு வட்டார இயந்திர பொறியியல் துறையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் (Amphibian Equipment – Water Master Classic V C4158) உபகரணத்தின் 3 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலம் 04.03.2026 அன்றுடன் முடிவடைய உள்ளதால், பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும் மற்றும் நீர் வழித்தடங்களில் மிதக்கும் கழிவுகளை அகற்றி கொசு உற்பத்தியை குறைக்கவும், மழைக்காலங்களில் நீரோட்டம் தடைபடாமல் இருக்கவும், நீர்வழித்தடங்களில் தூய்மை பணிகளில் ஏற்படும் சுணக்கத்தினை தவிர்க்கும் பொருட்டும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள தோராய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்வதற்கு ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டும் மேலும் 5 மாத காலத்திற்கு 05.03.2026 முதல் 04.08.2026 வரை (150 நாட்களுக்கு) வடக்கு வட்டார இயந்திர பொறியியல் துறையின் மூலம் ஒப்பம் கோரி பணி மேற்கொள்ளும் வரை தற்போது இப்பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர்கள். Dharsan Dredging & Construction Pvt ltd நிறுவனத்தார் மூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்ப நிபந்தனைகளின்படி ஏற்கனவே வழங்கப்பட்ட பணி ஆணைத் தொகை விவரங்களின்படி ரூ.62,20,200/- (GST 18% நீங்கலாக) (ரூபாய் அறுபத்தியிரண்டு இலட்சத்து இருபதாயிரத்து இருநூறு மட்டும்) ஆனது 3 ஆண்டு கால இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மொத்த ஒப்ப தொகை ரூ.3,40,25,100/- (Excl. 18% GST)ல் 25% மிகாமல் 18.28% மட்டுமே உள்ளதால் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதி Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000ன்படி காலநீட்டிப்பு செய்து இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆணை வேண்டியும்,

2. இனம்–1 ஏற்பின், காலநீட்டிப்பு செய்யப்படும் ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் (Amphibian Equipment – Water Master Classic V C4158) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். Dharsan Dredging & Construction Pvt ltd நிறுவனத்தாருக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பின்வரும் ஒப்ப தொகை விவரங்களை காலநீட்டிப்பு செய்யப்படும் காலங்களுக்கு நடைமுறைப்படுத்தவும்,

**அட்டவணை: *II***

| பணியின் விவரம் | தற்போது வழங்கப்படும் 3-ஆம் ஆண்டு இயக்குதல் (ம) ஒருங்கிணைந்த பராமரிப்பு ஒப்ப தொகை நாளொன்றிற்கு ரூ. ***Excluding GST*** | | 3 ஆம் ஆண்டு தற்போது வழங்கப்படும் அதே தொகையின் அடிப்படையில் கால நீட்டிப்பு செய்யப்படும் 5 மாதத்திற்கு (150 நாட்கள்) ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் உபகரணம் இயக்குதல் (ம) ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான மொத்த தொகை ரூ. ***Excluding GST 18%*** | பணியின் விவரம் |
|---|---|---|---|---|
| Operaion Cost per vehicle per shift (8 Hours) | Rs.1715/- (Per Hour) | Rs.13,720/- per shift (8 Hours) | Rs.20,58,000/- (13720 x 150) | Operaion Cost per vehicle per shift (8 Hours) |
| Comprehensive Maintenance Cost per day | Rs.27,748 (per day) | | Rs.41,62,200/- | Comprehensive Maintenance Cost per day |
| **மொத்தம் ரூ.** | Rs.41,468/- | | Rs.62,20,200/- | |

3. ஒரு எண்ணிக்கையிலான ஆம்பிபியன் (Amphibian Equipment – Water Master Classic V C4158) உபகரணத்தை இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக ஒப்பந்ததாரர் திருவாளர். Dharsan Dredging & Construction Pvt ltd அவர்களுக்கு வழங்கப்பட்ட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக அனுமதிக்கப்பட்டுள்ள விலை விவரங்களின் அடிப்படையில் பணி நீட்டிப்பு காலமான 05.03.2026 முதல் 04.08.2026 வரை (150 நாட்களுக்கு) 5 மாத காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கணக்கிடப்பட்டுள்ள செலவீனத் தொகை ரூ.62,20,200/- (GST 18% நீங்கலாக) (ரூபாய் அறுபத்தியிரண்டு இலட்சத்து இருபதாயிரத்து இருநூறு மட்டும்) செலவினத்தில் மேற்கொள்ளவும்,
4. இனம் 1 முதல் 3 வரை ஏற்பின் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான காலநீட்டிப்பு பணிக்கு திருவாளர். Dharsan Dredging & Construction Pvt ltd அவர்களுக்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளவும்,
5. இந்த கால நீட்டிப்பு பணிக்கான தொகை ரூ.62,20,200/- ல் 2% தொகை ரூ.1,25,000/- யினை கூடுதல் பாதுகாப்புத் தொகையாக பெற்றுக் கொண்டு உடன்படிக்கை மேற்கொள்ளவும்,

6. கால நீட்டிப்பு 5 மாத காலத்திற்கான (150 நாட்கள்) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவினத்தை வடக்கு வட்டார இயந்திர பொறியியல் துறையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.012/2026ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/2635/2025**

**ஆணையர் அவர்களின் 21.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 103/2026** **பொருள் எண்.103**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - ஒப்பந்தம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி - சாலைகள் மற்றும் மத்திய தடுப்புகளில் சேகரமாகும் மண் துகள்கள் மற்றும் தூசி ஆகியவற்றை தூய்மை படுத்தும் பணிக்கென கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்ட 20 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி வாகனம் (Sl. No. GCC – ROS – 021 to GCC – ROS – 040) - 2 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி - மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி தற்போது ஒப்பம் கோரும் பணி மட்டும் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு மின்னனு ஒப்பம் கோரப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, உட்புற சாலைகள், பிரதான சாலைகள் மற்றும் பேருந்து வழித்தடங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள், பேருந்து முனையங்கள் மற்றும் ரயில் நிலையங்களின் வளாகத்திற்கு வெளியே உள்ள பகுதிகள் போன்ற பொதுமக்கள் கூடும் பிற இடங்களின் தூய்மை பணிகளை பராமரித்து வருகிறது. இவற்றினை சாலையின் மத்திய தடுப்பு பணியில் ஈடுபடுத்தும் போது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொது மக்களுக்கு இடையூறாக அமைகிறது. இதனை தவிர்க்கவும் உட்புற சாலைகளில் சேகரமாகும் தூசி மற்றும் மண் துகள்களை துரிதமாக அகற்றிட வழக்கமான முறையில் பணியாளர்களை பணியமர்த்தி பணி மேற்கொள்வதை தவிர்த்து இவ்வகை பணிகளை மேற்கொள்வதற்கான பிரத்தியேகமாக தயாரிக்கப்படும் உபகரணங்களான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்கள் *(Ride on Sweeper vehicles)* கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, மின்னனு ஒப்பம் கோரப்பட்டு, தகுதியான ஒப்பந்ததாரர். *M/s. Roots Multiclean* நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு உட்புற சாலைகள் மற்றும் பேருந்து வழித்தட சாலைகளில் தூய்மை பணி மேற்கொள்ள 20 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்கள் *(Ride on Sweeper vehicles - Sl. No. GCC – ROS – 021 to GCC – ROS –* 040) கொள்முதல் செய்யப்பட்டன. இவ்வாகனங்கள் பிரத்யேகமான பணிக்கென தயாரிக்கப்படுவதால் இவ்வகை வாகனம் சிறப்பு வகையைச் சார்ந்தவை மற்றும் இவ்வாகனங்களின் உதிரி பாகங்கள் பிரத்யேகமாக தயாரிக்கப்படுகின்றன. மேலும் இவ்வாகனங்களின் உதிரி பாகங்கள் சந்தையில் கொள்முதல் செய்ய இயலாது.

இவ்வாகனங்களை சரியான கால இடைவேளையில் இயக்கிய மணி நேரத்திற்கேற்ப தேவையான உதிரி பாகங்களை மாற்றி பராமரிக்கப்பட வேண்டும். இதனால் உபகரணங்களின் பயன்பாடு முழுமையடைவதோடு இவ்வுபகரணங்களின் ஆயுட்காலம் நீடித்திருக்கும். இவ்வகை உபகரணங்கள் சிறப்பு தொழில்நுட்பம் வாய்ந்ததால் இவற்றினை

இயக்கி பராமரிக்க மாநகராட்சியில் போதிய பணியாட்கள் இல்லாத காரணத்தினால் இப்பணியினை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்வது அவசியமாகிறது.

மேலும், இவ்வகை இயந்திரங்கள் சிறப்பு பயன்பாட்டிற்காக தயாரிக்கப்படுவதுடன் உயரிய தொழில்நுட்பம் வாய்ந்ததால் இவ்வியந்திரங்களை உற்பத்தியாளரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் மட்டுமே பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இவ்வியந்திரங்கள் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள ஆண்டு முழுவதும் இயக்கப்பட வேண்டிய காரணத்தினால் இவ்வியந்திரங்களை உபகரண உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலம் மின்னணு ஒப்பம் கோரி இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை (எரிபொருள் தவிர்த்து) மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், ஒரு உபகரணம் ஒரு ஆண்டிற்கு தோராயமாக பராமரிப்பு பணி மற்றும் மழைக்காரணமாக வாகனம் நிறுத்தி வைக்கும் நாட்களை தவிர்த்து மொத்த பணி நாட்களான 300 நாட்களுக்கு ஒரு வேளை பணிபுரியும் எனவும் மற்றும் இதர அவசர தேவைகளுக்கு ஒரு ஆண்டில் 60 நாட்கள் இரண்டு வேளை (2 *Shifts*) பணிபுரியும் என கருத்தில் கொண்டு மொத்தம் ஒரு ஆண்டிற்கு 360 *Shifts* என்ற விகிதத்தில் இயக்குதலுக்கான தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜுன் மாதம் 2025 இதே வகை வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி 2 ஆண்டுகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு தயாரிக்கபட்டு நிலைக்குழு (பொதுசுகாதாரம்)வின் நிர்வாக அனுமதி (தீர்மான எண்.110/2025, நாள்.19.06.2025) பெற்று அதே தொகையை அடிப்படையாகக் கொண்டு கீழ்காணும் அட்டவணையில், 20 உபகரணத்திற்கு (*Sl. No. GCC - ROS - 021 to GCC - ROS -* 040) 2 ஆண்டிற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கான தோராய மதிப்பீடு ரூ.5,55,99,600/- ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

| Operation & Comprehensive Maintenance for 20 Nos. of Ride on Sweeper for a period of 2 Years | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Operation Cost | | | | Maintenance Cost | | | | |
| Year | Per Day (Per shift of 8 Hrs) Per Machine | Per year (300 days/per shift) per machine | Per year (60 days in second shift) per machine | Total operation cost per vehicle for one year (360 Shifts) | Per Day per vehicle | Per year (300 days) per vehicle | Total O&M Cost per Year for 1 Vehicle | Total O&M Cost per Year for 20 Vehicles | Remarks |
| | (Including GST 18%) | (Including GST 18%) | (Including GST 18%) | (Including GST 18%) | (Including GST 18%) | (Including GST 18% ) | ( Including GST 18% ) | ( Including GST 18% ) | |
| I | 1475 | 4,42,500 | 88,500 | 5,31,000 | 2,655 | 7,96,500 | 13,27,500 | 2,65,50,000 | |
| II | 1548 | 4,64,400 | 92,880 | 5,57,280 | 2,984 | 8,95,200 | 14,52,480 | 2,90,49,600 | |
| Overall Amount | | | | | | | | 5,55,99,600 | |

இவ்வுபகரணங்களின் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை வடக்கு மற்றும் மத்திய வட்டார இயந்திர பொறியியல் துறையில் கூடுதல்

நிதி ஒதுக்கீடு பெற்று வட்டார இயந்திர பொறியியல் துறையின் மூலமாக மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பணியின் அவசர அவசியம் கருதி நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வ(ம)நி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர் நோக்கி மின்னணு ஒப்பம் கோரும் பணி மட்டும் மேற்கொள்ள ஆணையர் அவர்களின், 06.01.2026 நாளிட்ட ஆணை பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகள் மற்றும் மத்திய தடுப்புகளில் சேகரமாகும் மண் துகள்கள் மற்றும் தூசி ஆகியவற்றை தூய்மை படுத்தும் பணிக்கென கொள்முதல் செய்யப்பட்ட 20 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்கள் 2 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.5,55,99,600/- (Inclu. 18% GST) தோராய மதிப்பீட்டில் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பம் கோரும் பணி மட்டும் மேற்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. இவ்வுபகரணங்களின் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை வடக்கு மற்றும் மத்திய வட்டார இயந்திர பொறியியல் துறையில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று வட்டார இயந்திர பொறியியல் துறையின் மூலமாக மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2026 அன்று தீர்மான எண்.013/2026ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

> “27.01.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.25/2026, நாள்.27.01.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**பூ.து.ந.க.எண்.பி2/003/2026**

**ஆணையர் அவர்களின் 25.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 104/2026** **பொருள் எண்.104**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் துறை - நிதி நிலை அறிக்கை 2025-26 - சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய (Inclusive Equipments for special childrens) சிறப்பு அம்சங்கள் கொண்டு மண்டலம்-12, வார்டு-156 திருவள்ளுவர் பூங்கா மேம்படுத்துதல் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-12 வார்டு –156 திருவள்ளுவர் பூங்கா மேம்படுத்துதல் பணி. |
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | - |
| 3. | தொழில்நுட்ப அனுமதியின் விவரம் | கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி) அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்ற, நாள். 07.01.2026. |
| 4. | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | பூங்காத்துறை |
| 5. | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது. | 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி (மதிப்பீடு) |
| 6. | மதிப்பீட்டின் தொகை | ரூ.1,37,40,000.00/- |
| அ) | பணியின் மதிப்பு | ரூ 1,12,16,494.84/- |
| (ஆ) | சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 2 0,18,969.07/- |
| இ) | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 1,12,164.95/- |
| (ஈ) | மற்ற எதிர்பாரா செலவு 2.5% | ரூ. 2,80,206.20/- |
| (உ) | தரக் கட்டுபாடு செலவு 1 % | ரூ. 1,12,164.95/- |
| | மொத்தம் | ரூ.1,37,40,000.00/- |
| 7. | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 8. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | - |
| 9. | நிதியின் தன்மை/ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி/ கணக்கு குறியீட்டு எண் | மூலதனநிதி 2025–26 |
| 10. | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ.1,37,40,000.00/- |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, வார்டு –156, திருவள்ளுவர் நகரில் உள்ள பூங்கா அனைத்து வகையான பார்வையாளர்களுக்கும் முக்கியமாக சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய (Inclusive Equipment for special childrens) சிறப்பு அம்சங்கள் கொண்டு பூங்கா மேம்படுத்துதல் பணிக்காக 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுக்கு நிர்வாக அனுமதியும்,

2. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, வார்டு –156, திருவள்ளுவர் நகரில் உள்ள பூங்காவில் இப்பணிகளை மேற்கொள்ள ஒப்பம் கோரவும்,

3. இப்பணிகளை பூங்காத்துறையின் மூலதன நிதி தலைப்பு எண்.412-400-200 கணக்கு குறியீட்டு எண்.60-61-00 கீழ் நிதி ஒதுக்கீடு பெற அனுமதியும்,

4. மண்டலம்-12, வார்டு –156, திருவள்ளுவர் நகரில் உள்ள பூங்கா மேம்படுத்துதல் பணியினை மண்டல அளவிலேயே மேற்கொண்டு பட்டித்தீர்வு பூங்காத்துறை மூலம் செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**பூ.து.ந.க.எண்.பி2/026/2026**

**ஆணையர் அவர்களின் 25.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 105/2026** **பொருள் எண்.105**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் துறை - நிதி நிலை அறிக்கை 2025-26 - சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய (Inclusive Equipments for special childrens) சிறப்பு அம்சங்கள் கொண்டு மண்டலம்-14, வார்டு-191, பள்ளிக்கரணை, ஜெயசந்திரன் 1வது தெரு பூங்கா மேம்படுத்துதல் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14, வார்டு-191, பள்ளிக்கரணை, ஜெயசந்திரன் 1வது தெரு பூங்கா மேம்படுத்துதல் பணி. |
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | - |
| 3. | தொழில்நுட்ப அனுமதியின் விவரம் | கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி) அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்ற நாள். 07.01.2026. |
| 4. | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | பூங்காத்துறை |
| 5. | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது. | 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி (மதிப்பீடு) |
| 6. | மதிப்பீட்டின் தொகை | ரூ,1,32,00,000.00/- |
| அ) | பணியின் மதிப்பு | ரூ 1,07,85,734.00/- |
| (ஆ) | சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 19,41,432.12/- |
| இ) | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 1,07,857.34/- |
| (ஈ) | மற்ற எதிர்பாரா செலவு 2.5% | ரூ. 2,57,119.20/- |
| (உ) | தரக் கட்டுபாடு செலவு 1 % | ரூ. 1,07,857.34/- |
| | மொத்தம் | ரூ,1,32,00,000.00/- |
| 7. | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 8. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | - |
| 9. | நிதியின் தன்மை/ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி/ கணக்கு குறியீட்டு எண் | மூலதனநிதி 2025–26 |
| 10. | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ,1,32,00,000.00/- |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-14, வார்டு–191, பள்ளிக்கரணை, ஜெயசந்திரன் 1வது தெருவில் உள்ள பூங்கா அனைத்து வகையான பார்வையாளர்களுக்கும் முக்கியமாக சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய (Inclusive Equipment for special childrens) சிறப்பு அம்சங்கள் கொண்டு பூங்கா மேம்படுத்துதல் பணிக்காக 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுக்கு நிர்வாக அனுமதியும்,

2. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14, வார்டு–191, பள்ளிக்கரணை, ஜெயசந்திரன் 1வது தெருவில் உள்ள பூங்காவில் இப்பணிகளை மேற்கொள்ள ஒப்பம் கோரவும்,

3. இப்பணிகளை பூங்காத்துறையின் மூலதன நிதி தலைப்பு எண்.412-400-200 கணக்கு குறியீட்டு எண். 60-61-00 கீழ் நிதி ஒதுக்கீடு பெற அனுமதியும்,

4. மண்டலம்-14, வார்டு–191, பள்ளிக்கரணை, ஜெயசந்திரன் 1வது தெருவில் உள்ள பூங்கா மேம்படுத்துதல் பணியினை மண்டல அளவிலேயே மேற்கொண்டு பட்டித்தீர்வு பூங்காத்துறை மூலம் செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**அ.து.ந.க.எண்.அ3 / 0118 / 2026**

**ஆணையர் அவர்களின் 29.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 106/2026** **பொருள் எண்.106**

**பெருநகர சென்னை மாநகராட்சி - அரங்கத்துறை - 2025–2026 ஆம் ஆண்டு மூலதன நிதியின் கீழ் - மண்டலம் – 12, கோட்டம்-160ல் புது தெருவில் உள்ள குழந்தைகள் விளையாட்டுப்பகுதி, பெரியவர்களுக்கான உடற்பயிற்சி கூடம், கைப்பந்து மைதானம் ஆகியவற்றுடன் நவீனமயமாக்கப்பட்ட பூங்காவை இடித்து மீண்டும் புதியதாக கட்டும் பணி மேற்கொள்ள தயாரிக்கபட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

மண்டலம்-12, கோட்டம்-160 புது தெருவில் உள்ள குழந்தைகள் விளையாட்டுப்பகுதி, பெரியவர்களுக்கான உடற்பயிற்சி கூடம் கைப்பந்து மைதானம் ஆகியவற்றுடன் நவீனமயமாக்கப்பட்ட பூங்காவை இடித்து மீண்டும் கட்டும் பணி மேற்கொள்ள தயாரிக்கபட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,75,00,000/க்கு **மேற்பார்வை பொறியாளர்** (**தெற்கு**) **அவர்களின்** 19.01.2026 நாளிட்ட தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது.

அதனடிப்படையில், மண்டலம்-12, கோட்டம்-160ல் அமைந்துள்ள புது தெருவில் உள்ள குழந்தைகள் விளையாட்டுப்பகுதி, பெரியவர்களுக்கான உடற்பயிற்சி கூடம், கைப்பந்து மைதானம் ஆகியவற்றுடன் நவீனமயமாக்கப்பட்ட பூங்காவை இடித்து மீண்டும் புதியதாக கட்டும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு உரிய அலுவலரின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது

| Sl.No | Dn.no | Estimate No | Name of the work | Estimate Amount |
|---|---|---|---|---|
| 1 | 160 | NM/2025–26/ 22366 | Demolition and Reconstruction of a modernized park with a Children's Playground with gym and a Volleyball Court on New Street in Dn–160, Zone–12 | Rs.1,75,00,000/- |

எனவே,

1. மண்டலம்–12, கோட்டம்–160, புது தெருவில் உள்ள குழந்தைகள் விளையாட்டுப்பகுதி, பெரியவர்களுக்கான உடற்பயிற்சி கூடம் கைப்பந்து மைதானம் ஆகியவற்றுடன் நவீனமயமாக்கப்பட்ட பூங்காவை இடித்து மீண்டும் புதியதாக கட்டும் பணிக்கு ரூ.1,75,00,000/க்கு நிர்வாக அனுமதி வேண்டியும் மற்றும் மின்னணு ஒப்பம் கோருவதற்கும்,
2. மேற்காணும் பணிகளுக்குண்டான செலவீனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி, மூலதனநிதி, Function 60–62–00, கணக்கு குறியீடு எண்.412–400–100 (Play Grounds) என்ற தலைப்பில் பட்டி தீர்வு செய்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**ம.அ.5.ந.க.எண்.இ1/RPM.762/2025**

**ஆணையர் அவர்களின் 04.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 107/2026** **பொருள் எண்.107**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மதிப்பீடு - மூலதன நிதியின் கீழ் மண்டலம் - 5, வார்டு-55ல் PROPOSED CONSTRUCTION OF UNIT OFFICE BUILDING AT SHANMUGAM STREET பணிக்கு - 2025-2026-ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

1.பணியின் பெயர்:

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீடு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | 55 | 20920 | மூலதன நிதியின் கீழ் மண்டலம் - 5, பகுதி-13, வார்டு-55ல் PROPOSED CONSTRUCTION OF UNIT OFFICE BUILDING AT SHANMUGAM STREET பணி. | ரூ. 1,35,00,000/- |
| | | | மொத்தம் | ரூ. 1,35,00,000/- |

| | | |
|---|---|---|
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | |
| 3. | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம்-5 |
| 4. | சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி | |
| 5. | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி | மேற்பார்வை பொறியாளர்(வடக்கு) தொழில் நுட்ப ஒப்புதல் எண், 71 நாள். 18.12.2025 |
| 6. | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப் பட்டியலின்படி தயாரிக்கப்பட்டது | 2025-2026 |
| 7. | அ) பணியின் செலவினம் | ரூ. 1,10,40,088.24 |
| | ஆ) மேலானமேற்பார்வை செலவினம் 10.0% | ரூ. -- |
| | இ) சிறு மேற்பார்வை செலவு 2.50% | ரூ. -- |
| | ஈ) தரக் கட்டுப்பாடு செலவு 1.0% | ரூ. 1,10,400.88 |
| | உ) மற்ற எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 2,51,894.12 |
| | ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதி 1% | ரூ. 1,10,400.88 |
| | எ) ஜி.எஸ்.டி வரி 18% | ரூ 19,87,215.88 |
| | மொத்தம் | ரூ. 1,35,00,000.00 |

| | | |
|---|---|---|
| 8. | மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலை பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் | பொருந்தாது |
| 9. | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | |
| 10. | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா? | |
| 11. | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் | பொருந்தாது |
| 12. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | பொருந்தாது |
| 13. | நிதியின் மூலத்தன்மை | மூலதன நிதி |
| 14 | பிரிவு கணக்கு எண் | 202107/412400503 Unit office Building |
| | அ) 2025-2026ம் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீடு | ரூ.***0*** |
| | ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | ரூ. |
| | இ) மீதமுள்ள நிதி (அ –ஆ) | ரூ. |
| 15 | ஈ) இக்கோப்பில்குறிப்பிட்டுள்ளபணிக்கு தேவைப்படும்நிதி | ரூ. 1,35,00,000 /- |

எனவே,

1. PROPOSED CONSTRUCTION OF UNIT OFFICE BUILDING AT SHANMUGAM STREET.தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,35,00,000/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பம் கோரவும்,
2. பெருநகர சென்னை மாநகராட்சியில் பதிவு செய்யப்பட்ட கட்டிடக்கலை ஆலோசகர் (Empanel architect) M/s. PEMASS ENGINEERING CONSULTANTS PVT. LTD., அவர்கள் மூலமாக திட்ட அறிக்கை (DPR) தயார் செய்யப்பட்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதியும் மற்றும் இப்பணிக்கான தொகையினை பணி மதிப்பீட்டு தொகையில் 2.0% மற்றும் GST18% சேர்த்து மதிப்பீட்டின் Project Code மூலம் வழங்க அனுமதியும்,
3. இப்பணிக்கு தேவையான தொகை ரூ.1,35,00,000/-ஐ உரிய கணக்கு தலைப்புஎண்ணில். 202107/412400402 Middle School ன் நிதி ஆலோசகர் மூலமாக தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**ம.அ.11.நக.எண்.இ1/10195/2025**

**ஆணையர் அவர்களின் 29.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 108/2026** **பொருள் எண்.108**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்- 11, வார்டு-148ல் பாலவிநாயகர் நகர் ஜீவா தெருவில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள பல்நோக்கு மையக் கட்டிடத்தினை இடித்துவிட்டு புதிய பல்நோக்கு மையம் அமைக்கும் பணிக்காக 2024-2025ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, வார்டு 148ல் பால விநாயகர் நகர், ஜீவா சாலையில் கடந்த மதுரவாயல் நகராட்சி காலத்தில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டிடத்தில் பல்வேறு அங்காடிகள் உள்ளன. தற்போது 30 ஆண்டுகள் ஆன நிலையில் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதில் உள்ள நிறுவனங்கள் புதிய கட்டிடம் கட்டி தர கோரியுள்ளனர்.

அதனடிப்படையில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மேற்படி சாலையில் உள்ள பல்நோக்கு மையக்கட்டிடத்தினை இடித்து அகற்றி புதிய பல்நோக்கு மையம் அமைக்கும் பணிக்காக *2024-2025*ம் ஆண்டு அலுவலக விலைப்படி ரூ.*116* இலட்சங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு பின்வருமாறு ஒப்புதல் வேண்டப்படுகிறது.

எனவே,

1. மேற்கண்ட வார்டு-148ல் பால விநாயகர் நகர் ஜீவா தெருவில் ஏற்கனவே உள்ள பழைய பல்நோக்கு மையக்கட்டிடத்தினை இடித்து அகற்றி அவ்விடத்தில் புதிய பல்நோக்கு மையம் கட்டும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையான ரூ.1.16 கோடிக்கு அனுமதியும்,
2. மேற்கண்ட புதிய பல்நோக்கு மைய கட்டிடம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையான ரூ.1.16 கோடிக்கு நிர்வாக அனுமதியும்,
3. மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகையான ரூ.1.16 கோடி தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் இருந்து கட்டிடத்துறை மூலம் மேற்கொள்ள அனுமதியும்,
4. வார்டு-148ல் பால விநாயகர் நகர், ஜீவா தெருவில் உள்ள பழைய பல்நோக்கு மையக்கட்டிடத்தினை இடித்து அகற்றி அவ்விடத்தில் புதிய பல்நோக்கு மைய கட்டிடம் அமைக்கும் பணியினை பெருநகர சென்னை மாநகராட்சி, கட்டிடத்துறை மூலம் ஒப்பங்கள் கோரி பணியினை மேற்கொள்ள அனுமதியும்,

5. மேற்கண்ட செலவினத் தொகையான ரூ.1.16 கோடியினை கட்டிடத் துறைக்கான மூலதன கணக்கு தலைப்பில் கூடுதல் ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**ம.அ.11.ந.க.எண்.இ3/11852/2025**

**ஆணையர் அவர்களின் 18.12.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 109/2026** **பொருள் எண்.109**

**மதிப்பீடு - பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-11, வார்டு-151ல் மவுண்ட் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள காலி இடத்தில் புதிய பூங்கா அமைக்க 2024-2025ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வார்டு-151ல் மவுண்ட் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள காலி இடத்தில் புதிய பூங்கா, சிறுவர் விளையாட்டு திடல், கபடி விளையாட்டு அரங்கம், பெரியவர்கள் உடற்பயிற்சி நிலையம், நடைபாதைகள் மற்றும் அழகிய புல்தரைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்கண்ட மவுண்ட் பூந்தமல்லி சாலையில் உள்ள ***2345.30*** சதுர மீட்டர் அளவுள்ள காலி மனையில் பூங்கா அமைக்கும் பணிக்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஏற்கனவே மேற்கண்ட இடத்தில் பின்வரும் பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

1. Entrance Arch - 1 No.
2. Paver Block – 362.43 Sqm.
3. Security Block – 1 No
4. Gazebo – 1 No
5. Alround Compound Wall.
6. Childrens Play area and Open Gym Equipment.
7. Skating Concrete Flooring
8. Kabaddi Court 130sqm
9. Rock Fountain

ஆகிய பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. மேற்கண்ட வார்டு-151ல் மவுண்ட் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள காலியிடத்தில் புதிய பூங்கா அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையான ரூ.2.50 கோடிக்கு அனுமதியும்,
2. மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகையான ரூ.2.50 கோடி தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதியும்,
3. வார்டு-151ல் மவுண்ட் பூந்தமல்லி சாலையில் உள்ள காலி இடத்தில் புதிய பூங்கா மற்றும் விளையாட்டு திடல் அமைக்கும் பணியினை பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா மற்றும் விளையாட்டு திடல் துறை மூலம் ஒப்பங்கள் கோரி பணியினை மேற்கொள்ள அனுமதியும்,

4. மேற்கண்ட செலவினத்தொகையான ரூ.2.50 கோடியினை பூங்கா துறைக்கான மூலதன கணக்கு தலைப்பில் கூடுதல் ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா மற்றும் விளையாட்டு திடல்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 12.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.07/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**இ.பொ.து.ந.க.எண்.பி5 / 450 / 2025**

**ஆணையர் அவர்களின் 21.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 110/2026** **பொருள் எண்.110**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வடக்கு வட்டாரம் – வட சென்னை வாகன பணிமனை (மண்டலம் 1 முதல் 5) - 2026-27 ஆம் ஆண்டிற்கான மோட்டார் வாகன காப்பீடு புதுப்பிக்க கனரக/இலகுரக /உபகரணம் மற்றும் BOV வாகனங்களின் வாகன காப்பீடு புதுப்பித்தல் - மத்திய அரசின் கீழ் இயங்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி , வடக்கு வட்டாரம், வட சென்னை வாகன பணிமனையின் கீழ் மண்டலம் 1 முதல் 5 வரையுள்ள லாரி நிலையங்கள் மூலமும், வட சென்னை பிரதான பணிமனை மூலமும் மொத்தம் 226 எண்ணிக்கையிலான பல்வேறு பயன்பாட்டிற்கான கனரக / இலகுரக வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவை துப்புரவு பணி, கட்டிட இடிபாடுகள் அகற்றும் பணி மற்றும் தண்ணீர் வாகனங்கள், நாய்பிடி வாகனங்கள், மாடுபிடி வாகனங்கள் என பல்வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. இவை தவிர மண்டலம் 1 - 5 ஆகியவற்றில் குப்பைகளை தரம் பிரிப்பது மற்றும் வீட்டுக்கு வீடு குப்பை சேகரிப்பு பணிக்கென மொத்தம் 952 BOV வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. இவ்வாகனங்கள் அனைத்திற்காகவும் எடுக்கப்பட்டுள்ள வாகன காப்பீடு ஆண்டிற்கொருமுறை அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினை செலுத்தி புதுப்பிக்கப்படவேண்டும்

கடந்த ஆண்டு செலுத்தப்பட்ட வாகனங்களுக்கான காப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் இந்த 2026 - 27 ஆம் நிதி ஆண்டிற்கான வாகன காப்பீட்டுத் தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

**பட்டியல்-1**

| வாகன விவரம் | வாகன எண்ணிக்கை | கடந்த ஆண்டு செலுத்தப்பட்ட வாகனங்களுக்கான காப்பீட்டுத் தொகை (ரூ.) வரிகள் உட்பட *2025-26* *(A)* | எதிர்பார்க்கப்படும் கூடுதல் தொகை 20% *(B)* | *2026-27* நிதியாண்டில் வாகனங்களுக்கான காப்பீட்டிற்கான மொத்தத் தொகை (ரூ.) வரிகள் உட்பட *(A+B)* | **மொத்தத் தொகை ரூ.** |
|---|---|---|---|---|---|
| கனரக / இலகுரக / உபகரணங்களின் மொத்த எண்ணிக்கை | 226 | 62,28,937/- | 12,45,787/- | 74,74,724/- | ரூ74,74,724/- |
| *BOV* வாகனங்கள் | 952 | 32,00,000/- | ** | 32,00,000/- | ரூ.32,00,000/- |
| **மொத்தம்** | 1178 | | | | ரூ.1,06,74,724/-<br>(RO)<br>ரூ.1,07,00,000/- |

** *25.05.2022* மத்திய அரசின் வெளியிடப்பட்ட அரசிதழின் படி காப்பீட்டு தொகைகள் மாற்றத்திற்கு உள்ளாகி உள்ளது

மேற்கண்ட வாகன எண்ணிக்கைகளின் அடிப்படையில், இந்த வாகனங்களுக்கு செலுத்தப்படவேண்டிய 2026-27 ஆம் ஆண்டிற்கான வாகன காப்பீட்டு தொகை, கணக்கிடப்பட்ட விலை விவர தகவல்களின்படி ரூ.1,07,00,000/- ( ரூபாய் ஒரு கோடியே ஏழு இலட்சம் மட்டும்) ஆகும். இந்த காப்பீட்டு புதுப்பித்தல் பணியானது மத்திய அரசின் கீழ் இயங்கும் / மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள் மூலமாக மேற்கொள்ளப்படவேண்டும்.

இச்செலவீனம் வடக்கு வட்டாரம் , வட சென்னை வாகன பணிமனையின் *2025-26* நிதி ஆண்டின் கணக்கு எண் 40-41-04, கணக்கு தலைப்பு எண் 220-40-02-00 – வாகன காப்பீடு தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஏற்கப்படின், வாகனங்களின் காப்பீட்டு முடிவு தேதிகளின் அடிப்படையில், வாகனங்கள் முறைப்படுத்தப்பட்டு, அதன்அடிப்படையில் அரசின் கீழ் இயங்கும் / மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டு நிறுவனங்களின் ஓராண்டிற்கான காப்பீட்டு விலைப்புள்ளிகளை பெற்று, அதில் குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்திற்கு, மேற்பார்வை பொறியாளர் (வடக்கு ) அவர்களின் ஒப்புதல் பெற்று அந்நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்குவதுடன், அந்நிறுவனம் கேட்கும் தொகைக்கு முன்பணம் பெற்றுத் தர இதன்மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்படி நிர்வாக அனுமதி பெறும்பொருட்டு அனுப்பப்பட்ட கோப்பிற்கான நிதி ஒதுக்கீடு ஆயினும் கோப்பு மன்றத் தீர்மான அனுமதி வேண்டி சமர்பிக்கப்பட்டது. மேலும் கோரப்பட்டுள்ள நிர்வாக அனுமதிக்கான தொகை ரூ.1.07 கோடிகள் என்பதால் மாண்புமிகு மேயர் அவர்களின் அதிகாரத்திற்குட்பட்டுள்ள நிலையில் கோப்பு தற்போது மாண்புமிகு மேயர் அவர்களுக்கு சமர்பிக்கப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டாரம், சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட, அட்டவணை 1ல் குறிப்பிடப்பட்டுள்ள 226 எண்ணிக்கையிலான கனரக / இலகுரக மற்றும் உபகரணங்கள் மற்றும் 952 எண்ணிக்கையிலான BOV வாகனங்கள் ஆகிய *1195* வாகனங்களுக்கு 2026- 27 ஆம் ஆண்டிற்கான வாகன காப்பீட்டு புதுப்பித்தல் பணிக்கான (மூன்றாம் நபர் காப்பீடு / விரிவானகாப்பீடு) தொகையாக ரூ.1,07,00,000/- (ரூபாய் ஒரு கோடியே ஏழு இலட்சம் மட்டும்) (வரிகள் உட்பட)யினை அனுமதிக்கவும்,

2. இனம்-1 ஏற்கப்படின் மேற்படி வாகனங்களின் காப்பீட்டு முடிவு தேதிகளின் அடிப்படையில், வாகனங்கள் முறைப்படுத்தப்பட்டு, அதன்அடிப்படையில் அரசின் கீழ் இயங்கும்/மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டு நிறுவனங்களின் ஓராண்டிற்கான காப்பீட்டு விலைப்புள்ளிகளை பெற்று, அதில் குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்திற்கு, மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) அவர்களின் ஒப்புதல் பெற்று அந்நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கவும் மற்றும் கோரப்படும் தொகையினை முன்பணமாக பெற்று அந்நிறுவனத்திற்கு வழங்கவும்,
3. இச்செலவீனத்தை வடக்கு வட்டாரம், வட சென்னை வாகன பணிமனையின் 2025-26 நிதி ஆண்டின் கணக்கு எண் 40-41-04, கணக்கு தலைப்பு எண் 220-40-02-00 வாகன காப்பீடு தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,
4. காப்பீட்டு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களை இந்திய அரசு மேற்கொள்வதால், பாதுகாப்பு வைப்புத்தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து நிறுவனத்திற்கு விலக்கு அளிக்கவும்
5. பதிவு நோக்கத்திற்காக இந்த முன்மொழிவினை மன்றத்தில் சமர்பிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**ம.அ..4.ந.க.எண்.பி3 / 0068 / 2026**

**ஆணையர் அவர்களின் 29.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 111/2026** **பொருள் எண்.111**

**பெருநகர சென்னை மாநகராட்சி- மதிப்பீடு - 2025-2026 ஆம் ஆண்டிற்கான பணி - மண்டலம்-4, பகுதி-09 வார்டு – 37ல் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் உள்ளே Integrated waste to energy plant facilities (IWEP) siteற்கு செல்லும் அணுகு சாலைக்கு புதியதாக சிமெண்ட் கான்க்ரீட் சாலை அமைக்கும் பணிக்காக 2025-26ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைபட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சியின், ஆணையர் அவர்களின் 03.12.2025 நாளிட்ட கலந்தாய்வு கூட்டத்தில் கொடுங்கையூர் குப்பை கிடங்கின் உள்ளே கேட் எண்:1 அருகே உள்ள நீர் தேங்கும் பகுதியை (B கால்வாய்) அருகில் உள்ள பிரதான சாலையுடன் இணைக்கும் புதிய சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்காக அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதன் அடிப்படையில் இப்பணிக்காக கீழ்கண்டவாறு மதிப்பீடு சமர்ப்பிக்கப்படுகிறது

| வ. எண் | வார்டு | மதிப்பீட் டு எண். | பணியின் பெயர் (ம) பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை இ லட்சம் |
|---|---|---|---|---|
| 1. | 37 | 23659 | கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் உள்ளே Integrated waste to energy plant facilities (IWEP) siteற்கு செல்லும் அணுகு சாலைக்கு புதியதாக சிமெண்ட் கான்க்ரீட் சாலை அமைக்கும் பணிக்காக | ரூ.374.00 |
| | | | மொத்தம் | ரூ.374.00 |

| | | |
|---|---|---|
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | ஆணையர் அவர்கள் |
| 3 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | பேருந்து சாலைகள் துறை |
| 4 | சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி | பேருந்து சாலைகள் துறை |
| 5 | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி | எண்.03/ 2026, நாள். 27/01/2026 |
| 6 | வார்டு குழு தீர்மான எண். மற்றும் தேதி | பின்னர் பெறப்படும் |
| 7 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2025-2026 |

| | | |
|---|---|---|
| 8 | மதிப்பீடு தொகை | |
| | அ) பணியின் செலவீனம் | ரூ. 3,13,53,073.78 |
| | ஆ) மேலான மேற்பார்வை செலவினம் | ரூ.---------------- |
| | இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ.---------------- |
| | ஈ) தரக் கட்டுப்பாடு செலவு | ரூ.------------ |
| | உ) மற்ற எதிர்பாரா செலவு | ரூ. 89842.20 |
| | ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதி | ரூ. 313530.74 |
| | எ) பொருட்கள் (ம) சேவை வரி | ரூ. 5643553.28 |
| 8 | மொத்தம் | ரூ. **3,74,00,000.00** |
| 9 | நிதியின் மூலத்தன்மை<br>அ) வரவு செலவு ஒதுக்கீடு<br>ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி<br>இ) மீதமுள்ள நிதி (அ - ஆ)<br>ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி.<br>உ) மீதமுள்ள தொகை | மூலதன நிதி ((பின்னர் பெறப்படும்)<br>---------------<br>----------<br>----------<br>ரூ. **3,74,00,000.00** |

எனவே,

1. மண்டலம்-4, பகுதி-09 வார்டு – 37ல் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் உள்ளே Integrated waste to energy plant facilities (IWEP) siteற்கு செல்லும் அணுகு சாலைக்கு புதியதாக சிமெண்ட் கான்க்ரீட் சாலை அமைக்கும் பணிக்காக 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,74,00,000.00க்கு பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,
2. இப்பணியினை மேற்கொள்ள பேருந்து சாலைகள் துறையின் மூலமாக குறுகிய கால ஒப்பம் கோரவும்,
3. இப்பணியினை பேருந்து சாலைகள் துறையின் மூலமாக பணியினை மேற்கொள்ளவும்,
4. மேற்படி பணிக்கு நிதி நிர்வாக பிரிவின் மூலமாக கணக்கு தலைப்பு எண். 202108 குறியிட்டு எண்.412400701ல் நிதி ஒதுக்கீடு பெற்று பேருந்து சாலைகள் துறையின்வாயிலாக பட்டி தேர்ச்சி செய்திடவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 23.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.20/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (பணிகள்) பின்னேற்பு அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**ம.அ.4.நக.எண்.பி3 / 0067 / 2026**

**ஆணையர் அவர்களின் 29.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 112/2026** **பொருள் எண்.112**

**பெருநகர சென்னை மாநகராட்சி, மதிப்பீடு - 2025-2026 ஆம் ஆண்டிற்கான பணி - மண்டலம்-4, பகுதி-09 வார்டு – 37ல் கொடுங்கையூர் குப்பை கிடங்கின் உள்ளே கேட் எண்:1 அருகே உள்ள நீர் தேங்கும் பகுதியை (B கால்வாய்) அருகில் உள்ள பிரதான சாலையுடன் இணைக்கும் புதிய சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்காக 2025-26ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைபட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்களின் *03.12.2025* நாளிட்ட கலந்தாய்வு கூட்டத்தில் கொடுங்கையூர் குப்பை கிடங்கின் உள்ளே கேட் எண்:*1* அருகே உள்ள நீர் தேங்கும் பகுதியை *(B* கால்வாய்*)* அருகில் உள்ள பிரதான சாலையுடன் இணைக்கும் புதிய சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்காக அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதன் அடிப்படையில் இப்பணிக்காக கீழ்கண்டவாறு மதிப்பீடு சமர்ப்பிக்கப்படுகிறது

| வ. எண் | வார்டு | மதிப்பீட்டு எண். | பணியின் பெயர் (ம) பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை இலட்சம் |
|---|---|---|---|---|
| 1. | 37 | 23657 | கொடுங்கையூர் குப்பை கிடங்கின் உள்ளே கேட் எண்:*1* அருகே உள்ள நீர் தேங்கும் பகுதியை ( *B* கால்வாய்) அருகில் உள்ள பிரதான சாலையுடன் இணைக்கும் புதிய சிமெண்ட் கான்க்ரிட் சாலை அமைக்கும் பணிக்காக | ரூ.695.00 |
| | | | மொத்தம் | ரூ.695.00 |

| | | |
|---|---|---|
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | ஆணையர் அவர்கள் |
| 3 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | பேருந்து சாலைகள் துறை |
| 4 | சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி | பேருந்து சாலைகள் துறை |
| 5 | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி | எண். *02 / 2026*, நாள். *27/01/2026* |
| 6 | வார்டு குழு தீர்மான எண். மற்றும் தேதி | பின்னர் பெறப்படும் |
| 7 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | *2025-2026* |

| | | |
|---|---|---|
| 8 | மதிப்பீடு தொகை | |
| | அ) பணியின் செலவீனம் | ரூ. 5,83,96,190.68 |
| | ஆ) மேலான மேற்பார்வை செலவினம் | ரூ.-------------- |
| | இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ.------------- |
| | ஈ) தரக் கட்டுப்பாடு செலவு | ரூ.------------- |
| | உ) மற்ற எதிர்பாரா செலவு | ரூ. 8533.09 |
| | ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதி | ரூ. 583961.91 |
| | எ) பொருட்கள் (ம) சேவை வரி | ரூ. 10511314.32 |
| | மொத்தம் | ரூ. **6,95,00,000.00** |
| 9 | நிதியின் மூலத்தன்மை<br>அ) வரவு செலவு ஒதுக்கீடு<br>ஆ) மதிப்பீடுகளுக்குஇதுவரை ஒதுக்கப்பட்ட நிதி<br>இ) மீதமுள்ள நிதி (அ-ஆ)<br>ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி.<br>உ) மீதமுள்ள தொகை | மூலதன நிதி((பின்னர் பெறப்படும்)<br><br>ரூ.--------------<br><br>ரூ.---------------<br>ரூ. **6,95,00,000.00**<br><br>ரூ.--------------- |

எனவே,

1. மண்டலம்-4, பகுதி-09 வார்டு – 37ல் கொடுங்கையூர் குப்பை கிடங்கின் உள்ளே கேட் எண்:1 அருகே உள்ள நீர் தேங்கும் பகுதியை ( B கால்வாய்) அருகில் உள்ள பிரதான சாலையுடன் இணைக்கும் புதிய சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்காக 2025–2026 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6,95,00,000.00ற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,
2. இப்பணியினை மேற்கொள்ள பேருந்து சாலைகள் துறையின் மூலமாக குறுகிய கால ஒப்பம் கோரவும்,
3. இப்பணியினை பேருந்து சாலைகள் துறையின் மூலமாக பணியினை மேற்கொள்ளவும்,
4. மேற்படி பணிக்கு நிதி நிர்வாக பிரிவின் மூலமாக கணக்கு தலைப்பு எண். 202108 குறியிட்டு எண்.4124007010ல் நிதி ஒதுக்கீடு பெற்று பேருந்து சாலைகள் துறையின் வாயிலாக பட்டி தேர்ச்சி செய்திடவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 23.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.21/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3/0009/2025**

**ஆணையர் அவர்களின் 04.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 113/2026** **பொருள் எண்.113**

**பெருநகர சென்னை மாநகராட்சி- மதிப்பீடு - 2025-2026 -மண்டலம்-4, வார்டு – 43, தொற்றுநோய் மருத்துவமனையில் உள்ள ANM பெண்கள் தங்கும் விடுதியில் கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் இதர கட்டுமான பணிகள் மேற்கொள்ளும் பணிக்காக 2025 – 2026 ஆம் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

மண்டலம்-4, பகுதி – 10 வார்டு – 43 தொற்றுநோய் மருத்துவமனையில் உள்ள ANM பெண்கள் தங்கும் விடுதியில் கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் இதர கட்டுமான பணிகள் மேற்கொள்ளும் பணிக்காக கீழ்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-4, பகுதி – 10 வார்டு – 43 தொற்றுநோய் மருத்துவமனையில் உள்ள ANM பெண்கள் தங்கும் விடுதியில் கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் இதர கட்டுமான பணிகள் மேற்கொள்ளும் பணி. |
| 2 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்-4, |
| 3 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2025-2026 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 4 | மதிப்பீட்டின் தொகை | ரூ. **3,92,52,000.00** |
| | (அ) பணி செலவினம் | ரூ. 3,20,43,154.37 |
| | (ஆ) மற்ற எதிர்பாரா செலவு | ரூ. 8,00,214.76 |
| | (இ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 3,20,431.54 |
| | (ஈ) தரக்கட்டுபாடு1% | ரூ. 3,20,431.54 |
| | (உ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 57,67,767.79 |
| | மொத்தம் | **ரூ. 3,92,52,000.00** |
| 5 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 6 | நிதியின் தன்மை | மூலதன நிதி (நிதி பின்னர் பெறப்படும்) |
| 7 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 3,92,52,000.00 |

எனவே

1. மண்டலம்-4, பகுதி –10, வார்டு –43 தொற்று நோய் மருத்துவமனையில் உள்ள ANM பெண்கள் தங்கும் விடுதியில் கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் இதர கட்டுமான பணிகள் மேற்கொள்ளும் பணிக்காக 2025 – 2026 ஆம் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,92,52,000.00 (ரூபாய் மூன்று கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,
2. இப்பணி மேற்கொள்ள தேவைப்படும் மூலதன நிதியினை பெற்று கட்டிடத்துறை ஒப்பம் கோருவதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 23.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.19/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ம.அ.7.ந.க.எண்.இ1/641171/ 2025**

**ஆணையர் அவர்களின் 13.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 114/2026** **பொருள் எண்.114**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மதிப்பீடு - 2025-26 – மண்டலம்-7, பகுதி-20, கோட்டம்-91, முகப்பேர், சென்னை நடுநிலைப் பள்ளி கட்டிடம் (G+2) கட்டும் பணிக்காக 2025-26ஆம் ஆண்டின் விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-7, பகுதி-20, கோட்டம்-91, முகப்பேர், சென்னை நடுநிலைப் பள்ளி கட்டிடம் (G+2) கட்டும் பணி. |
| 2 | பரிந்துரை செய்தவரின்விவரம் | சட்ட மன்ற உறுப்பினர் (மதுரவாயல்) |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 7/ பகுதி – 20/கோட்டம் – 91. |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2025-26ஆம் ஆண்டு |
| 5 | மதிப்பீட்டின் தொகை | **ரூ.** 3,80,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 3,05,90,750.31 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 55,06,335.06 |
| | (இ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம் 1 % | ரூ. 3,05,907.50 |
| | (ஈ) ஆலோசனைகட்டணம் 1.5 % | ரூ. 5,40,234.98 |
| | (உ) சிறுமேற்பார்வை செலவு 2.5 % | ---------------- |
| | (ஊ) தரக்கட்டுப்பாட்டு செலவு 1 % | ரூ. 3,05,907.50 |
| | (எ) மேலான மேற்பார்வை செலவு 10.0% | ரூ. --------- |
| | (ஏ) மற்ற எதிர்பாரா செலவு 2.5% | ரூ. 7,50,864.65 |
| | **மொத்தம்** | ரூ. 3,80,00,000.00 |
| 6 | வரைபடம்வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 7 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதிய பணி |
| 8 | நிதியின் தன்மை / ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி / கணக்கு குறியீட்டு எண் | மூலதன நிதி |
| 9 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 3,80,00,000.00 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7, பகுதி-20, கோட்டம்-91, முகப்பேர், சென்னை நடுநிலைப் பள்ளி கட்டிடம் (G+2) கட்டும் பணிக்காக ரூ.3,80,00,000/-க்கு (ரூபாய் மூன்று கோடியே எண்பது இலட்சம் மட்டும்) 2025-26ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்கு 2025-26ஆம் ஆண்டின் செலவீனங்களை பிரிவு குறியீடு எண்: 20-21-07 / கணக்கு எண். 412-400-402 / Middle School என்ற மூலதன தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய பரிந்துரை செய்யவும்,
3. கட்டிடத் துறை மூலம் ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகாவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 23.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.18/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை இதற்கு நிலைக்குழு(பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**<u>பே.த.சா.து.ந.க.எண்.பி3 / 4473 / 2025</u>**

**<u>ஆணையர் அவர்களின் 29.12.2025 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 115 / 2026** **பொருள் எண்.115**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து தட சாலைகள் துறை - 2025-26 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் அறிவிப்பின் கீழ் பேருந்து தட சாலைகள் துறைக்கு 200 கி.மீ. நீளத்திற்கு ரூ.200 கோடி மதிப்பீட்டிற்கு நடைபாதைகள் அமைப்பதற்கு அறிவிப்பு வெளியானது - இதில் இரண்டாம் கட்டமாக 6 இடங்களில் புதிய நடைபாதைகள் அமைக்கும் பணிக்கு 2025-26 ஆம் ஆண்டு விலை பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு தனித்தனியாக நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பம் கோர அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அவர்களின் அறிவிப்பின் படி, பேருந்து தட சாலைகள் துறைக்கு 200 கி.மீ நீளத்திற்கு ரூபாய் 200 கோடி மதிப்பீட்டிற்கு நடைபாதைகள் அமைப்பதற்கு கீழ்வருமாறு அறிவிப்பு வெளியானது.

*"சென்னை பெருநகர் அழகுபடுத்தி குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பாதுகாப்பாக நடைபாதைகளை பயன்படுத்தும் விதமாக, வாகனம் சாரா போக்குவரத்து திட்டத்தின் கீழ், பேருந்து தட சாலைகளில் 200 கி.மீ. நீளத்திற்கு ரூ.200 கோடி மதிப்பீட்டில் நடைபாதைகள் அமைக்கப்படும்"*

மேற்கண்ட அறிவிப்பின் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, முதற்கட்டமாக 17.995கி.மீ. நீளத்திற்கு புதிய நடைபாதைகள் அமைத்திட, 14 சிப்பங்களாக ஒப்பங்கள் திறக்கப்பட்டு, பணியாணைகள் வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்சியாக, இரண்டாம் கட்டமாக 6 இடங்களில் புதிய நடைபாதைகள் அமைக்கும் பணிக்கு 2025-26 ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீடுகளின் விவரம் பின்வருமாறு:

<u>அட்டவணை-I</u>

| வ. எண் | மண்டலம் | சாலையின் பெயர் | நீளம் (மீ) | அகலம் (மீ) | ஒரு புறம் / இரு புறம் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | CIT நகர் மேற்கு, 1வது தெரு (0.439 கி.மீ.) | 439 | 2 | 2 | 90.50 |
| 2 | 13 | CIT நகர் மேற்கு, 2வது தெரு (0.26 கி.மீ.) | 260 | 2 | 2 | 67.60 |
| 3 | 13 | CIT நகர் மேற்கு, 3வது தெரு (0.186 கி.மீ.) | 186 | 2 | 2 | 48.40 |
| 4 | 13 | ஸ்ரீநகர் காலனி கிழக்கு மாட வீதி (0.4 கி.மீ.) | 400 | 2 | 2 | 86.40 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 13 | லூர்து தாஸ் குரோட்டோ<br>சாலை (0.6 கீ.மி.) | 600 | 2 | 2 | 108.80 |
| 6 | 13 | *CIT* நகர்<br>பிரதான சாலை (1.10 கி.மீ.) | 1100 | 2 | 2 | 196.00 |

எனவே,

1. அட்டவணை-*I*ல் உள்ள மதிப்பீடுகளுக்கு தனித்தனியாக நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பம் கோருவதற்கு அனுமதியும்,
2. மேற்குறிப்பிட்ட பணிகளுக்கான செலவினத்தை, பேருந்து தட சாலைகள் துறை கணக்கு குறியீட்டு எண் 202108, தலைப்பு கணக்கு எண் 412400804 (Traffic Improvements)ன் கீழ் மேற்கொள்ளவும்,
3. நிதி நிர்வாக பிரிவின் மூலமாக, பேருந்து தட சாலைகள் துறை கணக்கு குறியீட்டு எண் 202108, தலைப்பு கணக்கு எண் 412400804 (Traffic Improvements)ன் கீழ் நிதி ஒதுக்கீடு பெறவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**S.P.D.C.No. B1/0070/2026**

**ஆணையர் அவர்களின் 21.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 116/2026** **பொருள் எண்.116**

**Greater Chennai Corporation -- Special Projects Department - Recreational Water Facilities at Madhavaram Lake (Zone - 3), Manali Lake (Zone - 2) and Thiruvottiyur Railway Pond (Zone -1)- Boat Procurement -- Administrative Sanction- For council record.**

Greater Chennai Corporation has entrusted the development and renovation of three recreational water bodies viz. Madhavaram Lake (Zone - 3), Manali Lake (Zone - 2) and Thiruvottiyur Railway Pond (Zone -1) for public recreation and tourism promotion to Tamil Nadu Tourism Development Corporation (TTDC). These water bodies are being developed into multi-purpose recreational facilities with boating services as a primary attraction.

GCC has entered into an arrangement with TTDC to operate and manage boating facilities. TTDC will be responsible for boat procurement and operational management, while GCC will provide infrastructure support. Based on technical assessment and operational requirements, TTDC has prepared specifications and cost estimates for boat procurement:

| Sl. No | Type of Boats | Madhavaram (Z -3) | Manali (Z -2) | Thiruvottyur (Z -1) | Total no. of Boats | Total Cost (Inclusive of GST) Rs. |
|---|---|---|---|---|---|---|
| 1 | HDPE Motor Boat (8 seater) | - | 1 | - | 1 | 4,60,950 |
| 2 | FRP Motor Boat (8 seater) | 4 | 2 | 4 | 10 | 55,88,000 |
| 3 | FRP Pedal Boat (4 seater) | 10 | 5 | 5 | 20 | 26,90,887 |
| 4 | FRP Pedal Boat (2 seater) | 10 | 5 | 5 | 20 | 24,82,236 |
| 5 | 20 HP OBM (4 Stroke) | 4 | 2 | 4 | 10 | 36,31,530 |
| 6 | Jetski | 2 | 2 | 2 | 6 | 1,91,53,284 |
| 7 | Kayak (2 Seater) | - | - | 10 | 10 | 7,50,000 |
| 8 | Total no. of Boats per Boat House | 20 | 17 | 20 | 77 | - |
| 9 | Total In Rs. | 1,27,39,240 | 1,01,67,107 | 1,18,50,540 | - | 3,47,56,887 |

It has been discussed that GCC shall contribute 50% of the total boat procurement cost as its share. The calculation is as follows:

| S.No | Component | Amount |
|---|---|---|
| 1 | Total Project Cost | 3,47,56,887 |
| 2 | GCC Share (50%) | 1,73,78,443 |
| 3 | Rounding off | 1,75,00,000 |

In the letter dated 31.12.2025, TTDC has informed that the boating facilities are scheduled to commence operations in the second week of January 2026. This necessitates immediate procurement action to ensure boats and equipment are procured, tested, and operationalized well before the scheduled launch. They have proposed to procure boats worth. Rs.1,27,39,240/- for Madhavaram Lake and have requested the transfer of funds of Rs. 75,00,000/- at the earliest.

Hence,

1. To accord administrative sanction for the project“Provision of Boat and Marine Equipment for Recreational Boating Facilities at Madhavaram Lake (Zone -3), Manali Lake (Zone -2), and Thiruvottriyur Railway Pond (Zone - 1) via TTDC” at a total cost of Rs. 1,75,00,000/- incl GST (Rupees One Crore Seventy-Five Lakh Only) as GCC’s share of 50% in the total project cost of Rs. 3,47,56,887 as proposed by TTDC,
2. To take up the project under the GCC Capital Fund,
3. To transfer the funds to TTDC after the receipt and verification of the relevant documents,

Sl.No. 1 to 3 above are approved by Hon’ble Mayor, submitted for Council record purpose.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**பே.சா.து.ந.க.எண்.பி4/0345/2026**

**ஆணையர் அவர்களின் 29.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 117/2026** **பொருள் எண்.117**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை – பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து சாலைகள் மற்றும் உட்புற சாலைகள் அனுமதியின்றி வெட்டப்படும் சாலைவெட்டுகள் - அபராதங்கள், சீரமைப்பு கட்டணங்கள் மற்றும் நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்காக அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெற மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 418.56 கி.மீ நீளமுடைய 488 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகளும், 5653.89 கி.மீ நீளமுடைய 35.978 எண்ணிக்கையிலான உட்புறசாலைகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி சாலைகளில் அனுமதியின்றி சாலை வெட்டு மேற்கொள்வதற்கு தக்க அபராதங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநரகராட்சி சொத்துகளை சேதபடுத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஆணையர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

ஆகவே, பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் சாலைகளில் சாலை வெட்டும் பணிகளை மேற்கொள்ளும் அனைத்து சேவைத் துறைகள், பயன்பாட்டு முகமைகள், ஒப்பந்தக்காரர்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கும் பொதுவாகப் பொருந்தக்கூடிய அபராதங்கள் மற்றும் நடவடிக்கைக்களை கீழ்கண்டவாறு மேற்கொள்ளலாம் என கருதப்படுகிறது. அதன் வரைவு விவரம் கீழ்வருமாறு:

DRAFT COUNCIL RESOLUTION

**Subject:** Imposition of fines and initiation of penal action for unauthorized road cutting and delay in completion of permitted road works on Corporation-maintained roads – Regarding.

Whereas, the Greater Chennai Corporation is entrusted with the responsibility of maintaining 488 Bus Route Roads with a total length of 418.56 kilometers and 35,978 Interior Roads with a total length of 5,653.89 kilometers within its jurisdiction;

Whereas, it has been noticed that unauthorized road cutting by service departments, utility agencies, Optic Fiber Cable (OFC) laying agencies, gas pipeline laying agencies, contractors, and private individuals causes damage to Corporation-maintained roads, leads to inconvenience to the general public, traffic disruptions, safety concerns, and repeated expenditure towards restoration and maintenance;

Whereas, it has also been observed that in several instances, even after obtaining due permission from the Greater Chennai Corporation, authorized road cutting works are not completed within the stipulated time period, resulting in prolonged damage to road surfaces, continued public inconvenience, traffic congestion, and additional financial burden on the Corporation;

Whereas, such unauthorized road cuts and delays in completing permitted works defeat the purpose of granting time-bound permissions and adversely affect the serviceability and longevity of Corporation-maintained roads, thereby necessitating the imposition of fines and enhanced restoration charges to ensure accountability, timely completion of works, and protection of public infrastructure;

Now therefore, the Council hereby resolves to approve the following fines and actions, which shall be generally applicable to all service departments, utility agencies, contractors, companies, and individuals undertaking road cutting works on roads maintained by the Greater Chennai Corporation:

**1. Unauthorized Road Cutting on Bus Route Roads**

1.1 In the event of unauthorized road cutting on Bus Route Roads, the Greater Chennai Corporation shall forthwith lodge a complaint with the Police.

1.2 The machinery and equipment used for carrying out such unauthorized road cutting shall be liable for confiscation.

1.3 A fine of Rs.2,00,000/- (Rupees Two Lakhs only) shall be imposed on the contractor, agency, or individual responsible.

1.4 In addition to the fine, road-cut restoration charges shall be levied at three times the normal prescribed rate.

1.5 Any further on continued road cutting work shall be permitted only after full payment of the fine and enhanced restoration charges and after obtaining fresh permission from the Greater Chennai Corporation.

**2. Unauthorized Road Cutting on Interior Roads**

2.1 In the event of unauthorized road cutting on Interior Roads, the Greater Chennai Corporation shall forthwith lodge a complaint with the Police.

2.2 The machinery and equipment used for carrying out such unauthorized road cutting shall be liable for confiscation.

2.3 A fine of Rs.1,00,000/- (Rupees One Lakh only) shall be imposed on the contractor, agency, or individual responsible.

2.4 In addition to the fine, road-cut restoration charges shall be levied at three times the normal prescribed rate.

2.5 Any further on continued road cutting work shall be permitted only after full payment of the fine and enhanced restoration charges and after obtaining fresh permission from the Greater Chennai Corporation.

**3. Delay in Authorized Road Cutting Works**

3.1 Where the road cutting works carried out with prior permission of the Greater Chennai Corporation are not completed within the time period stipulated in the permission, such delay shall be treated as a violation of the permission conditions.

3.2 In such cases, road restoration charges shall be levied at three times the normal prescribed rate.

3.3 Continuation, resumption, or further road cutting work shall be permitted only after payment of the enhanced restoration charges and after obtaining renewed permission from the Greater Chennai Corporation.

மேற்கூறிய அபராதங்கள், சீரமைப்பு கட்டணங்கள் மற்றும் நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்காக அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெற நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 23.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.22/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”**

**”ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.01.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2026 அன்று தீர்மான எண்.53/2026ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”**

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.5.ந.க.எண்.UNIT13/146/2025-UNIT(13)-AEE**

**ஆணையர் அவர்களின் 06.01.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 118/2026** **பொருள் எண்.118**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -5 பகுதி -13 வார்டு -57 ல் உள்ள வால்டாக்ஸ் தெருவில் பழைய நாடக கொட்டகையாக பயன்படுத்தப்பட்டு வந்த இடத்தில் சமூகநலக்கூட கட்டிடமும் மற்றும் கதவு எண்.284 ல் உள்ள மிகவும் பழுதடைந்த கட்டிடத்தை இடித்து பல்நோக்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது - ஆக்கிரமிப்பில் உள்ள உபயோகதாரர்களை வெளியேற்றி அவர்களது வாழ்வதாரத்தினை உறுதிபடுத்தும் வகையில் மாற்று இடம் வழங்குவது குறித்து ஆணை வழங்கப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகரசென்னைமாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-13, வார்டு-57ல் உள்ள வால்டாக்ஸ் தெருவில் பழைய நாடக கொட்டகையாக பயன்படுத்தப்பட்டு வந்த இடத்தில் சமூகநலக்கூட கட்டிடமும் மற்றும் கதவு எண்.284 ல் உள்ள மிகவும் பழுதடைந்த கட்டிடத்தை இடித்து பல்நோக்கு கட்டிடமும் கட்டப்பட்டுள்ளது. இதற்கு இடையூறாக உள்ள பிளாக் எண்.29, புலஎண். 1272/1, பரப்பளவு 14107 சதுரமீட்டர் கொண்ட நிலத்தின் ஒரு பகுதியில் சுமார் 336 சதுரமீட்டர் (3615 சதுரஅடி) ஏழு குத்தகைதாரர்களால் கட்டுமானம் எழுப்பப்பட்டு பல ஆண்டுகளாக வணிக பயன்பாட்டிற்காக உபயோகப்படுத்தி வருகின்றனர். ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற *The Tamil Nadu Public Premises (Eviction of Unauthorised Occupants) Act, 1975* –ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆக்கிரமிப்பாளர்கள் சென்னை நகர நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். 24.01.2025 தேதியிட்ட நீதிமன்ற தீர்ப்பில், *The Tamil Nadu Public Premises (Eviction of Unauthorised Occupants) Act, 1975*, பிரிவு எண்.4, 5-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற தீர்ப்பினை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆக்கிரமிப்பாளர்கள் தங்களது வாழ்வாதாரத்தினை பாதுகாக்க மாற்று இடம் வழங்குமாறு *08.01.2025* தேதியிட்டு கோரிக்கை விடுத்தனர். அவர்களது கோரிக்கை விதிகளின்படி, கவனமாகவும், கனிவாகவும் பரிசீலிக்கப்பட்டு மாற்று இடமாக அருகாமையில் உள்ள புல எண்.1272/1, 1275/3 (மாநகராட்சி தனி என்று வகைப்படுத்தப்பட்ட நிலம்), சுமார் 370 ச.மீ *(3982* ச.அ) பரப்பளவில் பயன்படுத்தப்படாத வால்டாக்ஸ் சாலையை ஒட்டியுள்ள பழைய கட்டிடங்கள் அமைப்புடன் கூடிய இடத்தில் மாற்று இடமாக (வார்டுகள் 57&59) பொதுநலன் கருதி வழங்கலாம் என முடிவெடுக்கப்பட்டது. இப்பழையகட்டிடங்கள் அமைந்துள்ள இடத்தினை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 1998 மற்றும் விதிகள், *2023*-ன் கீழ் குத்தகை வாடகையின் அடிப்படையில் வழங்கப்பட்டது.

ஏற்கனவே, ஆக்கிரமிப்பாளர்களால் இருந்த கட்டிடத்தின் கதவு எண் மற்றும் புதியதாக ஒதுக்கப்பட்ட கட்டிடத்தின் கதவு எண் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர் | பழைய கட்டிட எண் | புதியதாக வழங்கப்பட்ட கட்டிட எண் | புதியதாக வழங்கப்பட்ட கட்டிடத்தின் பிளாக்எண். | புதியதாக வழங்கப்பட்ட கட்டிடத்தின் சர்வேஎண். |
|---|---|---|---|---|---|
| 1 | Mahaveer | 245 | 197/1 | 29 | 1272/1 |
| 2 | VenkateshRaju | 246 | 197/2 | 29 | 1272/1 |
| 3 | Rajeshwari | 247 | 294 | 29 | 1275/3 |
| 4 | Ashok Kumar | 248 | 289/1 | 29 | 1275/3 |
| 5 | Jhansi rani | 249 | 285 | 29 | 1275/3 |
| 6 | Gayathiri Devi | 251 | 289/2 | 29 | 1275/3 |
| 7 | Mahesh | 284 | 297 | 29 | 1275/3 |

மேலும், ஏற்கனவே, 25.02.2025 அன்று நடைபெற்ற மன்றகூட்டத்தில் தீர்மானம் (தீர்மானஎண்.225/2025) பெறப்பட்ட நிலையில் மீண்டும் அக்கிரமிப்பாளர் ஏற்கனவே உபயோகிக்கப்பட்ட கட்டிட கதவுஎண் மற்றும் பெயருடன் தற்பொழுது அதற்கு மாறாக வழங்கப்பட்ட கட்டிட கதவு எண் மற்றும் சர்வேஎண் மற்றும் பிளாக்எண் கொண்ட விபரங்களுடன் இணைத்து மன்றத்தின்அனுமதிவேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********